# மறக்குமோ காதல் நெஞ்சம்

அபிபாலா

மறக்குமோ காதல் நெஞ்சம் * அபிபாலா

AB2

மறக்குமோ காதல் நெஞ்சம்



அபிபாலா

# மறக்குமோ காதல் நெஞ்சம்

## 1

இரவு முழுவதும் வான்வெளியில் சுற்றிக் களைத்திருந்த வெள்ளி நிலவை ஓய்வெடுக்க அனுப்பிய செங்கதிரோன், ஆட்சியைத் தன் கையில் எடுத்துக் கொண்டிருந்த அழகான காலைப் பொழுது...!

சென்னை மாநகரின் பிரதான சாலையில், அந்த ஐந்து மாடிக் கட்டிடம் கம்பீரமாய் 'ராம் மருத்துவமனை' என்ற பெயர்ப் பலகையுடன் காட்சியளித்தது. சமீபத்தில் தான் திறப்பு விழா நடைபெற்றிருந்ததால், புதுப் பொலிவோடு சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

விடிந்ததும் விடியாத அந்தக் காலைப் பொழுதில் கூட மருத்துவமனை பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. மருத்துவமனையின் மருத்துவர்கள், நர்ஸ்கள் எல்லோருமே யாரோ ஒரு முக்கியமான நபரின் வருகைக்காகக் காத்துக்

கொண்டிருந்தாலும், அவர்களது முகங்களில் ஏதோ ஒரு கவலை படர்ந்திருந்தது!

சர்ரென்று உள்ளே நுழைந்த ஒரு சில்வர் கலர் இன்னோவா கார், ஹாஸ்பிடல் வாசலில் கிறீச்சிட்டு நின்றது. உள்ளேயிருந்து டாக்டர்கள் விரைந்து வந்தனர். காரிலிருந்து முதலில் இறங்கிய டாக்டர்.செந்தில் குமார், நகரின் பிரபலமான நியூரோ சர்ஜன்.

இறங்கியதுமே, "டாக்டர் ரவி! எல்லாம் ரெடியா இருக்கா? சீக்கிரமா பேஷண்டை ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டு போகணும். டாக்டர் விக்ரம் வந்தாச்சா?"

"தியேட்டரை உங்க போன் வந்ததுமே உடனே ரெடி பண்ணியாச்சு டாக்டர். டாக்டர்.விக்ரம் இஸ் ஆன் த வே. இன்னும் பத்து நிமிடங்களில் இங்கே வந்து விடுவார்."

"வெரிகுட். கமான் குவிக். டிரைவருக்குக் கையில் ஃப்ராக்சர்." அதற்குள் காரிலிருந்து, துவண்டு போய் மயங்கிய நிலையில் இருந்த மிக அழகிய இளம் பெண்ணை, மெதுவாகத் தூக்கி ஸ்ட்ரெச்சரில் படுக்க வைத்து, உள்ளே விரைந்தார்கள். டாக்டர் ரவி, செந்தில் குமார் இருவரும் கூடவே சென்றார்கள்.

அந்தப் பெண்ணின் தலையில் பலமான அடி! கட்டுப்போட்டிருந்ததையும் மீறி, காயத்திலிருந்து மெல்லிய கோடாக ரத்தம் வழிந்தது!

காரிலிருந்து இறங்கிய இளைஞன் ஒருவன், காரிலிருந்து ஏதோ சொல்லி விட்டு, உள்ளே விரைந்தான். படித்த களையுடன் கண்ணியமான தோற்றத்தில் வேகநடையுடன் உள்ளே வருபவனுக்கு, ஊழியர்கள்



மரியாதையோடு வழி விட்டு விலகி நின்றனர். யாரோ வி.ஐ.பி. போல...!

ஆடை அவன் அந்தஸ்த்தை பறை சாற்றினாலும், அது முழுவதும் ரத்தக் கறை. வெகுநேரம் அழுது களைத்திருந்த கண்கள், கலங்கிச் சிவந்திருந்தன. உடை கசங்கி, தலை கலைந்து, நலுங்கிய தோற்றத்திலும் கம்பீரம் குறையாமல் இருந்தான். டாக்டர். செந்தில் அவனிடம் வந்து ஏதோ பேசினார். அவனோ அதை மறுத்துத் தலையசைத்து விட்டு, பதில் கூறியதும், தியேட்டரின் உள்ளே சென்றார்.

அந்த இளைஞனோ கண்களில் திரண்ட நீருடன், அங்கே கிடந்த நாற்காலியில் சோர்ந்து போய் சரிந்தான். உள்ளே இருந்த இளம்பெண், இவனுக்கு எத்தனை உயிரானவள் என்பதை, அவனது நிலைகுலைந்த தோற்றத்திலேயே தெரிந்து கொள்ள முடிந்தது.

தனது கைகளிலேயே முகம் புதைந்து அமர்ந்திருந்தவன், தியேட்டர் கதவு திறக்கும் ஓசை கேட்டு பதறி எழுந்தான். அவனைப் பார்த்து புன்னகைத்த டாக்டர். செந்தில் குமார், "டோண்ட் வொர்ரி..." என்று கூறியபடி, அவனைத் தோளோடு அணைத்து ஆறுதலாக பேசிக் கொண்டே அழைத்துச் சென்றார்.

❖ ❖ ❖

**அ**வள் மெல்லக் கண் விழித்தாள். தான் ஒரு கட்டிலில் படுத்திருப்பது புரிந்தது! தலையை அசைக்க முடியவில்லை. ஒரு கையில் டிரிப்ஸ் ஏறிக் கொண்டிருந்தது. மறு கையால் தலையைத் தொட்டுப் பார்த்தாள். கட்டுப்போட்டிருந்த தலை விண்ணென்று தெறித்தது. உடம்பெல்லாம் வலி.

தான் ஒரு ஹாஸ்பிடலில் இருக்கிறோம் என்பது மட்டும் புரிந்தது. தலையை அசைக்க முடியாததால், மெல்ல கண்களைச் சுழற்றிப் பார்த்தாள். அந்த அறை மிகவும் சுத்தமாக, நட்சத்திர ஹோட்டல் அறை போல, சகல வசதிகளோடும் இருந்தது.

அறை முழுவதும் இளம் பச்சை வண்ணப் பெயிண்ட்; திரைச் சீலைகள் ரோஜா வண்ணததில்! சின்ன கப்போர்ட், டி.வி.... அருகில் போன்...! ரீங்காரமிடும் ஏ.ஸி...! கண்ணுக்குக் குளிர்ச்சியாகச் சுவரில் ஓவியங்கள். அறை மூலையில் ஃபிளவர் வாஸ். இதை ஒரு ஹாஸ்பிடல் அறை என்றே சொல்ல முடியாதபடி, நவீன வசதிகளோடு இருந்தது.

அறையில் தான் மட்டுமே இருப்பதைக் கண்டாள். குளியலறையில் நீர் விழும் சத்தம். கதவு திறந்ததும், டியூட்டி டிரஸ்ஸில் ஒரு நர்ஸ்! அவர் கையில், கழுவி எடுத்து வந்த டிபன் பாக்ஸ்!அவள் விழித்திருப்பதைப் பார்த்ததும், ஆவலும் மகிழ்ச்சியுமாக டிபன் பாக்ஸை அப்படியே டேபிளின் மேல் வைத்தாள்.

"மேடம்..! விழித்து விட்டீர்களா? ஒரு வாரமாக உங்களுக்கு நினைவு திரும்பவில்லை என்றதும் எங்கள் டாக்டர் வீட்டுக்கே போகவில்லை. ஒரு நிமிடம்! அவரை அழைத்து வருகிறேன்" பரபரப்பாக வெளியே சென்றாள்.

ஒரு நிமிடம் கூட கழிந்திருக்குமா என்பது சந்தேகம் தான். நர்ஸ் பின் தொடர, முகமெல்லாம் மகிழ்ச்சி பொங்க, ஆவலோடு உள்ளே நுழைந்த டாக்டரைப் பார்த்தாள். வயது முப்பதுக்குள் இருக்கலாம். ஆறடிக்குக் குறையாத உயரம். அலை அலையாய்ப் படிந்த சிகை. கோதுமை நிறத்தில் வசீகரமாக, கம்பீரமாகத் தெரிந்தான்.



வெள்ளை கோட், ஸ்டெத் சகிதமாக, கண்களில் ஆவலோடு, எதிர்பார்ப்புடன் உள்ளே நுழைந்தான்.

வேகமாக அவள் அருகில் வந்து அமர்ந்தவன், "எப்போது கண்விழிப்பாய் என்று ஒரு வாரமாக எல்லோரும் காத்துக் கிடக்கிறோம்; எல்லோரையும் பயமுறுத்தி விட்டாய்" என்றபடி அவள் கையைப் பற்றினான்.

மெல்லிய முகச் சுளிப்போடு, அவனிடமிருந்து கையை விலக்கிக் கொண்டு, "டாக்டர்! எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. நான் யார்? என் பெயரே எனக்கு நினைவில்லை. இது எந்த ஊர்? எனக்கு எப்படி அடிபட்டது? இங்கே எப்படி வந்து அட்மிட் ஆனேன்? எதுவுமே புரியவில்லை. ப்ளீஸ்... உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்களேன்!" குரல் இறைஞ்சியது.

இவ்வளவு பேசியதே அதிகம் என்பது போல, களைப்பில் அவள் கண்கள் தாமாக மூடிக் கொண்டன. அசதியில் மீண்டும் உறக்கத்துக்குப் போனாள்.

முகத்திலிருந்த சிரிப்பு, சந்தோஷமெல்லாம் சட்டென்று வடிந்து போக, அதிர்ச்சியும் திகைப்புமாக அவளைப் பார்த்த டாக்டர், "ஓ...காட்! இவளுக்கு, தான் யார் என்பதே மறந்து போய் விட்டதே" குழந்தையாய் உறங்கும் அவளைப் பார்த்தவன், மெல்ல அவள் அருகில் வந்து பல்ஸ், பிரஷர் இரண்டும் பார்த்து விட்டு, நர்ஸிடம் சில குறிப்புகளைச் சொன்னான்.

"சிஸ்டர், அவள் மறுபடி எழுந்தால், உடனே எனக்கு இன்ஃபார்ம் செய்யுங்கள். நான் டெல்லியில் உள்ள டாக்டர் ஷர்மாவிடம் பேசுகிறேன். வேறு ட்ரீட்மெண்ட் என்ன கொடுப்பது என்பது பற்றி நாளை சொல்லுகிறேன். இந்த ட்ரிபஸ் முடிந்ததும், மறுபடி ஒன்றைப் போட்டுவிடுங்கள்."

அவனுக்கோ பல விதமான சிந்தனைகள். தன் ரெஸ்ட் ரூமுக்குப் போனதும் போன் செய்து, "கங்கா அக்கா, நான் இன்றும் வீட்டுக்கு வர முடியாது. ரொம்ப முக்கியமான வேலை!" அவன் மனம் இந்த ஒரு வாரமாக நடந்ததையே நினைத்துப் பார்த்தது.

மறுநாள் குளித்து ரெடியானதும் போன் செய்து டாக்டர் ஷர்மாவிடம் பேசினான். எம்.ஆர்.ஐ., ஸ்கேன் ரிப்போர்ட் எல்லாம் மெயிலில் அனுப்பியிருந்தான். அதைப் பார்த்து விட்டு, அவளுக்குக் கொடுக்க வேண்டிய ட்ரீட்மெண்ட் பற்றி விரிவாகப் பேசினார்.

"ஓ.கே. டாக்டர்! இதையே இப்போதைக்கு கண்டினியூ பண்ணுங்கள். எனக்கு அடுத்த வாரம் சென்னையில் ஒரு மெடிக்கல் கான்ஃபரன்ஸ் இருக்கிறது; அப்போது வந்து பேஷண்டைப் பார்க்கிறேன். டோண்ட் வொர்ரி, இது ஒரு விதமான பார்ஷியல் அம்னீஷியா தான். சரியாக்கி விடலாம். உங்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை.

பேஷண்டிடம் உடனடியாக அவரைப் பற்றி எதுவும் சொல்ல வேண்டாம். கொஞ்சம் ரெகவர் ஆகட்டும். பிறகு பார்க்கலாம். ஐ.சி.யூ..விலேயே இருக்கட்டும்."

நர்ஸ் அங்கு வந்த போது, மறுபடியும் அவளுக்கு விழிப்பு வந்திருந்தது. "ஹலோ மேடம்! ஹவ் ஆர் யூ டுடே? ஃபீலிங் பெட்டர்? லைட்டாக உடம்பு துடைத்து, டிரஸ் சேஞ்ச் பண்ணி விடலாமா?"

கதவைத் தாளிட்டு விட்டு வந்து, மிருதுவான டவலில் வென்னீரைப் பிழிந்து, உடல் முழுவதும் துடைத்து விட்டாள். பின் முகத்துக்கு லைட்டாக பவுடரை ஒற்றி, பொட்டு வைத்தவள், லேசாக கூந்தலை ஒதுக்கி விட்டாள்.



டிரஸ் மாற்றி விட்டதும், "சிஸ்டர்..! என் பெயரே எனக்கு மறந்து விட்டது! என் பெயராவது என்னவென்று சொல்லுங்கள். ப்ளீஸ்!" கண்கள் கலக்கத்துடன் யாசித்தன. புன்னகை மாறாது, "மேடம், உங்க பெயர் சுமித்ரா! அடிக்கடி இங்கு வந்து போய்க் கொண்டு தான் இருப்பீர்கள். அதனால், எங்கள் எல்லோருக்கும் உங்களை நன்றாகத் தெரியும்."

"இது என்ன ஊர்? நான், எனக்கு... வந்து... எப்படி அடிபட்டது தெரியுமா?"

"சுமித்ரா மேடம், இது சென்னை. இந்த விபரத்தை மட்டுமே நான் கூற முடியும். மீதியெல்லாம் டாக்டர் சார் வந்து தான் சொல்ல வேண்டும்.

ஆனால், நீங்கள் மிக பத்திரமாக, பாதுகாப்பாகத் தான் இருக்கிறீர்கள். எந்த விதமான பயமும் வேண்டாம். ஓ.கே?"

"ஆனால்....."

அவளைப் பேச விடாது, "உங்கள் தலைக்காயம் இன்னும் வலிக்கிறதா? உடம்பு வலி எப்படி இருக்கிறது? இன்று டாக்டர் வந்து பார்க்கும் போது, அவரிடம் சொல்லுங்கள். பசிக்கிறதா...?"

கேட்கும் போதே, டாக்டர் உள்ளே வந்தார். "ஹலோ சுமித்ரா! எப்படி இருக்கிறீர்கள்? வலி எப்படி இருக்கிறது?" மெல்ல அவள் கரம் பற்றி, பல்ஸ் பார்த்துக் கொண்டே கேட்டான்.

"டாக்டர், தலையில் நல்ல வலி இருக்கிறது. உடம்பு வலி குறைந்திருக்கிறது. கை, கால்களை நன்றாக அசைக்க முடிகிறது. என்னால் இப்போது எழுந்து உட்கார முடியுமா என்று தெரியவில்லை."

"குட்...! இப்போது எழுந்திருக்க வேண்டாம். உடம்பு இன்னும் பலவீனமாகத் தான் இருக்கிறது. அதனால் இன்னும் இரண்டு நாட்கள் போகட்டும்."

"டெம்பரேச்சர், பிரஷர் எல்லாம் பார்த்து விடுங்கள். இன்று கொஞ்சமாக பால், கஞ்சி கொடுத்துப் பார்க்கலாம். இன்று ட்ரிப்ஸில் மருந்து மாற்றி எழுதியிருக்கிறேன். முதலில் பால் அரை டம்ளர் கொடுத்துவிட்டு, அதன் பிறகு போட்டு விடுங்கள்."

"சுமித்ரா, நீங்கள் எதைப் பற்றியும் யோசிக்க வேண்டாம். என்னிடம் ட்ரீட்மென்டுக்கு வந்திருக்கிறீர்கள். அவ்வளவுதான்! எனக்கு உங்கள் முழு ஒத்துழைப்பும் தேவை."

உங்கள் ஃபேமிலி பற்றி, உங்களுக்கு இப்போது தெரிய வேண்டாம். இன்னும் ஒரு வாரம் போகட்டும். நானே சொல்கிறேன். அவர்கள் இங்கு தான் இருக்கிறார்கள்.

உங்கள் உடம்பு, மைண்ட் இரண்டுக்குமே ரெஸ்ட் தேவை. அதனால், எதைப் பற்றியும் குழப்பிக் கொள்ளாமல் நிம்மதியாக ஓய்வெடுங்கள். யூ ஆர் சேஃப் ஹியர்! டேக் கேர். மெல்ல அவள் கைகளைத் தட்டி, ஆறுதலாகப் பேசியவனை வியப்புடன் பார்த்தாள்.

அவனது புன்னகை, மென்மையான... மனதை வருடுவது போன்ற குரலும் அவளுக்கு அமைதியைத் தந்தது. மெல்லத் தலையாட்டியவள், அவன் பார்வையில் ஏதோ ஒரு சேதி இருந்ததாக உணர்ந்தாள். அவளால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. அவன் தலையசைத்து விட்டு வெளியே சென்றான்.

பிளாஸ்க்கில் பால் வந்தது. நர்ஸ் வந்து கட்டிலின்



தலைப்பகுதியை உயர்த்தி விட்டு, வெதுவெதுப்பான பாலை பருகச் செய்த பின், வாயைத் துடைத்து விட்டாள்.

"ஒரு ஐந்து நிமிடம் கழித்துப் படுக்கலாம். பின் டிரிப்ஸ் போட்டு விடுகிறேன். டாக்டர், வலி குறையவும் நன்றாகத் தூங்கவும் தான், மருந்தை இன்று மாற்றிக் கொடுத்திருக்கிறார்."

"சிஸ்டர்! உங்கள் பெயர்?"

"நளினி.இங்கு இரண்டு வருடமாக வேலை பார்க்கிறேன்."

"இந்த டாக்டர்..." அதற்கு மேல் என்ன கேட்பது என்று தெரியாமல் தவித்த போது, "டாக்டர். ராம்குமார்! இந்த மருத்துவமனை அவருடையது தான். இதைக் கட்டி மூன்று வருடங்களாகிறது. எங்கள் டாக்டர் பிரபலமான நியூரோ சர்ஜன். இவர் தொட்ட கேஸ் எதுவுமே தோற்றதில்லை. கைராசி அதிகம். அவர்... புரியாமல் வேறு டாக்டரிடம் உதவியும்,ஆலோசனையும் கேட்டது, உங்களுக்கு மட்டும் தான். ரொம்பக் கெட்டிக்கார் எங்கள் டாக்டர்!"

பேசிக் கொண்டே டிரிப்ஸ் போட்டதும், மருந்தின் தாக்கத்தால் கண்கள் செருக உறங்கிப் போனாள். இதே போல இரண்டு நாட்கள் சென்றதும், உடல் நிலை கொஞ்சம் தேறியது. எழுந்து உட்கார முடியும் என்று தோன்றியது.

டாக்டர் ராம்குமாரிடம், "டாக்டர், எனக்கு உடம்பு கொஞ்சம் பரவாயில்லை. எழுந்து உட்கார முடியும் என்று தோன்றுகிறது; ட்ரை பண்ணிப் பார்க்கட்டுமா?"

மென்மையாக மறுத்தவன், "நோ சுமித்ரா! எங்கள் நர்ஸ் வந்து உதவுவார். ஏறக்குறைய பத்து நாட்களாக

படுத்தே இருப்பதால், எழுந்து உட்கார்ந்ததும் தலை சுற்றக்கூடும். அதனால் நீங்களாகவே தனியாக எழுந்து உட்கார, முயற்சி செய்ய வேண்டாம்.''

ஆனால் அதற்கே அவளுக்கு மூச்சு வாங்கியது.

"ரிலாக்ஸ். இன்றைக்கு இது போதும்! சிஸ்டர், பாலை கொஞ்சம் ஆற்றிக் கொடுங்கள் இன்று ரசம் சாதம் குழையப் பிசைந்து கொடுத்து விடுங்கள். டிரிப்ஸ் போதும். நான் மாத்திரை கொடுத்து விடுகிறேன். கரெக்ட் டைமுக்கு லஞ்ச் கொடுக்க வேண்டும்.''

"எஸ் டாக்டர்.''

"சுமித்ரா, நாளை உடம்புக்குக் குளித்துக் கொள்ளலாம். நான் பத்து மணிக்கு வந்து, உங்கள் ஃபேமிலியை அறிமுகப்படுத்துகிறேன். என்ன... சரியா? ஓ.கே. டேக் ரெஸ்ட்.''

அன்றும் மாலை, இரவு என இரண்டு நேரமும் வந்து பார்த்து விட்டுச் சென்றான்.

மறுநாள் காலை எட்டு மணிக்கே நர்ஸின் உதவியுடன் குளித்து விட்டு, கரும் பச்சை வண்ணச் சேலையில், தன்னை பாத்ருமில் இருந்த கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள்.

வில் போன்ற புருவம், நீளமான விழிகள், குடையாய்க் கவிழ்ந்து அதை மூடிய இமைகள். தந்த நிறத்தில், உயரமும் வாளிப்புமாய் தன்னைப் பார்த்தவளுக்கு, ஏதோ ஒரு திருப்தி. கொஞ்சம் பார்க்கும்படியாகத் தான் இருக்கிறோம் என்ற நிம்மதி.

வெளியே வந்ததும், சிவப்பு நிறப் பொட்டை நெற்றியில் ஒட்ட வைத்த நர்ஸ், சுமித்ராவைப் பார்த்துத் திகைத்துப் போனாள். ஏதோ வானுலகில் இருந்து வந்த



தேவதை போல பளபளத்த முகமும், ஆயிரம் அகல் விளக்கை ஒன்றாக ஏற்றி வைத்தது போன்ற கண்களும்... பின்புறம் முழுவதையும் மறைத்து, இடுப்பைத் தாண்டி கீழிறங்கிய நீண்ட கருங்கூந்தலும் பார்க்கத் தெவிட்டவில்லை.

சுமித்ரா, அப்போது தான், தான் காதில் போட்டிருந்த கம்மலைத் தவிர, வேறு எந்த நகையுமே போடவில்லை என்று கவனித்தாள். கழுத்து, கை எல்லாம் வெறுமையாக இருந்தது.

அவள் யார் என்பது இன்று தெரிந்து விடும் என்ற ஆவலும், ஆசையும் போட்டி போட..., அவள் கண்கள் டாக்டர் ராம்குமாரின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தது.

மெல்லக் கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தது, டாக்டர் ராம்குமாரே தான்! வழக்கமான புன்னகையுடன் உள்ளே வந்தவன் அவளைப் பார்த்து திகைத்துப் போனான். அவள வெட்கத்துடள் தலை குனிந்தாள்.

"வெல்! இப்போது எப்படி இருக்கிறீர்கள் சுமித்ரா? காலையில் நடந்த போது தலை சுற்றல் இருக்கிறதா? இன்று ஒரு நாள் அப்படித் தான் இருக்கும். நாளை எல்லாம் சரியாகிவிடும். டிபன், டேப்லெட் எல்லாம் ஒழுங்காக எடுத்துக் கொண்டீர்களா? பாத்ரூம் கூட, நர்ஸ் உதவியில்லாமல் போக வேண்டாம்... சரியா?'

மெல்ல எல்லாவற்றுக்கும் `சரி' என்று தலையசைத்தாலும், அதையும் மீறிய எதிர்பார்ப்புடன் அவனையே பார்த்தாள். அவள் பார்வையின் அர்த்தம் புரிந்தவனாக, "ஒன் மினிட்'' என்று கூறி விட்டு, மீண்டும் வெளியே சென்றான்.

டாக்டர் ஏன் எதுவுமே சொல்லாமல் போகிறார் என்ற நிராசையுடன், மூடிய கதவையே வெறித்துப் பார்த்தாள். கதவு திறக்கும் ஓசை கேட்டு கவனம் கலைந்தவள், விழி விரியப் பார்த்தாள். உள்ளே வந்த ராமகுமாரின் கைகளில், கொழுகொழுவென்ற ஆறுமாதக் குழந்தை. பார்த்ததுமே அது பெண் குழந்தை என்று புரிந்தது.

அவன் ஏறிட்டு நர்ஸைப் பார்த்து தலையசைத்ததும், "யெஸ் டாக்டர்" என்று சொல்லியவள், கதவை மெல்ல மூடிவிட்டு வெளியேறினாள்.

ராம்குமாரின் கையிலிருந்த குழந்தை துறுதுறு வென்று, கொள்ளை அழகாய், குண்டு குண்டாய் கன்னங்களும், திராட்சை விழிகளுமாய் புதிதாய் பூத்த குட்டி ரோஜாவைப் போலிருந்தது!

குழந்தை அவளைக் கண்டதும், டாக்டரிடமிருந்து அழுகையும், சிணுங்கலுமாக அவளிடம் தாவியது. அதைப் பார்த்த சுமித்ராவின் ஒவ்வொரு அணுவும் துடித்தது. கண்களில் அவளையறியாமலேயே நீர் நிறைய, எந்தத் தடையும் இன்றி, தன்னிச்சையாகத் தன் இரு கரங்களையும் நீட்டினாள் குழந்தைக்காக.

அதைக் கண்டு கண்கள் கலங்க..., குழந்தையை அவளிடம் நீட்டினான் கைகள் நடுங்க. குழந்தையை வாங்கி, மார்போடு அணைத்துக் கொண்டாள் சுமித்ரா.

குழந்தை தன் பிஞ்சுக் கரங்களால் அவள் முகத்தை வருடியது. முகமெங்கும் அவளை முத்தமிட்டது. அதன் ஸ்பரிசத்தில் மெய்மறந்து கண்களை மூடிக் கொண்டாள். குழந்தை அவளிடம் சிணுங்கி, அவள் தோளில் சாய்ந்து



கொண்டது. அவளிடமும் ஒரு இதம் பரவ, டாக்டரை ஏறிட்டுப் பார்த்தாள்.

இத்தனை நேரம் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தவன் தொண்டையைச் செருமிக் கொண்டு நெகிழ்ச்சியான குரலில, "நீங்கள் யார் என்று தெரிய வேண்டும் இல்லையா...?

`ஆமாம்' என்று தலையை மட்டுமே அசைத்தாள். அவள் கைகள் குழந்தையின் முதுகை வருடிக் கொண்டிருந்தது. குழந்தையும் சுகமாக அவள் தோளில் சாய்ந்திருந்தது. அவள் அருகில் வந்தவன், "நீங்கள்..., நீ..., மிஸஸ். சுமித்ரா ராம்குமார்... நீ என் மனைவி சுமி... இவள்... நம் அன்பு மகள் வர்ஷா!" அதற்கு மேல், உணர்ச்சி வயப்பட்டு அவனாலும் பேச முடியவில்லை.

ஆச்சரியமும் திகைப்புமாக அவனை ஏறிட்டவள், " அப்படியென்றால் நீங்கள்... நீங்கள்...?"

"யெஸ்...! ஐயாம் யுவர் ஹஸ்பண்ட் ராம். உன்னுடைய ராம்... நம்புகிறாயா?" அவன் குரலில் தவிப்பு.

`ஓ...!' அவள் மனதுக்கு ஒரு நிம்மதி. தன்னுடைய தேடலுக்கு, ஏற்றுக் கொள்ளும் விதத்தில் விடை கிடைத்த ஒரு ஆறுதல். `இது நிஜம் தான்' என்று அவள் இதயம் சொன்னது. எல்லாவற்றையும் மீறி வர்ஷா! இவள் என் மகள். இதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. ஒரு ஆறுமாதக் குழந்தை தன்னிடம் காட்டிய அன்பு நிஜம். டாக்டரின் பேச்சிலும், கண்களிலும் ஒரு ஏக்கம், தவிப்பு இருந்ததே ஒழிய, பொய்யில்லை...! அவள் மனது ஒரு தீர்மானத்துக்கு வந்தது.

"என்ன சுமி... சந்தேகமாக இருக்கிறதா..., நம்ப முடியவில்லையா...? ஏன் மௌனமாக இருக்கிறாய்?" அவன்

குரலில் 'என்னைப் புரிந்து கொண்டாயா' என்ற பரிதவிப்பு. அவனைப் பார்த்து மென்மையாகப் புன்னகைத்து 'நம்புகிறேன்' என்ற ரீதியில் தலையை அசைக்கவும், இத்தனை நேரம் அவன் அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகள் கரை உடைந்தது போல பொங்கின!

அவள் அருகில் வந்து, அவள் தலையை வருடினான். அவனது கண்களில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் உருண்டு தரையில் விழுந்தது. அவளும் பேச முடியாது உணர்ச்சி வயப்பட்ட நிலையில் இருந்தாள்.

"சுமி..."

"ம்ம்...!"

"நான் சொல்வதை நம்புகிறாயா?"

"ம்"

அதற்குள் தாயிடம் வந்து சேர்ந்த நிம்மதியில், அவளின் வருடலில் வர்ஷா தோளிலேயே தூங்கிப் போய் விட்டாள். அவளை வாங்கி, கட்டிலில் படுக்க வைத்து இருபுறமும் தலையணை வைத்து போர்த்தி விட்டு, சுமியின் அருகில் வந்தான்.

"சுமி, இந்த ஒரு வாரமாக, என்னைக் கொன்று விட்டாய். நீ கண் விழிக்கவே இல்லை என்றதும் பதறி விட்டேன். நான் ஒரு டாக்டர் என்பதே எனக்கு மறந்து போனது. பைத்தியம் போல உன் பக்கத்திலேயே தான் இருந்தேன். நான் வீட்டுக்குப் போய் பத்து நாட்கள் ஆகிறது தெரியுமா...?" அவள் விரல்களைப் பற்றி, அதில் தன் அதரங்களைப் பதித்தான்.

"தேங்க் காட்! வர்ஷா வேறு உன்னை ரொம்ப தேடினாள். அவளையும் சமாளித்துக் கொண்டு, உனக்கு ட்ரீட்மென்ட் கொடுக்கத் திணறிப் போனேன் சுமி!"



"நம் வீட்டில் வேறு யாரும் இல்லையா?" என்ற அவளின் கேள்வியில் அவன் முகம் மலர்ந்தது.

"கங்கா அக்கா இருக்கிறார்கள். அவர்கள் தான் நம் வீட்டைப் பார்த்துக் கொண்டு, சமையல் செய்து அனுப்புகிறார்கள்.

ஒரு வாரமாக தினமும் வந்து பார்த்துச் செல்கிறார்கள். நேற்று கூட உனக்குக் கஞ்சி கொண்டு வந்த போது, நீ தூங்கிக் கொண்டிருந்தாய்.

வந்து பார்த்து விட்டு வர்ஷாவுக்கு பால் கொடுத்து, குளிக்க வைத்து, தூங்க வைத்து விட்டுத் தான் போனார்கள்"

"எனக்கு எப்படி அடிபட்டது?"

இந்த ஜூஸைக் குடி! டம்ளரில் ஊற்றிக் கொடுத்து விட்டு ஒரு பெருமூச்சுடன், "நான் ஒரு கான்ஃபரன்சுக்காக பெங்களூர் போக வேண்டியிருந்தது. உன் வயிற்றில் வர்ஷா கன்சீவ் ஆனதிலிருந்து, நீ என்னுடன் எங்குமே வெளியே வரவில்லை.

அதனால் தான் வற்புறுத்தி உன்னையும் வர்ஷாவையும் கூட்டிச் சென்றேன். நம்மோடு கங்கா அக்காவும் வந்தார்கள். இரண்டு நாட்கள் எனக்கு கான்ஃப்ரன்ஸ்.. அது முடிந்து இரண்டு நாட்கள் ஃப்ரியாக ஊர் சுற்றினோம்... லால் பார்க், ஷாப்பிங் என்று...! பாப்பா வெளியில் வேண்டாமென்று கங்கா அக்கா ரூமிலேயே வைத்து பார்த்துக் கொண்டார்."

குழந்தையை வைத்துக் கொண்டு நைட் டிராவல் வேண்டாம் என்று கங்கா அக்கா எத்தனையோ தடுத்தார்கள். நான் தான் கிளம்பியே ஆக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தேன். விடியும் வேளையில்

டிரைவருக்கு ஒரு நிமிடம் தூக்கம் வந்து கண்களை அசத்தி விட்டது. அதனால் தான் இந்த ஆக்ஸிடண்ட்!

முன் சீட்டில் கங்கா அக்கா மடியில் வர்ஷா இருந்தாள், அவளுக்கு அடியில்லை. கங்கா அக்காவுக்கும், எனக்கும் லேசாகத்தான் அடி. டிரைவர் சீட் பின்னால் நீ உட்கார்ந்திருந்தாய். அதனால் உனக்கும், டிரைவருக்கும் நல்ல அடி...! அவனுக்குக் கூட வெளிக்காயம் தான்... பரவாயில்லை.

ஆனால் மண்டையில் அடிபட்டு, ரத்தம் வழிய வழிய நீ என் மடியில் கிடந்த போது, என் உயிரே என்னிடம் இல்லை. கங்கா அக்காவின் மடியில் உன்னைப் படுக்க வைத்து, நம் ஹாஸ்பிடலுக்கு காரை ஓட்டி வந்தேன்."

"நம் ஹாஸ்பிடலுக்கு முப்பது கிலோமீட்டரில் தான் ஆக்ஸிடண்ட். அதனால் வந்ததும் உடனே தியேட்டருக்குக் கூட்டிப் போனார்கள். என்னால் கத்தியைக் கூட தூக்க முடியவில்லை. எனக்குப் பதிலாக இங்கே நான் பார்த்துக் கொள்ளச் சொல்லியிருந்த டாக்டர் தான் சுத்தம் செய்து, தையல் போட்டார். ஆனால் கான்ஷியஸ் வரவில்லை என்றதும் பயந்து போனேன்."

"இந்த ஏழு நாட்களாக, பைத்தியம் போல உன் பக்கத்திலேயே தான் உட்கார்ந்திருந்தேன். என்ன சாப்பிட்டேன், தூங்கினேனா என்ற நினைவே இல்லை. கங்கா அக்கா, வர்ஷாவை வீட்டிற்குத் தூக்கிப் போய் விட்டார்கள். நீ விழித்து விட்டாய் என்றதும், உன்னிடம் ஆசையாக ஓடி வந்தேன்."

"ஆனால் என்னைப் பார்த்து `டாக்டர்' என்று நீ கூப்பிட்டதும், பாதி உயிர் போய்விட்டது. `நான் யார்'



என்று நீ கேட்டதும், எனக்கு இடியே தலையில் விழுந்தது போல ஆனது."

"இது அம்னீஷியா! ட்ரீட்மெண்டில் குணப்படுத்த முடியும் என்றெல்லாம் என் அறிவுக்கு நன்றாகப் புரிகிறது... ஆனால் என் சுமிக்கு, என்னைத் துளி கூடத் தெரிய வில்லை என்றால் என்னால் தாங்க முடிய வில்லை!" அவனது வேதனையும், வலியும் கண்களிலும், குரலிலும் தெரிய, ஆதரவாக அவன் கரங்களைப் பற்றினாள். அதில் அவனைப் புரிந்து கொண்ட இதம் தெரிந்தது.

"டாக்டர், நீங்கள் இருக்கும் போது எனக்கென்ன கவலை? வருத்தப்படாதீர்கள்."

அவள் குரலில் இருந்த ப்ரியமும், கனிவும் கண்டு சடாரென அவளை நிமிர்ந்து பார்த்தான்.

பழையபடி முகம் கம்பீரமாக, அவள் கையை அழுத்தியவன், "தேங்க்ஸ் சுமி, என்னை நம்புவதற்கு! என்னை ஏற்றுக் கொண்டதற்கு! உன் மனம் எத்தனை குழப்பத்தில் இருக்கும் என்று, ஒரு டாக்டராக என்னால் உணர முடிகிறது."

டோண்ட் வொரி.... தலைக் காயத்தில், தையல் பிரிக்க இன்னும் நான்கு நாட்கள் ஆகும். அதுவரை நமக்கு ஹாஸ்பிடல் வாசம் தான். பிறகு நம் வீட்டுக்குப் போய் விடலாம். வர்ஷாவும் இங்கு தான் இருப்பாள். இது என்னுடைய பர்ஸனல் அறை. நீ இங்கேயே இரு. எனக்கு வேறு அறையை ரெடி செய்திருக்கிறேன்."ஒரு வாரமாக அங்கு தான் தங்குகிறேன்.

வர்ஷாவுக்கு அம்மாவாக... இயல்பாக, .'.ப்ரீயா இரு. எந்தச் சங்கடமும் வேண்டாம்... ஷ்யூர்!" என்று அவள் கையை அழுத்தி விட்டு எழுந்தான். அவனுடைய

பேச்சும் செயலும் மனதை மயிலிறகால் வருடியது போல இருந்தது. ஒரு வித இதம் பரவுவதை முழுமையாக உணர்ந்தாள்.

`உன்னை நான் முழுமையாக நம்புகிறன்!' என்பது போல அவனைப் பார்த்து மிருதுவாகப் புன்னகைத்தாள்.

அதைப் பார்த்த ராம் தடுமாறி, `இந்த மென்மையும் அதைப் பார்த்த ராம் தடுமாறி, அமைதியும் தானே, என்னை ஆளை அசரடிக்கும் அழகும், அமைதியும் தானே, என்னை இந்த ஐந்து வருடங்களாக உன் மேல் பைத்தியமாக, உன் காலடியில் விழ வைத்தது' என்று பெருமூச்சுடன் நினைத்தவன், "ஓ.கே சுமி...! எனக்கு ஓ.பி.க்கு டைம் ஆகி விட்டது. நர்ஸ் நளினி எப்போதும் உன்னுடன் தான் இருப்பார். வர்ஷா தூங்கி எழுந்ததும் உணவு கொடுக்க வேண்டும். நர்ஸ் பார்த்துக் கொள்வார்கள். மறுபடி சிறிது நேரம் விளையாடினால் தூங்கி விடுவாள். நான் மதியம் சாப்பிட, இங்கு தான் வருவேன்; உனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லையே?"

`இல்லை' என்று தலையசைத்த போதே முகம் சிவந்து போனாள். அவளை முத்தமிடத் துடித்த நினைவை உதறியவனாக, வேகமாக அந்த அறையை விட்டு வெளியேறினான். தன்னைச் சமன்படுத்திக் கொண்டு நர்ஸிடம் பேசி விட்டு நோயாளிகளைப் பார்க்கச் சென்றான்.

சுமிக்கும் மனது வெறுமையானது போல இருந்தது. எந்த விதமான ஆதாரமும் காண்பிக்காமல் டாக்டர் சொன்ன வார்த்தையை, தன் மனது முழுமையாக ஏற்றுக் கொண்டதை எண்ணி வியந்து போனாள். வர்ஷாவை பார்த்த கணமே, தன் உயிர் துடித்ததை சுமியால் உணர முடிந்தது. முடிவாக `இது என் குடும்பம்' என்பதில்



பெருமையும் நிம்மதியுமாக, வர்ஷாவின் அருகில் படுத்து கண் மூடினாள்.

நளினி வந்து அவளருகில் அமர்ந்தாள். அவளின் களங்கமற்ற முகத்தைப் பார்த்ததும், `சீக்கிரம் நினைவு திரும்பி, எங்கள் டாக்டருக்கு சந்தோஷத்தைக் கொடுக்க வேண்டும்' என்று மனதார ஆண்டவனைப் பிரார்த்தித்தாள்.

ஓ.பி. முடித்து விட்டு முதலில் தன்னுடைய ரூமுக்குச் சென்றான். ஜில்லென்ற ஐஸ் வாட்டரைக் குடித்ததும், மனது நிதானத்துக்கு வந்தது. சுமி... தன் காதல் மனைவி! ஆசையும் காதலுமாய், சந்தோஷம் தான் வாழ்க்கையெனக் கழிந்த இந்த மூன்று வருடங்கள்! நினைத்ததும் இனித்தது... பத்து நாட்களுக்கு முன்பு வரை ஒரு கணம் கூட தன்னை விட்டுப் பிரியாத அவனுடைய சுமி, இனி அவனுக்குக் கிடைப்பாளா என்று ஏக்கத்துடன் தவித்தது.. அந்த இனிய நினைவுகளுடனே கண் மூடி சேரில் சாய்ந்து அமர்ந்திருந்தான்.

# 2

**சு**மியை முதன்முதலில் பார்த்தது ஞாபகம் வந்ததும், ராமின் முகம் புன்னகையில் மலர்ந்தது.

அவன் எம்.எஸ் (நியூரோ) ஃபைனல் இயர் படித்த போது, இடையில் லீவுக்குச் சென்னை வந்திருந்தான். பதினைந்து நாட்கள் தந்தையுடன் மிக மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருந்தான். மாலை நேரங்களில், அவருடைய கிளினிக்குச் சென்று, கொஞ்சம் உதவி

செய்வான். கங்கா அக்காவிடம் பிடித்தமானதைச் செய்யச் சொல்லி, வெளுத்துக் கட்டுவான்.

அவனுடன் இருக்கும் நாட்களில், அவனது தந்தை ஜகதீஷும் சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் இருப்பார். மகனோடு சின்னப்பையன் போல தினமும் ஊரைச் சுற்றுவார். சினிமா, ஷாப்பிங் என்று மகனை எந்த விதத்தில் எல்லாம் சந்தோஷப்படுத்த முடியுமோ, அதையெல்லாம் உடனே நிறைவேற்றுவார்.

ஊருக்குக் கிளம்பும் நாள் நெருங்க நெருங்க, இருவருமே தத்தம் சோகத்தை மறைத்துக் கொண்டு வளைய வருவார்கள். ராம் இன்று மாலை ஊருக்குக் கிளம்ப வேண்டும். மகனுக்கு பேக் செய்ய உதவிக் கொண்டே, "ராம்! இந்த வருடத்தோடு உன் படிப்பு முடிந்து விடும். அதுக்குப் பிறகு உன்னோட ப்ளான் என்ன கண்ணா?"

கையில் எடுத்ததை அப்படியே கீழே வைத்துவிட்டு, அவரது கழுத்தைச் கட்டிக் கொண்டவன், "இது என்னப்பா புதுசா கேட்கறீங்க? எக்ஸாம் முடிந்ததும், அடுத்த நாளே நான் இங்கே ஓடி வந்து விடுவேன். அப்புறம், எனக்கு இங்கே வேலை கிடைக்காமலா போய்விடும்?"

"இல்லைடா! நேத்து உன் சீ∴ப் டாக்டர்.ஷர்மா போன் பண்ணி என்னிடம் பேசினார். "ராமின் படிப்பு முடிந்தவுடன், அவனை என்னிடமே விட்டு விடுங்க. அவன் கிட்ட நல்ல பொட்டன்ஷியல் இருக்கு. என்னோட வாரிசா, அவனை மிகப் பெரிய நியூரோ சர்ஜனா நான் கொண்டு வந்திடறேன் என்றார்."

"நீங்க என்னப்பா சொன்னீங்க?"

"ராமுக்கு அதுதான் விருப்பம் என்றால், எனக்கு



எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை என்றேன்"

ராம் அவர் அருகில் வந்து, அவர் மடியில் தலைவைத்து படுத்துக் கொண்டான்.

"அப்பா! படிப்புக்காக உங்களை இத்தனை வருஷம் பிரிந்திருந்ததே போதும். அதன் பிறகு, ஒரு நாள் கூட உங்களை விட்டுட்டு என்னால் இருக்க முடியாது. டாக்டரிடம் நானே சொல்லிக்கறேன். அவர் புரிஞ்சுக்குவார்."

ஜகதீஷிக்குப் பெருமையாக இருந்தது... அவன் சற்றே நெகிழ்ந்திருப்பதை உணர்ந்து, "ராம் ! டைம் ஆச்சுப்பா... கிளம்பலாமா? ட்ரெயின்ல நீ சாப்பிட, கங்கா டிபன் ரெடி பண்ணிட்டாள்" என்று பேச்சை மாற்றினார்.

ஸ்டேஷனுக்குச் சென்றதும், ரயில் ஒரு மணி நேர தாமதமாகப் புறப்படும் என்ற அறிவிப்பு வந்தது. வழியில் ஜகதீஷின் ∴ப்ரண்ட் அவரைப் பார்த்ததும், பேசுவதற்காகப் பிடித்துக் கொண்டார்.

"நீங்க பேசிட்டு வாங்கப்பா! நான் புக் ஸ்டால் கிட்ட நிக்கறேன்" என்று சொல்லிவிட்டு, லக்கேஜை எடுத்துக் கொண்டு ஹிக்கின்ஸ் பாதம்ஸ் கடைக்குச் சென்றான். மறுநாள் பகல் முழுவதும் பயணம் செய்ய வேண்டியிருந்தால், வழியில் படிப்பதற்கு சில புத்தகங்கள் தேவைப்பட்டது. லேட்டஸ்ட் கலெக்ஷனைப் பார்த்து, சில நாவல்களைத் தேர்வு செய்து வாங்கி விட்டு கிளம்பும் போது, திடீரெனப் பின்னால் ஏதோ சத்தம்! ஏதோ ஒரு ஆர்வத்தில் என்னவென்று கவனித்தான்.

கல்லூரி மாணவி போன்ற தோற்றத்தில் ஒரு இளம்பெண், யாரோ ஒரு ஆணை, திரும்பத் திரும்ப கன்னத்தில் அறைந்து கொண்டிருந்தாள். அவனருகே அவள் வயதுப் பெண் ஒருத்தியுடன், கையில் தண்ணீர்

பாட்டியுடன் பதினைந்து வயதுச் சிறுமி ஒருத்தி பயந்து பயந்து, அழுது கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணிடம் அறை வாங்கியவன் தப்பி ஓட முடியாத படி, அவள் அவனது சட்டையைக் காலரைக் கொத்தாகப் பற்றியிருந்தாள்.

அப்படியே அந்தச் சிறுமியிடம், "உன் பேரண்ட்ஸ் எங்கேம்மா?" என்றதும்,

சற்றுத் தொலைவில் இருந்த ரயில் பெட்டியைக் காட்டி, "அதில் இருக்காங்க" என்றாள்.

"தண்ணி பிடிக்க உன்னைத் தனியாகவா அனுப்பினாங்க? உன் கூட வேறு யார் வந்திருக்கா?"

"யாரும் இல்லைக்கா; நான் மட்டும் தான் வந்தேன்."

"இனி அப்படி வராதே! டிரெயின் கிளம்பிடப் போகுது. நீ போய் விடு. இனி நான் பார்த்துக்கறேன்" என்று அவளை அனுப்பி வைத்தாள்.

பின் அவனிடம் திரும்பியவள் உக்கிரமாக, "ஏண்டா, பொறுக்கி! ஒரு சின்னப் பெண்ணிடம் எத்தனை மோசமாக நடந்திருக்க! அவ விலகி விலகிப் போனாலும் நீ பின்னாலயே போய் சீண்டி, ஏன் வம்பு செய்யற? நான் பார்த்துட்டுப் பொறுக்க முடியாமத்தான் உன்னை அடிச்சேன்.

ஏண்டா! நீங்கள்ளாம் அக்கா தங்கச்சியோட பொறக்கலியா? யாராவது அவங்கள இப்படிப் பண்ணினா, நீ சும்மா விடுவியாடா?" அவள் வார்த்தைகளில் நெருப்பு.

"ஏய்! என்ன? விட்டா ஓவரா பேசிக்கிட்டே போற! நீ பெரிய இவளா? எனக்குப் புத்தி சொல்ற! என்னையே அடிச்சிட்ட இல்ல? வெளியே வா. உன்னை என்ன செய்யறேன் பாருடி. முதல்ல என் சட்டைய விடு!" அடி



வாங்கியவன் திமிறினான். இத்தனைப் பெரிய கூட்டத்தின் முன் அடி வாங்கிய அவமானம் அவனுக்கு! அவளைக் கொலையே செய்யும் அளவுக்கு வெறியேறி இருந்தது அவனுக்கு.

அவன் பேச்சைக் கேட்டு அசராமல், அலட்சியமாக, அருகே இருந்த தன் தோழியிடம் தணிந்த குரலில் ஏதோ சொன்னாள். அவளோ கலவரத்துடன், "வேண்டாண்டி! எனக்குப் பயமா இருக்கு. சொன்னா கேளு. உனக்கெதுக்கு இந்த வம்பெல்லாம்? அவனை விடுப்பா. போய்த் தொலையட்டும். நாம போகலாம் வா" என்றாள்.

அவளோ கோபத்துடன், "நான் சொன்னதைச் செய்வியா... மாட்டியா? பப்ளிக் பிளேசில் ஒருத்தன் இத்தனை தைரியமா மிஸ்பிஹேவ் பண்றதுக்கு நாமும் ஒரு காரணம். யார் என்ன செஞ்சாலும் கண்டுக்காம போயிடறோம். அதான்! அந்தத் தைரியத்தில் தான் இவன்களுக்கு திமிர் அதிகமாகுது. அதை இப்படி யாராவது, கொஞ்சம் பேராவது அடக்க முன் வரணும். பார்... எத்தனை பேர் சும்மா நின்னு நம்மை வேடிக்கை பார்க்கிறாங்கன்னு. ஒருத்தராவது ஹெல்ப் பண்ண வராங்களா? இல்லையே. டைம் ஆகுது..., "நீ போடி" என்றாள்.

ராம் அப்போது தான் அவளை முழுதாகப் பார்த்தான். சுமார் இருபது வயதிருக்கும். பிங்க் கலர் காட்டன் சுடிதாரில் எளிமையான தோற்றம்... முகமெங்கும் வியர்வை பூத்திருக்க, நெற்றியில் கலைந்த கேசம் காற்றில் அசைந்தாட, தன் நீண்ட பின்னலை முன்னால் வழிய விட்டிருந்தாள்.

எந்த ஒரு ஒப்பனையும் இல்லாமல், ஒரு பெண்,

இத்தனை அழகாக இருக்க முடியுமா? ஆச்சரியத்துடன் அவளையே தான் பார்த்துக் கொண்டிருந்தான். அத்தனை எளிமையிலும், அவளது முகத்தில் தெரிந்த கம்பீரமும் நிமிர்வும், ஏன்...? அவளது கோபமும் கூட அவனை வசீகரித்தது. அடுத்து அவள் என்ன செய்யப் போகிறாள் என்பதை அறியும் ஆர்வத்தில் அங்கேயே நின்றான்.

கூட்டத்தில் நின்ற ஒரு வயதான பெண்மணி, "இங்க பாரும்மா! நான் சொல்றதைக் கொஞ்சம் கேளு. நீ சின்னப் பொண்ணு. உனக்கு விபரம் தெரியல. பேசாம அவனை விட்டுட்டு நேரத்தோட வீட்டுக்குப் போற வழியப் பாரு. கோர்ட், கேஸ், போலீஸ்-னு நிறையப் பிரச்னைகள் வரும். உனக்கு இதெல்லாம் புரியாது. பத்திரமா வீடு போய்ச் சேர்!" என்றார்.

அவள் பதில் சொல்வதற்குள், அவள் தோழி ரயில்வே போலீஸை கூட்டிக் கொண்டு வந்து சேர்ந்தாள். ராம், திகைப்போடு விழி விரித்தான். போலீஸ் வந்ததும் கூட்டம் கலையத் துவங்கியது. அவளிடம் சிக்கியிருந்தவன் இதை எதிர்பார்த்திராததால் பயந்து வியர்த்துப் போனான்.

போலீஸ் அருகே வந்து, "என்னம்மா! என்ன விஷயம்?" அவனை விட்டுவிட்டு கைகளை உதறிக் கொண்டவள், பின் எஸ்.ஐ. அருகே சென்றாள்.

"வணக்கம் சார். நான் என் ஃப்ரண்டை சென்ட் ஆஃப் பண்ண ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தேன். நான் வந்ததிலிருந்தே என் பின்னாலேயே வந்து, என்னைச் சீண்டிக் கொண்டிருந்தான். ரொம்ப அத்து மீறி டீஸ் பண்ணினான் சார். அதான் இவனைப் பிடித்து வைத்தேன் சார்.

நான், இவன் மேல புகார் கொடுக்க விரும்பறேன்.



அதுக்கு நான் என்ன பண்ணனும்-னு சொல்லுங்க சார். அதன்படி செய்யறேன். இவனைச் சும்மா விடக்கூடாது!" தைரியமாக அவள் பேசியதைப் பார்த்து அவரே வியந்து பாராட்டினார்.

"அதை விடும்மா. **உன் தைரியத்தைப் பார்த்து நெஜமா, ரொம்பச் சந்தோஷம்மா இருக்கு. பெண்கள் இந்த மாதிரி எந்தப் பிரச்னையையும் தைரியமா ஃபேஸ் பண்ணனும். அதிலேயே பாதி குற்றங்கள் குறைந்திடும். ஈவ் டீசிங்ன்னா இந்த மாதிரி ரவுடிங்க பயப்படுவாங்க.**

இவனை நான் எந்த மாதிரி ஹேண்டில் பண்ணனுமோ அப்படி பண்ணிக்கறேன். நீ இதுல இன்வால்வ் ஆக வேண்டாம். நீ படிக்கற பொண்ணு. அது டிஸ்டர்ப் ஆகும். அதனால நானே பார்த்துக்கறேன். உன் விருப்பப்படி நிச்சயமா இவனுக்குத் தண்டனை கிடைக்கும். நீ போம்மா. ஆல் த பெஸ்ட்" என்று அவளை அனுப்பி வைத்தார். அவளும் அவருக்கு நன்றி சொல்லி விட்டுக் கிளம்பினாள்.

அதற்குள் ஜகதீஷ் வந்து, "ராம்! வண்டி ஆறாம் நம்பர் பிளாட்ஃபார்ம்-ல வரப் போகுது. சீக்கிரம் வா, போகலாம்" என்று ஒரு சூட்கேஸைத் தூக்கிக் கொண்டார். அவனோ தன் தோழியோடு பேசிக் கொண்டு சென்ற மிஸ். ஃபயர் முகத்தையே திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே, தன் தந்தையின் பின்னே சென்றான். அவளின் அழகு முகம் அவன் இதயத்தில் ஆழப் பதிந்து போனது.

ரயிலில் ஏறி அமர்ந்த பின்னும் கூட அவளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். அவளின் எளிமையோ, அழகோ, தைரியமோ, தன்னம்பிக்கையோ...

ஏதோ ஒன்று அவனை காந்தம் போல கவர்ந்திருந்தது. தான் ஒரு பெண்ணைப் பற்றி இத்தனை நேரம் சிந்திப்பதைக் குறித்து அவனுக்கே வியப்பாக இருந்தது. அவளை நினைத்ததும் அவன் இதழ்களில் முறுவல் பூத்தது!.

எதிர்பாராத இனிய அதிர்ச்சியாக, அவள் தோழி அவன் ஏறிய அதே பெட்டியில் ஏறினாள். ராம், தன் தோழியுடன் சிரித்துச் சிரித்து பேசிக் கொண்டிருந்தவளை விழியகலாது பார்த்தான். கிரின் சிக்னல் போட்டதும், ரயில் நகரத் துவங்கியது.

"ராம், டெல்லி போய்ச் சேர்ந்ததும் எனக்கு போன் பண்ணு. வழியில் சிக்னல் கிடைத்தாலும் பேசு. டாக்டர். ஷர்மாவிடம் கொஞ்சம் பொலைட்டா பேசு. கொஞ்ச நேரத்தில், மறக்காமல் டின்னர் சாப்பிடு. பை கண்ணா!" என்று கையசைத்து வழியனுப்பினார்.

திரும்பியர் அவளைப் பார்த்து, "ஹாய் அங்கிள்! எப்படி இருக்கீங்க? நான் என் ஃபிரண்டை செண்ட் ஆஃப் பண்ண வந்தேன்... அப்பா வரல. நான் மட்டும் தான் வந்தேன்."

"அப்ப சரி; நானே உன்னை டிராப் பண்றேன். வா!" என்று கூட்டிச் சென்றார்.

'ஏது! இவ அப்பாவுக்கு ரொம்பத் தெரிஞ்சவ போலிருக்கே? சகஜமாகப் பேசுவதைப் பார்த்தால், ரொம்ப வருஷமாக பழக்கம் என்று நினைக்கிறேன். ஒருவேளை கிளினிக் வர ரெகுலர் பேஷண்டா இருப்பாளோ? ஆனா நான் போன போது இவளை ஒரு தடவை கூட அங்க பார்க்கலியே? அப்பா கிட்ட அவளைப் பத்தி என்னன்னு விசாரிக்கறது' என்று மனதுக்குள்ளேயே புலம்பினான்.



யாரிடமாவது இந்தச் சந்தோஷத்தை பகிர்ந்து கொள்ள வேண்டும் போல இருந்தது. உடனே தன் செல்போனை எடுத்து நண்பனை அழைத்தான்.

"டேய் சிவா! நான்தாண்டா. நீ இப்ப எங்க இருக்க?"

"........"

"வந்திட்டயா... இல்லையாடா. நான் சென்னையிலிருந்து இப்பதான் கிளம்பறேன். அப்பா எப்படிடா இருக்காங்க?"

"........"

"ஆமாண்டா... டிபன் இனிதான் சாப்பிடணும் கொண்டு வந்துட்டேன்."

"........"

"சரிடா... இங்க ஸ்டேஷனில் ஒரு இன்ஸிடென்ட்... ரொம்ப சுவாரஸ்யமா..." என்று தன் நண்பனிடம் விவரிக்கத் துவங்கினான்.

கல்லூரிக்குச் சென்ற பிறகும் கூட, ராமிற்கு அவளை மறக்க முடியவில்லை. அவளோ அவனது கனவிலும் வந்து தூக்கத்தைக் கெடுத்தாள். அவளின் நினைவுகள் அவன் மனதில் அழியாத சித்திரமாகப் பதிந்து போனது.

❖ ❖ ❖

திடுக்கிட்டுக் கண் விழித்த போது மணி ஒன்று! சுமி இருந்த ரூமுக்கு, போனில் தொடர்பு கொண்டான்.

"நளினி.....!"

"எஸ். டாக்டர்...!"

"குழந்தை எழுந்து விட்டாளா? சுமி என்ன செய்கிறாள்?"

"குழந்தை எழுந்ததும் செரிலாக் ஊட்டி விட்ட பின், விளையாடுகிறாள். மேடம் நீங்கள் கிளம்பியதும் தூங்கியவர்கள், இன்னும் எழவில்லை.. நன்றாக அசந்து தூங்குகிறார்கள். டிரைவர் உங்களுக்கு லஞ்ச் கொண்டு வந்து, கொடுத்து விட்டுப் போனார்.. வாங்கி வைத்திருக்கிறேன்."

"ஓ.கே. பத்து நிமிடத்தில் வருகிறேன்!" கை கால் கழுவ, எழுந்து சென்றான்.

# 3

**பே**ச்சுக் குரல் கேட்டு எழுந்த சுமி, வர்ஷா விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு அவசரமாக எழுந்தாள்.

"அவசரமில்லை மேடம். வர்ஷாவுக்கு செரிலாக் ஊட்டி விட்டேன். எழுந்து பாத்ரூம் போக வேண்டும் என்றால் போய் வாருங்கள்."

"சாரி... ரொம்ப நேரம் தூங்கி விட்டேன். ஒரு நிமிடத்தில் வந்து விடுகிறேன்."

"ஓ.கே. மேடம்...! அவளுக்கும் தூக்கம் தான். காதைத் தேய்க்கிறாள்; மடியில் போட்டு, தட்டிக் கொடுத்தால் தூங்கி விடுவாள்."

சுமியைக் கண்டதும் வர்ஷா தாவினாள். அவளை வாங்கி முத்தமிட்டு, மடியில் போட்டுத் தட்டிக் கொடுத்ததும், அவள் புடவையைப் பற்றிக் கொண்டே தூங்கி விட்ட வர்ஷாவையே கண் கொட்டாது பார்த்தாள். மெல்ல அவள் கன்னத்தை வருடி, "அப்படியே, அவள் அப்பாவையே உரித்து வைத்திருக்கிறாள்!"



அவள் கன்னங்களைக் கிள்ளி முத்தமிட்டவளைப் பார்த்து புன்சிரிப்புடன், "நீங்கள் யார் என்ற சந்தேகம் தீர்ந்ததா மேடம்? இந்தப் பத்து நாட்களாக எங்கள் சீ·ப் டாக்டர் படும் துயரத்தை காணச் சகிக்கவில்லை. பாவம்! அன்றிலிருந்தே சரியான சாப்பாடு, தூக்கம் எதுவுமே இல்லாமல் உங்கள் அருகிலேயே காத்துக் கிடந்தார். உங்கள் கைகளைப் பிடித்த பிடியை விடவே இல்லை.

உங்கள் அருகிலேயே சேரில் உட்கார்ந்து, கட்டிலில் தலை வைத்து உறங்கி விடுவார். அவருடைய ரூமுக்குக் கூட ரெஸ்ட் எடுக்கப் போகவே இல்லை. நீங்கள் கண் விழித்ததும் தான், அவர் முகத்தில் சிரிப்பையே பார்க்க முடிந்தது. அவர் எத்தனை பெரிய டாக்டர் தெரியுமா?

நீங்கள் கன்சீவ் ஆகி இருந்த போது அவருடன் அடிக்கடி இங்கு வருவீர்கள். டாக்டர் நிர்மலா தான் உங்களைக் கவனித்தார். நீங்கள் இருவரும் சந்தோஷமாக சிரித்துப் பேசிக் கொண்டு, இணை பிரியாமல் வரும்போது, பார்க்கவே அத்தனை அழகாக இருக்கும்.

நாங்கள் உங்கள் ஜோடிப் பொருத்தத்தைப் பற்றி அடிக்கடி பேசிக் கொள்வோம். எங்கள் கண்ணே தான் பட்டு விட்டது போல...! இனிமேலாவது எங்கள் டாக்டர் சந்தோஷமாக இருந்தால், அதுவே போதும் மேடம் எங்களுக்கு!

எங்கள் டாக்டர் ரொம்ப ரொம்ப நல்லவர் மேடம். யாரையும் மனம் நோகப் பேசவே தெரியாது. எப்போதுமே அமைதியாக புன்சிரிப்புடன் தான் இருப்பார்.

அவரைப் பார்க்கும் போதே பேஷண்டுக்கு, பாதி நோய் தீர்ந்து விடும். அத்தனை கைராசி...! இந்த சிட்டியிலேயே புகழ் பெற்ற நியூரோ சர்ஜன். இந்த ராம் மருத்துவமனையைத் தெரியாதவர்களே கிடையாது. இந்த ஹாஸ்பிடல் அத்தனை பிரபலம்!"

மேடம், குழந்தையைக் கொடுங்க! தொட்டிலில் போடுகிறேன்; மடியிலேயே வைத்திருந்தால் கால் விறுத்து விடும்!" வர்ஷாவைத் தொட்டிலில் இட்டாள்.

நளினி கூறியதைக் கேட்டதும், இத்தனை பெருமையை உடைய ராம்குமார், தன் கணவன் என்பதில் பெருமிதமாக உணர்ந்தாள். ராமின் மேல் ஒரு மரியாதை! இருந்தாலும் அவளுக்குத் தீர்க்கப்பட வேண்டிய சந்தேகங்கள் நிறைய இருந்தன. இருவரின் பெற்றோர், திருமணம், உறவினர்கள் என்று! பொறுமையாக இருக்கலாம். சரியான சமயத்தில், ராம்குமாரே இதைப் பற்றிச் சொல்லுவான் என்று நினைத்தாள்.

மனைவி என்ற உரிமை இருந்தும், தனக்கு அவனைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை என்றதும்... எத்தனை பொறுமையாக, கண்ணியமாக, மரியாதையுடன் நடந்து கொண்டான் என்று புரிந்ததும், அவள் மனம் கனிந்தது. 'இவன் அருமையானவன்' என்றே நினைக்கத் தோன்றியது.

உள்ளே வந்த ராம், "என்ன...! யோசனை பலமாக இருக்கிறது? அதுவும், என்னைப் பற்றித்தான் இருக்கும் போல இருக்கிறது! " மெல்லச் சிரித்தான்.

அவன் சரியாகக் கண்டு கொண்டான் என்பதில், முகம் குங்குமமாகச் சிவந்து போய், சூடானது. அதைப் பார்த்து தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் அவளை



நோக்கி ஓரடி எட்டி வைத்தவன், 'பொறுடா' என்று அவனையே திட்டிக் கொண்டு, வர்ஷாவிடம் குனிந்து முத்தமிட்டான்.

சுமி, அங்கிருந்த டேபிளின் மேலிருந்த கேரியரைப் பார்த்து, எழுந்து சென்று அதைப் பிரித்தாள். "சிஸ்டர், சுமிக்கு இன்ஜெக்ஷன் போட்டு விட்டீர்களா?"

"யெஸ் டாக்டர்."

"சரி, நீங்கள் இங்கேயே சாப்பிட்டு விடுகிறீர்களா? அக்கா நிறையவே கொடுத்திருப்பார்கள்."

"இல்லை டாக்டர், நான் ஸ்டாஃப் ரூமில் போய் சாப்பிடுகிறேன். சாப்பாடு கொண்டு வந்து விட்டேன். அவர்களோடு சேர்ந்து சாப்பிட்டு ஒரு வாரமாகிறது. நீங்கள் சாப்பிட்டு முடிப்பதற்குள் வந்து விடுகிறேன்."

"மெதுவாக வந்தால் போதும். நான் இரண்டரை மணிக்குத் தான் கிளம்புவேன். ஒரு மணி நேரம் ரெஸ்ட்."

"சுமி, நீ சாப்பிட்டாயா? எனக்கு ரொம்ப ரொம்பப் பசிக்கிறது. வெகு நாட்களுக்குப் பிறகு, பசி என்பதே இப்போது தான் தெரிகிறது."

"சரி சாப்பிடலாம்!" தட்டு வைத்துப் பரிமாறினாள். கண்கள் மின்ன அதைப் பார்த்து, "சுமி, இப்படி நீ எனக்குப் பரிமாறிச் சாப்பிட்டு, எத்தனை நாட்களாகிறது தெரியுமா? சுமி, இனிமேல் இத்தனை நேரம் நீ சாப்பிடாமல் இருக்கக் கூடாது. என்னுடைய டியூட்டிக்கு நேரம் காலமே கிடையாது. அதனால், நான் எப்போது வேண்டுமானாலும் சாப்பிட்டுக் கொள்ளுவேன். நீ எனக்காகக் காத்திருக்காதே. சரியா...?" இருவருக்கும் பரிமாறி விட்டு, டம்ளரில் நீரை ஊற்றினாள். ஒரு கவளம் எடுத்து விட்டு அவளைத் தான் பாத்தான்.

ம், சாப்பிடுங்கள்!'' என்று சொல்லி விட்டு சாப்பிடத் துவங்கினாள். அதை ஓர் ஓரமாக வைத்து விட்டு மௌனமாக சாப்பிடத் துவங்கினாள். அவனுக்கும் தேவையானதைப் பரிமாறிக் கொண்டு சாப்பிட்டு முடித்தார்கள்.

அவளைத் தனியாக நடக்க அனுமதித்தாலும், கவனம் முழுவதும் அவள் மேல் தான்...! அவள் பாத்ருமிலிருந்து வந்ததும், அவள் சாப்பிட வேண்டிய மாத்திரைகளைப் பிரித்து தண்ணீரோடு அவள் கையில் கொடுத்தான். அவன் அக்கறையில் மனம் கனிந்தவள், மெல்ல அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

அங்கிருந்த சோபாவில் அவளை அமர வைத்து, தானும் அருகே அமர்ந்தான். அவள் கழுத்து வெறுமையாக இருப்பதைக் கண்டு, தன் கழுத்திலிருந்த மெல்லிய செயினை அவள் கழுத்தில் போட்டான்.

''உன் திருமாங்கல்யம் நம் வீட்டில் இருக்கிறது. வீட்டுக்கு வந்து, நல்ல நாள் பார்த்துத் தான் அதை மீண்டும் அணிவிக்க வேண்டும் என்று, அக்கா ஆர்டர் போட்டு விட்டார்கள். ஆபரேஷன் தியேட்டரில் அதை நான் தான் கழற்றி, பீரோவில் வைத்து விட்டேன்

ஆக்ஸிடெண்டுக்குப் பிறகு, நான் இன்னும் நம் வீட்டுக்கே போகவில்லை. உன்னோடு சேர்ந்து, ஒன்றாகத் தான் போக வேண்டும் என்று, இங்கேயே நானும் தங்கி விட்டேன். அது வரை இந்த செயின் உன் கழுத்தில் இருக்கட்டும்.

சுமி, இன்னொரு விஷயம்! நம் வர்ஷாவுக்கு ஒரு வாரமாக தாய்ப்பால் கொடுக்கவில்லை. ஆனால், அவளுக்கு ஒரு வயது ஆகும் வரை, கண்டிப்பாக அதை



நிறுத்தக் கூடாது. இன்ஃபெக்ஷன் ஆகாமல் இருக்கத் தான், உனக்கு நளினி ஊசி போட்டிருக்கிறார்கள்.

நம் வர்ஷாக்குட்டி தூங்கி எழுந்ததும், அவளுக்கு நீ ஃபீட் பண்ண ஆரம்பித்து விடு! என்ன...?'' கூச்சத்தில் முகம் சிவக்க, தலை குனிந்து கொண்டாள். தனக்குள்ளே சிரித்துக் கொண்டவன், ''சுமி அட்லீஸ்ட் இன்னும் நான்கு நாட்களாவது, நீ இங்கிருக்க வேண்டியிருக்கும்.

இது நம் ஹாஸ்பிடல். அதனால் பயமில்லாமல் இருக்கலாம். நானும் இங்கேயே தான் இருப்பேன். என்னுடைய சீனியர் டாக்டர் ஷர்மா, நாளை மறுநாள் உன்னை வந்து பார்ப்பார். ஜஸ்ட் ஒரு ஒபீனியன்! அவ்வளவு தான்... பயப்படாதே!''

சரியென்று தலையாட்டியவள், தங்கள் இருவரின் பெற்றோரைப் பற்றிக் கேட்பதா, வேண்டாமா என்ற குழப்பத்தில் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''ஏதோ கேட்க நினைக்கிறாய்! சொல், என்ன கேட்க வேண்டும்?''

''இல்லை... வந்து... வந்து...''

''நம் பேரண்ட்ஸ் பற்றித் தானே? அதில் என்ன தயக்கம்? இப்போதைக்கு நீ, நான், வர்ஷா... இது தான் நம் குடும்பம். மற்ற எல்லாவற்றையும் உன்னிடம் நிதானமாகத் தான் சொல்ல வேண்டும். இதோ, நாம் சேர்ந்திருக்கும் போட்டோ! அதைப் பார்த்தால் உன் சந்தேகம் கொஞ்சம் குறையலாம்; பர்ஸைப் பிரித்தான். வேகமாக அதை வாங்கி மூடி, அவனிடமே கொடுத்தாள். பார்க்கவே இல்லை.

''டாக்டர்! எனக்கு நூறு சதவீத நம்பிக்கை எப்போதோ வந்து விட்டது. அதிலெல்லாம் சந்தேகமே

இல்லை. நம் வீட்டிற்கு, எப்போது போகலாம் என்று கேட்கத் தான்...”

முகம் மலர, “டாக்டர் ஷர்மா வந்து பார்க்கட்டும். பிறகு வீட்டிற்குப் போகலாம். நீ பழையதை மறந்து விட்டாய் என்பதைத் தவிர, வேறு எந்த ப்ராப்ளமும் இல்லை. மெதுவாகத் தான் குணமாகும்.

இப்போதைக்கு நான் உன் ஃப்ரெண்ட். அதனால் எதை வேண்டுமானால் என்னிடம் மனம் விட்டுப் பேசத் தயங்கக் கூடாது. ப்ராமிஸ்!” என்று நீட்டியவனின் கரங்களில், சம்மதமாகத் தன் கரங்களைப் பதித்தாள்.

அவன் பேச்சும், மென்மையான அணுகு முறையும், அழுத்தமான தாக்கத்தை ஏற்படுத்த, `இவன் என் கணவன்' என்ற பெருமிதத்தோடு அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

அவள் கைகளை மிருதுவாகப் பற்றி முத்தமிட்டவன், “தேங்க்ஸ் சுமி...” என்றான்.

அதற்குள் வர்ஷா சிணுங்க ஆரம்பிக்க, சுமி சோபாவை விட்டு வேகமாக எழுந்தாள்.

“மெதுவா! இரு, நான் அவளைத் தூக்கறேன். ஹலோ, வர்ஷாக் குட்டி! எழுந்தாச்சா?' வர்ஷா சுமியைக் கண்டு அவளிடம் தாவியதைப் பார்த்ததும், “என்ன, குட்டிக்கு பசி வந்திருச்சா? அம்மா கிட்ட போங்க!

சுமி இரு கைகளையும் நீட்டி வர்ஷாவை அள்ளி அணைத்தாள். அவள் மடியில் சாய்ந்து சிணுங்கியவளை புரியாது பார்த்தாள்.”

“இன்று அதிக நேரம் தூங்கி விட்டாதால். அவளுக்குப் பசி! சிஸ்டரை அனுப்புகிறேன்.; ஃபீட் செய்து விட்டு.. பிறகு என் ரூமுக்கு அவளை அனுப்பி விடு.



கண்டிப்பாக உனக்கு ரெஸ்ட் வேண்டும். தூங்கினால் தான் உடலில் பழைய வலு வரும்.

வர்ஷாவை நான் பார்த்துக் கொள்கிறேன். ஐந்து மணிக்குத் தான் ரவுண்ட்ஸ் போக வேண்டும். அதுவரை அவள் என்னிடம் இருக்கட்டும்.”

நர்ஸின் உதவியுடன் குழந்தையின் பசியாற்றினாள். அதில் கிடைத்த நிம்மதிக்கும் சந்தோஷத்திற்கும் ஈடாக எதுவுமே இல்லை என்று தோன்றியது.

வயிறு நிறைந்ததும் வர்ஷா உற்சாகப் பந்தாகத் துள்ளிக் குதித்தாள்.. அவளுக்கு உடை மாற்றி, டிரஸ் செய்து நளினியிடம் கொடுத்தாள். உடல் அசதி, கண்டிப்பாக ஓய்வு வேண்டும் என்று கெஞ்சியது.

“சிஸ்டர், முதுகு வலிக்கிறது. இவளை இவள் அப்பாவிடம் கொடுத்து விடுங்கள். நான் சிறிது நேரம் படுக்கிறேன்.” படுத்தவள், உடனே தூங்கியும் விட்டாள்.

ராம்குமார் வர்ஷாவுக்காகக் காத்திருந்தான். “அடேடே! வாங்க... வாங்க... பால் குடிச்சாச்சா? ஹய்! அழகா டிரஸ் பண்ணியிருக்கீங்களே...! ரொம்ப வாசமா இருக்கீங்க!” என்று அழகாகக் கொஞ்சி ஆசையோடு முத்தமிட்டான்.

பின்பு கட்டிலில் படுக்க வைத்து, கையில் பொம்மையைக் கொடுத்தான். சிறிது நேரம் விளையாடியதும் சோர்ந்து போய் தூங்கி விட்டாள். பக்கத்தில் படுத்து அவளையே கண் இமைக்காது பார்த்தவன் பேபி டவல் எடுத்து போர்த்தி விட்டான்.

கட்டிலின் மறுபுறம் தலையணையை வைத்து விட்டு, ஏஸியை குறைத்தான். நாலரை மணிக்கு அடிக்கும்படி செல்போனில் அலாரம் செட் செய்தான்.

வெகு நாட்களுக்குப் பிறகு நிம்மதியாக ஆழ்ந்து உறங்கிப் போனான்.

நாலரை மணிக்கு அலாரம் அடித்ததும் எழுந்து பக்கத்தில் பார்த்தான். வர்ஷா எழவில்லை. அவள் நெற்றியில் முத்தமிட்டு, "ஸ்வீட் கேர்ள், அவள் அம்மா போலவே... வெரி ஸ்வீட்!" என்று கொஞ்சியவனுக்கு உடனே சுமியைப் பார்க்க வேண்டும் போல இருந்தது..

`ராம்...! வேண்டாம்.. பொறு.. அவளாக உன்னைத் தேடி வரும் வரை கண்ணியமாக, பொறுமையாக, காத்திரு. அப்போது தான் அவள் அன்பு உனக்கு முழுமையாகக் கிடைக்கும்... உள் மனது அவனை அடக்கியது.

# 4

சுமி முகம் கழுவி, தலை வாரி, பளிச்சென்று இவர்களுக்காக காத்திருந்தாள். வர்ஷாவை வாங்கிக் கொண்டு, பிளாஸ்க்கில் இருந்து சுடு தண்ணீரை எடுத்து ஆற்றினான். பின் கூடையிலிருந்த வெள்ளிக் கிண்ணத்தை எடுத்து வைத்து விட்டு, செரிலாக் டப்பாவைத் திறந்தான். இதையெல்லாம் அசையாமல் பார்த்துக் கொண்டிருந்த வர்ஷா, கிண்ணத்தில் செரிலாக்கைப் போட்டதும், புரிந்து கொண்டு அவனிடம் தாவினாள்.

"வெயிட், உனக்குத் தாண்டா! என் குட்டிம்மாவுக்கு ஒரு நொடியில் கலந்து வந்து தருகிறேன். கட்டியில்லாமல் கலந்து, பின் ஒரு டிரேயில் கிண்ணம், ஸ்பூன், சின்ன டம்ளரில் ஆறிய வெந்நீர், டவல், என்று எடுத்து வைத்து விட்டு குழந்தையை வாங்கக் கை நீட்டினான்.



இத்தனை நேரம் அவனையே ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்த சுமித்ரா, "டாக்டர், கொடுங்க! நான் ஊட்டுகிறேன்!"

"என்ன, சுமிக்கு என் பெயர் மறந்து போனதா? உனக்கு நான் எப்போதுமே உன் ராம் தான்! என்னை எப்பொழுதும் அப்படித் தான் கூப்பிடுவாய். தெரியுமா?"

மனது படபடக்க, "நான்... எனக்கு வெட்கமாக இருக்கிறது. ப்ளீஸ், நான் நம் வீட்டுக்குப் போய்..." முழுவதும் முடிக்க முடியாமல் திணறினாள். வர்ஷாவைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு, வேறு எதுவும் பேசாமல், "இப்போது ஊட்டு... வசதியாக இருக்கும்" என்று அவளருகில் அமர்ந்து கொண்டான்.

வர்ஷாவின் இரு கைகளையும் மென்மையாகப் பற்றிக் கொண்டு ஸ்பூனில் எடுத்து ஊட்டினாள். இத்தனை அருகில் வெகு நாட்களுக்குப் பிறகு, சுமியை ராமின் கண்கள் அளவெடுத்தன.

தலையை உயர்த்தாவிட்டாலும், ராம் தன்னையே பார்ப்பது புரிய, முகமெல்லாம் ஜிவ்வென்று சிவந்து போனது. `என்ன இவர்? கொஞ்சம் கூட கூச்சமில்லாமல், என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறார். எப்படி ஊட்டுவதாம்?' மனம் சிணுங்கியது.

காற்றில் புரண்டு நெற்றியில் விளையாடிய முடியை ஒதுக்கி முத்தமிடத் துடித்தான். ஆனாலும் வெகுவாக முயன்று தன் ஆசையை அடக்கிக் கொண்டான்.

வர்ஷா சமர்த்தாக சாப்பிட்டு முடித்தாள். கொஞ்சம் வெந்நீர் கொடுத்து குடிக்க வைத்தாள். டிரஸ் பண்ணியதும்

அவளை வாங்கிக் கொஞ்சி விட்டு, சுமியின் கையில் கொடுத்து, "சுமி..! ரவுண்ட்ஸ் முடிந்து நேராக ஓ.பி பார்க்கப் போய் விடுவேன். நான் வர லேட்டாகும். நீ எட்டு மணிக்கு டிபன் வந்ததும் சாப்பிட்டு விடு. நான் பிறகு வந்து சாப்பிட்டுக் கொள்கிறேன். குட்டிக்கு கரெக்டாக எட்டு மணிக்கு ஃபீட் பண்ணி விட்டால், ஒன்பதரை மணிக்குள் தூங்கி விடுவாள்.

உனக்குத் தூக்கம் வந்தால் நளினியிடம் இவளைக் கொடுத்து விடு" என்றவன், "சமர்த்தாக இருக்க வேண்டும்" என்று வர்ஷாவின் கன்னத்தைத் தட்டினாலும், பார்வை சுமியை விட்டு அகலவில்லை. மெல்லத் தலையசைத்து விட்டு வெளியே சென்றான்.

அவன் ரூமை விட்டு வெளியே போனதுமே, அவளிடமிருந்து ஏதோ கழன்று போனது போல இருந்தது. 'என்ன உணர்வு இது' என்று திகைப்பாக இருந்தது. அதற்கு மேல் யோசிக்கப் பயந்து குழந்தையுடன் விளையாட ஆரம்பித்தாள்.

ஏழரை மணிக்கு டிபன் வந்ததும், நளினி, "மேடம்... சாப்பிடுகிறீர்களா...?" என்றாள்.

"வேண்டாம். பிளாஸ்க்கில் மீதமிருந்த பாலை இப்போது தான் குடித்தேன். பசியில்லை... டாக்டர் வரட்டும்!" வெட்கத்துடன் கூறினாள்.

"மேடம், இதற்குத் தான் மனைவி வேண்டும் என்பது. ஒரு வாரமாக அவரைக் கவனிக்கவும் ஆளில்லை. அவருக்கு இருந்த மன நிலையில், அவர் அருகே போகவே எல்லோருக்கும் பயம். இன்று தான் அவர் முகத்தில் பழைய அமைதியும் புன்சிரிப்பும் திரும்பியிருக்கிறது. அவர் வருத்தப்பட்டால் அதைப் பார்க்கவே முடியவில்லை."



கண்கள் நீரில் பளபளக்க, 'சரி' என்று தலையசைத்தாள். 'என்ன மாதிரியான அன்பு இது' என்று நெக்குருகிப் போனாள்.

'இருவருக்குமே வேறு யாருமில்லை. வர்ஷாதான் எல்லாமே என்று தானே சொன்னான்.. இருவரின் பெற்றோர், மற்ற சொந்தங்கள் எங்கே?' கண்கள் விளையாடும் வர்ஷாவையே வட்டமிட்டாலும், அவளின் எண்ணங்களின் ஓட்டத்தை கட்டுப்படுத்த முடியவில்லை.

அவளுடைய கை, குழந்தையை வருடியது. அவளுக்குப் பசி எடுத்ததும், பொம்மையை வீசி விட்டு, விளையாடாமல் சிணுங்க ஆரம்பித்தாள். ராம் அவளிடம் கொடுத்துச் சென்றிருந்த செல்போனில் டைம் பார்த்தாள். மணி எட்டு, ஐந்து.

'டாக்டர் பொல்லாதவர் தான்.! வர்ஷாவின் பசி நேரத்தைக் கூட சரியாகத் தெரிந்து வைத்திருக்கிறார் பார்!' ரகசியமாகச் சிலிர்த்தாள். குழந்தைக்கு பசியாற்றி வயிறு நிறைந்ததும், முந்தானையை விலக்க, வர்ஷா சுமியைப் பார்த்துச் சிரித்தாள்.

ஈர உதடுகள் பளபளக்க சிரித்தவளைப் பார்த்து மயங்கியவள், "போக்கிரி.. சிரித்து மயக்குற பார்..." செல்லம் கொஞ்சினாள். கட்டிலில் எல்லா பொம்மையையும் பரப்பி விளையாட விட்டாள். பின் சுமியின் மடியில் படுத்து வர்ஷா உறங்கி விட்டாள்.

தாய்மையின் அழகு பூரணமாகத் துலங்க, தன் மடியில் உறங்கும் மகளையே பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். "அப்படியே அப்பா ஜாடை தான். நிறம் மட்டும் தான் என்னது" என்று மெல்ல முணுமுணுத்தாள்.

கதவருகில் நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்த ராம், "என்ன ரகசியம்? எனக்கும் சொல்லக் கூடாதா?" என்று உள்ளே வர, அவனைப் பார்த்ததும் தன்னையறியாமல் அவள் முகம் மகிழ்ச்சியில் பளபளத்தது.

"எனக்கு ரொம்பப் பசிக்கிறது. என்ன டிபன்? நீ எத்தனை மணிக்குச் சாப்பிட்டாய்? அடுக்கடுக்காய் கேள்வி கேட்டு விட்டு, கை கழுவி விட்டு சேரில் வந்து அமர்ந்தான். ஹாட் கேரியரை திறந்து பார்த்து விட்டு, கேள்வியாக புருவத்தை உயர்த்தி அவளைப் பார்த்தான்."

"என்ன, நீயும் இன்னும் சாப்பிடவில்லையா? டிபன் அப்படியே இருக்கிறது? ஏன் சாப்பிடவில்லை?

"..........."

"சுமி, ம்... சுமி உன்னைத் தான்!" குரல் உயர்ந்தது.

"எனக்குத் தனியாகச் சாப்பிடப் பிடிக்கவில்லை டாக்டர். அதனால், நீங்கள் வந்த பிறகு சேர்ந்து சாப்பிடலாம் என்றுதான்."

இது தவிர கங்கா அக்காவுக்கு உதவியாக, ஜமுனா என்ற பெண்ணும் தினமும் காலையில் வந்து, மாலையில் வீட்டுக்குப் போய் விடுவாள். வீட்டுக்குப் போனதும் எல்லாம் நான் சொல்லிக் கொடுக்கிறேன்." பேசியபடி பிளாஸ்க்கில் இருந்த பாலை இரண்டு டம்ளரில் ஊற்றி, ஒன்றை அவளிடம் கொடுத்து விட்டு, தானும் ஒன்றை எடுத்துக் கொண்டான்..

மாத்திரையை அவளிடம் கொடுத்துக் கொண்டே, "குட்டிம்மா ரொம்பத் துறுதுறு இல்லையா? எப்போதுமே இப்படித்தான்...! எந்நேரமும் குதித்துக் கொண்டே தான் இருப்பாள். உன்னை ரொம்பப் படுத்திவிட்டாளா? இந்தா மாத்திரை."



"சரி, நான் கிளம்பட்டுமா. நான் வர்ஷியைத் தூக்கிப் போகட்டுமா?'

"நீ தூங்கு! நான் பார்த்துக் கொள்கிறேன்."

சுமி உடனே, "வேண்டாம். என்னிடமே இருக்கட்டும் டாக்டர். உங்களுக்குத் தான் ரெஸ்ட் வேண்டும். ஒரு வாரமாக நீங்கள் சரியாகத் தூங்கவேயில்லை என்று சிஸ்டர் என்னிடம் சொன்னார்கள். நீங்கள் இன்று போய் நன்றாகத் தூங்கி ஓய்வெடுங்கள்..." என்றாள்.

ராம், சுமியை ஆழ்ந்து பார்த்தான். இரவு விளக்கை உயிர்ப்பிக்கும் போது, நளினி உள்ளே நுழைந்தாள்.

"நளினி சிஸ்டர்! நீங்கள் திவானில் படுத்துக் கொள்ளுங்கள். வர்ஷா அழுதால் சுமியை எழுப்புங்கள்."

"சுமி வரட்டுமா? குட் நைட்" அவன் குரலில் வழிந்த காதலில் மனம் நிறைய கண் மூடினாள். அதிகாலை நான்கு மணிக்கு தான் வர்ஷா சிணுங்கினாள். சுமி உடனே விழித்து, பால் கொடுத்து தூங்கச் செய்தாள். பின்பு படுத்தவளுக்கு ஏனோ உறக்கம் வரவில்லை.

அவள் எண்ணமெல்லாம் ராமையே சுற்றி வந்தது. ஊரிலேயே பிரபலமான டாக்டர். அத்தனை புகழ். அப்படிப்பட்டவன் எனக்காக நேரம் ஒதுக்கி, எப்படிப் பார்த்துக் கொள்கிறான்? மனம் ததும்பியது. அவனைப் பிரிந்து தன்னால் இருக்கவே முடியாது என்று புரிந்தது. ஆனாலும் விடாமல் நெருக்கமாகப் பழக அவனிடம் ஒரு தயக்கம் ஏற்படுவது ஏன் என்று தான் புரியவில்லை.

அவனை ஏறிட்டுப் பார்க்கவே கூச்சமாக இருந்தது என்ன செய்வது என்றும் புரியவில்லை! செல்போன் எடுத்து டைம் பார்த்தாள்.

நளினி, "மணி நாலரைதான் ஆகிறது மேடம். இன்னும் கொஞ்ச நேரம் தூங்குங்கள். டாக்டர் வந்தால் என்னைக் காய்ச்சி எடுத்து விடுவார்" என்றாள் விளையாட்டாக. வர்ஷாவை அணைத்து கண்களை இறுக மூடிக் கொண்டாள். ஆறு மணிக்கு எழுந்து காபி முடித்தவுடன், "சிஸ்டர், பாப்பா எழுவதற்குள் குளித்து விடுகிறேன்... ஐந்தே நிமிடம்!"

குளித்து விட்டு கரு நீலப் புடவையில் வெளியே வந்தவளைப் பார்த்து, "மேடம்..! நீங்கள் ரொம்ப அழகு. அதான் டாக்டர் உங்களையே சுற்றிச் சுற்றி வருகிறார். உங்கள் முகம் பளிங்கு போல மின்னுகிறது. வாருங்கள், சிக்கெடுத்து தலை வாரி விடுகிறேன்!"

**"முக அழகில் என்ன இருக்கிறது சிஸ்டர்..? இது நிரந்தரமில்லையே...! மனது தான் அழகாக இருக்க வேண்டும்! உங்கள் டாக்டர் போல..."** கனவில் பேசுவபளைப் போலப் பேசியவளின் கன்னங்களில் ராமின் நினைவில், ரோஜாக்கள் பூத்திருந்தன.

தலை சீவியதும் ஒரு பொட்டை மட்டும் வைத்துக் கொண்டு, ஒரு நிமிடம் கண் மூடி தியானம் செய்தாள். கண்களைத் திறந்த போது, மிருதுவாக புன்னகைத்துக் கொண்டு நின்றிருந்தான ராம்.

அவனும் சந்தன நிற பேண்டும், கரு நீலச் சட்டையும் அணிந்திருந்தான். அதைப் பார்த்து இருவருக்குமே சிரிப்பு!

"காபி குடிக்கிறீர்களா? ஊற்றித் தரட்டுமா?"



"கொஞ்சம் போதும். நீ குடித்தாயா? வர்ஷா நைட் எழுந்தாளா?" ராம் உள்ளே நுழைந்ததுமே, நளினி வெளியே போய் விட்டாள்.

"ம். நான்கு மணிக்கு ஒரு தடவை பசிக்கு அழுதாள். அதன் பின் தூங்கி விட்டாள்." அவனை நிமிர்ந்து பார்த்துப் பேசவே தயக்கமாக இருந்தது.

"டிபன் வந்து விட்டதா?"

"இல்லை டாக்டர்"

"இன்னும் டாக்டரா? பேஷண்டுக்கு ஸ்பெஷலாக இதற்குத் தனியாக ட்ரீட்மெண்ட் தர வேண்டும் போல இருக்கிறதே? என்ன தந்து விடலாமா...?"

மெல்ல அவளருகில் வந்தான். மிரட்சியுடன் பின்னால் நகர்ந்து, டேபிளின் மேல் சாய்ந்து நின்றாள். அவளிடம் வந்து கையை நீட்டியதும், படபடப்பாகத் தலை குனிந்தாள். அவளைச் சுற்றி கையைப் போட்டு காபி டம்ளரை டேபிள் மீது வைத்து விட்டு, "டம்ளரை வைக்க வந்தேன். நீ ஏன் பயப்படுகிறாய் சுமி?" என்றான்.

நிம்மதியாகப் பெருமூச்சு விட்டு, நகர்ந்தாள் சுமி. வர்ஷா எழுந்ததும் அவளைத் தூக்க இருவருமே கட்டில் அருகே சென்றனர்.

"வர்ஷி. குட்மார்னிங்! காலையில் பார்த்ததும், குட்மார்னிங் சொல்ல வேண்டும் தெரியுதா?" அவள் கன்னத்தில் இதழ் பதித்தவனின் பார்வையோ, குறும்புடன் சுமியை மொய்த்தது.

மிக அருகில் அவன் முகம், சென்டின் இனிய நறுமணம், குறும்பான பார்வை எல்லாம் சேர்ந்து சுமியின் மதியை மயங்கச் செய்தது. இதைக் கண்டும் காணாதவன்

போல சிரிப்பை அடக்கிக் கொண்டு, விலகிப் போய் சோபாவில் அமர்ந்தான் ராம்.

விட்டால் போதும் என்ற வர்ஷாவை தூக்கிக் கொண்டு பாத்ருமுக்குள் ஓடி, குளிக்க வைத்து, தூக்கி வந்தாள். அவளை டவல் விரித்து படுக்க வைத்து விட்டு பவுடர் போட்டாள். கவுன் போட முயன்ற போது கட்டிலில் உந்தி உந்தித் துள்ளினாள். போடும் வழி தெரியாது திகைத்து நின்றவளைப் பார்த்து விட்டு, சிரிப்பை அடக்கி, வர்ஷாவைக் கையில் வைத்துக் கொண்டு, "ம். இப்போது போடு..." என்றாள்.

அவசரமாக கவுனைப் போட்டு விட்டாள். இன்று அவளே செரிலாக் கலந்து ஊட்டினாள். அதற்குள் டிபன் வந்து விட்டது. வர்ஷாவை நளினியிடம் கொடுத்து விட்டு, அவனுக்குப் பரிமாறினாள்.

"நீயும் உட்கார். இன்று டாக்டர் ஷர்மா பத்து மணிக்கு வருவார். அதற்குள் நான் ரவுண்ட்ஸ் முடித்து விடுகிறேன்.. அதற்குள் நீயும் ரெடியாகி விடு."

"ம்.."

பத்து மணிக்கு ராம் வருவதற்குள் வர்ஷா தூங்கியிருந்தாள்.

"சுமி, டாக்டர் ஷர்மா காத்திருக்கிறார். போகலாமா?"

"டாக்டர்! எனக்குப் பயமாக இருக்கிறது" என்றாள் சுமி கலங்கிய கண்களோடு.

லிப்டில், "சுமி...! என்னம்மா பயம்? நான் தான் உன்னுடன் வருகிறேனே! ஒரு சின்ன செக்கப் அவ்வளவுதான்..!" ஆறுதலாக அவன் கையைப் பற்றினான்.. அவளும் அவன் கைகளை இறுகப் பற்றிக்



கொண்டாள். கைகள் சில்லிட்டிருந்தது..., லேசாக நடுங்கியது.

"ஏன் சுமி இத்தனை பயம்...! அவர் என்ன இன்டர்வியூவா செய்கிறார்? ரிலாக்ஸ் மா.. டென்ஷனாகாதே! ட்ரீட்மெண்ட் கூட நான் தான் கொடுக்கப் போகிறேன். இது ஒரு சின்ன செக்கப். அவ்வளவுதான்..! அவளைத் தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். மெதுவாகப் பேசி அவளை ரிலாக்ஸ் செய்து உள்ளே கூட்டிப் போனான்."

அவனுடைய அறை விசாலமாகவும் வெளிச்சமாகவும் இருந்தது. உள்ளே நுழைந்ததும் மனம் அமைதியானது. டேபிள் மேல் அவர்கள் இருவரும் சேர்ந்து எடுத்த போட்டோவை லேமினேட் செய்து வைத்திருந்தான்.

ஷர்மா தயாராகி அவர்கள் வரவிற்காகக் காத்திருந்தார். ஐம்பது வயதில் வழுக்கைத் தலையுடன், கம்பீரமாக, அறிவின் கூர்மையுடன் அவளைப் பார்த்து நட்புடன் சிரித்தார்.

"டாக்டர், மீட் மை வைஃப் சுமித்ரா..." என்று அறிமுகப்படுத்தினான். சுமி கை குவித்து அவரை வணங்கினாள். மெல்லத் தலையசைத்து அதை ஏற்றுக் கொண்டவர், ராமிடம், "ஆக்ஸிடண்ட் எப்போது நடந்தது என்று சொல்லுங்கள் டாக்டர் ராம்குமார்."

"இன்றோடு பதின்மூன்று நாட்கள் ஆகிறது டாக்டர். இதோ அவளது மெடிக்கல் ரிப்போர்ட்ஸ்."

"சுமி உனக்குத் தெரிந்ததை பயப்படாமல் சொல். நான் வெளியே கதவருகில் தான் காத்திருப்பேன், சரியா?"

"மிஸஸ். ராம்குமார்! என்னைப் பார்த்தால் பயமாக இருக்கிறதா? ஜஸ்ட் ரிலாக்ஸ். ரொம்ப சிம்பிள். தெரிந்த

வரை சொல்லுங்கள் போதும்!" மிருதுவாகப் பேசி அவளை ரிலாக்ஸ் செய்தார்.

சுமி பயத்துடன் தலையாட்டினாள். டேபிளின் கீழ் இருந்த டேப்ரிகார்டரில், ரிகார்ட் பட்டனை அழுத்தி விட்டு, "யெஸ். உங்கள் பெயர்?"

"சுமித்ரா, மிஸஸ்.சுமித்ரா ராம்குமார்."

"உங்கள் கணவர்."

"டாக்டர் ராம்குமார்.."

"திருமணமாகி எத்தனை ஆண்டுகள் ஆகிறது?"

"தெரியவில்லை"

"காதல் திருமணமா?"

"தெரியாது"

"குழந்தைகள்?"

"ஒரு பெண் குழந்தை, வர்ஷா. ஆறு மாதமாகிறது!" சொல்லும் போதே குரல் தாய்மையில் குழைந்தது.

"உங்கள் கணவர் உங்களிடம் எப்படி நடந்து கொள்கிறார்?"

"என்னையும் வர்ஷாவையும் அவர் தன் உயிராக, உலகமாக நினைக்கிறார் டாக்டர்."

"நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா?"

"வெரி மச் டாக்டர்."

"அவர் உங்கள் கணவர் என்பதற்கு, என்னென்ன ஆதாரங்களைக் காண்பித்தார்?"

"எங்களுக்குள் அது தேவையில்லை டாக்டர்."

"பின், உங்களுக்கே அவர் உங்கள் கணவர் தான் என்பது நினைவிருக்கிறதா?"

"இல்லை டாக்டர்!"

"பின்னே எப்படி?"



"நான் அவரைப் பார்த்ததுமே, அவர் சொன்னதை முழுமையாக நம்புகிறேன். நீ தான் என் மனைவி என்று அவர் சொன்னதும், அவர் கண்களில் அளவு கடந்த பிரியமும், காதலும், அக்கறையும் தெரிந்தது. அது பொய்யில்லை டாக்டர். ஒரு பெண்ணுக்கு அவள் மனது கூறும் பதில் தான் ஆதாரம். என் மனது அவரை என் கணவராக முழுமையாக ஏற்றுக் கொண்டது. இதில் ஒரு சதவீத சந்தேகம் கூட எனக்கில்லை!" தயக்கமில்லாமல் கம்பீரமாகப் பதிலளித்தாள்.

தனக்குள் புன்னகைத்த டாக்டர் ஷர்மா, "என்ன படித்திருக்கிறீர்கள்?"

"தெரியவில்லையே!"

"வேறு என்ன லாங்வேஜ் தெரியும்?"

"ஹிந்தியும், பிரஞ்சும் சரளமாகப் பேசவும், எழுதவும் தெரியும்." பதில் சொன்ன பிறகு தான், எப்படி இதைக் கூறினாள் என்று அவளுக்கே புரியவில்லை... திகைப்பாக இருந்தது. அதை அவரிடமும் கூறினாள். டாக்டர் உடனே சரளமாக ஹிந்தியில் பேச ஆரம்பித்தார்.

சுமியும் அதைப் புரிந்து கொண்டு பதிலளித்தாள். கேள்விகள் அரை மணி நேரம் நீடித்தது. தெரிந்ததற்கெல்லாம் தயக்கமில்லாமல் பதில் சொன்னாள்.

மறுபடி ராம் குமாரைப் பற்றிக் கேட்டதும், "அவர் எனக்குக் கிடைத்த வரம் டாக்டர். எனக்குப் பழைய நினைவுகள் திரும்பாமல் போனாலும், எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. என் கணவருக்காகவும், வர்ஷாவுக்காகவும் புது வாழ்க்கையை வாழப் போகிறேன். இனி அவர் சந்தோஷம் தான் என் வாழ்க்கை.

ஆனால், அவர் அருகில் இருக்கும் போதும், என்னிடம் மிகவும் நெருக்கமாக வரும் போதும் ஏதோ ஒருவித் தயக்கம்... என்னை மீறி, என் முகம் அதை வெளிப்படுத்தி விடுகிறது. ஆனால், அவர் என்னை விட்டு விலகிச் சென்றால், என்னால் அவர் பிரிவைத் தாங்கவும் முடியவில்லை. இதுவும் சத்தியம்.

அவரைப் பிரிந்து ஒரு வாழ்க்கை என்பதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை டாக்டர்." உணர்ச்சி வசப்பட்டுப் போனாள். குரல் கலங்கித் தழுதழுத்தது..

"ரிலாக்ஸ் சுமித்ரா..." இந்தத் தண்ணீரைக் குடியுங்கள்.

எழுந்து வந்து தோளைத் தட்டி, "ராம் ரொம்ப லக்கி சுமித்ரா. குட். அவரை உள்ளே வரச் சொல்லுங்கள். அவரிடம் நான் பேசிக் கொள்கிறேன். தேங்யூ...!"

"வெல்கம்...!" என்று கூறி விட்டு வெளியே வந்தாள்.

வெளியே ராம்குமாரும் பதட்டமாகத் தான் அமர்ந்திருந்தான். சுமியைப் பார்த்ததும் வேகமாக அவளருகில் வந்து, "ஆர் யூ ஆல்ரைட் சுமி? ப்ராப்ளம் ஒன்றும் இல்லையே...?" கைகளைப் பற்றினான்.

"இல்லை" என்று சொல்லும் போதே முகம் சிவந்தாள். 'இவரைப் பற்றி டாக்டரிடம் எப்படியெல்லாம் பேசி விட்டோம்!' நினைத்தவுடன் அவனை நிமிர்ந்து பார்க்கவே வெட்கம்...! அவன் ஒன்றும் புரியாமல் அவளையே பார்த்தான்.

"சுமி....!"

"ம், டாக்டர் உங்களை வரச் சொன்னார்."

"நீ..."

"நான் ரூமுக்குப் போகிறேன். வர்ஷா எழுந்திருப்பாள்."



"சரி, இரு. கூட நர்ஸை அனுப்புகிறேன்." ஒரு நர்ஸை அழைத்துக் கூட்டிப் போகச் சொன்னான். அவள் லிப்டில் ஏறிக் கிளம்பியதும், ரூமுக்குள் நுழைந்தான்.

"வாங்க ராம்..."

"டாக்டர்..."

"யூ ஆர் கொயட் லக்கி. உங்கள் மனைவி ரொம்ப கிளவர். என்ன படித்திருக்கிறார்?"

"எம்.பில். முடித்து விட்டு பி.ஹெச்டி. முடிக்கும் போது திருமணம். தீஸிஸ் சப்மிட் பண்ண வேண்டியது தான் பாக்கி"

"திருமணமாகி எத்தனை வருடங்கள் ஆகிறது?"

"இந்த மாதம் மூன்றாவது திருமண நாள் வர இருக்கிறது. ஏன் டாக்டர், எதாவது சீரியஸ் ப்ராப்ளம்?"

"நத்திங். ஷி இஸ் வெரி நார்மல் ராம். நாம் சில மருந்துகளை மட்டும் மாற்றுவோம். தொடர்ந்து இரண்டு மாதம் சாப்பிடட்டும். ஏதாவது சேஞ்சஸ் தெரிகிறதா என்று பார்த்து விட்டு டிசைட் செய்யலாம். வேறு எந்த ஸ்பெஷல் ட்ரீட்மெண்டும் தேவையில்லை. அவர் உங்களை மிகவும் நேசிக்கிறார்."

"டாக்டர்...!" ஒரு சிறுவனைப் போல ஆர்வத்துடன் முகமெல்லாம் விகசிக்கப் பார்த்தவனை, அன்போடு தட்டிக் கொடுத்தார்.

"யெஸ். ஷி லவ்ஸ் யூ லைக் எனிதிங். ஆனால் ஒரு சின்னத் தயக்கம், அதை வெளிப்படுத்த விடாமல் தடுக்கிறது.

நீங்கள் அவரிடம் இன்னும் சற்று நெருக்கமாக பேசிப் பழக வேண்டும். நீ என் மனைவி. இது நம் குடும்பம் என்பதை அவர்களும் ஆத்மார்த்தமாக உணரும் படி செய்ய வேண்டும்.

அவருக்குப் பிடித்தமான இடங்களுக்கு அடிக்கடி கூட்டிச் செல்லுங்கள். மனைவி, குழந்தையோடு அதிக நேரம் செலவிடுங்கள்.

கலகலப்பான மகிழ்ச்சியான சூழலில், அவர் நினைவுகளை மீட்க நிறைய சான்ஸ் இருக்கிறது. உங்கள் தாம்பத்யத்திற்கும் எந்த தடையும் இல்லை.

அதற்காக உடனே அவசரப்பட வேண்டாம். என்ஜாய் மேன்! ஆல் தி வெரி பெஸ்ட்! உங்கள் மிஸஸ் உங்களுக்குக் கிடைத்த ஒரு பொக்கிஷம். பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் மனைவி பேசியதை அப்படியே ரெகார்ட் செய்திருக்கிறேன். உங்கள் மனைவியின் குரலிலேயே அவர் உங்களைப் பற்றி என்ன சொன்னார் என்று கேட்டுக் கொள்ளுங்கள். டேக் கேர் ஆ்.ப் ஹர் ஹெல்த்!"

மாற்று மருந்துகளை எழுதிக் கொடுத்து விட்டு சிரித்தபடி விடைபெற்றார்.

டேப்பை உடனே போட்டுக் கேட்க ஆர்வம் இருந்தாலும், நேரம் இல்லை. சுமியின் மனநிலை எப்படி இருக்கிறது என்று பார்த்து விட்டு ஓ.பி.க்கு செல்ல வேண்டும். இதுவே லேட்!

கேஸட்டை பத்திரப்படுத்தி விட்டு, சுமியைப் பார்க்கக் கிளம்பினான். சத்தமில்லாமல் அறைக் கதவை திறந்தான்.

வர்ஷா, சுமியின் கன்னத்தைக் கடித்து எச்சில் பண்ணிக் கொண்டிருந்தாள். சுமி கண்மூடி அதை ரசித்துக் கொண்டே, அவளை இறுக அணைத்து முத்தமிட்டாள்.

'என்ன உயிர்ப்பான காட்சி இது!' அவன் உடல் சிலிர்த்தது.



அவர்களோடு விளையாட ஆசை இருந்தாலும் கடமை அழைக்கவே, மெல்ல, "என்ன! அம்மாவும் பொண்ணும் விளையாட்டு மும்முரத்தில் அப்பாவையே மறந்து போய் விட்டார்களா?" கேலி பேசிக் கொண்டே வர்ஷாவுக்காக கை நீட்டினான். வர்ஷா தாவிக் கொண்டு வந்தாள். அவளை அணைத்துக் கொண்டு, "என்ன குடித்தாய்? டாக்டர் என்ன சொன்னார்?"

"பூஸ்ட் குடித்தேன். உங்களுக்கும் ஒரு கப் இருக்கிறது?" அதை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

"டாக்டர் என்னிடம் சில கேள்விகள் கேட்டார். தெரிந்தவரை பதில் சொன்னே.

இன்னொரு விஷயம். பேச்சுவாக்கில் நானே திடீரென்று எனக்கு ஹிந்தியும், பிரஞ்சும் சரளமாகத் தெரியும் என்று கூறினேன். அதுபோல எனக்குப் பேசவும் முடிந்தது. நான் என்ன படித்திருக்கிறேன்?"

"எம்.்.பில். ஆங்கில இலக்கியம். பின் பி.ஹெச்.டி. முடியும் தருவாயில் நம் திருமணம். உன் படிப்பு பாதியில் நின்று விட்டது. நம் வர்ஷாக் குட்டி வேறு உன் படிப்பைத் தொடர விடவில்லை.

வீட்டுக்குப் போனதும் உன் முதல் வேலையே படிப்பு தான். பின் நீயும் பி.ஹெச்.டி. முடித்து டாக்டராகி விடுவாய்...!"

முகம் சிவக்க, "கேலி செய்யாதீர்கள் டாக்டர்"

"இனி நீ என்னை ராம் என்று கூப்பிடா விட்டால், நான் உன்னிடம் பேசவே போவதில்லை" கோபமாகத் திரும்பி சுவரை வெறித்தான்.

"ப்ளீஸ். எனக்கு இங்கே கஷ்டமாக இருக்கிறது. வீட்டுக்குப் போய் கூப்பிடுகிறேனே..!" கெஞ்சினாள்.

மெல்லிய சிரிப்புடன், "ம். சரி. நாம் நாளை நம் வீட்டுக்குப் போகிறோம். கங்கா அக்கா நல்ல நேரம் பார்த்துச் சொல்வார்கள். சரி நான் கிளம்புகிறேன். இங்கு வந்தால் டைம் போவதே தெரிவதில்லை."

அன்று படுக்கும் முன்பு, "சுமி, காலை ஏழு மணிக்கே கிளம்ப வேண்டும். பாப்பா உடையை மட்டும் எடுத்துச் செல்லலாம். நீ எழுந்து ரெ.'ப்ரஷ் பண்ணிவிட்டு காபி மட்டும் குடி. வீட்டில் போய் குளித்துக் கொள்ளலாம். வர்ஷாவை நானே தூக்கிப் போகட்டுமா?" என்றான்.

"வேண்டாம். நானே பார்த்துக் கொள்வேன்."

சிறு முறுவலோடு அவள் அருகில் வந்து "குட் நைட் டியர்..." என்றான்.

# 5

அவள் முகத்தையே ரசனையுடன் பார்த்தவன், அதற்கு மேல் பார்த்துக் கொண்டிருந்தால் தாங்காது என்று வேகமாக ரூமை விட்டு வெளியேறினான். உடை மாற்றி தன் படுக்கையில் படுத்தவனுக்கு, சுமியை முதன் முதலாக இல்லத்தில் சந்தித்த நாள் ஞாபகம் வந்தது.

அங்கிருந்த அவள் போட்டோவைக் கையில் எடுத்து, "மை டியர் ஏஞ்சல்! உன்னை இல்லத்தில் என் அருகே பார்த்த பொது எனக்கு எப்படி இருந்தது தெரியுமா?" என மென்குரலில் வினவியவன், அந்த போட்டோவை மார்போடு அணைத்துக் கொண்டான். அந்த இனிய நினைவுகள் அவன் மனதில் வந்து சூழ, அதன் சுகத்தில் கண் மூடினான்.



வெற்றிகரமாக தனது எம்.எஸ் (நியூரோ) படிப்பை முடித்து விட்டு, தனது மூட்டை முடிச்சுகளுடன் ராம் சென்னையில் கால் பதித்த போது, அவனுக்காக ஸ்டேஷனில் காத்திருந்த ஜகதீஷ் உணர்ச்சிப் பெருக்கில் கண்கலங்க, "ராம் கண்ணா" என்று அவனை அணைத்துக் கொண்டார். அங்கேயே அவர் பாதங்களைத் தொட்டு, கண்ணில் ஒற்றியவன், "என்னப்பா! இனி தினமும் என் தொல்லை தாங்க முடியாது என்று தானே இந்தக் கண்ணீர்? பயப்படாதே செல்லம்! கொஞ்சம் கம்மியாவே டார்ச்சர் பண்றேன்!" என்றான் கண் சிமிட்டி.

அவனது குறும்பில் வாய்விட்டுச் சிரித்தவர், "போடா போக்கிரி! நீ இல்லாம இத்தனை வருஷமா வீடு வீடாவே இல்லை. இனி என்னை விட்டு ஒரு நாள் கூட உன்னைப் பிரிய விடமாட்டேன்!" என விரல் நீட்டிச் செல்லமாக மிரட்டி, அவன் தோளில் கை போட்டு அழைத்துச் சென்றார்.

கங்கா, அவனை ஆரத்தி சுற்றிப் போட்டு வரவேற்றாள். "அக்கா! இதெல்லாம் எதுக்கு? உங்களுக்கே இது ஓவரா தெரியலியா? நான் அப்படி என்ன பெரிய சாதனை பண்ணிட்டேன்?"

"ராம்! நம்ம வீட்டு ஒரே செல்லப் பிள்ளை நீ. பெரிய படிப்பெல்லாம் படிச்சு முடிச்சு திரும்பியிருக்க. நமக்குத் தெரிஞ்சவங்க, பழகினவங்க அப்படின்னு எல்லோரோட கண்ணும் உன் மேலே தான் தெரியுமா? உன் திருஷ்டி பூராவும் கழிய வேண்டாமா? உனக்கு வேலை கூட ரெடி!" உணர்ச்சி வசப்பட்டாள்.

சாப்பிட்டபடி "என்னப்பா! அக்கா வேலையைப் பத்தி ஏதோ சொன்னாங்க. என்ன விஷயம்பா?"

"ராம் கண்ணா! அதைப் பற்றி இப்ப பேச வேண்டாம். முதல்ல திருப்தியா சாப்பிடு. எல்லாம் உனக்கு புடிச்ச ஐட்டமா தான் கங்தா பண்ணியிருக்கா. ஒரு நாலு நாளைக்கு நல்லா சாப்பிடு, சுகமா ஜம்முனு தூங்கு ரெஸ்ட் எடு! அப்புறம் ஒரு பத்து நாளைக்கு ஃப்ரண்ட்ஸ், சினிமா, ஷாப்பிங்-ன்னு ஜாலியா ஸ்பெண்ட் பண்ணு. உனக்கான வேலை எங்கயும் ஒடிப் போகாது. போய் ஜாய்ன் பண்ணிட்டா, புலி வாலைப் பிடிச்ச கதை மாதிரி தான்... ஓய்வே இல்லாம அது பின்னாலயே ஒடிட்டே இருக்க வேண்டியதுதான்! நீ நெனச்சா கூட, உன்னால ஃப்ரீயா இருக்க முடியாது. அதனால, நீயா போதும்னு நினைக்கற வரை, ஜாலியா ஃப்ரீயா இரு" என்றார்.

இந்த ஒரு மாதமாக ஓய்வே இல்லாமல், படித்து நிஜமாகவே களைத்திருந்தான் ராம். அதனால் இந்த கட்டாய ஓய்வும் அவனுக்குத் தேவையாகத் தான் இருந்தது அவர் சொன்ன மாதிரி நான்கு நாட்கள் வெளியே எங்குமே போகாமல் தூங்கி எழுந்ததில், மைண்ட் ஃப்ரஷ் ஆனது. சென்னையில் அவனுடைய ஒரே க்ளோஸ் ஃப்ரண்ட் அவனது தந்தை தான். தன் கல்லூரிப் படிப்பு முழுக்க டெல்லியில் என்பதால், சென்னையில் நண்பர்கள் கிடையாது.

அதனால் தன் தந்தையுடனே ஊரைச் சுற்றினான். சில நாட்களில் ரிசல்ட் வந்தது. பல்கலைக் கழகத்தின் நிறைய தங்கப் பதக்கங்களை வாங்கி சாதனை புரிந்திருந்தான். ஜகதீஷிக்கு மனம் கொள்ளாத மகிழ்ச்சி. டாக்டர் ஷர்மா தான், ராம் அங்கே இருக்க மறுத்து விட்டு, சென்னை திரும்பியதில் பெரிதும் ஏமாற்றமடைந்தார். தன்னுடைய மிகச் சிறந்த மாணவனுடைய



எதிர்காலம் சிறப்பாக இருக்கவேண்டும் என்று நினைத்து, சென்னையிலிருந்த மிகப் பிரபலமான செந்தில் நரம்பியல் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் செந்தில்குமாரைத் தொடர்பு கொண்டு ராமைப் பற்றித் தெரிவித்தார். அவனுடைய திறமையை அறிந்து கொண்ட அவர் ராமை உடனடியாக வேலையில் சேரச் சொன்னார். டாக்டர் ராம்குமாரின் மருத்துவப் பணி செவ்வனே துவங்கியது.

ஜகதீஷ் தன் மகனுக்கென்று தனியாக ஒரு மிகப்பெரிய மருத்துவமனையை கட்டித் தர விரும்பினார். தனியாக அதை நிறுவி, திறமையாக நடத்த நல்ல அனுபவம் தேவை. அதற்காக அவன் சில மாதங்களாவது பெரிய மருத்துமனையில், சிறந்த டாக்டரின் கீழ் பயிற்சி பெற வேண்டியது அவசியம் என்று நினைத்தார். ராமும் அவ்வாறு பயிற்சி பெற்று, சிறந்த மருத்துவா?, கைராசிக்கார டாக்டர் என்று பெயரெடுத்தான். சிக்கலான அறுவை கிசிச்சைகளை வெற்றிகரமாக செய்து, தனது திறமையை நிருபித்தான்.

ராமிற்கு சிறு வயதாக இருக்கும் போதே, நகரின் மத்தியில் ஜகதீஷ் ஒரு இடத்தை வாங்கிப் போட்டிருந்தார். அதில் சகல வசதிகளோடு, ஒரு பல்துறை மருத்துவ மனையைக் கட்டி, ராம் அதைச் சிறப்பாகத் தலைமையேற்று நடத்த வேண்டும் என்பது அவரின் வாழ்நாள் கனவு! ராம் மருத்துவப் படிப்பை துவங்கியதிலிருந்தே, அதற்கான முழு திட்டங்களையும் போட ஆரம்பித்தார். அவன் வேலையில் சோ?ந்து ஒரு வருடம் முடிந்ததும், மருத்துவமனை கட்டத் துவங்கினார்.

ஜகதீஷ் வழக்கமாக மாதம் ஒருமுறை இல்லத்திற்குச் சென்று, அங்குள்ள குழந்தைகளுக்கு

மெடிக்கல் செக்கப் செய்வதை கட்டாய வழக்கமாகக் கொண்டிருந்தார். அன்று முழுவதும் அவருடைய அத்தனை வேலைகளையும் ஒதுக்கி வைத்து விட்டு, குழந்தைகளோடு விளையாடி உற்சாகமாகக் கழிப்பார். இப்போதெல்லாம் அங்கு செல்வதற்கு அவருக்கு நேரமே கிடைப்பதில்லை.

தன்னுடைய சொந்த கிளினிக் செல்லவே அவருக்கு நேரம் இல்லை. டியூட்டி முடிந்து ஒரு இரண்டு மணி நேரம், ராம் தான் போய்ப் பார்த்துக் கொள்வான். ஒரு நாள் தயானந்த் போன் செய்து, "என்னடா! உன் மகன் வந்ததிலிருந்தே நீ இங்கு வருவதே இல்லை?" என்றார்.

"இல்லை தயா. ஹாஸ்பிடல் கட்டிட வேலை துவங்கியதால், நான் அங்கு கூடவே இருக்க வேண்டியிருக்கு. என் கிளினிக்கைக் கூட, இப்போ ராம் தான் பார்க்கிறான்."

"ராம் எப்படி இருக்கிறான்? ரெண்டு மாதமாக செக்கப் செய்யக் கூட நீ வரலை. அதான் போன் செய்தேன். அவன் வேலை எப்படி இருக்கு?"

"டாக்டர். செந்தில் போன் செய்து ராமை ரொம்பப் பாராட்டினார். பெரிய ஆபரேஷனையெல்லாம் திறமையா செய்யறான். ரொம்பப் பெரிய டாக்டரா நிறைய சாதிப்பான் என்றார்."

இந்த ஞாயிற்றுக்கிழமை அவனை அங்கு அனுப்பி வைக்கிறேன். குழந்தைகளை நாலு பேட்சா பிரிச்சிடு. வாரா வாரம் சண்டே மட்டும், அரை நாள் அங்கு வரச் சொல்கிறேன். மதியம் வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டுத் தூங்கி ரெஸ்ட் எடுக்கட்டும். வாரம் முழுக்க அவனுக்குக் கிடைக்கிற ஃப்ரீ டைமே அதுதான். சண்டே காலைல



பத்துமணிக்கு ராம் கண்டிப்பா வருவான். நான் சொல்லி அனுப்பறேன்".

ராம் தயானந்தை அடிக்கடி வீட்டில் பார்த்திருக்கிறான். அதனால் அவரிடம் நல்ல பழக்கம் உண்டு. ஆனால் ஒரு முறை கூட இல்லம் சென்றதில்லை.. ராமை அழைத்து ஜகதீஷ் அவனிடம் விபரம் தெரிவித்தார். குழந்தைகளுக்கு எப்படி செக்கப் செய்ய வேண்டுமென்று பொறுமையாக விளக்கினார். அவனும் அங்கே ஞாயிற்றுக்கிழமை அரை நாள் போகச் சம்மதித்தான்.

ராம் அந்த வாரம் தேவையான மருந்துகளோடு, கணேஷ்"டன் காரில் கிளம்பினான். இல்லத்தில் இருந்தவர்கள் வழிகாட்ட, தயானந்தின் ஆபீஸ் அறைக்குள் நுழைந்தான். தயானந்த் அவன் வரவை எதிர்பார்த்து ஆவலோடு காத்திருந்தார்.

அவன் உள்ளே நுழைந்ததும், அவனை அணைத்து "வா ராம்! உட்கார். உன்னை தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். உன் அப்பா வரவில்லையா? நீ என்னமா வளர்ந்துட்ட! நான் உன்னைப் பார்த்து இரண்டு வருஷத்துக்கு மேல இருக்கும். ஆளே அடையாளம் தெரியல. சினிமா ஹீரோ மாதிரி இருக்கற நிஜ ஹீரோ..! இல்ல ராம்?" சந்தோஷமாகச் சிரித்தார்.

அவனுக்கு கூச்சத்தில் முகம் சிவந்து போனது. "போங்க அங்கிள், சும்மா கிண்டலடிக்காதீங்க. நீங்க எப்படி இருக்கீங்க? இங்க மொத்தம் எத்தனை குழந்தைகள் இருக்காங்க?

"எழுபத்தாறு பேர். இப்ப ஒரு வயதுக் குழந்தை கூட இருக்கு. அவங்கள்ளாம் கல்லூரிப் படிப்பை முடிக்கும் வரை இங்கிருக்கலாம். பிறகு அவர்கள் வேலை தேடிக்

கொண்டு வெளியே போய் விடுவார்கள். அதன் பின், அவர்கள் வாழ்க்கை அவர்கள் கையில்! நிறையப் பேருக்கு எங்களுக்குத் தெரிந்தவர்களிடம், நாங்களே நல்ல வேலையாக வாங்கிக் கொடுப்போம்.

சிலர் கைத்தொழில் கற்றுக் கொண்டு, சுய தொழில் செய்ய ஆரம்பிப்பார்கள். எங்கள் பிள்ளைகள் நிறைய பேர் டைலரிங், பிரஸ், பைண்டிங், டைப்பிங், ஜெராக்ஸ் என்று நிறைய செய்கிறார்கள்.

நாங்கள் இருக்கும் வரை இல்லத்தை நல்லபடியா நடத்தறோம். எங்களுக்குப் பிறகு என்ன பண்றதுன்னு தான் கவலை? பார்க்கலாம். இத்தனை குழந்தைகளையும் காப்பாத்த, கடவுள் ஒரு நல்ல வழியைக் காண்பிக்காமப் போயிடுவாரா? எல்லாமே, தானா நல்லபடியா நடக்கும்ன்னு நம்பறேன்.

"சரி ராம்! என்ன சாப்பிடற? காபி, பால், ஜுஸ்?"

"அங்கிள், நான் வீட்டிலிருந்து கிளம்பும்போது தான், ஹெவியா டிபன் சாப்பிட்டேன். முதல்ல செக்கப்பை முடிக்கலாம். பிறகு கிளம்பும் போது ஜுஸ் மட்டும் போதும்."

"சரிப்பா! வா... முதல்ல இல்லத்தைச் சுற்றிக் காண்பிக்கிறேன். நீ முதல் தடவை வந்திருக்க இல்லையா? வந்து பாரு."

இல்லம் இயற்கைச் சூழலில் அமைதியாக, ஆனால் அழகாக இருந்தது. எங்கு பார்த்தாலும் தூய்மை கண்ணைப் பறித்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால், எல்லாக் குழந்தைகளையும் பார்க்க முடிந்தது. குழந்தைகளிடம் சுத்தமும், ஒழுக்கமும், அமைதியும், கட்டுப்பாடும் பார்த்தவுடனே தெரிந்து கொள்ள முடிந்தது. ஒரு நடுத்தர



வயதுடைய பெண்மணி, ஒரு வயதே ஆன குழந்தைக்கு விளையாட்டு காட்டிச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார்.

அதைப் பார்த்த ராமின் நெஞ்சம் கனத்தது. பால் மணம் மாறாத இத்தனைச் சிறிய மழலை கூட, தன் பெற்றோரை இழந்து இங்கு வந்து சேர்ந்த அவலத்தை நினைத்து மனம் வாட, சுற்றிப் பார்த்தான். குழந்தைகளில் சிலர் விளையாடிக் கொண்டும், பாடம் படித்துக் கொண்டும், எழுதி- வரைந்து கொண்டும் தத்தம் வேலையை அமைதியாகச் செய்து கொண்டிருந்தனர்.

இவர்களை ஒருங்கிணைத்து சமுதாயத்தில் எல்லா விதமான உரிமைகளையும் பெற்று, மற்றவர்களைப் போல வாழ வழி செய்து கொடுத்த தன் தந்தை, தயானந்த் அங்கிள்,அவர்களைப் போன்றவர்களின் மீது மதிப்பும் மரியாதையும் மேலும் அதிகமானது.

ராமைப் பார்த்ததும், அந்த ஒரு வயதுக் குழந்தை சிணுங்குவதை விட்டு, இரு கைகளையும் விரித்து இவனிடம் தாவிய போது, நெகிழ்ந்து போய் அதை மார்போடு அணைத்துக் கொண்டான். கண்கள் கசிய அதை முத்தமிட்டு, பஞ்சுக் கன்னங்களை வருடினான்.

தயானந்த் அங்கிருந்த சிறுவனிடம், "சத்யா, அக்கா நம் வீட்டில் இருப்பாள். பிரேயர் ஹாலுக்கு வரச் சொல்லு" என்றதும், சிறுவன் சிட்டாகப் பறந்தான்.

பிரேயர் ஹாலில் பெரிய மேஜை போடப்பட்டு, நான்கு சேர்களும் அருகே தயாராக வைக்கப்பட்டு இருந்தது. குழந்தைகள் இருபது பேர், டாக்டரை எதிர்பார்த்து வரிசையில் அமர்ந்திருந்தனர்.

அவர்களிடம், "இவர் தான் டாக்டர் ராம்குமார். நம்ம புது டாக்டர், ஜெகதீஷ் அங்கிளின் மகன். இனி

வாராவாரம் வந்து இவா? தான் செக்கப் செய்வார். குறும்பு பண்ணாமல், ஒழுங்கா ஒவ்வொருத்தரா வந்து இங்க உட்காருங்க. டாக்டர் கேட்கற கேள்விக்கு உண்மையா, மரியாதையா பதில் சொல்லணும். தெரிஞ்சுதா?" அமைதியாகக் கட்டளையிட்டார். அவருடைய பேச்சில் கனிவோடு கண்டிப்பும் கலந்திருந்தது.

கணேஷ், மெடிக்கல் கிட்டைக் கொண்டு வந்து டேபிளில் வைத்திருந்தான். ராம், ஸ்டெத்தை கையில் எடுத்துக் கொண்டு, "ஃபர்ஸ்ட் யார் வரீங்க..." என்றான்

"நான்..."

"உன் பேர் என்னம்மா?"

"விஜி... விஜயலட்சுமி."

"ஓ... ரெண்டு பேரா? எந்த ஸ்டாண்டர்ட் படிக்கிற?"

"தேர்டு..."

"வெரிகுட். விஜிக்கு ரொம்ப சளி புடிச்சிருக்கே! பச்சைத் தண்ணியிலே விளையாடினியா?"

"ம்... இல்லை. ஸ்கூல்ல மூணு சாக்லேட் சாப்பிட்டேன்."

"அப்ப சரி... சளி புடிச்சிருக்கே..? அதுக்குக் குட்டியா ஒரே ஒரு ஊசி போடலாமா? இல்லை மூணு வேணுமா? நீ மூணு சாக்லேட் தான சாப்பிட்ட?"

"மூணு ஊசி வேணாம்..." என்று அழ ஆரம்பித்தாள் விஜி.

ஆயாவிடம் ஜாடை செய்ய, அவர் வந்து அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டதும், "விஜி, குட் கர்ள்! பாத்தியா..., அங்கிள் போட்ட ஊசி வலிக்கவே இல்லை தானே? இனி நிறைய சாக்லேட் சாப்பிடக் கூடாது. சரியா? இல்லேன்னா நிறைய ஊசி போட வேண்டியது தான்..."



மென்மையாகப் பேசிக் கொண்டே அவளுக்குக் கொடுக்க வேண்டிய மருந்துகளைத் தனியாக ஒரு கவரில் போட்டு அதன் மேல் குழந்தையின் பெயர், மருந்து சாப்பிடும் முறையையும் தெளிவாக எழுதி, ஆயாவிடம் கொடுத்தான்.

"சரி, ஊசி வலிக்கல தான விஜி?"

"ஆமா... ஆனா அந்த பழைய டாக்டர் அங்கிள், அழாம இருந்தா சாக்லேட் கொடுப்பாங்களே! நீங்க இன்னும் கொடுக்கலியே?" தலையைச் சாய்த்து அவள் கேட்ட விதத்தில், ராம் தன்னையும் அறியாமல் வாய்விட்டுச் சிரித்தான்.

ஏற்கனவே தந்தை சொல்லியிருந்ததால், சாக்லேட் பார்களை வாங்கிக் கொண்டு வந்திருந்தான்.

அவள் கன்னத்தைத் தட்டி, "விஜி இஸ் வெரி ஸ்மார்ட் இல்ல. இந்தா. ஆனா சளி சரியானதும் தான் சாப்பிடணும். சரியா? நீ மருந்தை ஒழுங்காச் சாப்பிட்டா சீக்கிரம் குணமாயிடும். சரி போய் விளையாடு..." என்று சேரிலிருந்து இறக்கி விட்டான்.

ஓர் ஓரமாக நின்று இதைப் பார்த்துக் கொண்டிருந்த தயானந்துக்கு முழு திருப்தி. விஜியுடன் பேச ஆரம்பித்தபோதே, சுமியும் வந்து அருகே நின்றிருந்தாள். அவனின் கம்பீரத்தையும், அன்பான அணுகுமுறையையும் கண்டு பிரமித்துப் போயிருந்தாள்.

தயானந்த் "ராம்" என்றதும், அவர் புறம் திரும்பி, "என்ன அங்கிள்?" என்றவன் அருகே நின்ற சுமியைப் பார்த்ததும் பேச்சற்று, அதிர்ச்சியில் எழுந்து நின்று விட்டான். அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு, சுற்றுப்புறம் மறந்து போனது.

இரண்டு வருடங்களாக அவனது கனவிலும்,

நினைவிலும் வந்து பாடாய்ப்படுத்திய தன்னுடைய 'ட்ரீம் கேர்ள்' அருகே நிற்பதை நம்ப முடியாமல், விழி விரித்தான். அவனின் பார்வையில் சுமி முகம் சிவந்து தலை குனிந்தாள்.

"ராம்! இவள் சுமித்ரா! என் ஒரே பெண். எம்.'.பில் செய்து கொண்டிருக்கிறாள்."

"சுமி! இவர் டாக்டர் ராம்குமார். ஜகதீஷ் அங்கிளின் மகன். இனிமேல் வாராவாரம் நம் குழந்தைகளுக்குச் செக்கப் செய்ய, இவர்தான் வருவார். நீ வந்து டாக்டருக்குத் தேவையான உதவியைச் செய்மா...! என்று சொல்லி விட்டுக் கிளம்பி விட்டார்.

நெஞ்சம் படபடக்க தலையை உயர்த்தாமல் தாமரை மொட்டுப் போல் இரு கரங்களையும் குவித்தவளையே விழியகலாது பார்த்தான் ராம். வருடக் கணக்கில் தான் தேடிய தேவதையைக் கண்டு கொண்ட ஆனந்த அதிர்ச்சி அவனுக்கு!

இந்த இரண்டு வருடங்களில், இளமை அவளை இன்னும் மெருகேற்றி, பேரழகியாக்கியிருந்தது. புத்தம் புதிதாக பூத்த ரோஜாவைப் போல அத்தனை மென்மை! சூழ்நிலையை உணர்ந்து தன்னைச் சுதாரித்துக் கொண்டவன், அடுத்த குழந்தையை அழைத்தான்.

மனதைக் குவித்து ஒவ்வொரு குழந்தையையும் பரிசோதிப்பது அவனுக்கு பிரம்மப் பிரயத்தனமாக இருந்தது. அவன் சொல்லச் சொல்ல ஒவ்வொரு கவரிலும் தேவையான விபரங்களைச் சரியாக எழுதும் வேலையை, சுமி எடுத்துக் கொண்டாள். செக்கப் முடிந்ததும் வீடு திரும்ப வேண்டுமே என்று நினைத்தான். ஓர விழிப் பார்வையால் அடிக்கடி அவள் அழகைக் கண்டு ரசித்தான்.



செக்கப் முடிந்ததும், "டாக்டர், அப்பா உங்களை அவர் ரூமுக்கு வந்து பார்க்கச் சொன்னார்" என்று சொல்லி விட்டு, குழந்தைகளோடு விரைந்தாள். அவளைப் பார்த்ததையே நம்ப முடியாமல் திகைத்துப் போய், சிறிது நேரம் அமர்ந்து விட்டு, பிறகு தான் எழுந்து சென்றான். தயானந்திடம் விடை பெறச் சென்ற பொது, அவனுக்கு டேபிள் மேல் எலுமிச்சை ஜூஸ் தயாராக இருந்தது.

"ராம்! இன்னிக்கு உன்னைப் பார்த்ததும், ரொம்பச் சின்னப் பையனாகத் தெரிந்தாய். இந்தச் சின்னக் குழந்தைகளை ஹாண்டில் பண்ண, உனக்கு அனுபவம் போதாதென்று நினைத்தேன். ஆனால் நீ செக்கப் செய்ததைப் பார்த்து, நிஜமாகவே பெருமைப்படறேன். உனக்குப் பிரகாசமான எதிர்காலம் இருக்குப்பா" என்று மனதார வாழ்த்தினார்.

"தேங்க்ஸ் அங்கிள். என்னோட எல்லா வெற்றிக்கும் அப்பா தான் காரணம். மறுபடி நெக்ஸ்ட் சண்டே, இதே போல வந்திடறேன்!" எழுந்தவனின் கண்கள் சுமித்ராவைத் தேடியது. அவனுடனே வெளியே வந்து, "சுமி! இங்கே வாடா! டாக்டர் கிளம்பறார் பார்...!"

அவளைப் பார்த்துக் கண்களாலேயே விடை பெற்று விட்டு, மனமேயில்லாமல் கிளம்பினான். ஆனால் தன்னுடைய தேவதையைக் கண்டுபிடித்து விட்ட சந்தோஷம் அவன் முகத்தில்!

வீட்டில்..., "அப்பா! இல்லம் ரொம்ப நல்லாயிருக்கில்லப்பா! எனக்கு அந்த சூழலே ரொம்பப் பிடிச்சிருக்கு. வெரி நைஸ். குழந்தைகளை அங்கிள் ரொம்ப நல்லா பார்த்துக்கிறார். அவங்களோட ரூம், படுக்கை, உடைகள், டைனிங், பிளே-கிரவுண்ட் எல்லாமே

அத்தனை சுத்தமா இருக்கு. அந்தப் பிஞ்சுக் குழந்தைகள் கிட்ட ரொம்ப டிசிப்ளின்... அமேசிங்!!! அங்கிளுக்கு ஒரு பொண்ணு தானப்பா! அறிமுகப்படுத்தி வெச்சார். ஆன்ட்டி எங்கே?"

"ராம்! சுமி ரொம்ப ரொம்ப நல்ல பொண்ணு அவளைச் சின்ன வயசிலிருந்தே எனக்குத் தெரியும் தயானந்த் கல்யாணமே செய்துக்கல. சுமி ஆறு மாதக் குழந்தையா இருந்தப்ப, அவ ஆதரவில்லாம அவன் கைக்குக் கிடைச்சா. அவனுக்கும் லைஃப்ல ஒரு பிடிப்பு வேணும்கிறதுக்காக, அவளை முறையா தத்து எடுத்துக்கிட்டான். அவமேல உயிரையே வெச்சிருக்கான்.

சுமி ரொம்பப் புத்திசாலி. நல்லா படிப்பா. அவளைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு ஆச்சரியமா இருக்கும் சின்ன வயசிலயே ரொம்பப் பொறுமை. அதே சமயம் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகம். எதுக்குமே ஆசைப்படவே மாட்டா. என் கிட்ட ரொம்பப் பிரியமா நடந்துக்குவா. அவளைக் கல்யாணம் பண்ணப் போறவன் ரொம்ப அதிர்ஷ்டசாலி! யாருக்குக் குடுத்து வெச்சிருக்கோ?"

உடனே அவன் மனம் 'எனக்குத் தாம்பா... நிச்சயமா எனக்கு மட்டும் தான்!' என்றது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைக்காகவும் காத்திருக்க ஆரம்பித்தான். அமைதியான அவளின் ஒவ்வொரு செயலையும் ரசிப்பான். அனாவசியமாக எந்தப் பேச்சும் இல்லாமல், அவள் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்து வியப்பான். அடுத்த வாரம் வரை காத்திருக்க வேண்டுமே என்று, அவள் அழகை தன் கண்களால் சிறை செய்வான்.

அவன் வரும் போது, சில சமயம் குழந்தைகளோடு



விளையாடிக் கொண்டிருப்பாள் அல்லது பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருப்பாள். இல்லையெனில் பாடச் சொல்லி கேட்பாள். சசியைத் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சிக் கொண்டிருப்பாள். தோட்டத்தில் செடிகளுக்கு நீர் ஊற்றிக் கொண்டோ, பூக்களைப் பறித்துக் கொண்டோ... ஏதோ ஒரு வேலையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, பட்டாம் பூச்சி போல சுறுசுறுப்பாக வளைய வந்து கொண்டிருப்பாள்.

அவளின் இந்த இயல்பே அவனை அதிகம் ஈர்த்தது. அந்த இல்லத்தில் இருக்கும் அத்தனை பேரின் இதயங்களையும் வென்றிருந்தாள். அனைவரும் அவளிடம் உயிராகப் பழகினர். தயானந்தின் பெண் என்று அதிகப்படியான எந்த உரிமையையும் எடுத்துக் கொள்ளாமல், அதே எளிமையுடன் எல்லோரிடமும் ஒரே மாதிரி பழகினாள். அவர்களுடன் ஒன்றாக அமர்ந்து தான் சாப்பிடுவாள். குழந்தைகளுக்கும் அவளைக் கண்டாலே அலாதி குஷி!

அந்த வாரம் வந்த போது சுமியைச் சுற்றி சின்னக் கூட்டம்! ஸ்டேஷனில் முதன் முதலாக அவளைப் பார்த்த நினைவில், இதழ்களில் புன்முறுவலோடு அவளருகே சென்றவன், அவளைப் பார்த்ததும் பதறிப் போனான்.

சுமியின் நெற்றியில் சின்ன வீக்கம்! முகமே கன்றிப் போய்ச் சிவந்திருந்தது. அவளோ அவன் முகத்தில் இருந்த கலக்கத்தைப் பார்த்து, "ஒன்றுமில்லை, சின்னக் காயம் தான் டாக்டர். குழந்தைங்க கிரிக்கெட் விளையாடும் போது... நான் தெரியாம, குறுக்கே போயிட்டேன். பந்து நெற்றியில் பட்டிடுச்சு; சரியாயிடும்!" அவனை அள்ளி அணைத்து, நெற்றியை வருடத் துடித்த கைகளை கட்டிப்

போட்டான். ஐஸ் கட்டியை தன் கைக்குட்டையில் சுற்றிக் கொடுத்து காயத்தின் மேல் வைக்கச் சொன்னான்.

சிறிது நேரம் கழித்து, மருந்தை எடுத்து வந்து, "இதைப் போட்டா வீக்கம் குறைஞ்சிடும். வலி தெரியாம இருக்க டேப்லட் தரேன். அதைப் போட்டுக்குங்க. நீங்க போய் ரெஸ்ட் எடுங்க. இன்னிக்கு ஆயாவை ஹெல்ப்க்குக் கூட்டிட்டு போறேன். முடிஞ்சா நாளைக்கு வந்து பார்க்கறேன்."

"டாக்டர், ஒண்ணும் இல்லாததை பெரிசு படுத்தாதீங்க! மருந்தை நானே ரூமுக்குப் போய்ப் போட்டுக்கறேன். குடுங்க!" கூச்சத்தோடு கை நீட்டியவளை மறுத்து, தானே மென்மையாகத் தடவி விட்டான். சுமியின் பட்டுப் போன்ற நெற்றியில் ராமின் கை பட்டதும், சுமி கூச்சத்தில் சிவந்து போனாள்.

"சுமி... இனிமே இப்படி கேர்லெஸ்ஸாக இருக்காதீங்க. போய் நல்லா ரெஸ்ட் எடுங்க. மறக்காம டேப்லட் போட்டுக்கங்க!" அவன் குரல் குழைந்தது..

அவன் குரல் அவளை ஏதோ வசியம் செய்ய, தலையசைத்து விட்டு, தன் வீட்டுக்கு விரைந்தான். அறையில் சென்று படுத்தும் கூட, குழைவான அவன் குரல் காதில் ஒலிப்பது போலவே இருந்தது. ஏதோ ஒரு புதிய உணர்வு அவனை ஆட்கொண்டது. எதையோ இழந்தது போல ஒரு தவிப்பு! கண்களை மூடிப் படுத்தும் உறக்கம் வரவில்லை! மறுநாள் சுமியை போனில் நலம் விசாரித்த போது மகிழ்ந்து போனாள்.

ராம் வீட்டுக்கு வந்ததிலிருந்தே அவளைப் பற்றிய நினைவு தான். தினமும் சுமி தன் அருகிலேயே இருக்க வேண்டும் என்ற துடிப்பு! தந்தை வேறு, ஒரு மாதமாகத்



திருமணம் பற்றி பேச்சைப் பேச ஆரம்பித்திருந்தார். அதனால் முதலில் தயானந்த் அங்கிளின் விருப்பத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது.

அன்று உள்ளே நுழைந்த போதே, கலகலவென்ற சுமியின் சிரிப்புச் சத்தம் அவன் கால்களை அவள் புறம் திருப்பியது. ஒரு இரண்டு வயது குட்டிப் பையனை மடியில் வைத்து கட்டிப் பிடித்து, கண்களில் நீர் வரும் அளவிற்குச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

"என்ன விஷயம் சுமி! உங்களுக்குச் சிரிப்பே தாங்க முடியலை போல இருக்கு! எனக்கும் சொன்னா, நானும் சந்தோஷப்படுவேனே!"

அவள் முக மலர்ச்சியுடன், "டாக்டர்! ஸ்கூலில் இந்த வாலுப் பையனை ஆடு வரையச் சொன்னாங்களாம். டீச்சர் வந்து இவன் பேப்பரைப் பார்த்துட்டு, என்னடா! வெறும் செடியும் கயிறும் இருக்கு... ஆடு எங்கே? வரையலையான்னு கேட்டிருக்காங்க! அதுக்கு இந்த ரெட்ட வாலு..., வரைஞ்சேன் டீச்சர். ஆனா, அது வந்து செடியைச் சாப்பிட்டுது. அதான், கயிறை அவிழ்த்து விட்டு, அதைத் துரத்தி விட்டுட்டேன்!" என்று சொன்னானாம்.

"ஏண்டா அப்படிச் சொன்னேன்னு கேட்டேன். அதுக்கு அவன், அக்கா! எனக்கு ஆடு வரையத் தெரியல. அது தெரிஞ்சா டீச்சர் அடி பின்னிடுவாங்க. அதான் அப்படிச் சமாளிச்சுட்டேன் அப்படீங்கறான்" என்று சொல்லிச் சிரித்தாள்.

ராமிற்கும் சிரிப்பு வர, அவன் தோளைத் தட்டிக் கொடுத்து, "நீ ரொம்பப் புத்திசாலிடா! நல்லா பொழச்சுக்குவே!" என்றான். கண்கள் மின்ன வானவில்லாய்ச் சிரித்தவனை விட்டுப் பிரியவே,

மனமில்லாமல் போனது. 'இந்தத் தேவதை சீக்கிரமே எனக்குச் சொந்தமாகணும். சீக்கிரம் தயானந்த் அங்கிளிடம் பேசணும்' என்று முடிவு செய்தவன், அன்றே அதைச் செயல்படுத்தியும் விட்டான்.

# 6

தயானந்த் ஓய்வாக அமர்ந்திருந்த நேரம் அவரிடம் போய், "அங்கிள்! நீங்க ..ப்ரீயா இருக்கீங்களா? உங்ககிட்ட கொஞ்சம் பர்சனலா பேசணும்" என்றான் ராம்.

"முதல்ல உட்காரு. இப்ப சொல்லு; என்ன விஷயம்?"

அவன் சுற்றி வளைக்காமல் நேரடியாகவே, "அங்கிள்! உங்க பொண்ணு சுமியை எனக்கு ரொம்பப் புடிச்சிருக்கு. வீட்டில் அப்பா, என் கல்யாணப் பேச்சை எடுத்திருக்கார். நீங்க இதுக்குச் சம்மதிச்சா, அவா?கிட்ட சுமியைப் பத்தி பேசிடுவேன். அப்பா கண்டிப்பா என் விருப்பத்துக்கு மாறாக, எதுவும் செய்ய மாட்டார்."

"சுமி கிட்ட இதைப் பத்தி பேசியாச்சா?"

"இல்லை அங்கிள். முதல்ல என் விருப்பத்தை உங்ககிட்ட தான் சொல்றேன். அப்பாகிட்ட பேசிய பிறகு தான் சுமி கிட்ட பேசணும்."

"அப்ப ரொம்ப நல்லதாப் போச்சு. இது சரி வராது. அதனால இந்தப் பேச்சை இதோட விட்டுடு!"

"அங்கிள்!!"

"ஆமாம் ராம்! சுமி இந்த ஆசிரமத்தில், எந்த விதமான ஆசையும் எதிர்பார்ப்பும் இல்லாம, ரொம்ப எளிமையா வளர்ந்தவ. என் பொண்ணா வளர்ந்தாலும் கூட எந்த ஆடம்பரத்தையும் அவளுக்கு நான் பழக்கல. மத்த பிள்ளைகளைப் போல அதே கட்டுப்பாட்டோட தான் வளா?ந்தா. அவ வாழ்ந்த சூழ்நிலையே வேற! ஆனா உன்னோட லை..ப் ஸ்டைலே வேற. நீ ஒரு பெரிய டாக்டா? வசதியான குடும்பம்! உனக்கு மிகச் சிறப்பான எதிர்காலம் இருக்கு. சொஸைட்டில ரொம்பப் பெரிய ஆளா வருவ, உன்னோட சர்க்கிளே வேற!"

"அங்கிள்!"

"நான் சொல்றதை முழுசாக் கேளு ராம். உன்னோட ஸ்டேட்டஸ"க்கு ஈக்வலான பொண்ணு அமைஞ்சா தான் உனக்கு மதிப்பு! மேரேஜ் பண்ணி நாளைக்கு நீ சுமியோட வெளியே போனா, யாராவது அவளை அனாதைன்னு சொல்லிட்டா, அவ துடிச்சுப் போயிடுவா. என்னாலயும் அதைத் தாங்க முடியாது. அவ மனசு பூ மாதிரி. உனக்கு நல்லா மேட்ச் ஆகிற மாதிரி அழகா, வசதியா, படிச்ச பெண்ணாப் பார்த்து உன் அப்பா முடிவு செய்வார். அதில தப்பும் இல்லை. கல்யாணம் ஆகி, கொஞ்ச நாள் போனா சரியாயிடும். அதனால, இதோட ரெண்டு பேருமே இந்தப் பேச்சை மறந்திடலாம். உனக்கு அவ வேண்டாம் ராம். சுமி மேல எனக்கு எத்தனை அக்கறை இருக்கோ, அத்தனை அக்கறை உன் மேலேயும் இருக்கு. உன்னோட எதிர்காலம் சிறப்பா இருக்கணும் ராம். அதுதான் எல்லோரின் ஆசையும்."

"என் மேல உங்களுக்கு இருக்கற அக்கறைக்கு தேங்க்ஸ் அங்கிள். என்னோட எதிர்காலம் சிறப்பா இருக்கணும்-னா, அதுக்கு வாழ்க்கை பூராவும் சுமி என்

கூட கை கோர்த்து, என்னோட கூட வரணும் அங்கிள்.

எனக்கு சொசைட்டிக்காகவோ, அந்தஸ்துக்காகவோ கல்யாணம் வேண்டாம். எங்க குடும்பத்து சந்தோஷம், நிம்மதி இதுக்காகத் தான் எனக்கு மனைவி வேணும். சுமி என் அப்பாவுக்கு நிச்சயமாக நல்லா மகளா இருப்பா. எனக்கு நல்ல மனைவியா மட்டும் இல்லாம, நல்ல தோழியாகவும் இருக்க சுமியால் மட்டும் தான் முடியும்.

சுமியோட அழகுக்காக மட்டும் நான் அவளை விரும்பல. அவ மனசு ரொம்ப அழகு அங்கிள். இந்த ஆறு மாசமா, நான் அவள நல்லா புரிஞ்சு வெச்சிருக்கேன். அவளோட துணிவு, எளிமை, தன்னம்பிக்கை, எல்லார் மேலயும் அவ வெச்சிருக்கிற களங்கமில்லாத அன்பு... இதெல்லாம் தான் அவள உயிரா நான் விரும்ப முக்கியமான காரணம். சுமி மட்டும் தான் என் எதிர்கால வாழ்க்கைக்கு ஆனந்தத்தையும், அமைதியையும் தர முடியும்.

காதல்ங்கறது, வாழ்க்கையில ஒரு முறை தானே வரும் அங்கிள்? நான் சுமியை மனதார விரும்பறேன். அவ என் மனைவியான பிறகு, அவ எப்படி அனாதையாவாள்? நான் இருக்கேன் அவளுக்கு. அதோட இப்ப மட்டும் என்ன? நீங்க தான் அவளுக்கு எல்லாமுமாக இருக்கீங்களே? பின்னே நீங்களே அந்த வார்த்தைய சொல்லலாமா? அவளக் கல்யாணம் பண்ணிகிட்டா என் உயிர் இருக்கிறவரை சந்தோஷமா வச்சுக்குவேன். இப்ப, முடிவு உங்க கிட்ட தான் அங்கிள். நீங்க சம்மதிச்சா, சுமி என் மனைவியா வருவா! இல்லேன்னா, எப்பவுமே அவளோட வெல் விஷரா, ஒரு ஃப்ரண்டா இருந்துட்டுப்



போறேன். என் முடிவுல இனி மாற்றம் இல்லை. நீங்க மெதுவா யோசிச்சுப் பார்த்து, உங்க முடிவைச் சொல்லுங்க!" கம்பீரமாக எழுந்து நின்றான்.

அவனையே கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தவர், "ராம்! யூ ஆர் வெரி க்ரேட். எனக்கு ரொம்பச் சந்தோஷம். சுமிக்கு இத்தனை அதிர்ஷ்டம் இருக்கான்னு, மலைப்பா கூட இருக்கு. என் ராமைக் கட்டிக்க, அவ குடுத்து வச்சிருக்கணும். ஐயாம் வெரி பிரவுட் ஆஃப் யூ மை பாய்.

ஆனா, ஒரு கண்டிஷன். அவ எம். ஃபில். முடிக்கும் வரை, நீ காத்திருக்கணும். சுமி கண்டிப்பா உனக்குத் தான். ஆனா அவ படிச்சு முடிக்கும் வரை, அவளுக்கு விஷயம் தெரியவே வேண்டாம். உன் அப்பாவிடம் நானே பேசறேன். அவ படிப்பு முடியற வரை கொஞ்சம் பொறுத்துக்கோ. என்ன?

ராமின் சந்தோஷத்துக்கு அளவே இல்லாமல் போனது. "தேங்க்ஸ் அங்கிள்! கண்டிப்பா நான் காத்திருக்கேன். கல்யாணம் முடிஞ்ச பின்பும், கண்டிப்பா அவள பி.ஹெச்.டி.-யும் படிக்க வைக்கிறேன்" என்று ப்ராமிஸ் செய்தான்.

"அங்கிள், அப்பா கிட்ட முதல்ல நான் பேசறேன். நீங்க அப்புறமா, அடுத்த வாரம் பேசுங்க" என்றவனின் முகம் கூச்சத்தில் சிவக்க, அதைப் பார்த்து தயானந்த் மனம் விட்டுச் சிரித்தார்.

பின் ராம் தந்தையிடம் சம்மதம் வாங்கியது பெரிய கதை! அவர் சம்மதம் சொல்வதற்குள், ராமுக்கு பேசிப் பேசியே வாயில் நுரை தள்ளிவிட்டது. வளைத்து வளைத்துக் கேள்வி கேட்டு, ராமைத் திணறடித்தார்.

சுமியின் மேல் ராம் வைத்த பாசம் நேசமெல்லாம் தூய்மையானது என்று சந்தேகமில்லாமல் தெரிந்த பின் தான் சம்மதம் சொன்னார் அவர்.

அவர் சம்மதம் சொன்னதும், அவர் மடியில் படுத்துக் கொண்டு, "நீங்க ரொம்ப மோசம் டாடி...! ஒரு ஐ.ஏ.எஸ். இன்டர்வியூவில கூட இத்தனைக் கஷ்டமா கேள்வி கேட்க மாட்டாங்க. உங்களுக்கு தயானந்த் அங்கிளே பரவாயில்லை. என்னை முழுசா நம்பினார். உங்க பையன் மேலயே உங்களுக்கு இத்தனை சந்தேகமா? யு ஆர் டு பேட்! என்னைப் பார்த்தா சுமியை ஏமாத்திட்டு, ஓடிப் போற மாதிரியா உங்களுக்குத் தோணுது? போங்கப்பா..." அவன் குரலில் உண்மையான வருத்தம்.

"இல்லை கண்ணா! உன் ஆசையை விட எனக்கு எதுவுமே பெரிசில்லை. ஆனா, சுமி கண் கலங்கினா என்னால தாங்க முடியாது ராஜா. சரி விடு. உன் கல்யாணத்தை உடனே பேசி முடிச்சிடறேன்" என்றவர் அவனை மார்போடு அணைத்துக் கொண்டார்.

அதன் பிறகு அவன் அங்கு சென்ற போதெல்லாம் சுமியைப் பார்க்கும் பார்வையில் 'இவள் என்னவள்' என்ற சொந்தமும் கலந்திருந்தது. அவள் படித்து முடிக்கும் நாளை, ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தான். சுமி அவனிடம் தயக்கமில்லாமல் பேசத் துவங்கியிருந்தாள்.

அன்று இரவு டியூட்டி முடிந்து, வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டு, படுத்ததும், அவன் செல்போன் ஒலித்தது.

"எஸ். ராம் ஹியர்...!"

"டாக்டர். நான் ஆஸ்ரமத்திலிருந்து ஆயா பேசறேன். சுமிம்மா உங்க கூடப் பேசணுமாம்." அவர் குரலிலும் படபடப்பு இருந்தது. ராம் உடனே எழுந்து, நேரம் பார்த்தான். இரவு ஒரு மணி.



"டாக்டர், நான் சுமி பேசறேன். இங்க குட்டிப் பாப்பா சசிக்குக் காய்ச்சல்."

"நான் நேத்து தானே ஊசி போட்டு, சிரப் கொடுத்தேன். என்னாச்சு சுமி!"

"காய்ச்சல் காலையில இருந்து இல்லாமத் தான் இருந்தது. ஆனா மதியத்துக்கு மேல கொஞ்சம் சோர்ந்து போயிட்டா. இப்ப ஃபீவர் அதிகமாயிடிச்சு. எதுவும் குடிக்க மாட்டங்கறா. கண்ணே திறக்கல. எனக்குப் பயமா இருக்கு" விசும்பினாள்.

"சுமி! பயப்படாதே ஒண்ணும் ஆகாது. அங்கிள் எங்கே?"

"தூங்கறார். பிரஷர் டேப்லட் சாப்பிடுவதால், பத்து மணிக்கு ஷர்ப்பா படுத்துடுவார். அன் டைமில் எழுப்பினால், படபடப்பா ஆயிடுவார். அதான் எழுப்பல! உங்களுக்குப் போன் செய்தேன்."

"வேன் இருக்கா?"

ஸ்கூலுக்குக் குழந்தைகளைக் கொண்டு விடுவதற்காக, இல்லத்துக்குச் சொந்தமான இரண்டு வேன்கள் இருந்தன. "டிரைவர் இல்ல டாக்டர். வேன் இருக்கு... ஆனா, டிரைவர் காலையில தான் வருவார்."

"சரி... நான் உடனே வர்றேன். மாமாவை எழுப்ப வேண்டாம். நான் கொடுத்த சிரப்பையே, மறுபடி ஆறு டிராப்ஸ் கொடுத்து விடு. பஞ்சு, இல்லைன்னா சன்னமான கர்சீப்பை நனைத்து, நெற்றியில் போட்டு விடு. நான் பத்து நிமிடத்தில் அங்கு இருப்பேன். பயப்படாதே."

உடனே கங்காவிடம் மட்டும் சொல்லி விட்டுக் கிளம்பினான். அங்கே நாலைந்து பெண்கள், குழந்தையின்

அருகில் கவலையோடு நின்றிருந்தார்கள். சுமி குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு, அமர்ந்திருந்த கோலம், அவன் நெஞ்சைப் பிசைந்தது. கண்களில் நீர் வழிய, சசியை நெற்றியில் வருடிக் கொடுத்தவளின் பார்வை, அதை விட்டு இம்மியும் நகரவில்லை.

"சுமி..!" அவள் அருகே ராம் மண்டியிட்டு அமர்ந்தான்.

இதழ்கள் துடிக்க, "டாக்டர்! பாருங்களேன். உடம்பு நெருப்பா கொதிக்குது. சசி கண்ணே திறக்க மாட்டேங்கறா. எப்படித் துவண்டு போய்க் கிடக்கறா பாருங்க."

குழந்தையைப் பரிசோதித்தான். ஃபீவர் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. உடனே டிரிப்ஸ் போட வேண்டிய நிலை. விட்டால் பிட்ஸ் வரும் அபாயமும் இருந்தது. நெஞ்சில் நிறைய சளி கட்டியிருந்தது. தாமதிக்காமல் உடனே கிளம்பினான்.

"சுமி...! பாப்பாவுக்கு உடனடியா டிரிப்ஸ் போடணும். அப்பாவோட கிளினிக் போகலாம். அங்க எல்லா வசதியும் இருக்கு. யாராவது ஒருத்தர் உன் கூட வரட்டும். அவளுக்குத் தேவையான டிரஸ், பால் பாட்டில், லாக்டோஜன் எல்லாம் எடுத்துக்கச் சொல்" என்று சொல்லிவிட்டு, காரைத் திருப்பி நிறுத்தினான். அவளுடன் லட்சுமி ஆயா தேவையானதை எடுத்துக் கொண்டு கிளம்பினார்.

கிளினிக் வாட்ச்மேனிடம் எப்போதுமே ஒரு செட் சாவி இருக்கும். அதனால் நேராக அங்கேயே போய் விட்டான். குழந்தைக்கு வென்ஃப்ளான் போடும் போது அழுத சுமியை, "சுமி! என்ன இது? எதற்கெடுத்தாலும் அழுவதாக இருந்தால், ஆயா மட்டும் இங்கே இருக்கட்டும்.



நீ வெளியே நில்" என்றான், கண்டிப்பான குரலில்!

ட்ரிப்ஸ் இறங்கத் துவங்கியதும், "ஆயா, நீங்க பெட் பக்கத்தில் உட்கார்ந்து, குழந்தையோட கை அசையாம பார்த்துக்குங்க. நான் அப்பா ரூமில் இருக்கேன். மருந்து கலந்து தான் போட்டிருக்கேன். கொஞ்ச நேரத்தில் சசி முழிச்சிடுவா. சுமி, நீ அமைதியா இந்தச் சேரில் உட்காரு" என்று சொல்லி விட்டுக் கிளம்பினான்.

அப்பாவின் ரூமிலிருந்து, கங்காவுக்கு போன் பண்ணி, "அக்கா, நான் நம்ம கிளினிக்-ல தான் இருக்கேன். சசிக்கு ஹைஃபீவர். டிரிப்ஸ் போயிட்டிருக்கேன். காலைல வந்திடுவேன். இப்போ அப்பாவை எழுப்ப வேண்டாம்."

"தம்பி! நான் கொஞ்சம் டீ போட்டுக் கொடுக்கறேன். வாட்ச்மேனை அனுப்பறியா?"

"இல்லை! அவர் இங்க பக்கத்திலேயே போய் வாங்கி வந்திட்டார். நான் குடிச்சிட்டேன். நீங்க படுத்துக்குங்க."

ஒரு மணி நேரம் கழித்து அவன் போய்ப் பார்த்த போது, குழந்தையின் சுவாசம் சீராக வர, அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். காய்ச்சல் குறைந்திருந்தது. ட்ரிப்ஸ் முடியப் போகும் தருணம்! நிறுத்தி விட்டான். மணி நான்கு... ஆயா மட்டும் தூங்கவில்லை. சுமி சேரில் அமர்ந்து, கட்டிலில் தலை சாய்ந்து, அவளும் ஒரு குழந்தையாக உறங்கியிருந்தாள். அவளைப் பார்த்து முகம் கனிந்தான்.

'ரத்த சம்பந்தமே இல்லாத ஒரு குழந்தைக்காக, எத்தனைத் துடித்து விட்டாள்? பாவம்! ரொம்பச் சோர்ந்து போயிருக்கிறாள்.' சுமியை நினைத்துப் பெருமையாக இருந்தது அவனுக்கு.

"டாக்டர் தம்பி! சுமிக்கு சசின்னா உயிர்.

காலேஜிலிருந்து வந்த உடனே அவள தூக்கி வச்சுக்குவா. சசிரேகா-ன்னு பேர் கூட அவதான் வெச்சா. பாப்பாவும் இவளக் கண்டா தாவிக்கிட்டு வரும். சுமி ரொம்பத் துடிச்சு போயிட்டா. அவள மாதிரி ஒரு பொண்ண நீங்க பார்க்கவே முடியாது" என்றாள் லட்சுமி ஆயா.

மெல்லத் தலையசைத்தவன், "சசிக்குச் சரியாயிருச்சு. ஆறு மணிக்கு இல்லத்துக்குப் போகலாம். அது வரை சுமி தூங்கட்டும் எழுப்பாதீங்க. சசி எழுந்தா, என்னை வந்து கூப்பிடுங்க. தன் தந்தையின் சேரில் அமர்ந்து கண் மூடியவனை, உறக்கம் தழுவியது.

லட்சுமி ஆயா, 'ரொம்பத் தங்கமான டாக்டர். இந்த நேரத்துக்கு ஒரு வயசுப்புள்ள இங்க இருக்குன்னு, ரூமுக்குள்ளயே நிக்க மாட்டேங்கறாரு. ஒரு அசிங்கமான பார்வையோ, பேச்சோ இல்லாம, எத்தனை நல்லவரா இருக்காரு! படிச்சவங்க படிச்சவங்க தான்!' என்று ராமைப் பற்றி உயர்வாக நினைத்தாள்.

காலையில் ஐந்து மணிக்கு கண் விழித்த சுமிக்கு, அப்போது தான், தான் இருப்பது ஹாஸ்பிடல் என்பது நினைவுக்கு வந்தது.

"ஆயா! எப்படித் தூங்கிட்டேன் பாருங்க! எழுப்பி விட்டிருக்கலாமே. சசி கண் முழிச்சு பார்த்தாளா? டாக்டர் ட்ரிப்ஸை நிறுத்தி விட்டுப் போய்விட்டார் போலிருக்கு. அவர் வரும்போது நான் தூங்கறதைப் பார்த்து, என்ன நினைச்சிருப்பார்! எனக்கு அவரைப் பார்க்கவே சங்கடமா இருக்கு!" சசியின் நெற்றியில் கை வைத்தாள்.

அவள் ஸ்பரிசம் பட்டதும், சசி கண் விழித்தாள். தன் எதிரே சுமியைப் பார்த்ததும், தூக்கச் சொல்லி சிணுங்கினாள்.



"ஆமாங்கண்ணு. பாப்பா எழுந்ததும், டாக்டர் வந்து கூப்பிடச் சொன்னார்."

"சரி, இந்தாங்க. சசியைப் பிடிங்க. நான் போய்க் கூப்படறேன்." அவனது அறைக் கதவை மெல்லத் தட்டினாள். பதில் வராததால், கதவைத் திறந்து உள்ளே சென்றாள். ராம் சேரில் சாய்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். நைட் பேண்ட், காலர் இல்லாத டி-சர்ட்டில் சின்னப் பையனாகத் தெரிந்தான். எந்த ஒரு ஆணையும் இவ்வளவு நெருக்கத்தில் பார்த்ததில்லை என்பதால் கூச்சம். ஆனாலும் அவனது ஆண்மையிலும், வசீகரத்திலும், ஒரு கணம் தன் வசமிழந்து தான் போனாள். பின் அவள் நிலைக்காக அவளே கோபப்பட்டுக் கொண்டு வெளியே ஓடி வந்து விட்டாள்.

"ஆயா! டாக்டர் நல்லா தூங்கறார். நீங்களே போய் அவர எழுப்புங்க."

அதற்குள் அவனே வந்து விட்டான். அரைகுறையான தூக்கத்தில், அவன் கண்கள் ரத்தமாகச் சிவந்திருந்தது.

"இனிப் பயமில்லை. லாக்டோஜன் கரைத்துக் கொடுத்துடுங்க. இங்கேயே ஸ்டவ் இருக்கு. சுடு தண்ணி வைத்து, கலந்து கொடுங்க. அவ பால் குடிச்சு முடிந்ததும் கிளம்பலாம். அதுக்குள்ள நான் ஃபேஸ் வாஷ் பண்ணிடறேன். சுமி இந்தா! இனிமே இந்த சிரப்பை மூணு வேளை, அதே ஆறு ட்ராப்ஸ் குடுத்தா போதும். அந்த மருந்து வேண்டாம். நான் ஈவினிங் போன் செய்யறேன்.

அவர்களை இறக்கி விட்டதும், அப்படியே காரைக் கிளப்பினான். ஆயா குழந்தையோடு உள்ளே போய்

விட, சுமி அவன் அருகே வந்து, "ரொம்ப தேங்க்ஸ் டாக்டர். உங்களை மிட் நைட்ல ரொம்ப டிஸ்டர்ப் பண்ணிட்டோம். சசி கொஞ்சம் மூச்சுத் திணறுகிற மாதிரி இருக்கவும் தான், பயந்து போயிட்டேன். எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியல! உடனே உங்களுக்குப் போன் பண்ணத் தான் தோணிச்சு. சாரி... அன் டைமில் கூப்பிட்டு, உங்க தூக்கத்தைக் கெடுத்துட்டேன்."

"தேங்க்ஸ் சுமி! உனக்கு உதவி தேவைன்னதும் என்னோட ஞாபகம் வந்ததுக்கு! எந்த நேரமா இருந்தாலும், தாராளமா நீ என்னைக் கூப்பிடலாம். யாருக்காக இருந்தாலும், நான் கண்டிப்பா வந்திருப்பேன். அது என் கடமை. ஆமா.. உனக்கு இன்னிக்கு காலேஜ் இருக்கில்ல?"

"ம்... இப்ப கிளம்பிடுவேன். நீங்க உள்ள வந்து, ஒரு கப் காபி சாப்பிட்டுட்டு போலாம். அப்பா கூட விழிச்சிருப்பார்."

"இல்லை சுமி! டைம் ஆச்சு. இனி நான் வீட்டுக்குப் போய்க் குளிச்சிட்டு ரெடியாகி ஹாஸ்பிடல் கிளம்பணும். சண்டே பார்க்கலாம்" அவளைப் பார்த்து அழகிய முறுவலொன்றைச் சிந்தி விட்டு, உடனே காரைக் கிளம்பினான்.

ஏனோ சுமிக்கு அவன் கிளம்பிச் சென்றதும், மனம் வெறுமையானது போலத் தோன்றியது. அவனுடன் இருக்க மனம் விழைந்தது. அவள் மனமே அவளுக்குப் புதிதாக இருந்தது. இன்று டாக்டருக்குப் போன் செய்து, சசியை வந்து மாலையில் பார்க்கச் சொல்லலாமா என்று நினைத்து விட்டு, அதற்காக அவளே வெட்கப்பட்டாள்.

'ச்சே! எனக்கு என்ன ஆச்சு! சுமி, கன்ட்ரோல் யுவர் செ.ஃல்ப்!' என்று தனக்குத் தானே பேசிக் கொண்டே



உள்ளே சென்றாள்.

காரைச் செலுத்திக் கொண்டே ராம் கூட சுமியைப் பற்றித் தான் சிந்தித்துக் கொண்டிருந்தான். 'தூய அன்பாலே எல்லோரையும் கட்டிப் போட்டு விடுகிறாள் என் சுமி! ஐ லவ் யூ சோ மச்!' மனம் நிறைந்த காதலோடு புன்னகைத்தான். அவள் படிப்பு முடிய இன்னும் எத்தனை நாட்கள் இருக்கிறது என்று யோசித்தான்.

அவள் படிப்பு முடிய ஒரு மாதம் இருக்கும் போது, ராமின் பிறந்தநாள் வந்தது. அதற்கு ஒரு வாரம் முன்பு ஜகதீஷ், "ராம்! உன் பர்த்டே அன்னிக்கு உன்னோட ப்ரோகிராம் என்ன? உன் ஃப்ரண்ட்ஸ் யாராவது வராங்களா? பார்ட்டி ஏதும் அரேஞ்ச் பண்ணனுமா? காலையில கண்டிப்பா கோயிலுக்குப் போகணும். அபிஷேகத்துக்குப் பணம் கட்டியிருக்கேன்.

அப்புறம் ப்ரேக்ஃபாஸ்ட் வீட்ல தான்! மீதியெல்லாம் உன்னோட விருப்பம் தான்" என்றார். ரொம்ப வருஷங்களுக்குப் பிறகு, ராம் பிறந்த நாளன்று தன்னோடு இருக்கிறான் என்பதில் அவருக்கு ஏகக் குஷி. அவன் அன்று என்ன ஆசைப்பட்டாலும், அதைச் செய்யத் தயாராக இருந்தார்.

ஆனால் அதற்கு மாறாக, "பிறந்த நாள் கொண்டாட, நான் இன்னும் சின்னக் குழந்தையாப்பா? உங்க இஷ்டப்படி காலைல கோயிலுக்குப் போகலாம். ஆனா, மதியம் லஞ்சுக்கு, இல்லத்தில் உள்ள பிள்ளைகளுக்கு ஏதாவது நல்ல ஹோட்டலில் லஞ்ச் அரேஞ்ச் பண்ணலாம்" சொல்லும் போதே முகம் சிவக்க, அதைச் சமாளிக்கும் விதமாக தலையைக் கோதிக் கொண்டான்.

அவருக்கு ஒரே சிரிப்பு! "வா ராஜா...! அப்படிப்

போடு அரிவாளை! ஸ்பெஷல் லஞ்ச், குழந்தைகளுக்கா இல்ல உனக்குப் பிடித்தமானவளுக்கா? படவா! நானும் உன் வயசைத் தாண்டித் தானே வந்திருக்கேன்."

"சரி கண்ணா! அன்னிக்கு, உன் சுமிக்காக, அங்க இருக்க எல்லோருக்குமே ஸ்டார் ஹோட்டல் லஞ்ச்! ஓ.கே வா" என்று கிண்டலடித்துப் பேசவும், ராம் இரண்டிரண்டு படிகளாக தாவியேறி தன் அறைக்குள் நுழைந்தான்.

சுமிக்கு கடல் நீலத்தில் மிக அழகான டிசைனர் சேலையைத் தேர்வு செய்து, தயானந்திடம் கொடுத்து, "அங்கிள்! இது சுமிக்காக முதன்முதலா நான் வாங்கிய கிஃப்ட். அவளுக்கு நீங்களே வாங்கினதாச் சொல்லிக் கொடுத்திடுங்க. இல்லைன்னா இதை ஏத்துக்க மாட்டா. என் பர்த்டே அன்னிக்கு இதைக் கட்டினா, எனக்குச் சந்தோஷமா இருக்கும்..." என்று ஆசையோடு கூறினான். தயானந்த் அவன் ஆசையை நிராகரிக்க முடியாமல், புடவையை வாங்கி வைத்துக் கொண்டார்.

அவளிடம் சென்று நேரடியாகக் கொடுக்காமல், தன்னிடம் வந்து கோரிக்கை வைத்த அவனது கண்ணியத்தை மனதுக்குள்ளே மெச்சிக் கொண்டார். இத்தனை மாதங்களாக, அவரின் ஒரு சொல்லுக்குக் கட்டுப்பட்டு, தன் மனைவியாக வரப்போகும் சுமியை அத்துமீறி நெருங்காமல், அனாவசிய வழிசல் இல்லாமல் நடக்கும் ராமுக்காக, இதைக் கொடுப்பதில் அவருக்கும் மகிழ்ச்சியே!

"சுமி! இந்தா, இந்த சண்டே இதைக் கட்டிக் கொள். நம் இல்லத்தில் சின்ன விருந்து. ஜகதீஷ் அங்கிள் ரொம்ப நாள் கழித்து வர்றார்."

புடவையின் அழகைப் பார்த்து மிகுந்த



மகிழ்ச்சியடைந்தாலும், அவளுக்கும் வியப்பே! தன் தந்தை இத்தனை வருடங்களில் ஒருமுறை கூட இதுபோல விலையுயர்ந்த, அடர்ந்த கலரில் எந்த உடையுமே வாங்கி வந்ததில்லையே! அவர் வாங்கித் தரும் உடைகள் எல்லாமே எளிமையாகத் தான் இருக்கும்? அதைப் பற்றி அதிகம் யோசிக்காமல், அதற்கு மேட்சாக பிளவுஸ் தைத்து ரெடி செய்தாள்.

ராமின் பிறந்த நாளில், ஜகதீஷ் அதிகாலையிலேயே அவனை ஆசிர்வதித்து, விலையுயர்ந்த செல்போனும், வாட்சும் பரிசளித்தார். பிறகு கோயில், வீட்டில் பிரேக்ஃபாஸ்ட் என்று காலைப் பொழுது மன நிறைவோடு கழிந்தது. காலை பத்து மணிக்கு, அடர்ந்த நீலத்தில் ப்ளு ஜீன்ஸ், பிளைன் வொய்ட் ஸ்டோன் வாஷ் சர்ட்டும் அணிந்து வெளியே வந்தவனின் வசீகரத்தில், கங்கா உடனடியாக அவனுக்கு திருஷ்டி சுற்றிப் போட்டாள்.

"இனிமே இந்த மாதிரி டிரஸ் பண்ணாதே தம்பி. ஊரில ஒருத்தர் கண்ணு போல இன்னொருத்தருக்கு இருக்காது. 'கல்லடி பட்டாலும் கண்ணாடி படக் கூடாது' என்று சொல்வாங்க. இல்லத்துக்குப் போயிட்டு வந்த பிறகும், ஒருமுறை சுற்றிப் போடணும்" என்றாள்.

ஆர்டர் செய்த உணவு வகைகள் ஒரு மணிக்குள் வந்து சேருவதை உறுதி செய்துவிட்டு கிளம்பினார்கள். குழந்தைகளுக்கு பிஸ்கெட், பழம், சாக்லேட் என்று ஏற்கெனவே வாங்கியிருந்தார்கள்.

காரை, ராம் தானே ஓட்டி வந்தான். அதை நிழலில் பார்க் பண்ணிவிட்டு இறங்கியதும், சுமி அவனைப் பார்த்து திகைத்துப் போய் விழி விரித்தாள். அசத்தலான உடையில், கம்பீரமும் சேர, ஸ்டைலாக நடந்து

வந்தவனை ஏறிட்டுப் பார்க்க முடியாதபடி ஏதோ ஒன்று அவளைத் தடுக்க, இதயம் படபடக்க தன் தந்தையின் பின்னே ஒடுங்கினாள்.

ராமின் கண்களும், சுமியைத் தான் தேடிக் கொண்டிருந்தன. அவளைக் காணாது முகம் வாடினான். தயானந்த் அவனைக் கண்டதும் "மெனி ஹேப்பி ரிடன்ஸ் ஆஃப் த டே, மை டியர் ராம்!" என்று முன்னால் வந்து அவனை அணைத்துக் கொண்டார். அப்போது தான் அவரின் பின்னே, வானுலகத்து தேவதை போல, தலை குனிந்து நின்ற சுமியைப் பார்த்தான். அகமும் முகமும் ஒருங்கே மலர, அவளின் அழகில் மதி மயங்கி, சுற்றுப்புறத்தையே மறந்து போய் நின்றான்.

மிகுந்த தயக்கத்துக்குப் பிறகு தான், சுமி இந்தச் சேலையை அணிய சம்மதித்ததே! எல்லோர் முன்பும் சேலை கட்டிக் கொண்டு, நடமாட கூச்சமாக இருந்தது. ஆனாலும் தயானந்தின் அன்புக் கட்டளையை அவளால் மீற முடியவில்லை.

துளி கூட வெட்கமே இல்லாமல், தனக்கே சொந்தமான தன் சுமியை, அணு அணுவாக ரசித்துக் கொண்டிருந்தான் ராம். இருவரையும் தவிர எல்லோருமே உள்ளே போய்விட்டிருந்தனர். ஒப்பனையற்ற அவளின் அழகு முகம் முழுநிலவாய் ஜொலிக்க, செம்பவளமாய் மின்னிய இதழ்கள் அவனுக்கு பிரத்யேகமான அழைப்பு விடுத்ததைப் போலத் தோன்றியது.

தன்னைக் கட்டுப்படுத்தவே முடியாமல், அவள் புறம் ஒரு எட்டு வைத்தவனை, உள்ளேயிருந்து வந்த ஜகதீஷ் தோளில் கைபோட்டு அழைத்துச் சென்றார். "டேய்... என்னடா! கொஞ்சம் மிச்சம் வை. சாயங்காலம் வரை



டைம் இருக்கு. உனக்காக எல்லாக் குழந்தைகளும் காத்திட்டிருக்காங்க. வந்து எல்லாருக்கும் உன் கையால ஸ்வீட் கொடு...!" எனச் செல்லமாக மிரட்டினார்.

கங்கா முதன் முதலில் சுமியைப் பார்த்ததும், அவள் அழகில் கவரப்பட்டவளாக தன்னைத் தானே அறிமுகம் செய்து கொண்டு பேசினாள். பேசப் பேச அவளின் அமைதியும், பொறுமையும், புத்திசாலித்தனத்தையும் கண்டு, 'இவள் ராமுக்கு மிகச் சிறந்த துணையாக இருப்பாள்' என்று மிகுந்த சந்தோஷப்பட்டாள்.

ராம்... எல்லாக் குழந்தைகளுக்கும் தன் கையால் இனிப்புகளை வழங்கினான். அந்தச் சின்னஞ்சிறு மழலைகளின் முகத்தில் மலர்ந்த சந்தோஷம், பெரிய பெரிய சாக்லெட் பார்களை பெற்றுக் கொண்ட போது அவர்களின் கருவண்டு விழிகளில் தெரிந்த ஆவல், எல்லாம் பார்த்து ராம் சிலிர்த்துப் போனான். அதிலும் ஒரு நான்கு வயதுச் சிறுவன், அவனை குனியச் சொல்லி "தேங்க்ஸ் அங்கிள். ஹாப்பி பர்த்டே!" என்று சொல்லி, அவன் கன்னத்தில் தன் பிஞ்சு இதழைப் பதித்தபோது, ராமின் கண்களில் நீர் கசிந்தது.

எப்போதும், வழக்கமாக ப்ரேயர் ஹாலில் அவர்களை சந்தித்து செக்கப் செய்ததும் உடனே கிளம்பி விடுவான். அதிலும் பெரும்பாலும் அவன் கவனமெல்லாம் சுமியின் மீது தான் இருக்கும். ஆனால் இன்றோ, ஒவ்வொரு குழந்தையும் அருகே வந்து அவனை விஷ் பண்ணி, நன்றியைத் தெரிவித்தபோது அவனுள்ளும் ஏதோ ஒரு மாற்றம் வந்து அமர்ந்தது.

மதிய உணவைச் சாப்பிட்டு முடிந்ததும், எல்லோருக்குமே சர்ப்ரைஸாக ஐஸ்கிரீம் வரவழைத்துக்

கொடுத்தான். பிள்ளைகளுக்கோ கொள்ளை மகிழ்ச்சி! சசிக்கு ஒரு புதிய உடையை மறக்காமல் வாங்கி வந்திருந்தான். கடைசியாக, பேனா, பென்சில், ரப்பரோடு... பென்சில் பாக்ஸ், வாட்டர் பாட்டில் என்று தன் பரிசாகக் கொடுத்தான். அவர்கள் அதைப் பெற்றுக் கொண்ட போது, அவர்களின் திருப்தியையும், ஆனந்தத்தையும் பார்த்த ராமின் மனம் நிறைந்து போனது. அப்போது, ஒரு சின்னஞ் சிறுவன், அவன் அருகே வந்து ஏதோ சொல்ல விழைந்தான்.

ராம் அவன் முன்பு மண்டியிட்டு, "என்ன கண்ணா... சொல்லு. என்ன வேணும்?" என்றான்.

"டாக்டர் அங்கிள். உங்களுக்கு இன்னிக்குத் தான் பர்த்டே-யா?" என்றதும் எல்லோரும் அவர்கள் இருவரையும் ஆவலோடு கவனித்தனர்.

"ஆமாம் கண்ணா... குட்டிப் பையனுக்கு என்ன வேணும்? அங்கிள் வாங்கித் தரேன் சொல்லு."

"அங்கிள் என்னோட பர்த்டே எப்ப வரும்? ஸ்கூல்ல என் ஃப்ரண்ட் ராஜீவ், அன்னிக்குப் பர்த் டே-ன்னு நிறைய்ய சாக்லேட் கொடுத்தான். நானும் என் ஹேப்பி பர்த் டே-க்கு ஸ்கூலுக்குக் கொண்டு போகட்டுமா? எல்லோருக்கும் கொடுத்தா,மிஸ் ஹேப்பி பர்த் டே பாட்டு பாடச் சொல்வாங்க. ஜாலியா இருக்கும்." குரலில் ஏக்கம் வழிய அந்தச் சிறுவன் கேட்கவும், கன்னத்தில் அறை வாங்கியது போல துடித்துப் போன ராம், அவனை இறுக அணைத்துக் கொண்டான்.

'என்ன பதில் சொல்வது?' என்று புரியாமல் பரிதவித்து, கலங்கி நின்றான். தந்தையிடம் 'ஏதாவது பதில் சொல்லுங்களேன்!' என்ற பாவனையில் பரிதாபமாகப் பார்த்ததும், சுமியின் நெஞ்சம் பதைத்தது.



இவன் துயரத்தைப் போக்க ஏதாவது செய்ய வேண்டுமே என்று யோசித்தவள், முகம் மலர, "டாக்டர், அவனை இங்கே கொடுங்க" என்று தூக்கிக் கொண்டாள்.

"ஹாய் அர்ஜுன் குட்டி! உனக்கு இப்ப உன் பர்த்டே என்னிக்கு வரும்னு தெரியணுமா? அங்கிள் நம்ம கெஸ்ட் தானே... அவருக்கு எப்படித் தெரியும்? எனக்குத் தானே தெரியும். அக்கா கிட்ட கேட்டிருந்தா சொல்லியிருப்பேனே!

அர்ஜுன் குட்டியோட பர்த் டே டிசம்பர் டென்த் வந்திடும். அன்னிக்கு என் செல்லத்துக்கு, புது டிரஸ் சாக்லேட் எல்லாம் நானே வாங்கித் தருவேன். நீ போய் உன் ஃப்ரண்ட்ஸ் எல்லாருக்கும் கொடுக்கலாம். சரியா...?" என்றதும் அவன் முகம் தாமரையாய் மலர்ந்து போனது.

"நிஜமாவாக்கா? ஹையா! நான் என் பர்த்டேக்கு எல்லோருக்கும் சாக்லேட் குடுப்பேன்" என்றவன் சுமியை முத்தமிட்டு, அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டான். குழந்தை என்பதால் ராமிடம் கேள்வி கேட்டதையே மறந்து போய், "அங்கிள், டிசம்பர் டென்த் உங்களுக்கும் சாக்லேட் தருவேன்!" என்று அவனையும் முத்தமிட்டான். ராம் சுமியிடம் கண்களாலேயே நன்றியை தெரிவித்தான்.

"அப்பா! நான் அங்கிளோட ரூமில கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கறேன். நீங்க கிளம்பியதும் சொல்லுங்க." பதிலைக் கூட எதிர்பாராது தயானந்தின் அறைக்குள் சென்று விட்டான். இத்தனை நேரம் இருந்த உற்சாகமும், சந்தோஷமும் வடிய, இலக்கில்லாமல் எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டு, ஜன்னலருகே நின்றான். மனம் கனத்துக் கிடந்தது. அந்தச் சின்னஞ்சிறு கண்களில்

வழிந்த ஏக்கமே, அவன் நினைவில் வந்து வதைத்தது. எல்லோருக்கும் அவன் மனநிலை புரிந்தது.

தயானந்த் சுமியிடம், "சுமி...! நீ போய் அவனைச் சமாதானப்படுத்தி கூட்டிவா! ரொம்ப மன வருத்தத்தில் இருக்கிறான். பாவம்!"

அவனைப் பார்த்து ஆறுதல் படுத்தவேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த சுமிக்கு, தயானந்தின் வார்த்தைகள் அமிர்தமென காதில் ஒலிக்க, தாமதிக்காது அவனிருக்கும் இடத்தை நோக்கிச் சென்றாள்.

"டாக்டர்..."

திரும்பிப் பார்க்காமல், "சொல்லு சுமி! என்ன வேணும்?"

"டாக்டர்! இதுக்கெல்லாம் மனம் தளர்ந்து போகலாமா? அவனைத் தான் சமாதானப்படுத்தியாச்சே. வாங்க, வெளியே வந்து குழந்தைகளோடு பேசுங்க. கொஞ்ச நேரத்தில் மனம் ரிலாக்ஸ் ஆயிடும்."

"சாரி சுமி... நான் கொஞ்ச நேரம் இங்கேயே இருக்கேன். எனக்குத் தனிமை வேணும். என்னை விடு. நீ போய் அவங்களோட இரு."

"குழந்தை தானே டாக்டர். ஏதோ புரியாம பேசிட்டான். இதுக்காக இத்தனை வருத்தப்படலாமா?"

"இல்லை சுமி! நான் அதுக்காக வருத்தப்படவே இல்லை. இந்தப் பிளானைப் போட்டதே நான் தான். இதெல்லாம் செஞ்சா, அவங்க சந்தோஷப்படுவாங்க; ஜாலியா என்ஜாய் பண்ணுவாங்கன்னு மட்டும் தான் யோசிச்சேன். ஆனா, இந்த ஆங்கிள்ல நான் யோசிக்கவே இல்லை. இந்தக் கொண்டாட்டத்தை எல்லாம் பார்த்து, அந்தக் குழந்தையின் மனசுல எந்த



அளவுக்கு ஏக்கம் இருந்திருந்தா, இந்த மாதிரி ஒரு கேள்வி கேட்கணும்-னு தோணியிருக்கும்? நான் ஒரு முட்டாள் சுமி. எத்தனை தான் படிச்சிருந்தாலும், ஒரு சின்னக் குழந்தையைச் சந்தோஷப்படுத்த முடியாத முட்டாள் நான். என் மனசு ரொம்பக் காயப்பட்டிருக்கு.

நீ மட்டும் வந்து சமாளிச்சுப் பேசலைன்னா, நான் என்ன ஆயிருப்பேன்னு எனக்கே தெரியாது. ரொம்ப தேங்க்ஸ் சுமி!" என்றவனின் கண்களில் மலையளவு துயரம் தெரிந்தது. சுமியின் கண்களுக்கு, ஆதரவு தேடி நிற்கும் சின்னக்குழந்தை போலத் தான் தெரிந்தான் ராம்.

தன்னையறியாமலேயே அவன் அருகே சென்று, அவன் கரங்களைப் பற்றியவள், "டாக்டர்! நீங்க வருத்தப்பட்டதெல்லாம் போதும். விடுங்க. இங்கே அடிக்கடி, வெட்டிங் டே, பர்த்டே, நினைவு நாள் என்று சில முக்கியமான தினங்களில் நிறைய பேர் தானே முன் வந்து சாப்பாடு போடுவாங்க. அவங்கள்ளாம் எங்களையே தான் சமைக்கச் சொல்வாங்க.

ஆனா,இன்னிக்கு ஹோட்டல் லஞ்சை, குழந்தைங்க ரொம்ப என்ஜாய் பண்ணி சாப்பிட்டாங்க. **இங்க ஸ்பான்சர் பண்றவங்க ரொம்ப பேர், நேரில் வரவே மாட்டாங்க. இப்படிச் செய்யறதை, நிறைய பேர் ஒரு ஸ்டேட்டஸ் சிம்பலா மட்டும் தான் நினைக்கறாங்களே தவிர, ஆத்மார்த்தமா செய்யறதில்ல.**

**ஆனா இன்னிக்கு, இந்தக் குழந்தைங்க, உங்களோட எப்படி சந்தோஷமா இருந்தாங்க பார்த்தீங்களா?** அவங்க எதையுமே யோசிச்சுப் பேசறதில்ல டாக்டர். பேசினாலும், நிமிஷத்திலேயே அதை மறந்திடுவாங்க. அர்ஜுனும் அதைத் தானே செய்தான்.

இனி எதையும் நினைச்சு வருத்தப்படாதீங்க.

வேணும்னா ஒரு ஐடியா சொல்றேன். இங்க இல்லத்துல இனி குழந்தைகள் வந்து சேர்ந்த நாளை, நாம அவங்க பர்த் டே வா கொண்டாடி விடலாம். அதுக்கு ட்ரஸ், ஃபுட், சாக்லேட் எல்லாமே, நீங்க ஸ்பான்சர் பண்ணிடுங்க. ப்ராப்ளம் சால்வ்ட்! ஓ.கே.வா? கொஞ்சம் சந்தோஷமாக இருங்க டாக்டர். நீங்க வருத்தப்பட்டா நல்லாவே இல்லை. அதுவும் உங்க பர்த்டே அன்னிக்கு, நீங்க இங்க வந்துட்டு சோகமா கிளம்பினா, எங்க எல்லோருடைய மனசும் கஷ்டப்படும்..." மென்மையாகப் பேசியவளையே கண்கள் மின்னப் பார்த்தான்.

"தேங்க் யூ சுமி!. ரொம்ப அழகான தீர்வை சொல்லிட்ட. இனி அப்படியே செஞ்சிடலாம். தேங்க்ஸ் அகெய்ன் சுமி...! நீ என் கூட இருந்தா, என் கலக்கமெல்லாம் நொடியில் பறந்து போயிடுது, எப்பவும் என் சந்தோஷமும் நிலைச்சு இருக்கும்! இதை நான் நிஜமா, ஆத்மார்த்தமா சொல்றேன் சுமி..." உணர்ச்சி வேகத்தில் அவள் கரங்களில் தன் இதழ்களைப் பதித்தான் ராம்.

அவன் செயலில் வியர்த்துப் போனவளாய், முகம் சிவக்க, "டாக்டர்... இங்கேயே பாத்ரூம் இருக்கு; ஃபேஸ் வாஷ் பண்ணிட்டு வாங்க. நான் வெளியே இருக்கேன்."

ஓடி வந்தவள் வாசலருகே நின்ற ஜகதீஷ் மேல் முட்டி மோதி, தடுமாறி நின்றாள். இத்தனை நேரம் சுமி பேசியதைக் கேட்டு விட்டு, அவளைத் தோளோடு அணைத்து, உச்சியில் முத்தமிட்டார்.

"நல்லா இரும்மா" என்றதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை. தன் மகனின் மனக் கலக்கத்தை பத்தே



நிமிடங்களில் தீர்த்து வைத்த தன் மருமகள் செல்வதையே மிகுந்த பிரியத்தோடு பார்த்தார்.

அன்றைய தினம் ராம், சுமி இருவருக்குமே மறக்க முடியாத நாளாக அமைந்தது.

# 7

**சு**மியிடம் ப்ரபோஸ் செய்து, கல்யாணம் முடிவானதும், முதன்முதலாக அவளை வெளியே தன்னோடு கூட்டிச் சென்ற ஞாபகம் வந்ததும், அந்த இனிய நினைவுகளிலேயே மூழ்கிப் போனான் ராம்.

அன்று இல்லத்துக்கு வந்த ராமைப் பார்த்ததும், முகம் அந்திவானமாய் சிவக்க, சுமி ஒரே ஓட்டமாக உள்ளே ஓடிவிட்டாள். ராம் அதைப் பார்த்து தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான். செக்கப் முடிந்து கிளம்பும் போது, சுமியின் அருகே வந்தவன், "சுமி...! ஒரு நிமிஷம்...!" என்றான்.

"சொல்லுங்க டாக்டர்...!"

"நாளைக்குக் காலையில் எட்டு மணிக்கு, நீ கிளம்பி ரெடியாக இரு. நாம ரெண்டு பேரும் ஷாப்பிங் போறோம். மேரேஜுக்குத் தேவையான சில திங்க்ஸ் வாங்கணும். அப்பா உன்னோட போய் வாங்கிட்டு வரச் சொன்னார். டிபன் வெளியே சாப்பிடறோம். ஷார்ப்பா எட்டு மணிக்கு வந்திடுவேன். சரியா?" என்று ஆவல் பொங்க அவளிடம் கூறினான்.

ஆனால் ராமின் பேச்சைக் கேட்ட சுமியின் முகமோ வெளிறிப் போனது.

"என்ன டாக்டர் சொல்றீங்க? நாம மட்டும் தனியா வெளியே போகணுமா? எதுக்கு? அப்பா, மாமா எல்லாம்...?"

"அப்பா, மாமா, அக்கா... எல்லோரும் தான்!"

"நிஜமாவா டாக்டர்" என்ற சுமியின் முகம் மலர்ந்து போனது. அவன் நக்கலாகப் பேசுகிறான் என்பதைக் கூட புரிந்து கொள்ளாமல், ஆனந்தப்படுவதைப் பார்த்த ராமுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

ஆதங்கத்துடன், "என்ன சுமி! நிஜமாவே உனக்குப் புரியவே இல்லையா? இல்லை... விளையாட்டுத்தனமா பேசறியா? நீ என் வருங்கால மனைவி. இன்னும் பதினைந்து நாளில் நம்ம திருமணம் நடக்கப் போகுது. உன்னைத் தனியா ஷாப்பிங் கூட்டிட்டுப் போய், உனக்கு ஸ்பெஷலா எதாவது வாங்கிக் குடுக்கணும்ன்னு ஆசைப்படறேன். அதுக்கு நாம மட்டும் போனா போதாதா? நீ என் கூட வரமுடியுமா... முடியாதா? அதை மட்டும் சொல்லு" என்றான்.

அவனின் விருப்பம் புரிந்தாலும், தயக்கம் மேலிட, "ப்ளீஸ் டாக்டர். எனக்குப் பயமா இருக்கு. நான் யாரோடயும் இது மாதிரி தனியா போனதே இல்லை. அட்லீஸ்ட் மாமா மட்டுமாவது நம்ம கூட வரட்டுமே...! சொல்லிடறீங்களா?"

"தேங்க்யூ சுமி. நீ என் மேல இத்தனை நம்பிக்கை வைச்சதுக்கு! இதை விட என்னை யாரும் அதிகமாகக் கேவலப்படுத்த முடியாது! உன்னை ஆசையா வெளியே கூட்டிட்டுப் போக நினைத்ததுக்கு, எனக்கு இது வேண்டியது தான்!"

ஓ.கே.! நான் கிளம்பறேன். நம்ம மேரேஜுக்குத் தேவையானதை பெரியவங்களே பார்த்து வாங்கட்டும்.



நான் நாளைக்கு லீவை கேன்சல் செய்துட்டு டியூட்டிக்குப் போறேன். மறுபடி மேரேஜ் அன்னிக்குப் பார்க்கலாம்." முகம் இறுக, கோபத்துடனும், இயலாமையுடனும் வார்த்தைகளை சிதற விட்டு, அவளை ஏறெடுத்தும் பார்க்காமல் கிளம்பிய ராமைக் கண்டு, சுமி வெகுவாகக் கலங்கிப் போனாள். வேகமாக அவனருகே சென்று, அவனது கைகளைப் பற்றினாள்.

கண்களில் ஈரம் படர, "சாரி டாக்டர்! வந்து... ம்... சரி! நாளைக்கு எட்டு மணிக்கு நான் ரெடியாயிடறேன். ஆனா அப்பா கிட்ட, இது பத்தி பேச ரொம்ப வெட்கமா இருக்கு!" கூச்சத்தில் முகம் சிவந்து போனது சுமிக்கு.

ராம் சிரிப்பை அடக்கிக் கொண்டு, "குட்! தட்ஸ் மை கேர்ள்! அங்கிள் கிட்ட சொல்லவா இத்தனை பயம்? இங்க நான் வந்தவுடனேயே அவர் கிட்ட பேசி, பர்மிஷன் வாங்கியாச்சு. அப்பாவும் போன் பண்ணிட்டார். நீ காலையில ஜம்முனு ரெடியானா போதும்; நான் வந்து பிக்கப் செய்துக்குவேன்" மிடுக்காகக் கூறிவிட்டு கிளம்பினான்.

"சரி" என்று சின்னக் குழந்தையாய் தலையாட்டியவளைப் பார்த்ததும், அருகில் வந்து, ஒற்றை விரலால் அவள் முகவாயை நிமிர்த்தி, "சுமி...! நீ என் மனைவி... அண்ட் எ குட் ஃபிரண்ட் ஆல்ஸோ. அதனால என்கிட்ட பேசும் போது உனக்கு எந்தவிதமான தயக்கமோ, கலக்கமோ வரவே கூடாது. புரிஞ்சுதா? இன்னியிலிருந்து உன் முகத்துல சிரிப்பை மட்டும் தான் நான் பார்க்கணும்.

என்னை முதல்ல உன் க்ளோஸ் ஃப்ரண்டா நினைச்சுக்க. எல்லாம் சரியாய்ப் போயிடும். என்னை

இனி மேல் நீ டாக்டர்-னு கூப்பிடக் கூடாது. நான் உனக்கு ராம் மட்டுமே! உன்னோட ராம்! இரவு முழுதும் இதையே சொல்லிப் பழகு. வந்திடும். காலையில உன்னைப் பார்க்கும் போது, 'குட்மார்னிங் ராம்'-னு சொல்லணும். சரியா? பை டார்லிங். மீட் யு இன் த மார்னிங்!" மெல்ல அவளது கன்னத்தை வருடி விட்டுச் சென்றான். சுமியின் உடல் சிலிர்த்தது. 'எப்படியெல்லாம் பேசறார் பார்!' அவன் குரலில் வழிந்த உரிமையையும் காதலையும் கண்டு பரவசமானாள். "இத்தனை காதலுக்கும் நான் தகுதியானவளா? என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். அவனைப் பற்றி நினைத்துக் கொண்டே உள்ளே சென்றவளை தயானந்த் அழைத்தார்.

"சுமி! நாளைக்குக் காலையில் ராம் வருவான். ஏதோ வாங்க வேண்டுமாம். நீயும் கூட வரவேண்டும் என்றான். ஜகதீஷ் கூட போனில் சொன்னான். அதனால நீ கிளம்பிப் போயிட்டு வந்திடு" என்றார்.

தன் தந்தையின் சம்மதம் பெற்றும் கூட, இரவு முழுவதும் அவளுக்கு உறக்கமே வரவில்லை. ஒருபுறம் அவனோடு செல்வது சந்தோஷமாக இருந்தாலும், மறுபுறம் கொஞ்சம் கலக்கமாகவும் இருந்தது.

காலையில் எழுந்ததும், ஒரு விதமான எதிர்பார்ப்பில் மனம் ராமின் வரவிற்காக காத்திருந்தது. இளம் சிவப்பு வண்ணச் சுடிதாரில் எளிமையான தேவதையாய் அவனுக்காகக் காத்திருந்தாள். சரியாக எட்டு மணிக்கு அவன் கார் இல்லத்துக்குள் நுழைந்ததும், சுமியின் மனம் கன்றுக்குட்டியாய் துள்ளியது. ப்ளு ஜீன்ஸ், டி-ஷர்ட்டில் ஸ்டைலாக இறங்கியவனைக் கண்டு, இமைக்கவும் மறந்தாள்.



புருவம் உயர்த்தி 'என்ன' என்று வினவியவனைக் கண்டு நாணி, தலை குனிந்தவளை ரசனையுடன் பார்த்தான். பின் "போகலாமா?" என்று கேட்டு, தயானந்திடம் விடைபெற்று இருவரும் கிளம்பினர்.

காரின் பின்னால் ஏறப் போனவளைப் பார்த்து முறைத்து விட்டு, முன் பக்கக் கதவைத் திறந்து விட்டான். காரில் அவனருகே வந்து அமர்ந்ததுமே, மெல்ல அவள் உடல் நடுங்கியது.

ஓரக் கண்ணால் அவளைப் பார்த்து விட்டு, "சுமி! என்னாச்சு? ஏன் ரொம்ப டென்ஷனாக இருக்கிறாய்?"

" இல்லை டாக்டர்! நான் படிக்கிறதும் லேடீஸ் காலேஜ். ஜெண்ட்ஸ் கூடப் பேசிப் பழகியதும் இல்லை. தனியே எங்கேயுமே போனதில்லை. நேரா காலேஜ்! காலேஜ் விட்டதும் இல்லம்! இது மட்டும் தான் என் டெய்லி ஷெட்யுலே!. ஃபர்ஸ்ட் டைம் இப்பதான் உங்க கூட வெளியே வர்றேன். அதனால கொஞ்சம் நெர்வசா இருக்கு."

அவள் புறம் தன் காந்தப் பார்வையைச் செலுத்தியவன், "ஓகோ...! அப்படியா, ஆனா, நானெல்லாம் தினமும் ஒவ்வொரு பெண்ணோடு தான் ஊர் சுத்தறதே. அதனால தான் சகஜமா நான், உன்னையும் வெளியே கூப்பிட்டேன்னு நினைக்கறியா? அவனின் கேள்வியில் திகைத்துப் போய் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தாள்.

அவளின் திகைத்த பார்வையில் மனம் கனிந்தவன், இடதுகையால் அவள் கரத்தை மென்மையாகப் பற்றி, "மை டியர் சுமி! எனக்கும் உன்னைப் போலத் தான்! இதுதான் எனக்கும் ஃபர்ஸ்ட் டைம்... ஒரு அழகான ஏஞ்சலுடன் வெளியே வருவது! என்ன புரியுதா? உன்னை

எனக்கு ஒரு வருஷத்துக்கு மேலாகவே தெரியும். ஆனாலும் உன் கூட இன்னிக்கு முழுதும் தனியா இருக்கப் போகிறேன்னு நெனச்சதில் ராத்திரி முழுசும் நான் தூங்கவே இல்லை தெரியுமா? ரொம்ப எக்ஸைட்மென்டா இருக்கு!"

நான் ஒரு மெடிக்கல் காலெஜ் ஸ்டுடண்ட். படிச்சது டெல்லியில! அங்கயெல்லாம் ஆண்-பெண் வித்தியாசம் பார்க்காம ரொம்ப ஜோவியலா பழகுவாங்க. ரெண்டு பேரும் சேர்ந்து வெளியே போகறதெல்லாம் ஒரு பெரிய விஷயமே இல்லை. லேடீஸ்-க்கு அதிகமாக ∴ப்ரீடம் இருந்தது.

நானும் அவங்களோட சேர்ந்து ஒண்ணா மெடிக்கல் கேம்ப், ஹாஸ்பிடல் விசிட், டூர் அப்படின்னு நிறைய போயிருக்கேன். ஆனா எந்த விதமான ∴பீலிங்கும் வரலை. ஆனா இன்னிக்கு உன் கூட வர்றதுக்கு ரொம்ப ஆசையா, திரில்லிங்கா இருக்கு. யு ஆர் மை கேர்ள். உன் கூட ∴ப்ர்ஸ்ட் டைம் அவுட்டிங். ரொம்ப சந்தோஷமா இருக்கு. என்னோட மனசு பூரா, என் சுமி தான் நிறைஞ்சிருக்க தெரியுமா?

எப்படா நம்ம கல்யாண நாள் வரும்னு ஆவலா இருக்கேன். முன்பெல்லாம் அப்பா என்கிட்ட கல்யாணத்தைப் பத்தி பேசினா, அதைத் தவிர்த்திடுவேன்... பிடிக்காது. ஆனா இப்ப உன்னைப் பார்த்ததும், எல்லாமே தலைகீழா மாறிடுச்சு. நான் ஒரு டாக்டர்-ங்கறதைக் கூட மறந்து போயிட்டேன்.

உன்னைப் பார்த்துக்கிட்டே இருக்கணும். மனம் விட்டு நம்ம ∴பியூச்சர் பத்தி நிறையப் பேசணும். இப்படியெல்லாம் எனக்குள்ள நிறைய ஆசை. மொதல்ல



நிறைய அண்டர்ஸ்டாண்டிங், கேரிங், ஷேரிங்... இதெல்லாம் நமக்குள்ள வரணும். எதுவா இருந்தாலும், ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் கொடுத்துப் போகணும். அப்புறம் நமக்குள்ள நிறைய்ய்ய்...ய லவ்! நம்ம லை∴புக்கு இது தான் சக்ஸஸ் ∴பார்முலான்னு நினைக்கறேன்."

"ம்!"

சுமி! என்னை மாதிரியே, நீயும் உன் மனசில என்ன தோணுதோ அதையெல்லாம் மறைக்காம என்கிட்ட ∴ப்ரீயா பேசு. எல்லாத்தையும் என் கிட்ட ஷேர் பண்ணிக்கோ. உனக்குன்னு என்னிக்கும் நான் இருக்கேன்-ன்னு நினை. நான் ஒருத்தர் மேல ப்ரியம் வச்சிட்டா, சாகிற வரை என்னால அதை மாத்திக்க முடியாது. உன்னைப் பார்த்ததிலிருந்தே நான் உன்னை உயிரா விரும்பறேன் சுமி!

என்னோட ∴பர்ஸ்ட் லவ்வர் என் அப்பாதான்! அவர் தான் எனக்கு எல்லாமே! முதல்ல எனக்கு அவர் ரொம்ப க்ளோஸ் ∴ப்ரண்ட். எதையுமே இன்னிக்கு வரைக்கும், அவர் கிட்ட நான் மறைச்சதில்ல. என்னோட ஆசை எதையும் அவர் மறுத்ததும் இல்ல! ஹி இஸ் எ ரியல் ஜெண்டில்மேன். ஐ லவ் ஹிம் சோ மச்.

அவருக்கு அப்புறம், என்னோட லை∴ப்ல இனி நீ மட்டும் தான். நான் ரொம்ப பொஸஸிவ். உன் மேலயும்! நீ அங்க சசியைத் தூக்கிக் கொஞ்சினா கூட எனக்குப் பொறாமையா இருக்கு. நீ எனக்கு மட்டும் தான்... புரியுதா?" சன்னமான சிரிப்பை சிந்தியவன், அவள் நுனி விரல்களை முத்தமிட்டான்.

"சுமி! சென்டிமெண்டா முதல்ல கோயிலுக்கே போகலாம். வா!" கோயிலின் அருகே காரை நிறுத்தினான்.

அவனின் மந்திர வார்த்தைகளும் மயக்கும் புன்னகையும் ஒன்று சேர, சுமி பிரமித்துப் போய் எதையும் சிந்திக்கக் கூடத் தோன்றாமல், அவன் பின்னே பதுமை போல நடந்து சென்றாள். சுவாமி தரிசனம் முடிந்த பின்பு கூட அவள் சுயநினைவுக்கு வரவில்லை.

ராம் அவள் முகத்துக்கு நேரே சொடக்குப் போட்டு, "ஹாய் சுமி! என்னம்மா! என்ன யோசனை? என்னடா, இவன் ரொம்ப பேசறானேன்னு பயந்துட்டியா? என்னோட ஒன்றரை வருஷ ஏக்கம் சுமி! அதான் கட்டுப்படுத்த முடியலை. பசிக்குதா? வா போகலாம். நம்ம வீட்டுக்கு ஒரு சின்ன விசிட்! டிபன் அக்கா செஞ்சு வச்சிருக்காங்க. அப்பா வாசல்லயே நமக்காக காத்துகிட்டு இருப்பார்." வெகு இயல்பாகத் தன் கையில் இருந்த குங்குமத்தை அவள் நெற்றியில் இட்டான்.

ராம் சொன்னது போல, ஜகதீஷ் போர்டிகோவில் இவர்களுக்காகக் காத்திருந்தார். கார் வந்து நின்றதுமே, "சுமி! வாடா! வா... வா... உனக்காகத் தான் காத்துக்கிட்டு இருக்கேன். இதுதான் நீ வாழப் போற வீடு... உன் வீடு. வலது காலை எடுத்து வைச்சு உள்ளே வாம்மா! ராம் கண்ணா, அவளைப் பூஜை ரூமுக்குக் கூட்டிட்டுப் போ. உன் அம்மா கிட்ட இரண்டு பேரும் ஆசிர்வாதம் வாங்கிக்கோங்க. கங்கா உங்களுக்காக ஸ்பெஷலா டிபன் பண்ணி வைத்து காத்துக்கிட்டிருக்கா."

"அப்பா! நீங்களும் வாங்க; உங்களுக்கும் சேர்த்தே விழுந்து கும்பிடறோம்."

சுமி பூஜையறையில் விளக்கேற்றி, மனதார வேண்டிக் கொண்டாள்.

"சுமி! என் பர்த் டே அன்னிக்கு கங்கா அக்காவை



நீ பார்த்துப் பேசின தானே! நம்ம வீட்டு நிர்வாகம் முழுக்க அக்கா தான்! அவங்க பையன் தியாகு இன்ஜினியரிங் படிக்கிறான். அக்காவே உனக்கு எல்லாம் சொல்லித் தருவாங்க! அக்கா, பசிக்குது... டிபன் ரெடியா?"

"ரெடி தம்பி. ஐயாவையும் கூப்பிடு. எல்லோரும் சேர்ந்து, ஒண்ணா சாப்பிடுங்க. நான் பரிமாறுகிறேன். சுமி ரொம்ப அழகு ராம்! மகாலட்சுமி மாதிரி இருக்கா. மனசுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு" என்று மனதாரக் கூறினார்.

கலகலவென்று சிரித்துப் பேசிக் கொண்டே டிபனைச் சாப்பிட்டு முடித்தார்கள். ராம் தன் தந்தையிடம், கேலியும் கிண்டலுமாக சகஜமாகப் பேசுவதைப் பார்த்து சுமி வியந்து போனாள். கங்காவையும் அவளுக்கு ரொம்பப் பிடித்துப் போனது.

ராம் முதலில் அவளை இஸ்பஹானி சென்டரில் உள்ள பிரபலமான டிசைனர் ரித்துகுமாரின் பொட்டிக் ஷாப்புக்கு அழைத்துச் சென்றான். அவனே விதவிதமான சல்வார், சுடியை சுமிக்காக வாங்கிக் குவித்ததில், சுமியே திணறிப் போனாள்.

"டாக்டர்! ப்ளீஸ் இத்தனை டிரஸ் வேண்டாம். ரெண்டு செட் மட்டுமே போதும். ரொம்ப காஸ்ட்லியா வேற இருக்கு" என்று கெஞ்சினாள்.

அவளைச் செல்லமாக முறைத்து விட்டு, சுமி! நம்மோட ஃபர்ஸ்ட் ஷாப்பிங் இது. நான் எடுப்பதை நீ மறுக்கவே கூடாது. உனக்கு எடுத்துக் கொடுக்கும் உரிமை எனக்கு மட்டும் தான் இருக்கு. தெரிஞ்சுக்க. சரி, இங்கே வாங்கியது போதும்.. வேற கடையில் பார்க்கலாம்."

"இன்னுமா...?" சுமிக்கு விழி பிதுங்கியது. சென்னை

முழுக்கச் சுற்றினார்கள். 'பாலம் சில்க்ஸ்' சென்று சுமிக்கு தானே ஒரு பட்டுப் புடவையை செலக்ட் செய்தான். மாதுளை முத்துக்களின் நிறத்தில், மிதமான த்ரட் ஒர்க் செய்யப்பட்டு, குந்தன் கற்கள் பதிக்கப்பட்டிருந்த புடவையின் அழகில் மயங்கிப் போன சுமித்ரா, அதை மறுக்கவே மனமில்லாமல் ஆசையோடு பெற்றுக் கொண்டாள்.

அடுத்து பிரபல நகைக் கடைக்கு கூட்டிச் சென்றான். நகைகளைத் தேர்வு செய்து பில் போடும் போது, சுமி கண் கலங்கினாள்.

"ஏன் சுமி...! இது போதாதா?" இன்னும் இரண்டு செட் வாங்கலாமா?" என்று அவளைப் பார்த்து கண் சிமிட்டியதும், சுமி முறைத்தாள்.

"போங்க டாக்டர்! மாமா சம்பாதிச்ச காசையெல்லாம் எனக்காகவே செலவு பண்ணிடுவீங்க போல இருக்கு. திஸ் இஸ் டு மச்...!"

"ஹலோ மேடம்! கொஞ்சம் பொறுங்க. இது ஒண்ணும் உன் மாமா சம்பாதிச்ச காசில்லை. உன் 'மாம்ஸ்' நான் சம்பாதிச்ச காசு. நான் வேலையில் சேர்ந்தபிறகு, இன்னும் ஒரு பைசா கூட அதுல செலவே பண்ணலை. அப்பாவுக்காக மட்டும் தான் என் முதல் மாதச் சம்பளத்தில் ஒரு கி:ப்ட் வாங்கிக் கொடுத்தேன். அதுக்கப்புறம் இப்ப முதன் முதலா என் சுமிக்குத் தான் வாங்கறேன்" என்று சொன்னதும் பேச்சிழந்து போனாள்.

மதிய உணவுக்கு ஷெரட்டான் பார்க் ஹோட்டல் அண்ட் டவர்ஸில் இருவருக்கும் டேபிள் ரிசர்வ் செய்திருந்தான். ஹோட்டலைப் பார்த்துமே வியப்பில் விழி விரித்தாள் சுமி.



"அப்பா! எத்தனை அழகா இருக்கு! டாக்டர், இந்த மாதிரி இடத்துக்கெல்லாம் நான் வந்ததே இல்லை. அப்பாடி! எத்தனை கிராண்டா இருக்கு..!" குழந்தையாக குதூகலித்தாள்.

காலையிலிருந்தே அவளது அருகாமையில் தன் வசமிழந்து போயிருந்த ராம், ஆசையுடன் அவளைத் தோளோடு சேர்ந்தணைத்தான்.

முகம் குங்கும்மாய் சிவக்க, பதறிப்போய், "ப்ளீஸ் டாக்டர்! என்ன இது! விடுங்க..! கெஞ்சினாள்."

"சுமி டார்லிங்! உன்னை ஒண்ணும் செய்திட மாட்டேன். சரி வா, நம்ம கல்யாணத்துக்கு அப்புறம் பாரு! உன்னை எங்கெங்கெல்லாம் கூட்டிப் போக ப்ளான் போட்டிருக்கேன் தெரியுமா? நீ அசந்து போகப் போற! என்னிடம் அத்தனை பெரிய லிஸ்ட் இருக்கு.

நம்ம மேரேஜ் முடிந்து, ஹாஸ்பிடல் ஒப்பன் பண்ற வரை கொஞ்சம் பிஸியா இருக்கும். அப்புறம் :பாரின் ட்ரிப் ஒண்ணு அரேஞ்ச் பண்ணப் போறேன். நம்ம ஹனிமூன் அங்க தான்!" அவள் காதில் ரகசியம் பேசி, அவளைச் சிவக்க வைத்தான். அவன் சுமியிடம் சகஜமாக உரிமையாகப் பேசப் பேச, அவளின் தயக்கமும் மெல்ல விலகியது. சுமியும் தைரியமாக அவனின் முகம் பார்த்து சிரித்துப் பேச ஆரம்பித்தாள்.

சுவையான உணவு வகைகளை ஆர்டர் செய்து, தானே அவளுக்குப் பரிமாறினான்.

மறுபடி காரில் ஏறியதுமே, "டாக்டர்..." என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தாள். ராம் காரை அங்கேயே நிறுத்தினான்.

"சுமி...! இன்னும் கூட உன் மனசுக்குப் பக்கத்தில்

நான் வரலை இல்லையா? வருத்தமா இருக்கு. இனி நீ என்னை 'ராம்' ன்னு கூப்பிட்ட பிறகு தான் கார் ஸ்டார்ட் ஆகும். அதுவரை உன்னோடு பேசப் போவதும் இல்லை." மறுபுறம் திரும்பி வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான். ராமின் கோபம் கண்டு சுமி தவித்துப் போனாள்.

"ப்ளீஸ்! எனக்குக் கஷ்டமா இருக்கு, என் கிட்ட கோபித்துக் கொள்ள வேண்டாம்." இப்போது டாக்டரும் சேர்ந்து 'கட்'டானது. ஆனால் ராம் அவள் பக்கம் திரும்பவேயில்லை. சிறிது நேரம் மௌனத்திலேயே கழிய, அவனின் பிடிவாதம் கண்டு சுமி பரிதவித்தாள்.

பின் தன் தயக்கத்தை உதறியவளாய் மெல்ல அவனருகில் நகர்ந்து அமர்ந்தாள். அவனின் கரம் பற்றி, மிருதுவான குரலில், "ராம்...! சாரி..., சாரி... சாரி... என்கிட்ட இனிமே இந்த மாதிரி பேசாம இருக்காதீங்க. என்னால தாங்கவே முடியாது. எனக்கு இனிமே நீங்க தான் எல்லாமே ராம்! இனி உங்க விருப்பப்படியே நடக்கறேன். ஆனா நீங்க மௌனமா மட்டும் இருக்காதீங்க. என்னால தாங்க முடியல. நீங்க என்கிட்ட பேசாம கோபமா இருந்தா, நான்... நான் செத்திடுவேன்!" கண்களிலிருந்து முத்துக்கள் சிதற கேவினாள்.

ராம் பதறிப் போனான். அவள் விழி நீரை சுண்டி விட்டு, "பைத்தியம்! இதுக்காகவா அழுவாங்க. இன்னைக்கு ஃபுல்லா எத்தனை சந்தோஷமா இருந்தோம். ஆனா நீ அழுததும், இப்ப எனக்கு மனசு வலிக்குது சுமி.

நீ என்னை டாக்டர்னு கூப்பிட்டா, என்கிட்டயிருந்து ரொம்ப தூரம் விலகி நிற்கிற மாதிரி இருக்கு. அதான் கோபம் வர்ற மாதிரி நடிச்சா, நீ என்னை ராம்-னு



கூப்பிடுவேன்னு தான், அப்படிச் செஞ்சேன். சாரிடா..." விரல்களில் முத்தமிட்டான்.

"மை டியர் ஸ்வீட் சுமி! நீ இப்ப என்னை ராம்னு கூப்பிட்டதும், எத்தனை சந்தோஷமா இருக்கு தெரியுமா? தேங்க்யூ-டா. இனி நீ எதற்கும் அழக்கூடாது..., தெரிஞ்சுதா?" செல்லமாகக் கண்டித்துவிட்டு காரை ஸ்டார்ட் செய்தான்.

அவனுக்கும் சேர்த்து டிரஸ் வாங்கினார்கள். பின் சுமிக்கு பிளவுஸ் தைக்க அளவு கொடுத்து விட்டு, மெரினா பீச்சுக்கு வந்தார்கள். சுமி தானாகவே அவன் கைகளைக் கோர்த்துக் கொண்டாள். ராமின் நிலையையோ கேட்கவே வேண்டாம். மகிழ்ச்சியின் உச்சத்துக்கே சென்றான்! கடற்கரை மணலில் காலார நடந்தார்கள்.

தயானந்த், ஜகதீஷ் இருவருக்கும் போன் செய்து, இரவு டின்னரை முடித்து விட்டு ஒன்பது மணிக்குள் வந்து விடுவதாக தகவல் சொன்னான். மதியம் 'ஹெவி'யாக சாப்பிட்டதால், இரவு சரவண பவனில் லைட்டாக டின்னரைச் சாப்பிட்டார்கள். சுமியின் இல்லத்து வாசலில் காரை நிறுத்தினான்.

"சுமி டியர்! தேங்க் யூ சோ மச். நம்மளோட லைஃப்ல இந்த நிமிஷங்களை இரண்டு பேருமே வாழ்நாள் முழுக்க மறக்கவே முடியாது. சோ ஸ்வீட் ஆஃப் யூ மை டார்லிங்! நாளைக்குக் கல்யாணப் புடவை, திருமாங்கல்யம் வாங்கப் போகலாம் என்று அப்பா சொன்னார்கள். நாம நாலு பேரும் தான் போகப் போறோம். அதன் பிறகு நாம ரெண்டு பேரும் மட்டும் போய், உனக்கு பாஸ்போர்ட் அப்ளை பண்ணணும். ம்... இன்னிக்கும் எனக்கு சிவராத்திரி தான். நாளைக்கு அந்த பேபி பிங்க்

சல்வார் போடறியா? நேரமாச்சு... கிளம்பறேன்! போய் நல்லா தூங்கு." அவளை மென்மையாக அணைத்து கன்னத்தில் இதழ் பதித்தான்.

அதற்காகவே ஏங்கியிருந்த சுமி, அவன் முத்தத்தை கண் மூடி ரசித்தாள். பின் அவன் தோளில் சாய்ந்து, "ராம்! ஒரே நாளில் என்னை எப்படி மாத்திட்டீங்க பாருங்க. கிளம்பும் போது ரொம்ப நெர்வசா இருந்தது... கொஞ்சம் பயமாகவும்! ஆனா இப்ப உங்களை விட்டுப் பிரியவே மனசில்லை.

"ராம்! இந்த ஜென்மத்தில் நீங்க எனக்குக் கிடைக்க, நான் ஏதோ கொஞ்சம் புண்ணியம் பண்ணியிருக்கேன் போல இருக்கு. அனாதையா வளர வேண்டிய எனக்கு, அப்பா கிடைச்சார். இப்ப நீங்க! இதெல்லாம் கனவா போயிடுமோன்னு எனக்கு பயமா கூட இருக்கு. ஆனா உங்களை யாருக்காகவும், எதுக்காகவும் விட்டுக் கொடுக்க என்னால முடியாது ராம்! நீங்க எனக்கு மட்டும் தான்.

"ஐ லவ் யூ ராம்!" கண் கலங்க, குரல் குழையச் சொன்னவளை தன்னோடு சேர்த்து இறுக அணைத்துக் கொண்டான். இருவரும் ஒருவர் அணைப்பில் மற்றவர் கட்டுண்டு கிடந்தனர். மனம் அமைதியாக நிறைவாக இருந்தது.

பின் உள்ளே வந்து சுமியை விட்டு விட்டு, தயானந்திடம் விடை பெற்றுச் சென்றான். அவள் இதயமும் அவனுடனேயே சென்றது. அதன் பின் வந்த நாட்களிலெல்லாம் சுமி அவன் மேல் காதலைப் பொழிந்தாள். ஒவ்வொரு நாளும் அவளின் பொழுதுகள் அவனைக் காணவே விடிந்தன. இரவுகள் எல்லாம் அவர்களின் மறுநாளைய சந்திப்பை எதிர்பார்த்தே



கழிந்தது. அதற்குள் ராம் சுமியின் உயிர் மூச்சாகவே மாறிப் போனான்.

இதையெல்லாம் நினைக்க நினைக்க, ராமின் மனம் சுமியின் அருகாமைக்காக ஏங்கியது. தன்னையே கட்டுப்படுத்திக்கொண்டு முகம் கழுவினான். காஃபி வந்ததும், டிவியின் ஒலியைக் குறைத்து வைத்துப் பார்த்தபடி காஃபியைப் பருகினான். அதற்குள் வர்ஷா எழுந்து 'ங்கா...' என்றாள். முகம் மலர அவளைத் தூக்கிக் கொண்டு சுமித்ராவிடம் சென்றான்.

# 8

**கா**லையில் ஐந்து மணிக்கே எழுந்து குளித்து விட்டு ரோஜா வண்ண கிரேட் சில்க்கில் ஒரு பனிச் சிற்பம் போல நின்றவளைப் பார்த்துத் திகைத்தவன், "சுமி, குளித்து விட்டாயா?"

"ம், முதன் முதலில் வீட்டுக்குப் போகிறோமே; அதனால் தான்!" மன நிறைவுடன் வர்ஷாவை தூக்கிக் கொண்டாள்.

"போகலாமா...?"

"ம்..."

டிரைவர் கணேஷ் கார் கதவை திறந்து ரெடியாக நின்றான். நளினியிடம் ஆத்மார்த்தமாக நன்றி கூறினாள்.

"நளினி சிஸ்டர், நீங்கள் எங்கள் வீட்டுக்குக் கண்டிப்பாக வர வேண்டும். எனக்குக் கூடப் பிறந்த தங்கை இல்லாத குறையை நிவர்த்தி செய்திருக்கிறீர்கள்.

உங்களின் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருப்பேன்."

நளினி கண்கள் கலங்க, "கண்டிப்பாக மேடம், என் ஓய்வு நாள் வரும் போது வருகிறேன். வர்ஷாக் குட்டி என்னிடம் நன்றாகப் பழகி விட்டாள். அவளைப் பிரிந்து எப்படி இருப்பது என்றே தெரியவில்லை."

"கணேஷ், நான் சுமியை விட்டு விட்டு பத்து மணிக்குள் திரும்ப வந்து விடுவேன். நீ இங்கேயே இரு" என்று கூறி விட்டு காரைக் கிளப்பினான் ராம்.

முதன் முதலாக சுமியுடன் தான் மட்டுமே செல்ல வேண்டும் என்ற ஆவல்! இளையராஜாவின் மெலடி, சுமிக்கு ரொம்பப் பிடிக்கும். பக்கத்தில் காதல் மனைவி...! அவள் கைகளில் தங்கள் காதல் பரிசாக வர்ஷா...! ஒரு கர்வத்துடனும் மன நிறைவுடனும் காரை ஓட்டினான்.

அடிக்கடி திரும்பி சுமியைப் பார்த்தான். அவளோ வர்ஷாவோடு கொஞ்சிக் கொண்டு, சிறு குழந்தையாக வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்தாள்.

யதேச்சையாக அவனைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தவள், ஏதோ கேட்கத் தயங்குவது போல தோன்றியது.

'என்ன?' என்று புருவம் உயர்த்தி வினவினான்.

"இல்லை, அங்கு நம் வீட்டில் யார் யாரெல்லாம் இருக்கிறார்கள்..?"

"ம். கங்கா அக்கா.. உனக்கே தெரியும் அவரைப் பற்றி..! அது தவிர ராமசாமி தாத்தா தோட்டத்தை கவனிக்க! என் அப்பா காலத்திலிருந்தே வேலை செய்கிறார்.

அப்புறம் இரண்டு வாட்ச்மேன்கள். பாபு, கருப்பையா. காலையில் ஒருவர். நைட் ஒருவர் வருவார்கள்..



அப்புறம் ஜமுனா... ராமசாமித் தாத்தாவுக்குக் குழந்தைகள், மனைவி என்று யாரும் இல்லை. அதனால் நம் வீட்டின் பின்புறம், கங்கா அக்கா வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள சின்ன ரூமில் அவர் தங்கிக் கொள்வார். மூன்று நேரமும் அவருக்கு நம் வீட்டில் தான் சாப்பாடு.

அவர் நல்ல உழைப்பாளி. இந்த வயதிலும் சோம்பியே இருக்க மாட்டார். நம் வீட்டுத் தோட்டத்தைப் பார்த்தால் உனக்கே புரியும். அவர் கைபட்டு தோட்டம் மின்னும்! அதுவும், மாலை நேரங்களில் அதை விட்டு வரவே மனம் வராது. அத்தனை ரம்யமாக இருக்கும்.

மார்க்கெட், மளிகை எல்லாம் டிரைவரோடு போய் அக்காவே வாங்கி வந்து விடுவார்கள். இனி பார்...! அக்கா உன்னை எப்படியெல்லாம் பார்த்துக் கொள்கிறார்கள் என்று!"

அதற்குள் வீடு வந்து விடவே, வாட்ச்மேன் சிரித்த முகத்தோடு கேட்டைத் திறந்தான். சுமி வீட்டின் அழகைக் கண்டு பிரமித்துப் போனாள். வீட்டில் எல்லோருமே இவர்களின் வருகையைத் தான் எதிர்பார்த்து ஆவலோடு காத்திருந்தார்கள்.

போர்டிகோவில் காரை நிறுத்தி விட்டு, மறுபுறம் வந்து கதவைத் திறந்தான். வர்ஷாவைத் தூக்கிக் கொண்டு, சுமியை இறங்கச் சொன்னான்.

உள்ளே போகலாம் என்ற போது, "ராம் தம்பி... அப்படியே நில்லு...!" கங்கா ஆரத்தியுடன் வெளியே வந்து மூன்று பேருக்கும் சுற்றிப் போட்டார்.

"சுமிக் கண்ணு! எப்படி இருக்கிறாய்? நான் இரண்டு தரம் வந்தேன். உனக்கு நினைவு இல்லை. அதன் பிறகு

தம்பி தான் அலைய வேண்டாம். வீட்டுக்கு வந்து விடுவோம் என்றது.'' சுமியின் கையைப் பற்றி உள்ளே அழைத்துப் போய் சோபாவில் உட்கார வைத்தாள்.

சாதாரண நூல் புடவையில், சுத்தமாக பளிச்சென்று கண்களில் சாந்தமும் கனிவுமாக பேசியவரை, பார்த்ததுமே சுமிக்கு பிடித்துப் போனது.

"அக்கா! எப்படி இருக்கிறீர்கள்? தியாகு வேலையில் போய் எப்போது ஜாயின் செய்கிறான்? இவர் உங்களைப் பற்றி என்னிடம் நிறையச் சொல்லியிருக்கிறார். எனக்குத் தான் எதுவுமே ஞாபகம் இல்லையே!''

"அதனால் என்னடா...? நீ பிழைத்து, ராமிற்கு மனைவியாக கண் முன் நிற்பதே போதும். நான் வேண்டாத தெய்வமில்லை. தம்பி வேறு, நீயில்லாமல் வீட்டுக்குள் நுழைய மாட்டேன் என்று சொல்லி விட்டான். பத்து நாள் கழித்து இப்போ தான் இங்கு வந்து அக்காவைப் பார்க்க அதுக்கு மனசு வந்திருக்கு. வர்ஷாக்குட்டி அத்தை கிட்ட வர்றீங்களா?' வர்ஷா கங்காவை மறக்காது அவளிடம் தாவினாள். அவளை வாங்கி அணைத்துக் கொண்ட கங்காவின் கண்களில் கண்ணீர்.

"தம்பி...! சுமியை விட நீதான் ரொம்பவும் இளைத்து விட்டாய். சோர்ந்தும் தெரிகிறாய். இனி உங்கள் இரண்டு பேர் உடம்பையும் நன்றாகத் தேற்றுவதுதான் என் வேலை!''

"அக்கா! நான் என் ரூமுக்குப் போய்க் குளித்து விட்டு வருகிறேன். சுமி! ஒரு நிமிடம் என்னோடு வருகிறாயா?'

"அக்கா! வர்ஷாவைப் பிடியுங்கள். அவர் கூப்பிடுகிறார். கேட்டு விட்டு வந்து விடுகிறேன்.''



அவளைக் கூட்டிக் கொண்டு அறைக்குள் நுழைந்ததும், "சுமி, இது தான் நம் ரூம். பிடித்திருக்கிறதா?'

`இதுவா ரூம்?' ஆச்சரியத்தில் விழி விரித்தாள்..

திகைப்பிலிருந்து விடுபடாமல் சிலையாக நின்றிருந்தவளைப் பார்த்து... உனக்கு நேரம் கிடைக்கும் போது இவற்றையெல்லாம் பிரித்து அடுக்கி விடு. இப்போது வேண்டாம் என்ன?

எதையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யாதே! முடிந்தவரை சீக்கிரம் வரப் பார்க்கிறேன். என்னுடையது நைன் டு ஃபைவ் ஜாப் இல்லை என்று உனக்கே தெரியும். எமர்ஜென்ஸி என்றால் நேரம் காலமே கிடையாது. இந்தப் பத்து நாட்களாக, நானே செய்ய வேண்டிய நிறைய ஆபரேஷன்களைத் தள்ளிப் போட்டிருக்கிறேன்.

அதனால் ஒரு பத்து நாட்களுக்கு வேலை அதிகமாக இருக்கும். அதற்குள் சரி செய்யப் பார்க்கிறேன்.

சண்டே எப்பவுமே ஹாலிடே தான். அப்போது ஃப்ரீயாகப் பேசிக் கொள்ளலாம். சரி, டைம் ஆகுதுடா! நான் குளித்து விட்டு வரட்டுமா?' எழுந்து உள்ளே போனான். முன்னறையைச் சுற்றிப் பார்த்தாள்..

ஹால் முழுவதும் கார்ப்பெட். அவர்களின் லைஃப் சைஸ் போட்டோ ஒன்று சுவரில்! அதன் அருகே சென்று "அப்பா...! கண்களில் தான் எத்தனை குறும்பு வழிகிறது.. வர்ஷா அப்படியே இவரையே உரித்து வைத்திருக்கிறாள்.. இதை விட கொஞ்சம் இளைத்துத் தான் போய் விட்டார்...''

மெல்ல படுக்கையறைக்குள் நுழைந்தாள். நான்கு பேர் படுக்கும் அளவு பெரிய கட்டில், எல்.இ.டி.- டி.வி, ஹோம் தியேட்டர் என்று சகல வசதிகளோடும் இருந்தது.

அவன் ஜீன்ஸ், டீ-சர்ட்டிலும், அவள் ஷார்ட், சுடியிலும் எடுத்த அழகான போட்டோ சுவரை அலங்கரித்தது.

உள்ளே இன்னுமொரு சின்ன பெட்ரூம். டைனிங், டிரஸ்ஸிங் ரூம் என்று குட்டி பங்களாவாகவே இருந்தது. சுமி பார்த்துப் பார்த்து மலைத்துப் போனாள்..

ஏதோ தோன்ற அவன் கப்போர்டைத் திறந்து ஒரு செட் டிரஸ் எடுத்து கட்டில் மேல் வைத்தாள். குளித்து விட்டு வந்ததும், முதலில் ராமுக்கு இது தான் கண்ணில் பட்டது. வேகமாக அவளருகில் வந்து இறுக அணைத்தான். "சுமி...! தேங்க்ஸ் டா... தினமும் நீ தான் எனக்கு டிரஸ் செலக்ட் செய்து எடுத்து வைப்பாய்! அந்த ஞாபகம் வந்ததும்..., ஸாரி!" விலகியவன் வேகமான ரெடியானான்.

அவனின் முதல் அணைப்பில் உடல் சிலிர்க்க, வேகமாக ஹாலுக்கு வந்தாள். இன்னும் படபடப்பு அடங்கவில்லை.

"போகலாமா....?" ராமைப் பார்த்து தலையசைத்து விட்டு கீழே சென்றவளைப் பார்த்து ஒரு ஏக்கப் பெருமூச்சுடன் பின் தொடர்ந்தான். எந்நேரமும் அவனை ஒட்டிக் கொண்டே திரிபவள், இப்போது யாரோ போல நடந்து கொள்வதைப் பார்த்து மனம் வருந்தினான்.

டேபிள் மேல் டிபன் ரெடியாக இருந்தது. சுமி தட்டை எடுத்து வைத்தாள்.

"நீ?"



"நான் வர்ஷாக்குட்டிக்கு ஊட்டி விட்டு, பிறகு சாப்பிடுகிறேன்."

"சுமி, வர்ஷா செரிலாக் சாப்பிட்டு விட்டாள். கேசரி செய்திருக்கிறேன். முதலில் அதை சாப்பிட்டு விட்டு, பிறகு டிபன் சாப்பிடுங்கள். நான் வர்ஷாவை தோட்டத்துக்குத் தூக்கிச செல்கிறேன்!" அவர்களுக்குத் தனிமை கொடுத்து விட்டு விலகினாள் கங்கா.

கேசரியை அவன் தட்டில் வைத்தாள். கொஞ்சம் எடுத்து அவளைப் பார்த்து, அதைத் தனியாக வைத்து விட்டுச் சாப்பிட்டான். சுமி புரியாமல் விழித்தாள்.

"ம். நீயும் சாப்பிடு..." இயல்பாகப் பேசினான். கங்கா, இட்லி, வடை, பொங்கல் என்று விருந்தே சமைத்திருந்தார். திருப்தியாகச் சாப்பிட்டவன், "என்ன இருந்தாலும், வீட்டில் உட்கார்ந்து மனைவி கையால் சாப்பிடும் சுகமே தனிதான்!"

"ம், நானா செய்தேன்? எல்லா பாராட்டும் அக்காவிற்குத் தான் போகவேண்டும். ஆனாலும், பரிமாறியது என் சுமியின் கைகள் தானே?" கைகளைப் பற்ற, அவன் மனம் புரிந்தவளாய் அவனைப் பார்த்து புன்னகைத்தாள். சுமியிடம் மாத்திரையைக் கொடுத்துச் சாப்பிடச் செய்தான்.

"சுமி! இன்று மதியம் ஒரு மணிக்கு எனக்கு ஆபரேஷன் இருக்கிறது. அதனால் நான் வீட்டுக்கு வரமாட்டேன். எப்போது முடியும் என்றும் சொல்ல முடியாது. மேஜர் ஆபரேஷன். டிரைவரிடம் ஒரு சின்ன பாக்ஸில் ரசம் சாதம் பிசைந்து ஒரு ஸ்பூன் போட்டு கொடுத்து விடு போதும்..."

மதியம் டிரைவரிடம் கேரியர் கொடுத்தனுப்பினாள். ராமுக்கு அன்று காலையிலிருந்தே ரெஸ்ட் எடுக்க நேரமே இல்லை. பன்னிரண்டு மணிக்குத் தன் ரூமுக்கு வந்து சாப்பிட உட்கார்ந்தான்.

கேரியரைப் பிரித்ததும் சின்ன சின்ன கப்பாக சாம்பார் சாதம், ரசம் சாதம், பொரியல் என்று விரைவாக எடுத்துச் சாப்பிட ஏதுவாக, பிசைந்து அனுப்பியிருந்தாள். பின் ஒரு பெரிய டப்பர்வேர் டம்ளரில் மோர் தாளித்துக் கொடுத்திருந்தாள். மெல்லிய புன்னகையோடு ஸ்பூனால் எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டே சுமிக்குப் போன் செய்தான். அப்போது சின்னப் பேப்பரில் "மிச்சம் வைக்காமல் சாப்பிடுங்க!" என்ற குறிப்பைப் பார்த்ததும் முகத்தில் மகிழ்ச்சி பரவியது.

"ஹலோ!"

"ம், நான் தான்..."

"நான் தான் என்றால்?"

"சுமி..."

"யார் அது சுமி?"

"வர்ஷாவோட அம்மா....!"

"அது யார் வர்ஷா...?"

செல்லக் கோபத்தில், "ம், அதுவா, டாக்டர் ராம்குமாரோட பொண்ணு!" சொன்ன பிறகு கூச்சத்தில் உதட்டைக் கடித்தாள்.

உல்லாசமாகச் சிரித்தவன், "அப்பா...! மகாராணியை என் பேரைச் சொல்ல வைக்க, எத்தனை கேள்வி கேட்க வேண்டியிருக்கிறது. பாவம் டாக்டர்!"

"ம், போதும் கிண்டல். சாப்பிட்டாச்சா?"

"ஓ! ஃபுல்லா முடிச்சு, மோரும் குடித்து விட்டேன்."



"ஆரஞ்சு ஜூஸ் போட்டு கூலரில் கொடுத்தனுப்பி யிருக்கிறேன். தியேட்டர் போகும் முன் அதையும் குடித்து விடுங்கள்."

"சரி, வர்ஷி என்ன செய்கிறாள்?"

"தூங்குகிறாள்."

"ஒரு மணிக்குக் கரெக்டாகச் சாப்பிட்டு விடு. என்ன?"

"ம், தியேட்டர் போவதற்கு முன், சாமி கும்பிட்டு விட்டு போங்கள். வந்ததும் போன் செய்யுங்கள். பெஸ்ட் ஆஃப் லக்."

"தேங்க்யூ டியர்! போனில் தான் என்னிடம் பேசுகிறாய். நேரில், என்னை நிமிர்ந்து கூட நீ பார்ப்பதில்லை. வந்து கவனித்துக் கொள்கிறேன். பைடா!" சுமியிடம் பேசியதில் மகிழ்ந்து போனான்.

ஒரு அரை மணி நேரம் கண் மூடிப் படுத்து, கொஞ்சம் ரிலாக்ஸ் செய்து கொண்டான். பின் தெளிவான மனநிலையில் உற்சாகமாக ஆபரேஷன் தியேட்டருக்குள் நுழைந்தான். சிக்கலான ஆபரேஷன் தான்! பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஒருவனுக்கு பிரெயின் டியூமர் ரிமூவ் பண்ண வேண்டும்.

கடவுளைத் தியானித்து விட்டு, கேஸ்ஃபைலை கையில் எடுத்து, நுணுக்கமான விஷயங்களைக் கூட விடாது நன்றாக ஸ்டடி செய்து கொண்டான். பின் தெளிவான முகத்தோடு நிமிர்நதவன், உதவி டாக்டரைப் பார்த்து, "ரெடியா... ஆரம்பிக்கலாமா?" என்றான்.

"ம், எவ்ரிதிங் ஈஸ் பர்பெக்ட் டாக்டர். பி.பி., பல்ஸ் எல்லாம் நார்மல். அனெஸ்திஸியா கொடுக்க டாக்டர் வந்து விட்டார்."

"ஓ.கே! வாங்க."

அதன் பிறகு அவன் வேறு உலகத்துக்கே சென்று விட்டான். கண்களில் கூர்மையுடன், கவனத்தைக் குவித்து ஆபரேஷனைச் செய்யத் துவங்கினான். அது தவிர வேறு நினைவே இல்லாதவனாய், கைகள் துரிதமாகத் தன் பாட்டுக்கு வேலையைச் செய்ய, வெற்றிகரமாக ஆபரேஷனை முடித்த பின் மணி பார்த்தான்.

மணி ஐந்து. பேஷண்ட் கூப்பிட்டதும் ரெஸ்பாண்ட் பண்ணும் வரை அருகிலேயே இருந்தான்.

பின் ஐ.சி.யூ.க்கு சிறுவனை மாற்றச் செய்தான். வேலை இருந்ததால் வீட்டுக்குப் போக முடியவில்லை. தன் ரூமுக்கு காபி அனுப்பச் சொல்லிவிட்டு, நன்கு சூடான தண்ணீரில் குளித்தான். காபி வந்ததும் குடித்து, டிரஸ் மாற்றிய பிறகு, சுமி பேசிய கேசட் ஞாபகம் வந்தது. அதைக் கேட்கலாம் என்ற போது போன் ஒலித்தது.

ரிசப்ஷனிலிருந்து, "டாக்டர், இன்று ஓ.பி. கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. அவர்களுக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஃபிக்ஸ் பண்ணலாமா.? இல்லை... உங்களுக்கு முடியவில்லை என்றால் கேன்ஸல் செய்து விடலாம்."

"நோ.. நோ..., ஒரு பத்து நிமிடம் ஐ.சி.யூ. போய் விட்டு வந்து விடுகிறேன். பார்த்து விடலாம்."

அதன் பிறகு நேரம் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தது. ஓ.பி முடிந்த போது மணி பத்து. மறுபடி ஐ.சி.யூ போய் அந்தச் சிறுவனிடம் பேசி விட்டு, ரவுண்ட்ஸ் முடித்து விட்டு, வீடு வந்து சேர்ந்த போது மணி பதினொன்று. மாடியேறக் கூட முடியாத அளவுக்கு களைப்பு.

ஹாலில் லைட் எரிந்து கொண்டிருந்தது.



சுமி மடியில் வர்ஷாவோடு, சோபாவில் உட்கார்ந்து கொண்டே தூங்கிக் கொண்டிருந்தாள். வர்ஷாவைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு, சுமியை எழுப்பினான்.

திடுக்கிட்டு எழுந்தவள், மலங்க மலங்க விழித்தாள். சுய நினைவுக்கு வரவே சிறிது நேரம் பிடித்தது. அவனைப் பார்த்து வெட்கியவள், "ஸாரி, தூங்கி விட்டேன். டிபன் எடுத்து வைக்கட்டுமா?"

"வேண்டாம்மா. ரொம்ப டயர்டாக இருக்கிறது. முதலில் குளிக்க வேண்டும். சூடாக பால் மட்டும் கொண்டு வா, போதும்"

வர்ஷாவைத் தொட்டிலில் போட்டு விட்டு, குளிக்கச் சென்றான். சமையலறைக்குச் சென்று பிளாஸ்கில் பாலை ஊற்றியவள், ஒரு டிரேயில் சின்ன பிளேட்டில் சூடாக நான்கு இட்லியும், சின்னச் சின்ன கிண்ணங்களில் சாம்பார், சட்னி, இட்லி மிளகாய்ப் பொடி கலந்து எடுத்துக் கொண்டு மாடியேறினாள். அதற்குள் குளித்து விட்டு வந்து கட்டிலில் தலையணைகளை அடுக்கி அதில் சாய்ந்து, கால் நீட்டியபடியே உறங்கிப் போயிருந்தான் ராம்.

டேபிள் மேல் டிரேயை வைத்து விட்டு, கூச்சமும் வெட்கமுமாக அவனைத் தொட்டு எழுப்பினாள்.

விழித்துப் பார்த்தவனின் கண்கள், அசதியில் கோவைப் பழமாய் சிவந்திருந்தது. டிபன் டிரேயை அவனிடம் கொடுத்து, "ப்ளீஸ், சாப்பிட்டு விடுங்கள். பசியோடு படுத்தால் தூக்கம் வராது. மதியமும் சரியாகச் சாப்பிடவில்லை."

அழுத்தமாக அவளை ஒரு பார்வை பார்த்து விட்டு, மௌனமாகச் சாப்பிட்டான். ஒரு நிமிடத்தில் பிளேட்

காலியான போது தான், அவனுக்கே அவன் பசியின் அளவு தெரிந்தது. அதற்குள், சுமி கை கழுவ ஃபிங்கர் பௌலோடு வந்தாள்.

அவனைப் பார்த்து முறுவலித்தவனின் முகம் தெளிந்திருந்தது. "தேங்க்ஸ்- டியர்! நிஜமாகவே ரொம்ப பசி தான். போன உயிரே வந்தது போல இருக்கிறது. காலையிலிருந்து ஹெவி வொர்க். நீ சாப்பிட்டாயா?"

"ம். எட்டு மணிக்கே! இந்தப் பாலை குடித்து விட்டு தூங்குங்க."

"ஒகேடா... நீயும் வந்து படு. மணி பன்னிரண்டு ஆகப் போகிறது. தன் பக்கத்தில் கையைக் காண்பித்து விட்டு, படுத்ததும் உறங்கி விட்டான்."

"பாவம்! இன்று மிகவும் களைத்து விட்டார்' அவனையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டு நின்றாள்.

'அடர்ந்த சிகை, கட்டிலை நிறைக்கும் உயரம், கம்பீரமான தோற்றம்... கிரேக்க சிலை போல! சரியான திருடன்...! விழித்திருக்கும் போது பார்க்கவே முடியவில்லை. பார்வையாலேயே என்னை விழுங்கி விடுகிறான்!' செல்லமாக அவனைக் கடிந்தாள்.

இவன் அருகில் படுத்தால், தாம் இயல்பாக தூங்கவே முடியாது என்று வர்ஷாவைத் தூக்கிக் கொண்டு சின்ன பெட்ரூமில் போய் படுத்தாள்.

அதிகாலையிலேயே உறக்கம் கலைந்து விட, ராம் கண்விழித்து, அருகில் திரும்பிப் பார்த்தான். கட்டிலின் வெறுமை அவனைத் தாக்கியது தன் அருகே சுமி படுத்திருந்ததின் சுவடே இல்லை. கேள்வியாக சுற்றும் முற்றும் பார்த்தான், வர்ஷாவையும் காணவில்லை.



மணி ஐந்து. ஒரு வேளை வர்ஷாவோடு கீழே போய் இருப்பாளோ என்று எட்டிப் பார்த்தான். ஹால் இருட்டாக இருந்தது. சின்ன பெட்ருமில் ஃபேன் சத்தம் கேட்டு கதவைத் திறந்து பார்த்தான். வர்ஷாவை அணைத்துக் கொண்டு சுமி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். ஏமாற்றத்தில் மனம் வருந்த திரும்ப கட்டிலில் வந்து அமர்ந்தான். அவனுக்கு சுமியின் மனநிலை சுத்தமாகப் புரியவில்லை.

'என்னை, சுமி இன்னும் கணவனாக ஏற்றுக் கொள்ளவே இல்லை. அதனால் தான், என் அருகில் கூட படுக்க மனம் இல்லாமல், வேறு ரூமில் போய் படுத்திருக்கிறாள். என்னைராம் என்று கூப்பிட மறுக்கிறாள்... ஏறிட்டுப் பார்ப்பதே இல்லை. நான் எத்தனை எத்தனை தான் வெளிப்படையாக பிரியத்தை கொட்டினாலும் அவள் என்னை விரும்பவே போவதில்லை.

குழந்தைக்காக மட்டும் தான் இங்கே என்னுடன் இருக்கிறாள். இனி சுமிக்கு நான் வேண்டாம்' நினைக்க நினைக்க கோபம் கட்டுக்கடங்காமல் போனது.

எழுந்து பிரஷ் பண்ணி, உடைமாற்றிக் கொண்டவன், கீழே வந்து கங்காவிடம் கேட்டு ஒரு காபி மட்டும் குடித்தான். "அக்கா சீக்கிரம் போக வேண்டியிருக்கிறது. டிரைவர் வந்தால் ஹாஸ்பிட்டல் வரச் சொல்லி விடுங்கள்."

"தம்பி, டிபன்..."

"வேண்டாம்." காரை கிளப்பிய வேகத்திலேயே அவன் மனநிலை புரிந்தது. 'நேற்று நடந்த ஆபரேஷனில் தான் ஏதோ சிக்கல் போல் இருக்கிறது. அதுதான் தம்பி டென்ஷனாக இருக்கிறான். கடவுளே! அந்த பேஷண்ட் நல்லபடியாக பிழைக்க வேண்டும் என்று கடவுளை

வேண்டிக் கொண்டாள். காலையில் ஆறரை மணிக்கு எழுந்த சுமி, முடியைச் சுருட்டிக் கொண்டையாக்கிக் கொண்டு வர்ஷாவைப் பார்த்தாள். இன்னும் தூக்கம் தான்!

'இவள் கொஞ்சநேரம் அப்பாவிடம் படுக்கட்டும், அதற்குள் குளித்து விடுகிறேன்...! வர்ஷாவோடு வெளியே வந்தவள் ராமைக் காணாது திகைத்தாள். 'ஒரு வேளை வாக்கிங் போயிருப்பாரோ!' என்று வர்ஷாவை தொட்டிலில் படுக்க வைத்து விட்டு குளித்து முடித்தாள்.

வர்ஷா ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கவும் கீழே போய் பார்த்து விட்டு வரலாம் என்று சமையலறைக்கு வந்ததும், "சுமி, வா. இந்தா காபியைக் குடி. ஏதோ போன் வந்தது போல, ஐந்தரை மணிக்கே கிளம்பிப் போய் விட்டான். முகமே சரியில்லை. ஏதோ பிரச்சனை போல, நீ போன் செய்து பார்."

'ஒரு வேளை நேற்று செய்த ஆபரேஷன்...' நினைக்கவே பயமாக இருந்ததால் செல்போனை எடுத்துக் கொண்டு பால்கனிக்கு வந்தாள். ஊஞ்சலில் அமர்ந்து கவலையுடன் அவனுக்கு போன் செய்தாள். போன்ரிங் போய்க் கொண்டே இருந்தது எடுக்கவேயில்லை. ஐந்தாறு முறை போன் செய்து பார்த்தாள். சிறிது நேரம் கழித்து சுவிட்ச் ஆப் ஆகி விட்டது.

ஹாஸ்பிட்டல் நம்பருக்கு போன் செய்தாள். "சீஃப் டாக்டர் இருக்கிறாரா?"

"மேடம், நீங்கள்...?"

"நான் அவர் மிஸஸ். சுமித்ரா பேசுகிறேன்."

"ஸாரி மேடம். குட் மார்னிங் காலையில் விடிவதற்குள் டாக்டர் வந்து விட்டார். நேராக அவர்



ரூமுக்கு போய் விட்டார். இன்னும் வெளியே வரவில்லை. அவருக்கு உடம்பு சரியில்லை...?"

"இல்லை... நேற்று ஆபரேஷன் செய்த பேஷண்ட் எப்படி இருக்கிறார்?"

"ஏதாவது எமர்ஜன்ஸி கேஸ்...?"

"இல்லை மேடம்."

"சரி தேங்க்ஸ். பிறகு பேசுகிறேன்."

ஒரு காரணமும் இல்லாமல் ஏன் சீக்கிரம் கிளம்பினார் என்ற கேள்வி மனதைக் குடைய, செல்போனை எடுத்து மறுபடியும் அவன் நம்பருக்கு எண்ணிற்கு தொடர்பு கொண்டாள். கை வலித்து, சோர்ந்து போகும் போது, ராம் போனை எடுத்தான்.

"டாக்டர்?"

"ம்... நான் வெறும் டாக்டர் தான்! என்ன விஷயம்?"

"இல்லை, நான் எழுந்திருக்கும் போது நீங்கள் ஹாஸ்பிட்டல் கிளம்பிவிட்டீ[illegible] அது தான் ஏன்?"

"இருந்து மட்டும் என்ன[illegible]கப் போகிறேன்?"

"ஏன் இப்படிப் பேசுகிறீ[illegible] அவளுக்கு எதுவும் புரியவில்லை.

"பின் எப்படிப் பேசுவது? என்னை [illegible]னக்கு ஞாபகம் இருக்கிறதா...? ஆச்சரியம் தான்!

"டாக்டர்."

"நான் உனக்கு வெறும் டாக்டர் தான். [illegible]து இந்த மடையனுக்குப் புரிய பத்து நாட்கள் ஆனது. கா[illegible]லயில் எழுந்ததும் தான் எனக்கு ஞானம் வந்தது. என் அ[illegible]கில் படுத்துத் தூங்குவதற்கு கூட உனக்கு அத்த[illegible]ன வெறுப்பு. நான் தான் 'என் சுமி' என்று உன் மே[illegible] காதலை மழையாகக் கொட்டுகிறேன். நீ அதை சட்டையே

பண்ணலை. என்னை நீ ஏற்றுக் கொள்ளவே இல்லை என்று லேட்டாக புரிந்து கொண்டேன். உனக்கு வர்ஷா மட்டும் போதும். எனக்குத் தான் யாருமில்லை... அனாதை என்னை யாருக்குப் பிடிக்கும்? நொந்து போய் விட்டேன் சுமி. இனி என்னை தொந்திரவு பண்ணாதே. நானும் உன் வழிக்கே இனி வரவில்லை பாசம் வைத்து பட்டதெல்லாம் போதும் தயவு செய்து என் தனிமையைக் கெடுக்காதே போனை வைத்து விடு."

அவளை பேசவே விடாமல் சுவிட்ச் ஆ்ப் பண்ணி போனை கட்டில் மேல் வீசியைறிந்தான். கோபம் அடங்காதவனாய் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். தண்ணீரைக் குடித்து விட்டு கட்டிலில் அமர்ந்தான். கட்டிலை ஓங்கிக் குத்தினான். பின்னால் சாய்ந்து கட்டிலில் படுத்தவன் கண்களை மூடிக் கொண்டான்.

சுமியின் மனநிலையோ கேட்கவே வேண்டாம் காதிலிருந்து போனை எடுக்கக் கூடத் தோன்றாமல், அப்படியே உட்கார்ந்திருந்தாள். அவன் கோபம் முழுவதும் தன் மீது தான் என்பதை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை. கண்களில் நீர்வழிய சிலையாக அமர்ந்திருந்தாள்.

எத்தனை நொந்து போயிருக்கிறார். அனாதை என்றாரே...! அதைக் கேட்டும் நான் உயிரோடு தானே இருக்கிறேன். எத்தனை விரக்தியோடு இருந்தால் இப்படிப் பேசி இருப்பார்! நெஞ்சே வெடித்து விடும் போல் இருந்தது. குழந்தை அழுதது கூட காதில் விழாமல் இருந்தாள். வெகு நேரம் யாரும் தூக்காததால் வர்ஷா வீறிட்டு அழுதாள். அதுபோல அவள் அழுததே இல்லை.



குழந்தையின் அழுகை கீழே கங்காவுக்கு கேட்டு வேகமாக மேலே ஓடி வந்தாள்.

குழந்தையை வாரி எடுத்து அணைத்தவள், "அழாதேடா, செல்லமில்லை! அம்மா பாத்ரும் தான் போயிருக்கிறாள், வந்துவிடுவாள்" என்று திரும்பியதும், தான் பால்கனியில் சுமியைப் பார்த்தாள்.

"சுமி... இங்கே என்ன செய்கிறாய்? இங்கே பார்... வர்ஷி பசிக்கு அழுகிறாள். தூக்கிக் கொள்" மெல்ல தலையை திருப்பி உணர்ச்சியில்லாத பார்வையொன்றை பார்த்தாள்.

"சுமி. என்னம்மா செல்கிறது? நான் அவளுக்குச் செரிலாக் கலந்து கொடுக்கவா...? தலை வலிக்கிறதா? பதிலே பேசாததால், முதலில் குழந்தையைக் கவனிப்போம் என்று அவளைக் கீழே தூக்கிச் சென்றாள்.

செரிலாக் ஊட்டி முடித்து, குளிக்க வைத்து, டிரஸ் மாற்றி ஜமுனாவிடம் கொடுத்து, "தோட்டத்துக்குத் தூக்கிப் போய், கொஞ்சம் விளையாட்டுக் காட்டு" என்று சொல்லிவிட்டு, மறுபடி சுமியிடம் சென்றாள். அதே இடத்தில் அசையால் உட்கார்ந்திருந்தவளை பிடித்து உலுக்கினாள்.

"சுமி, டிபன் மேலே கொண்டு வரட்டுமா...? இங்கே பார் உடம்புக்கு என்ன செய்கிறது...? தம்பியிடம் பேசி வரச் சொல், இல்லை நான் வரச் சொல்லட்டுமா...?"

மறுப்பாகத் தலையசைத்தவள், "அவர்... அவர்... என்னைப் பேசாதே என்று சொல்லி விட்டார். அக்கா அவர் என்னை அடியோடு வெறுத்து ஒதுக்கி விட்டார். இனி என்னைத் திரும்பிக் கூட பார்க்க மாட்டார் நான் உயிரோடு இருப்பதே வேஸ்ட்.

நான் பாவி. அவரிடம் இதுவரை ஒரு நாள் கூட அன்பாகப் பேசவில்லை. ஆனால், என்னிடம் எத்தனை பிரியம் காட்டினார். அத்தனையும் தூக்கி போட்டு மிதித்துவிட்டேன். நான் ரொம்ப தப்பு பண்ணி விட்டேன் அக்கா" கங்காவின் கைகளைப் பற்றிக்கொண்டு கதறினாள் சுமி.

"எல்லாம் சரியாகிவிடும். நீ உள்ளே வா." அவளை கூட்டிச்சென்று மெதுவாக கட்டிலில் படுக்க வைத்த பின், வற்புறுத்தி சூடாக ஒரு டம்ளர் பாலை குடிக்கச் செய்தாள்.

"அக்கா... வர்ஷா?"

"நான் பார்த்துக் கொள்கிறேன் நீ தூங்கு."

"தேங்க்ஸக்கா..." அவள் நெற்றியை மெல்ல வருடவும் அப்படியே குழந்தையாகத் தூங்கி விட்டாள்.

சின்னப் பிள்ளைகள் போல, ஒன்றுமில்லாத சாதாரணமான ஏதோ விஷயத்தை பெரிதுபடுத்தி, மன வருத்தப்படுகிறார்களே என்று வேதனையொடு கீழே வந்தாள். ஜமுனாவிடமிருந்து வர்ஷாவை வாங்கி, பசும்பாலை ஆற்றிக்குடிக்க வைத்து தூங்கப் பண்ணினாள்.

ஹாஸ்பிட்டலில் ராம் மணி பார்த்தான் மணி ஒன்பது. பின் ரிசப்சனுக்கு போன் செய்து, ஓ.பி. பற்றி விசாரித்து விட்டு, உதவி டாக்டரை அழைத்தான்.

"ஹலோ, ரவி!. இன்று ஓ.பி. குறைவு தான், அதனால் நீயே பார்த்து விடு. ஐ.சி.யூ.க்கு ஒரு விசிட் போய்ப் பார். நான் இன்று சாயங்காலம் தான் வருவேன். எமர்ஜென்ஸி என்றால் மட்டும் கால் பண்ணு." மறுபடி செல்போனை ஆ்ப் செய்து, கட்டிலில் தூக்கிப் போட்டான். மறுபடி கட்டிலில் படுத்து கண்மூடி, இரு கைகளையும் நீட்டிப் படுத்தபோது டேப்ரிகார்டரில் கைபட்டு ஆன் ஆகியது.



ஷர்மாவின் குரலில், "உங்கள் பெயர்? என்று ஒலிக்க ஆரம்பித்தது. ஒவ்வொரு கேள்விக்கும் சுமியின் பதிலைக் கூர்மையாக கவனிக்க ஆரம்பித்தான். கண் மூடியபடியே.

"உங்கள் கணவரை நேசிக்கிறீர்களா?"

"வெரி மச் டாக்டர்." என்ற பதிலில் கண் விழித்தான். அதன் பிறகு அவனைப் பற்றி அவள் பேசியதைக் கேட்டு, "அவர் எனக்குக் கிடைத்த வரம் டாக்டர். அவர் சந்தோஷம் தான் என் வாழ்க்கை. அவரைப் பிரிந்து ஒரு வாழ்க்கையை என்னால் நினைத்தும் பார்க்கவே முடியவில்லை."

திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தான். கை நடுங்க ரீவைண்ட் செய்து, மறுபடி போட்டுக் கேட்டான். அவள் பேசப் பேசக் கண்கலங்கி நீர் வழிந்தோடியது.

"ச்சே, நான் மனிதனா? எத்தனை கடுமையாக பேசிவிட்டேன். நெருப்பையல்லவா அள்ளிக் கொட்டி விட்டேன் பாவம். என் மேல் இத்தனை நம்பிக்கையும், பிரியமும் வைத்திருப்பவளால் என் பேச்சை எப்படித் தாங்கமுடியும்? எத்தனை துடித்தாளோ! ஈவு இரக்கமே இல்லாமல் தானே பேசினேன். பச்சைத் தண்ணீர் கூட குடித்திருக்க மாட்டாள்.

என்ன பேச்செல்லாம் பேசி விட்டேன். எனக்கு மன்னிப்பே கிடையாது. என்னருகில் படுக்கவில்லை என்பதற்காக எப்படியெல்லாம் பேசிவிட்டேன்! இனி என் முகத்திலேயே விழிக்க மாட்டாளே கடவுளே! என்னிடம் அவள் பேசினால் போதும்.

நான் ஒரு டாக்டர்! அவள் மனதை முழுவதும் புரிந்தவன், அவள் நிலைமையைக் கொஞ்சம் கூட நினைத்துப் பார்க்க வில்லையே. இப்போது அவள் சின்னக் குழந்தை போலத் தான் இருக்கிறாள்? மனம் பரிதவித்தது.

# 9

நான் மட்டும் நல்லவனா என்ன? இரண்டு வருஷமாக என் சுமியை உருகி உருகிக் காதலித்து விட்டு, காத்திருந்து அவளை மணந்த பின், மூன்று மாதங்களாக அவளிடம் எத்தனை பாரமுகமாக நடந்து கொண்டேன்? என் அன்பிற்காக அவள் அதையெல்லாம் தாங்கிக் கொண்டு, எத்தனை பொறுமையாகக் காத்திருந்தாள். ச்சே, நான் மனுஷனே இல்லை. கொஞ்சம் கூட நிதானமில்லாமல் இன்றைக்கு எத்தனை கடுமையாகப் பேசி, அவள் மனதையே புண்ணாக்கி விட்டேன்?" அவன் மனம் தன் தந்தையை இழந்த பின், கடந்து போன நிகழ்ச்சிகளை அசை போட்டது.

திருமணம் நடக்க இன்னும் ஒரு வாரம் தான் இருக்கிறது என்ற நிலைமையில், தன் தந்தையின் இழப்பால் ராம் நிலைகுலைந்து போனான். அவனைத் தேற்ற யாராலும் முடியவில்லை. கல்லாக இறுகிப் போன அவனை அணுகக் கூட எல்லோரும் பயந்தனர்.

தயானந்த் தான் தினமும் அவன் வீட்டுக்குச் சென்று, அவனை மெதுவாகத் தேற்றினார். "ராம்! என் நண்பனுக்கு விதி முடிந்து விட்டது. விதியை வெல்ல யாரால் முடியும்? உன் வேதனையை காலம் தான் ஆற்ற வேண்டும். உன் திருமணம் பற்றி அவன் ஆயிரம் கனவுகள் கண்டிருக்கிறான். அவனே சென்று நாள் பார்த்து, ஏற்பாடுகள் எல்லாவற்றையுமே ஆசையாகச் செய்து முடித்தான். ஜகதீஷால் தான் இந்தக் கல்யாணத்தை



முன் நின்று நடத்த முடியலை. ஆனா அவன் ஆசைப்பட்டு ஃபிக்ஸ் பண்ணிய அதே நாளில், இந்தக் கல்யாணம் நடக்கணும்-னு ஆசைப்படறேன். அப்போ தான் அவனோட ஆத்மாவுக்கு நிச்சயமா சாந்தி கிடைக்கும்.

நாம யாரையுமே கூப்பிட வேண்டாம். இங்கே இல்லத்திலேயே சிம்பிளா மேரேஜை முடிச்சிட்டு, ரெஜிஸ்டர் பண்ணிடலாம். எந்த விதமான ஆடம்பரமும் வேண்டாம். அரேஞ்ச் பண்ணிய ரிசப்ஷனை கேன்சல் பண்ணிட்டு, எல்லா பேப்பரிலும் அதுபத்தி ஒரு அறிவிப்பு வெளியிட்டு விடலாம். நீ என்ன நினைக்கற? இது தான் சரின்னு என் மனசுக்குப் படுது ராம். அப்பறம் எல்லாமே உன்னோட விருப்பம் தான். என்ன செய்யலாம், சொல்லு?

"அங்கிள்! அப்பா இறந்து இன்னும் மூணு நாள் கூட முடியல. இப்ப என்னோட மேரேஜைப் பத்தி பேசவே மனம் கூசுது. ஆனா, இது அப்பாவோட நிறைவேறாத ஆசையா மாறக் கூடாது. அதனால நீங்க சொன்ன மாதிரியே செஞ்சிடலாம். நம்ம இல்லத்திலே இருக்கிறவங்களைத் தவிர வேற யாரும் வேண்டாம். நான், அக்கா, கணேஷ், ராமு தாத்தா எல்லோரும் அன்னிக்குக் காலையில அங்க வந்திடறோம். அப்புறமா அப்பா-அம்மா படத்துக்கு முன்னால..." பேசவே முடியாமல் தந்தையின் நினைவில் கண் கலங்கிக் கதறினான்.

இரண்டு நாட்களுக்கு முன்னால், திருமணம் பற்றி தன்னோடு சிரிக்கச் சிரிக்கப் பேசியவர், இன்று இல்லை என்பதை, இன்னுமே அவனால் நம்பக் கூட முடியவில்லை. மனம் பாறையாய்க் கனத்தது. தயானந்த் அவனை ஆறுதலாக அணைத்துக் கொண்டார்.

"ராம்! வருத்தப்படாதேப்பா. உனக்கு அப்பாவா இனி நான் இருக்கேன். கொஞ்சம் கொஞ்சமாக உன் துயரத்தை விட்டு நீ வெளியே வர வேண்டும். அங்கு இல்லத்துக்கு வந்து, குழந்தைகளோடு கொஞ்சம் பேசினால் மனம் லேசாகும். சுமியும் ரொம்ப நலிந்து போய் விட்டாள். உன்னைப் பற்றி நினைத்துக் கொண்டு, அவளும் சரியாகச் சாப்பிடுவதில்லை."

குறித்த முகூர்த்தத்தில், எந்த விதமான ஆடம்பரமோ, சடங்கு சம்பிரதாயமோ இல்லாமல், தன் தாய்-தந்தையின் உருவப் படத்தின் முன் நின்று, தன்னருகே ஒரு எளிமையான வாயில் புடவையில், சோகச் சித்திரமாக நின்ற சுமித்ராவின் கழுத்தில் திருமாங்கல்யத்தை அணிவித்தான். திருமணத்தை அங்கேயே முறையாக பதிவும் செய்தனர். அந்த நிமிடத்திலிருந்து ராமின் வாழ்வில் சுமி மங்களகரமாக அடியெடுத்து வைத்தாள்.

திருமணத்திற்கு சர்ப்ரைஸ் கிப்ட்-ஆக ஏற்கெனவே குழந்தைகள் அனைவருக்கும் புது உடைகள், விருந்து என்று ரகசியமாக ஏற்பாடு செய்திருந்தார் ஜகதீஷ். அதையெல்லாம் பார்த்து, ராமின் கண்கள் மடை திறந்த வெள்ளம் போல் கண்ணீரைப் பொழிந்தது. அவனைத் தேற்ற வழியி?ல்லாமல் அனைவருமே பேச்சற்றுப் போனார்கள்.

அன்று இரவே ராம் தன் வீட்டுக்குக் கிளம்பினான். சுமி அவனின் கரங்களைப் பற்றி, "ஏன் ராம்! நீங்க இங்கேயெ தங்கிவிடலாமே. என்னை இன்னும் பத்து நாட்கள் கழித்துத் தான், அங்கு போக வேண்டும் என்று சொல்றாங்க. நீங்க மட்டும் தனியா இருந்தீங்கன்னா,



உங்க வேதனை தான் அதிகமாகும். நான் அங்க வரும்வரை, நீங்களும் இங்கேயே இருங்க!" என்றாள்.

"இல்லை சுமி! எல்லோருமே, அப்பாவின் ஆன்மா பதினாறு நாட்களுக்கு நம் வீட்டில் தான் இருக்கும் என்றார்கள். என் அப்பா அங்கே இருக்கும் போது அவரை நான் தனியே விடலாமா? நான் அங்கேயே போய்ப் படுத்துக்கறேன். தினமும் கொஞ்ச நேரம், உன்னை வந்து பார்த்து விட்டுப் போகிறேன்" என்று கிளம்பி வி?ட்டான்.

காலம் காயத்தை ஆற்றும் மருந்தானது. சுமியின் கனிவான பேச்சும், குழந்தைகளின் செயல்களும், மெல்ல மெல்ல அவனை இயல்பு நிலைக்குத் திரும்ப உதவி செய்ததில், மெல்லத் தேறினான் ராம்.

சுமியை அழைத்துப் போகும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தான். தயானந்த், வரும் வெள்ளிக்கிழமை நன்றாக இருப்பதாகச் சொன்னார். அன்றே சுமியைக் கொண்டு வந்து விட்டு விடுகிறேன் என்றார். அதற்கு இரண்டு நாட்கள் முன்பாக ஜகதீஷின் க்ளோஸ் ∴ப்ரண்ட், டாக்டர். முத்துக்குமார் அவனைப் பார்க்க வீட்டுக்கு வந்தார்.

"ராம்! நான் வெளிநாட்டுக்குப் போயிட்டு நேற்று நைட் தான் வந்தேன். விஷயம் கேள்விப்பட்டு ரொம்ப ஷாக்காயிட்டேன். போன மாதமே அவனுக்கு ஒரு நாள் பூராவும் புத்தி சொன்னேன். ஒன்றையும் கேட்க மாட்டேன் என்றான். அவன் உடம்பை அவனே கெடுத்துக் கொண்டான். ரொம்ப கேர் லெஸாக இருந்துட்டான்!" என்றார்.

"அங்கிள், நீங்க சொல்றது எனக்குப் புரியலை. அவருக்கு உடம்புக்கு என்ன?

ராம்! போன மாசம் ஒரு நாள், உன் அப்பா லேசா நெஞ்சு வலிக்குதுன்னு என் ஹாஸ்பிடலுக்கு வந்தான். கொஞ்சம் பயந்து கூட போயிருந்தான். சோர்வும் கூட!

அவனைப் பார்த்ததுமே அவன் கண்டிஷனே சரியில்லைன்னு தோணுச்சு. ஒரு மாஸ்டர் ஹெல்த் செக்கப் செய்ய அவனைக் கட்டாயப்படுத்தி, என் ஹாஸ்பிடல்லயே அதையும் செய்துட்டேன். எனக்கு கொஞ்சம் சந்தேகம்! அதைப் போலவே, ரீசல்ட்ல ரத்தக்குழாயில் மூன்று இடத்தில் பிளாக் இருந்தது. அதுவும் ஒன்று அறுபது சதவீதம்! உடனே, அங்கேயே அவனுக்கு அட்மிஷன் போட்டுட்டு, உனக்கு போன் செய்யப் போனேன். ஆனா, அவன் பிடிவாதமா அதைத் தடுத்துட்டான்.

"முத்து. இந்த ஹாஸ்பிடல் கட்டுவது என் கனவு. என் காலத்துக்குள்ள இதைக் கட்டி முடிக்கணும். என் மகனை அங்க உட்கார வைச்சு, அவன் முன்னேற்றத்தைப் பார்த்துப் பெருமைப்படணும். அதுவரைக்கும் நான் வேற எதைப் பற்றியும் நினைக்க முடியாது. எனக்கு நாலைந்து மாதங்கள் சமாளித்துக் கொள்ளும்படியான மருந்தைக் கொடுத்திடு. ஆபரேஷனை கொஞ்சம் தள்ளிப் போடலாம்.

ராமோட மேரேஜ் கூட செட் ஆகும் போல இருக்கு. அவன் ஒரு பொண்ணை விரும்பறான். அவளுக்கு இந்த மாதத்தோடு படிப்பு முடியுது. உடனே கல்யாணத்திற்கு தேதி குறிச்சிடுவேன். இப்ப ஆபரேஷன் செஞ்சா, இது உடனே தடைபடும்.

ராம், அவன் அம்மா இறந்ததிலிருந்தே, எப்பவும் ஒரு சோகமாகவே தான் இருப்பான். சுமியோட நட்பு கிடைச்ச பின் தான், அவன் முகத்துல கொஞ்சம்



சந்தோஷத்தைப் பார்க்கறேன். இப்ப, என்னைப் பத்தி தெரிஞ்சா அவன் துடிச்சுப் போயிடுவான். முதல்ல ஆபரேஷனைப் பண்ணிடலாம்னு அடம் பிடிப்பான். அவனுக்கு வேற எந்த சிந்தனையுமே இருக்காது. என்னால அவனோட சந்தோஷம் கெடக்கூடாது முத்து. சத்தியமா இதைப் பற்றி, அவன் கிட்ட நீ சொல்லாதேன்னு வேண்டினான்!" என்றார்.

"நான் அவன் கிட்ட சண்டை கூடப் போட்டேன். ஆனா ஜகதீஷ்! உன் ஹெல்த் அதை விட முக்கியம். ராமின் கல்யாணத்தை விட இது அவசியம். அவசரம். நீயும் ஒரு டாக்டர். நான் சொல்றது உனக்கே புரியும். நீ இப்ப கண்டிப்பா பெட்-ரெஸ்ட்ல இருக்கணும். நடக்கவே கூடாது."

"முத்து! முதல்ல அவன் மேரேஜ் முடியட்டும். நான் மறுநாளே உன்கிட்ட வந்து அட்மிட் ஆகறேன். என் மருமக சுமியும் என்னை நல்லா பார்த்துக்குவா. ப்ளீஸ் என்னைப் புரிஞ்சுக்கோ-டா. ஒரு மாதத்துக்கு மெடிசின்ஸ் மட்டும் கொடு. நான் சமாளிச்சிடுவேன்."

"சரிதான். ஆனா இந்த ஒரு மாதம் முழுக்க வீட்டிலேயே இரு. பில்டிங் ஒர்க் எல்லாத்தையும் தள்ளிப் போடு. மேரேஜைக் கூட, எத்தனை சீக்கிரம் வைக்கணுமோ, அத்தனை சீக்கிரமா வை" என்று கண்டித்தேன்.

ஆனா, நான் சொன்ன எதையுமே அவன் கேட்கல. நான் ஃபாரின் போறதுக்கு முதல்நாள் கூட, அரைமணி நேரம் அவன் கூடப் பேசினேன். அதிக அலைச்சல், வேலைப் பளு, ரெஸ்டே இல்லாமப் போனது இவையெல்லாம் சேர்ந்து தான், அவனுக்கு இத்தனை சீக்கிரமா ஹார்ட் அட்டாக் வந்ததற்கே காரணம். அவன்

இன்னும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்திருக்கலாம்' என்று ஆதங்கப்பட்டு விட்டுக் கிளம்பினார்.

அவர் பேசிய பேச்சைக் கேட்கக் கேட்க, அவனது மனதிற்குள் எரிமலையே வெடித்துச் சிதறியது. எழுந்து கிளம்பியவரை, கைகுவித்து இயந்திரத்தனமாக வழியனுப்பி வைத்தான். அவா? பேசிய ஒவ்வொரு பேச்சும், அவன் நெஞ்சில் இடியாக இறங்கியது. எதுவுமே பேசாமல், தன் தந்தையின் அறைக்குச் சென்று தாளிட்டுக் கொண்டான். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த கங்காவோ, அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளே விரைந்தாள்.

அவரின் படுக்கையில் அமர்ந்த ராம், வேதனையைக் கட்டுப்படுத்த முடியாமல், வாய் விட்டு அழுதான்.

"அப்பா! எனக்காகவா உங்க உயிரையே நீங்க தியாகம் செய்தீங்க? உங்க உடல் நலனில் நான் அக்கறையே காட்டவில்லையே? அந்த அளவுக்கு நீங்க என் மீது பிரியம் செலுத்த, எனக்கு என்னப்பா தகுதியிருக்கு?

நெஞ்சு வலிக்கும் போது, தனியாவே எத்தனை வேதனையை அனுபவித்திருப்பீங்க! சாரிப்பா! நான் சுமியோடு ஜாலியா ஊர் சுற்றிக்கிட்டு, உங்களைக் கவனிக்கவே இல்லை. என்கிட்ட ஏன் இத்தனையையும் மறைச்சீங்க? இவனால ஒரு பிரயோஜனமும் இல்லைன்னு முடிவு பண்ணீட்டீங்களா?

வாழ்நாள் முழுக்க இந்த வேதனையை என்னால் போக்கவே முடியாது. இந்தக் குற்ற உணா?ச்சியும் மாறாது. ஏன்ப்பா உங்களுக்கு என் கிட்ட நம்பிக்கையில்லாம போச்சு? இதை முதல்லயே என் கிட்ட சொல்லியிருந்தா,



இன்னிக்கு நீங்க என்கூட இருந்திருப்பீங்களே? உங்க உயிரை விட உங்களுக்கு என் கல்யாணம் முக்கியமாப் போச்சா? ஆனா, இப்ப இழப்பு எனக்குத் தானே?' மெல்ல மெல்ல அழுகை குறைந்து, தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தான்.

'அப்பா, இனிமே நான் எதாவது உங்களுக்குச் செய்ய நினைச்சா, அது நல்லபடியா ஹாஸ்பிடலை கட்டி முடிச்சு, திறந்து நடத்துவது தான். நாளையிலிருந்து அது தான் என் வேலை! நீங்க ஆசைப்பட்ட மாதிரி, அதைத் திறந்து, நல்லபடியா நடத்தி, உங்க பெயரை நிலைநாட்டுவேன். அப்பதான் என் குற்ற உணர்வு கொஞ்சமாவது குறையும்!' மனதுக்குள்ளேயே சபதம் செய்தான்.

மறுநாள் கங்கா, "தம்பி! நாளைக்குச் சுமி வரப் போறா. அவ கூட யார் எல்லாம் வர்றாங்கன்னு கேட்டுச் சொல்லு. மதியம் நானே சமையல் செய்திடறேன்.

"மாமாகிட்ட பேசிட்டேன். அவர் மட்டும் தான் வர்றார். காலைல நான் போய்க் கூட்டிட்டு வர்றேன். பத்து மணிக்குக் கிளம்பறேன்" என்றவனின் பேச்சில் வெறுமை. கங்காவுக்குக் காரணம் புரிந்ததால் எதுவும் பேசவில்லை.

மறுநாள் சுமி, ராமுடன் சேர்ந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். கங்கா ஆலம் சுற்றி இருவரையும் வரவேற்றாள். சுமி பூஜையறையில் விளக்கேற்றியதும், அங்கே தெய்வமாக வீற்றிருந்த தன் மாமனாரைப் பார்த்ததும், கண்ணீர் மல்க அவரை விழுந்து வணங்கினாள்.

ராம், தயானந்துடன் ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தான். கங்கா, சுமியை வந்து அழைத்துப்

போனாள். காலையிலிருந்தே சுமி, ராமிடம் ஏதோ ஒரு மாற்றத்தை உணர்ந்தாள். அவனது பேச்சிலும் ஒரு விலகல் தன்மை தெரிய, புரியாது விழித்தாள். மாலையில் தயானந்த் இல்லத்திற்குக் கிளம்பினார்.

"ராம்! சுமி சின்னப் பெண். இப்ப தான் படிப்பையே முடிச்சிருக்கா. வெளி உலகம் தெரியாது வளர்ந்தவ. நீ தான் இனி அவளுக்கு எல்லாமே! அடிக்கடி அங்க வாங்க. எனக்கும் கொஞ்சம் ஆறுதலா இருக்கும்" என்றார்.

"அங்கிள்! நீங்க இதைச் சொல்லவே வேண்டாம். அவளை நான் பத்திரமா பார்த்துக்கிறேன். அடிக்கடி நீங்களும் இங்க வாங்க.

நான் டியூட்டிக்குப் போய் இருபது நாளாகுது. பில்டிங் ஒ??க்கும், அப்படியே ஸ்டாப் ஆயிடுச்சு. அதனால இனி நான் கொஞ்சம் அதில பிசியாயிடுவேன். முடிஞ்ச போதெல்லாம் கண்டிப்பா சுமியோட நான் வரேன். குழந்தைகளுக்கு செக்கப் செய்ய, நானே மாதம் ஒரு முறை அங்க வந்து, ஒரே நாளில் எல்லா குழந்தைகளுக்கும் அன்னிக்கே செஞ்சிடுவேன். சுமியையும் என்னோட கூட்டிட்டு வந்திடறேன். இப்ப வாங்க, நானே உங்களை இல்லத்திலே கொண்டு போய் விடறேன்."

அன்று இரவு சுமியை ராமின் அறைக்கு அழைத்துச் சென்ற கங்கா, "சுமி! ராம் தம்பி ரொம்ப மனக் குழப்பத்தில் இருக்கான். ஐயா மேல உயிரையே வச்சிருந்தது, உனக்கே தெரியும். அதனால அவனுக்கு ஐயாவோட இழப்பை இன்னும் ஜீரணிக்க முடியலை.

உன்கிட்ட கோபப்பட்டா கூட, நீ கொஞ்சம் அனுசரித்து நடந்துக்கோ. கொஞ்ச நாளில் எல்லாம் சரியாப் போயிடும். அவன் எது செஞ்சாலும், அது



அவனோட மனக் கலக்கத்தினால தான். அவனை மாத்தறது, உன் கையில தான் இருக்கு. நீ ரொம்பப் பொறுமையானவ. பார்த்து நடந்துக்கடா!" என்றாள்.

சுமி அவனது அறைக்குள் நுழைந்தாள். முதலில் பெரிய ஹால்; அதன் பின்னே இருந்த பெட்ருமில், ராம் படுக்கையில் கண்மூடி அமர்ந்திருந்தான். அவளது கொலுசின் ஒலி கேட்டு, கண் விழித்தான். கதவருகே ஓவியம் போல நின்ற சுமியைப் பார்த்து, ஒரு கணம் மயங்கினான்.

பின் சுதாரித்துக் கொண்டு, அவள் அருகே சென்று, அவள் கையைப் பற்றி அழைத்து வந்து தன்னோடு அமர வைத்தான்.

"சுமி! வீட்டைச் சுற்றிப் பார்த்தியா?"

"ம்ம்..."

"அப்பா இல்லாத வீடு, எத்தனை வெறுமையா இருக்கு பார். உயிர்ப்பே இல்லாம இருக்கு தானே சுமி?"

"ராம்...!"

"நிஜம் சுமி! உன்னை முதன் முதலா இங்கே கூட்டிக் கொண்டு வந்தபோது, அப்பா நம்மை எத்தனை கேலி செய்தார்? வீடு எத்தனை கலகலப்பா இருந்தது? எத்தனைச் சந்தோஷமா பேசினார். இனிமே யாரை நான் அப்பான்னு கூப்பிடுவேன்? அவரோட இழப்பைத் தாங்கவே முடியல சுமி! உனக்குத் தெரியுமா? அப்பாவோட ஹெல்த் கண்டிஷன், ஒரு மாசமா ரொம்ப மோசமா இருந்திருக்கு. ஆனா, என்கிட்ட சொல்லாம அவர் மறைச்சிட்டார் சுமி..." என்று ஆரம்பித்து, மனதுக்குள் ரணமாகக் கிடந்த துயரம், ஆதங்கம் எல்லாவற்றையும் சுமியிடம் பிரவாகமாகக் கொட்டினான். சுய நினைவின்றி உணர்ச்சி வேகத்தில்,

அவன் பேசிய பேச்சைக் கேட்டு, சுமி கலங்கிப் போனாள். எழுந்து அவனை மார்போடு அணைத்துக் கொண்டாள்.

"ராம்! அழாதீங்க. நீங்க கண் கலங்கினா, என்னால தாங்க முடியலை. ப்ளீஸ் கண்ட்ரோல் யுவர் செல்ப். உங்களுக்கு எப்பவுமே உங்க கூட நான் இருக்கேன். உங்களுக்கு அம்மாவா, அப்பாவா, ஃப்ரண்ட்-ஆவும் நான் இருக்கேன் ராம்" என்று அவனை ஆறுதல் படுத்தினாள்.

ஃப்ளாஸ்கிலிருந்து சூடான பாலை கப்பில் ஊற்றிக் குடிக்க வைத்த பின், அவனருகே அமர்ந்து நெற்றியை வருடினாள். அவளின் கனிவான ஸ்பரிசத்தால், அவளின் கையைப் பற்றிக் கொண்டு குழந்தையாக உறங்கிப் போனான் ராம். அவனின் துயரம் கண்டு வருந்தியவள், "இவனை என் கம்பீரமான, துறுதுறுப்பான ராமாக மீண்டும் மாற்றிக் காட்டுவேன்" என்ற உறுதியோடு மறுபுறம் படுத்து கண் மூடினாள்.

மறுநாள் காலையில் சுமி எழுந்த போது, அவள் அருகே படுக்கை காலியாக இருந்தது. அவசரமாக எழுந்து குளித்துவிட்டுக் கீழே சென்றாள். ஹாலிலும் ராமைக் காணவில்லை. கங்கா சுமியைப் பார்த்து, "வா சுமி! குளிச்சாச்சா... இந்தக் காபியைக் குடி."

"அக்கா! அவர் ரூமில் இல்லையே! எங்கே போயிருக்கார்? மணி ஏழு தானே ஆகுது. வாக்கிங் போயிருக்காரா?

"இல்லைடா! அவன் டியூட்டிக்குக் கிளம்பிப் போயிட்டான். இருபது நாள் கழிச்சு, இன்னிக்குத் தான் ஜாயின் பண்றான். அதனால சீக்கிரமா போயிட்டான். இல்லைன்னா, டிபன் சாப்பிட்டுட்டு எட்டு மணிக்குத் தான் கிளம்புவான். இன்னிக்கு ஒரு ஆபரேஷன் கூட இருக்காம்.



இனி அவன் வர ஏழு மணியாகும்."

சுமிக்கு அவன் சொல்லாமல் கிளம்பிச் சென்றது, கொஞ்சம் வருத்தமாக இருந்தது. ஆனால் சிறிது நேரத்திலேயே சமாதானமானாள்.

"அக்கா! அப்பாவுக்கு ஒரு போன் பண்ணிக்கட்டுமா? அப்பா என் போனை எதிர்பார்த்துகிட்டு இருப்பார்."

"சுமி! என்னடா பேசற? இது உன் வீடு. உனக்கு இங்கே எல்லா உரிமையும் இருக்கு. போய்ப் பேசு. அப்படியே பூஜையறையில் விளக்கை ஏற்றி, ஐயா, அம்மா படத்துக்குப் பூ போட்டு விட்டு வா. அதற்குள் டிபனை எடுத்து வைக்கிறேன்."

சுமி, தன் தந்தையிடம் உற்சாகமாகப் பேசினாள்.

"அப்பா! டிபன் சாப்பிட்டாச்சா? மாத்திரை போட்டுக்கிட்டீங்களா? நான் இல்லைன்னதும் மறந்திடுவீங்க. உடம்பைப் பாத்துக்கங்கப்பா. சசி எப்படி இருக்கா? என்னைத் தேடறாளா?

"சுமி! உன்னைப் பிரிஞ்சு ரொம்ப நாள் ஆன மாதிரி இருக்குடா. உன்ன நாங்க எல்லாருமே ரொம்ப மிஸ் பண்றோம். சசிக்குச் சொல்லத் தெரியல. உன்னைத் தேடி அழறா. லட்சுமி தான் சமாதானப்படுத்தினா. நீ இல்லாம நல்லாவே இல்ல!"

"அப்பா...!" சுமி நெகிழ்ந்து போனாள்.

அது புரிந்த தயானந்த், "சுமி, நீ சாப்பிட்டியா?" என்று பேச்சை மாற்றினார்.

"இல்லைப்பா! இப்பத் தான் குளிச்சிட்டுக் கீழே வந்தேன். டிபன் இனி தான்."

"ராம் காலையில இங்க வந்து, டியூட்டிக்குப் போய் ஜாயின் பண்றதா, என் கிட்ட சொல்லிட்டுத் தான் போனான்.

ரொம்ப ஏங்கிப் போயிருக்கான். அவனை நல்லா சாப்பிட வைம்மா. கொஞ்சம் இளைத்த மாதிரி தெரியுது. நீயும் நேரத்துக்கு சாப்பிட்டிடு... சரியா?"

"ம்ம்..." என்று போனை வைத்தவளுக்கு, இத்தனை நேரம் இருந்த உறுத்தல் மறைந்து, மனம் லேசானது. ராம் போய் தன் தந்தையை சந்தித்தான் என்பதில் அவளுக்கு முழுத் திருப்தி. ஆனால் அங்கு போனதும் போன் செய்வான் என்று மிகவும் எதிர்பார்த்தாள். ஆனால் போன் மட்டும் வரவில்லை.

டிபன் சாப்பிட்டு முடித்து, தோட்டத்துக்கு வந்தாள். போர்டிகோவில் டிரைவர் கணேஷ், "அம்மா! எங்கயாவது வெளியே போகணும்னா, சொல்லுங்கம்மா! ஐயா உடனே கூட்டிப் போகச் சொன்னார். நான் இங்க தான் இருப்பேன்" என்றான்.

'சரி' என்று தலையாட்டி விட்டு, தோட்டத்துக்குள் நுழைந்ததும், பிரமித்துப் போனாள். தோட்டம் அழகான, விதவிதமான மலர்களுடன், கண்ணைப் பறித்தது. ஒரு குப்பை கூட இல்லாமல் மிகவும் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு வந்தது தெரிந்தது. அங்கிருந்த ரோஜா மலரை ஆசையுடன் வருடினாள். பின்புறமிருந்து ஒரு பெரியவர் வந்து, "அம்மா! நான் தான் ராமுத் தாத்தா. ரொம்ப வருஷமா, நான் இங்க தோட்டக்காரனா இருக்கேன். உங்களுக்கு இதுல எந்த அமைப்பையாவது மாற்றணும்னா சொல்லுங்க; உடனே செஞ்சிடலாம்" என்றார்.

"வேண்டாம் தாத்தா! இதுவே ரொம்ப அழகா இருக்கு. சும்மா சுத்திப் பார்க்கத் தான் வந்தேன்.

"ராம் தம்பி ரொம்ப தங்கமானவரு தாயி. அவருக்குக் கோபம் வந்து நான் பார்த்ததேயில்லை. அவரை எனக்குக் குழந்தையில இருந்தே தெரியும். தினமும் அவர் அப்பாவோட சிரிச்சுப் பேசிகிட்டே, பந்து விளையாடுவார். அப்பா-மகன் மாதிரியே பேசிக்க மாட்டாங்க. தோஸ்து மாதிரி தான் இருப்பாங்க. ஐயா போனதும் தம்பி ரொம்ப மனசு ஒடஞ்சு போச்சு. நீதான் கண்ணு அவரை பழையபடி மாத்தணும். எங்க எல்லாருக்கும் நல்லது செய்யற குலசாமி அவரு!"



அதைக் கேட்டதும் கரைந்து போனவளாய், "சரி தாத்தா..." என்றவள், செடியைப் பற்றி மேலும் சிறிது நேரம் பேசிவிட்டுச் சென்றாள்.

உள்ளே சென்றதும், "அவர் கிட்டயிருந்து போன் வந்ததா அக்கா!" என்றாள்.

"இல்லம்மா! இன்னேரம் ஆபரேஷன் தியேட்டரில் இருப்பான். வந்ததும் கண்டிப்பா போன் பண்ணுவான்.

மதியம் சாப்பிட்டதும், "சுமி! நீ உன் ரூமுக்குப் போய்க் கொஞ்ச நேரம் படு. அவன் கிட்டயிருந்து போன் வந்தா, நான் வந்து உன்னை எழுப்பறேன்.

அவளுக்கும் ஓய்வு தேவைப்பட்டதால், படுத்ததும் உறங்கிப் போனவள், மாலையில் தான் கீழே இறங்கி வந்தாள்.

"சுமி! மூணு மணிக்கு ராம் கிட்டயிருந்து போன் வந்தது. உன்னிடம் பேசச் சொன்னேன். ஆனால் நீ தூங்குவதாகச் சொன்னதும், உன்னை எழுப்ப வேண்டாம் என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டான். இன்னிக்கு பில்டிங் வொர்க்கைப் போய் பார்த்துட்டு, நைட் தான் வருவானாம். உன்கிட்ட சொல்லச் சொன்னான்" என்றார்.

கங்காவின் மகன் தியாகு வந்தால் மட்டுமே, அவர் தன்னுடைய அவுட் ஹவுஸ்க்குப் போய்விடுவார். அன்றும்

நேரமே டிபன் செய்து, ஹாட் பேக்கில் வைத்து விட்டு, அவளிடம் சொல்லி விட்டுப் போய் விட்டாள். சுமிக்குத் தனியாக இருக்க கொஞ்சம் பயமாகவே இருந்தது. இல்லத்தில் எப்போதுமே ஜே-ஜே என்று எல்லோரும் தூங்கும் வரை சேர்ந்தே இருப்பதால், சுமிக்கு இந்தத் தனிமை புதிது. இந்தப் பேரமைதி அவளுக்குக் கொடுமையாக இருந்தது. ஒன்பது மணிக்கு காரை நிறுத்தி விட்டு, சோர்வுடன் இறங்கியவனின் அருகே, கிட்டத்தட்ட ஓடினாள்.

முகம் மலர, அவனைப் பார்த்து, "ஏன் ராம்! ரொம்ப லேட்டாயிடுச்சா? உங்களுக்காக, ரொம்ப நேரமா காத்திருக்கேன். தனியா இருக்க..." என்று ஆரம்பித்து விட்டு, பின் அதைச் சொல்லாமலே, அவன் கையிலிருந்த பிரீஃப் கேசை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றாள். மனம் சோர்ந்து போய்க் கிடந்தவனுக்கு, வாசலிலேயே மலர்ந்த அவள் முகத்தைப் பார்த்தது ஆறுதலாக இருந்தது. அவள் பின்னாலேயே மாடியேறினான்.

அவளைப் பார்த்து ஒரு சின்னப் புன்னகையை உதிர்த்து விட்டு, டவலுடன் குளியலறைக்குள் புகுந்தான். அவன் வருவதற்குள் அவனுக்கான இரவு உடையை தயாராக எடுத்து வைத்திருந்தாள்.

"ஏன் ராம் ரொம்ப டல்லாயிருக்கீங்க? ஹெவி டியூட்டியா? நம்ம பில்டிங் போனீங்களா? மதியம் லஞ்ச்-சை எங்க சாப்பிட்டீங்க?" என்று கேள்விகளை அடுக்கியவளையே இமைக்காது பார்த்தான்.

அவனின் பார்வையில் வெட்கி இமைகளைத் தாழ்த்தி, "டிபனை இங்கேயே கொண்டு வரட்டுமா?" என்றாள்.



"வேண்டாம். கீழேயே வர்றேன்." சாப்பிட உட்கார்ந்ததும் "நீ சாப்பிட்டாச்சா?" என்றான்.

அவள் 'இல்லை' என்று தலையாட்டியதும், "சுமி! இனி எட்டு மணிக்கெல்லாம் நீ கரெக்டா சாப்பிடணும். நான் வந்து சாப்பிட்டுக்குவேன். நான் எத்தனை மணிக்கு வரமுடியும்-னு எனக்கே தெரியாது. பிளேட்டை எடுத்து வந்து, என் கூடவே உட்கார். கங்கா அக்கா எங்கே?" என்றான்.

"தியாகு வந்ததும், அவுட் ஹவுஸ்க்குப் போயிட்டாங்க."

அவளுக்குப் பரிமாறி விட்டு, 'இத்தனை நேரமும், நீ தனியாகவா இருந்தாய்' என்று கேட்கத் துடித்த நாவை கஷ்டப்பட்டுக் கட்டிப் போட்டான். மேலும் எதுவும் பேசாமலேயே சாப்பிட்டு விட்டு எழுந்தான். சுமி சமையலறையைச் சுத்தம் செய்து விட்டு பெட்ருமில் நுழைந்த போது, ராம் தூங்கியிருந்தான். அவன் அருகே சென்று அமர்ந்தவள், அவன் முகத்தில் தெரிந்த களைப்பையும் மீறி, அவனை முழுமையாக வசீகரத்தவனையே ஆசையுடன் பார்த்தாள்.

அவன் அயர்ந்து உறங்குவதை உறுதி செய்து விட்டு, அவனருகே குனிந்து, மென்மையாக அவன் கன்னத்தில் இதழ் பதித்தாள். அவன் நெற்றியை வருடி, 'குட் நைட் ராம்' என்று புன்னகைத்தாள். பின் நிம்மதியாக மறுபுறம் வந்து படுத்து கண் மூடினாள்.

உடனேயே... கண் விழித்த ராம், நெகிழ்ந்து போனான். 'சாரிடா சுமி! உன்னை அருகே பார்த்தால், என்னால என்னையே கட்டுப்படுத்திக்க முடியல. உன்னோட சந்தோஷமா இருந்தா, நான் என்னையே

மறந்திடுவேன். அப்பாவோட கனவை, ஆசைய நிறைவேற்ற முடியாம போயிடும். அதுவரை, எனக்காக நீ கொஞ்சம் பொறுத்துக்க. அதுவரை நீ என்னோட ஃப்ரண்ட் மட்டும் தான்' என்று மனதுள் புலம்பி, அன்றைய உறக்கத்தைத் தொலைத்தான்.

பெரிய பட்டாளத்தோடு சுற்றித் திரிந்த சுமியால், இந்தத் தனிமையை ஏற்பது எத்தனைக் கொடுமையாக இருக்கும் என்பதை ராம் உணர்ந்தே இருந்தான். அதைப் போக்குவதற்கு, கண்டிப்பாக ஏதாவது செயல்படுத்த வேண்டுமே என்று யோசிக்க ஆரம்பித்தான்.

# 10

மறுநாள் காலை அவனுக்கு முன்பாகவே சுமி எழுந்து தயாராகிக் கீழே வந்து விட்டாள். அவனுக்கு டிபன் எடுத்து ரெடியாக டேபிளில் வைத்தாள். ராம் கீழே இறங்கி வந்ததும், "டிபன் ரெடி! சாப்பிட வாங்க" என்றாள்.

அவன் சாப்பிட்டுக் கொண்டே, "சுமி! டிபன் சாப்பிட்டு முடிந்ததும், நீ அக்காவோட, இல்லத்துக்கு போய் வா. கணேஷ் கூட்டிப் போவான். மெதுவா, நைட் டிபனுக்கு வந்தா போதும்."

அவனின் ஐடியாவில் சுமியின் முகம் மலர்ந்து, உடனே சம்மதம் சொன்னாள். "என்னோட ஷெல்ஃபிலே பணம் இருக்கு. எடுத்துட்டுப் போ. குழந்தைகளுக்கு பிஸ்கட், சாக்லேட், மாமாவுக்கு பழம் எல்லாம் வாங்கிடு..."



என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

அன்று முழுவதும் தன் தந்தையோடும், குழந்தைகளோடும் உற்சாகமாகத் திரிந்தாள். சசி அவளை விட்டு இம்மியும் நகரவில்லை. ஆறு மணிக்கு மேல் மனமே இல்லாமல் கிளம்பினாள்.

"அப்பா! அவர் எட்டு மணிக்கு வந்திடுவார். போய், அக்கா டிபன் வேற செய்யணும். நான் கிளம்பறேன். தினமும் போன் பண்றேன்!" அத்தனைக் குழந்தைகளும் காரைச் சுற்றி நின்று கையசைக்க, கலங்கிய கண்களை மறைத்துக் கொண்டு 'பை' சொன்னாள்.

கார் அவர்களது வீட்டிற்குள் நுழைந்த போது, ஹாலில் டி.வி. சத்தம் கேட்டது. வெளியே ராமின் கார் தெரிந்தது. பதைத்துப் போய் உள்ளே ஓடினாள். ராம் ஹாலில் அமர்ந்து, டி.வி. பார்த்துக் கொண்டிருந்தான். சுமி தவித்துப் போனாள்.

"ஏன் ராம்! நீங்க சீக்கிரமா வருவதாக போன் பண்ணியிருந்தா, நாங்களும் நாலு மணிக்கே கிளம்பியிருப்போம் தானே! வந்து ரொம்ப நேரமாச்சா? டீ தரட்டுமா? என பரபரத்தாள்.

"ஏன் இத்தனை பதட்டம் சுமி! இன்னிக்குச் சைட்டில் வொர்க் நடக்கல; அதான் சீக்கிரம் வர முடிஞ்சுது. சூடா ஒரு டீ மட்டும் கொடு போதும்" என்றான்.

கங்கா டீ-யைப் போட்டு சுமியிடம் கொடுத்து விட்டு, டிபன் செய்ய விரைந்தாள். சுமி வேற வேலை இல்லாததால், அவனுக்கு டீ-யைக் கொடுத்து விட்டு, அவனருகேயே அமர்ந்து டி.வி. பார்க்க ஆரம்பித்தாள். சுமி சூடியிருந்த மல்லிகையின் மனம், ஃப்ரெஷ்ஷாக ஜொலித்த சுமியின் முகம் என இரண்டுமே அவனைக்

கிறங்கடித்தது. சட்டென்று எழுந்து, "எனக்குக் கொஞ்சம் கேஸ் டீடெய்ல்ஸ் படிக்கணும். டிபன் ரெடியானதும் சொல்லு" என்று தன் அறைக்குப் போய்விட்டான்.

அதன்பிறகு தினமும் வேலை வேலை என்று அதிலேயே மூழ்கிப் போனான். அவர்களுடைய ஆர்க்கிடெக்ட் திரு. விஸ்வநாதனுடன் விரிவாக டிஸ்கஸ் செய்தான். ஜகதீஷ் கட்டிடம் கட்டி முடிக்கும் வரை செய்யவேண்டிய அத்தனை வேலைகளையும், அழகாக திட்டமிட்டு முடிவு செய்து, ஸ்கெட்ச் போட்டுக் கொடுத்திருந்தார்.

கார் பார்க்கிங், ரிசப்ஷன், ஓ.பி. அறை, வெயிட்டிங் ஹால், மூன்று ஆபரேஷன் தியேட்டர்ஸ், லேப், எக்ஸ்ரே, ஸ்கேன், தீவிர கிசிச்சைப் பிரிவு, சாதாரண அறைகள் என்று குறையே சொல்ல முடியாதபடி, அத்தனைக் கச்சிதமாகச் செயல்படுத்தியிருந்தார். இரண்டு இடங்களில் லிஃப்ட் வசதியும் கூட செய்திருந்தார். அந்த ஏற்பாடுகளைப் பார்த்து மலைத்துப் போய், இன்னும் தீவிரமாக அதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான். வீட்டில் அவன் இருக்கும் நேரமே குறைந்து போனது.

சுமியை விட்டு விலகி இருக்க, வேலைப் பளுவை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான். ஆனாலும் அவள் அமைதியாக வீட்டிற்குள் வளைய வந்ததே, அவனுக்கு மிகுந்த மன அமைதியைத் தந்தது. அவளின் அருகாமையே அவனுக்குப் போதுமானதாக இருந்தது. அவள் பார்க்காத போது, அவளின் அழகை அள்ளிப் பருகுவான்.

மணமாகி இந்த இரண்டு மாதங்களில் சுமி அவனின் அண்மைக்காக ஏங்கிப் போனாள். ராம் அவளிடம் பேசுவது



கூட அரிதாகிப் போனது. தன் தனிமையைத் தொலைக்க என்ன செய்வது என்று யோசித்து கங்காவிடம் சமையல் பயின்றாள். பத்து நாட்களிலேயே நன்றாகச் செய்ய முடிந்தது. சில நாட்கள் கங்காவிடம் அரட்டையடித்துக் கொண்டே, தன் கைவரிசையை சமையலில் காண்பிப்பாள்.

ஜகதீஷ் ஒரு புத்தகப் பிரியர் என்பதால், தனக்காக ஒரு மினி லைப்ரரியே வைத்திருந்தார். அதிலுள்ள புத்தகங்கள், ஓய்வு நேரங்களில் அவள் தனிமையைப் போக்க வெகுவாக உதவியது. தினமும் மாலையில் ராமு தாத்தாவிடம் கதையடித்துக் கொண்டே பூப்பறிப்பாள். தோட்ட வேலையிலும் சிறிது உதவுவாள்.

வீட்டின் அலங்காரம் அவள் கைவண்ணத்தால் ஜொலித்தது. சோபாவை இடம் மாற்றுவாள். பூங்கொத்துகள் ஆங்காங்கே வீற்றிருந்து மணம் பரப்பும்.

அவனுடைய பொருட்களை அடுக்குவாள். இருவரிடையே பேச்சு வார்த்தை அதிகமில்லை என்றாலும், அவனின் ஒவ்வொரு செயலிலும் அவள் பங்கு இருந்தது. அவன் குளித்து விட்டு வரும்போது, கட்டிலின் மேல் பொருத்தமான உடைகள் தேர்வு செய்யப்பட்டுத் தயாராக இருக்கும். ப்ரீப் கேஸையும் ரெடி செய்து வைத்திருப்பாள்.

நாட்கள் செல்லச்செல்ல அவளுக்கும் நிறைய ஓய்வு கிடைத்தது. அப்போது தான் எம். ஃபில். ரிசல்ட் வந்தது. சுமி டிஸ்டிங்ஷனில் பாஸ் பண்ணியிருந்தாள். அன்று இல்லத்திற்குச் சென்று, குழந்தைகளுக்கு ஸ்வீட் கொடுத்து, சந்தோஷமாகத் தெரிந்தாள்.

கங்கா மூலமாக ராம் விஷயத்தைத் தெரிந்த கொண்டான். சுமி நேரடியாக அவனிடம் சொல்ல வில்லையே என்ற ஆதங்கம் இருந்தது. வரும் போது

அவனுக்குத் தானே ஒரு சுடிதாரைத் தேர்வு செய்தான். பின் ஒரு லேட்டஸ்ட் மாடல் செல்போன் ஒன்றையும் வாங்கினான்.

இரவு அவள் வருவதற்காக ஆசையுடன் படுக்கையில் காத்திருந்தான். அவள் உள்ளே வந்ததும், "சுமி... இங்கே வா...!" என்றான்.

"ம்ம்."

"உனக்கு ரிசல்ட் வந்து விட்டதாக அக்கா சொன்னார்கள்."

"சாரி ராம்! எனக்குக் காலையில தான், அப்பா போன் பண்ணி பேசினார். அப்பத் தான் தெரியும். அப்பா வரச் சொன்னதால உடனே கிளம்பிட்டேன். உங்க கிட்ட பேச நேரமே கிடைப்பதில்லை. டியூட்டி டைமில் போன் பண்ணவும் தயக்கமா இருக்கு. அதான் நைட் நீங்க தூங்கியிருந்தா கூட, உங்களை எழுப்பிச் சொல்லத்தான் நினைச்சேன்."

"பரவாயில்லை! கங்கிராட்ஸ்!" அவளது கைகளைப் பற்றி அருகே இழுத்து, உட்கார வைத்தான்.

"சுமி! இந்தா என் கி∴ப்ட்" ஒரு பெரிய கவரை அவளது கையில் வைத்தான். ஒரு அழகான அனார்கலி சுடிதார், செல்போன், பி.ஹெச்.டி. அப்ளிகேஷன்... மூன்றும் இருந்தன.

"தேங்க்யூ ராம்! மனதில் பட்டாம் பூச்சி பறக்க, வெட்கத்தை விட்டு அவன் தோளில் உரிமையாக சாய்ந்து கொண்டாள்.

அவளின் அருகாமையில் மனம் மயங்கிய ராம், அவளை அணைத்து உச்சியில் இதழ் பதித்தான். அவளது மேனியின் மென்மையில் இறங்கிப் போனவளாய், அவளைத் தன்னோடு இறுக்கிக் கொண்டான். கண்மூடி அவன் தோளில் சாய்ந்திருந்த சுமியை, விழுங்கி விடுவது போல அளந்தான். வில்லாய் வளைந்த புருவங்கள், பட்டுப் போன்ற ஆப்பிள் கன்னங்கள், கூர் நாசி, சிவந்த அதரங்கள் என்று பேரழகுப் பெட்டகமாக, தன்னருகே அமர்ந்திருந்தவளைப் பார்க்கப் பார்க்க தெவிட்டவில்லை அவனுக்கு.



எத்தனையோ நாட்களுக்குப் பிறகு, சுமி அவனது மரத்துப்போன உணர்வுகளை மென்மையாகத் தட்டி எழுப்பியிருந்தாள். அவள் நெற்றி, கன்னம், காது மடல்கள் என்று முத்தமிட்டுக் கொண்டே வந்தவன்..., பளபளத்த அவளின் அதரங்களைப் பார்த்துத் திகைத்துப் போனான்.

மெல்ல அவளிடமிருந்து விலகி, "சுமி! ரொம்ப டைம் ஆச்சுடா. போய்ப் படு. நாளைக்கு அப்ளிகேஷன் ∴பில் பண்ணிடு" என்று கரகரத்த குரலில் மொழிந்து விட்டு, எழுந்து ஹாலுக்குச் சென்று விட்டான். உணர்வுகளைக் கட்டுப்படுத்த அவனுக்குத் தனிமை தேவைப்பட்டது. சுமிக்கு ஏமாற்றத்தில் கண்ணீர் கரித்துக் கொண்டு வந்தது. ஒரு பெண்ணாக அவளால் வெட்கத்தை விட்டு, அவனை அணுக முடியவில்லை.

சுமியின் கல்லூரி வாழ்க்கை துவங்கியது. ராமின் தினசரி வேலையில் எந்த மா்ற்றமும் இல்லை. மணமாகி மூன்று மாதங்கள் முடிந்த போது, ஹாஸ்பிடல் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு, எல்லா வசதிகளோடும் திறப்பு விழாவிற்குத் தயாரானது. பணி புரிய டாக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மற்ற ஊழியர்களும் இன்டர்வியூ வைத்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். சுகாதாரத் துறை அமைச்சர் வந்து

'ராம் மருத்துவமனை'யைத் திறந்து வைத்தார். செந்தில் மருத்துவமனையில் இருந்து தனது வேலையை முறையாக ரிசைன் செய்து விட்டு, ராம் மருத்துவமனையை தலைமையேற்று நடத்த ஆரம்பித்தான்.

முதலில் நரம்பியல் பிரிவு, இருதய சிகிச்சை, மகப்பேறு பிரிவு என்று மூன்று பிரிவுகள் மட்டும் துவக்கப்பட்டு, வெற்றிகரமாக செயல்பட ஆரம்பித்தது. தன் தந்தையின் கனவை நினைவாக்கிய களிப்பில், நிம்மதியாக மருத்துவச் சேவையில் ஈடுபட்டான் ராம்.

சுமியும் தினமும் கல்லூரி, மாலையில் கங்காவுடன் அரட்டை, ப்ராஜெக்ட், அசைன்மென்ட் என்று தன்னை மூழ்கடித்துக் கொண்டாள். படிக்கவும் நேரம் சரியாக இருந்தது.

கங்காவுக்கோ இவர்களைப் பார்த்து வேதனையாக இருந்தது! இனியாவது இவர்களின் வாழ்க்கையைச் சீராக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

வெகு சீக்கிரம் ராம் ஹாஸ்பிடல் மக்களிடையே பிரபலமடைந்தது. பிறர் கை விட்ட கேஸ்களைக் கூட, டாக்டர்.ராம்குமார் வெற்றிகரமாக குணப்படுத்தி விடுவார் என்ற பெயரைப் பெற்றான். இது தானே அவன் தந்தை விரும்பியதும்! அதனாலேயே அவனுடைய குற்ற உணர்வும் கொஞ்சம் கொஞ்சமாக விலகி, மறைந்தது. அவன் நடத்தையிலும் சிறிது மாற்றம்!

மாதம் ஒரு முறையாவது சுமியை தானே இல்லத்துக்கு அழைத்துப் போனான். சில நாட்களில் இரவு உணவு முடிந்ததும், "சுமி...! நான் உன்னைப் பார்க்கும் போதெல்லாம், எப்போதும் புத்தகமும் கையுமாகவே இருக்கிறாய். கொஞ்சமாவது ரிலாக்ஸேஷன்



வேண்டாமா? வா, ஒரு சின்ன ட்ரைவ் போய் வரலாம்!" என்று காரில் தனியே அவளைக் கூட்டிச் செல்வான். வழியில் ஜூஸ் அல்லது ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுப்பான்.

பின் ஈ.சி.ஆர். ரோட்டில் அமைதியான அந்த இரவில், காரில் மெல்லியதான இசை வழிந்தோட, ஏஸியின் மிதமான குளிர் உடலை ஊடுருவ, அவளின் அருகாமை மனதை மயக்க, அனுபவித்து காரை ஓட்டுவான். இருவருக்கும் இந்தப் பயணம் நீண்டு விடாதா என்று ஏக்கமாக இருக்கும். சுமி, அவன் தோள் மீது சாய்ந்து இந்தச் சுகத்தை அனுபவிப்பாள். நேரம் போவதே தெரியாமல் மௌனமாக கண்மூடி அமர்ந்திருப்பாள்.

பேச்சற்ற மௌனம் கூட, அவர்கள் இருவரிடையே மனநிறைவை ஏற்படுத்தியது. இதுவே ஒரு வித நெருக்கத்தைத் தந்தது. வீடு திரும்பியதும் நிம்மதியாக உறங்கச் செல்வார்கள். ராமின் மனம் மெல்ல மெல்ல, சுமிக்காக ஏங்கத் துவங்கியது. இருவருக்குமே, யார் முதலில் மற்றவரை அணுகுவது என்ற தயக்கம் இருந்தது.

சுமி சில சமயம் ராம் ஆழ்ந்து உறங்கும் போது, அவனையே பார்த்துக் கொண்டிருப்பாள். அவனின் நெற்றியில் படர்ந்திருக்கும் அலை அலையான கேசத்தை விரல்களால் அளைய ஆசை கிளரும். காலையிலிருந்து இருக்கும் அழுத்தமான இறுக்கமான முகம் மாறி, குழந்தையாய் உறங்கும் ராமின் மார்பில் தலைசாய்க்க மனம் தவிக்கும். ஆனால் வெட்கம் அதைத் தடுக்கும்.

இவர்களின் கண்ணா மூச்சி விளையாட்டை கங்காவும் கவனிக்கவே செய்தாள். அதைத் தீர்த்து வைக்கும் விதமாக, ராம் ஒரு மெடிக்கல் கான்ஃப்ரன்ஸ்க்காக டெல்லிக்குச் செல்ல வேண்டியிருந்தது.

அன்றிரவு கங்கா, "ராம்! வா, உன்னிடம் ஒன்று பேச வேண்டும்."

"சுமி எங்கே...?"

"அவள் கோயிலுக்குப் போய் விட்டு, அப்படியே அவளது அப்பாவைப் பார்த்து விட்டு வருவதாகச் சொன்னாள். இன்றும் அரைமணியில் வந்து விடுவாள். அதற்குள் உன்னிடம் கொஞ்சம் பேசலாம் என்று நினைத்தேன்."

"சொல்லுங்கக்கா!"

"ராம்! நீ எப்போது டெல்லி போக வேண்டும்?"

"இந்த புதன்கிழமை காலையில் ஃபிளைட்."

"எத்தனை நாள் தங்க வேண்டும்?"

"ஒரு வாரம்..."

"ராம் நான் உனக்குப் புத்தி சொல்வதாக நினைக்காதே. நீ சுமியை கடந்த மூன்று மாதங்களாகக் கவனிப்பதே இல்லை. அதற்கு நீ என்ன காரணத்தைச் சொல்வாய் என்றும் எனக்குத் தெரியும். ஐயாவின் விருப்பப்படி, ஹாஸ்பிடலைத் தான் துவங்கி விட்டாயே... அப்புறம் என்ன? சுமி ரொம்ப நல்ல பெண் ராம். பொறுமையும் கூட... அதனால் எதையுமே பெரிது படுத்துவதில்லை.

ஆனால் உன் ஒதுக்கத்தால், பகலில் பல நாட்கள் தனியாக அழுவதை நான் பார்த்திருக்கிறேன். சுமி பாவம் தானே தம்பி! நீ அவளிடம் சகஜமாகப் பேசி, நல்ல ஃப்ரண்டாகக் கூட நடந்து கொள்வதில்லை. அத்தனை ஏக்கத்தையும் ஏமாற்றத்தையும் மனசுக்குள்ளே புதைத்துக் கொண்டு, புன்னகையோடு தான் நடமாடுகிறாள். யாரிடமும் இதுவரை முகம் சுளித்தது கூட இல்லை.



உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? சுமியை நீ விரும்பி கல்யாணம் செய்ததாக நினைத்திருப்பாய். ஆனால் நடந்ததே வேறு. நீ ஃபைனல் இயர் படிக்கும் போதே நம்ம ஐயா, தயானந்த் ஐயாவிடம் போய் சம்பந்தம் பேசி விட்டார். சுமியைக் கல்லூரியில் சேர்த்த போது, இவரும் கூடவே போனார். அப்போதே, சுமி தான் தன் மருமகள் என்று முடிவு செய்து விட்டார். சுமி என்றால் ஐயாவுக்கு ரொம்ப இஷ்டம்.

நீயும் சுமியை விரும்பியதால், அவருடைய ஆசையை வெளியே சொல்லவில்லை. நான் தான் திருமணத்தை முடிவு செய்தேன் என்று தெரிந்தால், ராமிற்கு ஏமாற்றமாக இருக்கும். அதனால் அவனிடம் இதைச் சொல்லாதே என்றும் சொல்லிவிட்டார். நீயும், சுமியும் ஒற்றுமையாக, சந்தோஷமாகக் குடும்பம் நடத்த வேண்டும் என்று அவருக்கு ரொம்ப ஆசை.

"சுமி பேரப் பிள்ளைகளைப் பெற்றுப் போட்டால், அவர்களை பார்த்துக் கொண்டு, சந்தோஷமாகப் பொழுதைக் கழித்து விடுவேன். இனிமேல் எனக்கு அதுமட்டும் தான் வேலை" என்பார்.

"நீ உண்மையாக சுமியை விரும்பியிருந்தால், உன்னால் அவளிடம் எப்படி இத்தனை பாராமுகமாக நடந்து கொள்ள முடிந்திருக்கும்? இனி அந்த மாதிரி இருக்காதே ராம். இனியாவது ரெண்டு பேரும் சந்தோஷமா இருங்க. அவளுக்கும் இனி காலேஜ் லீவு தான். முடிஞ்சா, உன்னோடு அவளையும் டெல்லிக்குக் கூட்டிப் போகலாம் தானே?" என்றாள்.

கைகட்டி கங்காவையே புன்னகையோட பார்த்துக் கொண்டிருந்தவன், அவள் கையைப் பற்றி அதில் இரண்டு

ஃபிளைட் டிக்கட்களை வைத்தான். சுமியை கூட்டிப் போக, ஏற்கனவே முடிவு செய்திருந்தான்.

கங்காவுக்கு பேச்சே எழவில்லை. ராமின் கன்னத்தை வருடி, "நல்லா இருங்க" என்று மட்டுமே சொல்ல முடிந்தது அவளால்.

சுமி வந்ததும் அன்று நைட், "சுமி! நான் புதன்கிழமை டெல்லி போகணும். டிரஸ்ஸை எடுத்து வைத்து விடுகிறாயா?"

"ராம்! இந்த வாரமா? எத்தனை நாட்கள் அங்கே இருக்கணும்?" கண்கலங்கக் கேட்டவளை, தன் கூர் விழிகளால் பார்த்தான்.

"பத்து நாட்கள்."

"ம்ம்... அத்தனை நாட்களா? நான்..... ராம்...! நீங்க போகாம இருக்க முடியாதா? என்னால..." அதற்கு மேல் பேச முடியாமல் திக்கினாள்.

"இது என் பாஸ் டாக்டர். செந்தில் குமாரோட டெசிஷன். ஃப்ரெய்ன் ட்யூமர் ஆபரேஷன் செய்வதற்கான லேட்டஸ்ட் மெத்தட் பத்தின செமினார் இது. எனக்கு ரொம்ப யூஸ்புல்லா இருக்கும். நம்ம ஹாஸ்பிடல்ல கூட, அதை ஃபாலோ பண்ண முடியுமானா, ரொம்ப நல்லது. அட்வான்ஸ்ட் டெக்னாலஜி-ன்னு டாக்டர் சொன்னார்.

"ஆனா... நான்... எனக்கு... வந்து..."

மெல்ல அவளருகே வந்து அவள் கன்னத்தை இருகைளிலும் தாங்கி, அவளையே பார்த்தவன், "சுமி, இன்னும் கூட உனக்கு என் கிட்ட ஃப்ரீயா மனம் விட்டு பேச வரலை தானே? நானும் இன்னிக்கு வரைக்கும், உன்கிட்ட அப்படித் தானே நடந்துகிட்டேன். சாரிடா!" ஆனா ஒண்ணு மட்டும் சத்தியம் சுமி! உன்னை



தினமும் ஐந்து நிமிஷமாவது பார்த்துக்கிட்டு இருக்கணும் எனக்கு. அப்போ தான், எனக்கு நாள் முழுக்க சந்தோஷமாக இருக்கும். எனக்கு, உன் தரிசனம் மூச்சுக்காற்று மாதிரி! உன்னைப் பார்க்கலைன்னா, அன்னிக்கு என்னாலே வேலையை ஒழுங்காவே செய்ய முடியாது.

மை டியர் சுமி! புதன்கிழமை, நீயும் என்னுடன் வருகிறாய். செமினார் இரண்டு நாட்கள் தான். அப்புறம் ஒரு நாள், என் ஃபுரொபசார் ஷர்மாவை யூனிவர்சிடியிலே போய்ப் பார்க்கணும். இரண்டு நாள் மட்டும் ஹோட்டல்ல நீ தனியா இருக்கணும். பிறகு நான் ஃப்ரீயாயிடுவேன். அப்புறம் வெளியே போகலாம். நாளைக்கு இரண்டு பேரோட சூட்கேஸையும் ரெடி பண்ணிடு. ஓ.கே? இந்தா டிக்கட்ஸ். கொஞ்சம் சிரிடா. இப்பச் சந்தோஷம் தானே? போய்த் தூங்கு. குட் நைட்!" அவள் நெற்றியில் இதழ் பதித்தான்.

அவள் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனாள். அவன் செல்போனை எடுத்துக் கொண்டு பால்கனிக்குச் சென்றான். இருவருக்குமே மனம் முழுக்கச் சந்தோஷம். அன்றிரவு உறக்கத்தில் தன்னையறியாமல், ராம் சுமியைத் தன் இடையோடு இழுத்து அணைத்துக் கொண்டான்.

அவள் கூந்தலில் முகம் பதித்தவன், நிம்மதியாக உறக்கத்தைத் தொடர்ந்தான். அவனின் ஸ்பரிசத்தால் கண் விழித்த சுமி, உறக்கம் பறிபோனவளாய், கொட்டக் கொட்ட விழித்திருந்தாள் இரவு முழுவதும்! அவனது முதல் அணைப்பு, உயிர் வரை இனித்தது.

அதிகாலையில் அவன் கரங்கள் தூக்கத்தில் மெல்லத் தளர்ந்த போது, அவனிடமிருந்து விலகி

எழுந்தவள், குளித்து விட்டுக் கீழே ஓடி விட்டாள். அன்று முழுவதுமே அவள் முகம் ரோஜாவாக மலர்ந்திருந்தது. அன்று மாலை, ராம் சீக்கிரமே வந்து, சுமியோடு இல்லம் சென்றான். டெல்லிக்குச் செல்வதாகக் கூறி, தயாளநிதியிடம் விடை பெற்றான். அங்கேயே இரவு உணவை முடித்து விட்டு வீடு திரும்பினார்கள்.

மறுநாள் அதிகாலையிலேயே கங்காவிடம் வீட்டை ஒப்படைத்து விட்டு, ஏர்போர்ட் கிளம்பினார்கள். கங்கா சுமிக்கு ஆயிரம் புத்திமதி கூறி, சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று வாழ்த்தி, வழியனுப்பி வைத்தாள்.

சுமியின் முதல் விமானம் பயணம்! விமானம் கிளம்பியதும், பயந்து போனாள். ராம் அவளை ஆறுதல்படுத்தி, பொறுமையாக எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்தான்.

முதல் நாள் செமினாருக்காக ரேமண்ட்ஸ் சூட்டில், ராம் தயாராக வந்தபோது அவனைப் பார்த்து சுமி தன் வசமிழந்து போனாள். அவன் அவளை மெல்ல அணைத்து, "சுமி! நிறைய புக்ஸ் இருக்கு. படிச்சுகிட்டு இரு. கரெக்ட் டைமுக்கு ஃபுட் ஆர்டர் பண்ணிக்க. நான் செமினார் முடிந்ததும் கிளம்பிடறேன். பத்திரமா இரு. நான் அங்கு போய்ட்டு, உன் செல்லுக்குப் பேசறேன். பை-டா" என்று அவளைத் தனியாக விட்டுச் செல்ல மனமில்லாது கிளம்பினான்.

இரண்டு நாட்கள் கழிந்ததும், "சுமி! இன்னியோட கான்ஃப்ரன்ஸ் முடிந்தது. இன்னிக்கு வெளியே சாப்பிடப் போகலாமா? நாளைக்கு வெளியே போக ப்ளான் பண்ணியிருக்கேன். இப்ப டின்னருக்கு மட்டும், வெளியே போயிட்டு வந்திடறோம். சரியா?"



அவனுடைய களைப்பைப் பார்த்து, "வேண்டாம் ராம்! நீங்க இன்னிக்கு ரொம்ப டயர்டா இருக்கீங்க. ரூம் சர்வீஸ்"க்கே ஆர்டர் பண்ணிடுங்க. நல்லா ரெஸ்ட் எடுத்துட்டு, நாளைக்குப் பார்த்துக்கலாம்"

இரவு உணவு வந்ததும், சுமி அவனுக்குப் பரிமாறினாள். ராம் அவளையும் சாப்பிடச் சொன்னான். முதலில் ஸ்வீட்டை எடுத்து அவளுக்கு ஊட்டி விட்டான். அவளையும் ஊட்டச் சொல்லிக் கட்டாயப்படுத்தினான்.

அவனின் பரிவிலும், நெருக்கத்திலும் கண்களில் பனிப்படலம் மறைக்க அமர்ந்திருந்தவளைப் பார்த்து, "சாரி சுமி! உன்னை, இத்தனை நாட்களாகத் தனிமையில் தவிக்க விட்டுட்டேன். என்னை மன்னிச்சு விட்டுடேன். ப்ளீஸ் அதுக்கு ஸ்ட்ராங்கான காரணம் இருக்குடா..." என்று தன் மனதில் அடக்கி வைத்திருந்த துயரத்தையெல்லாம், உணர்ச்சி பொங்க அவளிடம் கொட்டினாள்.

அவனின் உணர்வுகளைப் புரிந்து கொண்டவளாய், அவனைப் பார்த்து முறுவலித்து, "பரவாயில்லை ராம். நான் உங்களைத் தப்பாவே நினைக்கல. வருத்தப்படாதீங்க! விட்டுடுங்க!" என்று அவன் கன்னத்தில் இதழ் பதித்தாள். இன்றும் அவளை அணைத்து நிம்மதியாக உறங்கினான்.

மறுநாள் காலை குளித்து ரெடியாகி வந்தவளைப் பார்த்து திகைப்பில் விழிவிரித்தான். முழுவதுமான வெள்ளை நிற அனார்கலி சுடிதாரில், கறுப்பு நிற ஸ்வரோஸ்கி கற்கள் வேலைப்பாடு செய்த மிக அழகான டிசைனர் உடையில், தேவதையாக அவன் எதிரில் நின்றாள் சுமி.

அள்ளி விழுங்குவது போல பார்த்த அவன் பார்வையில் முகம் முழுவதும் சூடாக, தலை குனிந்தவளின் பேரழகில் கிறங்கிப் போய், அவளை அருகே இழுத்து, தாபம் பொங்க முகம் முழுவதும் முத்திரையிட்டான்.

வெட்கத்தில் பேச்சே எழாமல், ப்ளீஸ் ராம்! கிளம்பலாம். கார் வந்து விட்டதாக ரிசப்ஷனிலிருந்து போன் வந்தது" என்று திக்கித் திணறி ஒரு வழியாகச் சொல்லி முடித்தாள்.

அவள் உடைக்கு மேட்சாக கறுப்பு கார்கோ பேண்ட் வெள்ளை நிற டீ-சர்ட் அணிந்து அவனும் வசீகரமாகக் கிளம்பினான். அவர்கள் முதலில் சென்றது தாஜ்மஹாலுக்கு. அந்தப் பளிங்கு மாளிகையின் அழகில் மனதைப் பறிகொடுத்து இருவருமே மயங்கிப் போயினர். காதலின் சாட்சியாக எழுந்து நின்ற மாளிகையைப் பார்த்து முடித்த பின்பு கூட, அவர்களின் பிரமிப்பு நீங்கவில்லை.

ராம், சுமியின் இடையைச் சுற்றி கைகளைப் போட்டு அணைத்து, அவள் காதருகில் குனித்து, கிசுகிசுப்பாக "மை டியர் எஞ்சல்" என்று விளித்தான். நண்பர்களோடு பல முறை இங்கு வந்திருந்தாலும், தன் காதல் மனைவியோடு முதன் முதலில் வந்தது, பரவச அனுபவமாக இருந்தது.

தாஜ்மஹால் முன்பிருந்த தோட்டத்தில், அவள் கரம் பற்றி, "சுமி டார்லிங்! ஐ லவ் யூ சோ மச். என் காதலை, இந்தத் தாஜ்மஹாலைச் சாட்சியாக வைத்துச் சொல்ல ஆசைப்பட்டேன். இனி, ஒரு நாளும் நமக்கிடையே எந்த விதமான பிரிவும் வர விடமாட்டேன்" என்று சொல்லி,



அவளை அணைத்துக் கொண்டான். கூச்சத்தில் விலகியவளைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்தான்.

அன்றிரவு தன் அருகே வெட்கத்தில் முகம் சிவந்து அமர்ந்திருந்த சுமியை ரசனையுடன் பார்த்து, அவளின் பளிங்காய் மின்னிய கன்னங்களை மெல்ல வருடியவன், "சுமி! என்னை உன்னால் மன்னிக்க முடியுமா? ப்ளீஸ்! அப்பா நம்மை விட்டு மறைந்த பின், குற்ற உணர்ச்சியில் என் மூளையே மரத்துப் போனது. என்னால் தான் அவர் இறந்தார் என்று என் மனதில் ஆழப் பதிந்து போனது.

அதற்குப் பிராயச்சித்தமாக, ஹாஸ்பிடல் வேலையில் முழு மூச்சாக ஈடுபட்டேன். நம் இல்லறம் அதற்குத் தடையாக இருக்குமென்று நினைத்துத் தான், உன்னை விட்டு விலகி இருந்தேன். ஹாஸ்பிடல் துவங்கி வெற்றிகரமாக அதைச் செயல்பட வைக்கும் வரை, என் மனம் என் வசமே இல்லை. வெறும் இயந்திரமாக மாறிப் போயிருந்தேன்.

உன்னிடம் பேசாமல் இருந்த நாட்கள், எனக்கு நரகம் சுமி! மனைவி என்ற உரிமையிருந்தும், உன்னிடம் நெருங்க முடியாமல், உன் அழகை, அருகாமையை ரசிக்க முடியாமல் எத்தனைக் கஷ்டமாக இருந்தது தெரியுமாடா? என்னைப் புரிந்து கொள்வாய் தானே! இனி உன்னைப் பிரியவே மாட்டேன்!" குரல் குழையப் பேசியவனை ஏறிட்டுப் பார்த்து, அவன் கண்கள் வெளிப்படுத்திய தூய்மையான காதலில் கரைந்து உருகிப் போய் அவனோடு ஒன்றினாள்.

ரோமம் படர்ந்த அவன் மார்பில் தலை சாய்த்து, மென்மையான குரலில், "உங்களை நான் புரிந்து கொண்டதை விட, யார் புரிந்து கொள்வார்கள் ராம்?

உங்களின் ஒவ்வொரு பார்வைக்கும் எனக்கு அர்த்தம் தெரியும். நீங்கள் அதை சொல்லவே தேவையில்லை.

என்னைப் பார்த்துப் பேச முடியாமல், எத்தனை நாட்கள் வேதனையோடு பால்கனியில் இரவு முழுவதும் இருட்டையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றீர்கள் என்பதும் எனக்குத் தெரியும் ராம்! பல நாட்கள் தூக்கம் வராமல் கால் ஓயும் வரை, ஹாலில் நடை பயின்றதும் தெரியும்.

அப்போதெல்லாம் ஓடி வந்து உங்களை அணைத்துக் கொண்டு, ஆறுதல் சொல்லத் துடிப்பேன். ஆனால் அதுவே உங்கள் வேதனையை அதிகமாக்கும் என்று தான் அமைதியாக இருந்தேன். உண்மையான காதலுக்கு அழிவே கிடையாது ராம்!"

"அதற்கு மொழியும் தேவையில்லை. பல நாட்கள் உங்கள் மௌனமான பார்வையே, எனக்குக் காதலை உணர்த்திவிட்டது. தினமும் என்னை ஒரு நொடி பார்த்தால் கூட, அதுல இருந்த காதல் தான் எனக்குத் தெரிஞ்சுது. மனசளவிலே நமக்குள்ளே பிரிவே வரல ராம்!

நீங்க என் மேல வெச்சிருக்கற நேசம், எத்தனை ஸ்ட்ராங்-ன்னு எனக்கு மட்டும் தான் தெரியும். உங்க மனசு பூரா நான் மட்டும் தான் நெறஞ்சிருக்கேன். இனிமே எதைப் பத்தியும் நெனச்சு வருத்தப்படாதீங்க ராம்! அதைத் தான் என்னால தாங்க முடியாது!" உருகிப் போய் கண்மூடி பேசிக் கொண்டே போன சுமியைப் பார்த்து நெகிழ்ந்து போனான் ராம்.

அவளின் பேச்சில், கண்களை பனிப்படலமாய் கண்ணீர் மறைக்க, உச்சியில் இதழ் பதித்து, எலும்புகள் நொறுங்கிப் போகும் அளவுக்கு இறுக்கி அணைத்தான்.



"தேங்க்யூ டார்லிங்! நீ என்னை விரும்பற அளவு, நான் உன் மேல நேசம் வெச்சிருக்கனான்னு தெரியல. ஆனா சத்தியமா, இனி என் கண்ணிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வர விடமாட்டேன். ஐ லவ் யூ சோ மச் மை சுமி...!" இதழ்களில் அழுத்த முத்தமிட்டான்.

கரகரத்த அவனது வசீகரக் குரலில் மயங்கிய சுமியின் கைகள் தாமாக உயர்ந்து, அவன் கழுத்தில் மாலையாகியது. இதுவரை கண்டிராத புதியதோர் உலகத்தில் நுழைந்து, இருவரும் அதன் இனிமையில் மூழ்கி, கரைந்து காணாமல் போனார்கள்.

அவளைப் பற்றிய நினைவுகளிலிருந்து மீண்டவன், உடனே சுமியிடம் பேச விழைந்தான்!

# 11

கட்டில் மேல் தன் போனைத் தேடி, தலையணைக்கடியில் இருந்து எடுத்தான். அதை ஆன் செய்த உடனே, போன் ஒலித்தது.

உள்ளம் பதற, "அக்கா என்றேன்!"

கங்கா அக்கா, "தம்பி உனக்கு என்ன ஆச்சு? எங்கே இருக்கிறாய்?"

"ஹாஸ்பிட்டலில்."

"சுமியிடம் எதாவது சொன்னாயா?"

"அக்கா!"

"சுய நினைவே இல்லாமல் கதறுகிறாள். நான் பாவி. அவர் என்னை வெறுத்து விட்டார். நான் உயிரோடு

இருக்கவே கூடாது என்று அழுது தவித்து விட்டாள். கொஞ்சம் சமாதானப்படுத்தி தூங்க வைத்திருக்கிறேன்."

வர்ஷா அழுத போது கூட அவளைத் தூக்கவே இல்லை. நான் கீழே தூக்கி வந்து விட்டேன். சுமி பாவம் தம்பி. இப்போது தான் கொஞ்சம் உடல் தேறி இருக்கிறாள்.

எதிலும் பற்றில்லாமல் அவள் பேசுவதைக் கேட்டால் பயமாக இருக்கிறது. உங்களுக்குள் என்ன நடந்தது என்பது தெரியாது. அவள் தன் கடந்த காலம் எதுவுமே தெரியாத குழந்தை, மெதுவாகத் தான் சரியாவாள். நீ உடனே வந்தால் நல்லது என்ற நினைக்கிறேன். வரமுடியுமா? அவர் குரலில் மெலிதான கண்டிப்பும் கூட.

"அக்கா! என் சுமிக்கு ஒன்றுமில்லை தானே? இதோ, நான் உடனே வருகிறேன். அது வரை நீங்கள் அவள் பக்கத்திலேயே இருங்கள்."

"தம்பி, காரை டிரைவரை ஒட்டச் சொல்லு."

"ம், சரி."

வீட்டிற்குள் கார் நுழைந்ததும் இரண்டிரண்டு படிகளாக தாவி அறைக்கு ஓடினான். அவன் உள்ளே வந்ததும், ஹாலில் இருந்த கங்கா, "அவளை எழுப்பாதே... தூங்கட்டும் பாவம்! அவள் எழுந்ததும், இன்டர்காமில் கூப்பிடு. நான் டிபன் கொண்டு வருகிறேன். அங்கு பிளாஸ்கில் இருந்த காப்பியை ஊற்றி அவன் கையில் கொடுத்து விட்டு கீழே சென்றாள்.

ராம் தன் பெட்ருமுக்குள் நுழைந்தான். கட்டிலில் ஸ்லீப்பிங் பியூட்டி போல ஓவியமாக உறங்கிக் கொண்டிருந்தாள் சுமி.

கன்னங்களில் கண்ணீர்க்கறை காய்ந்து போய் இருந்தது. தலை கலைந்து ஏதோ வெகுவாகப் போராடிக்



களைத்தவள் போல சோர்ந்து, ஓய்ந்து போய் உறங்குபவளைக் கண்டு கண்களில் நீர் மல்கியது.

'நேற்று இரவு எத்தனை அக்கறையோடு, எனக்கு டிபன் எடுத்து வந்தாள் மூடன் நான் என்று தன்னையே நொந்து கொண்டான். மெல்ல அவனருகில் அமர்ந்து நெற்றியை வருடினான்.

கங்கா போனில் அழைத்தாள். "தம்பி! அவளைக் கடுமையாகப் பேசாதே. பாவம், ரொம்ப களைத்திருக்கிறாள்."

"அக்கா! எனக்கு இதைக் கேட்டதும் தான், இன்னும் ரொம்ப வருத்தமாக இருக்கிறது. சுமி என் உயிர் அக்கா. சத்தியமாக இனி ஒரு முறை இது போல் நடக்காது நான் பார்த்துக் கொள்கிறேன். அவள் எழுந்ததும் போன் செய்கிறேன். நீங்கள் சாப்பிட்டு விடுங்கள் ராமசாமி தாத்தாவுக்கு டிபன் கொடுத்தாச்சா?

"ஆச்சு தம்பி."

அவனின் கரம் பட்டதும் மெல்ல கண் வழித்த சுமி, அவனை அருகில் கண்டு, இதழ் துடிக்க அவன் கைகளைப் பற்றி, "வந்து விட்டீர்களா? என்னை மன்னித்து விடுங்கள். நான் இனி ஒரு போதும் அப்படிச் செய்ய மாட்டேன். ப்ளீஸ்."

வேதனையோடு கண்களை மூடித்திறந்தவன், "என்னைக் கொல்லாதேடா. நான் பேசிய பேச்சுக்கு, நீதான் என்னை மன்னிக்க வேண்டும். என்னை மன்னிப்பது உனக்குக் கஷ்டம் தான. நான் பேசியது தான் அப்படி!

கண்மணி! என்னை மன்னித்துவிடு. எனக்கு உன்மேல் உண்மையான அன்பு இருந்தால், உன் மனம் மாறும் வரை பொறுமையாகக் காத்திருந்திருக்க வேண்டும்.

தவறு முழுவதும் என்மேல் தான். ஸாரி கண்ணம்மா. இனி ஒரு போதும் இது போல நடக்காது.

அக்கா போன் பண்ணியபோது துடித்துப் போனேன். உன்னை வந்து பார்க்கும் வரை, என் உயிர் என்னிடம் இல்லைடா. உனக்கு ஏதாவது என்றால் என்னைஉயிரோடு பார்க்க முடியாது..."

அவள் கரங்களில் முகத்தைப் பதித்தான். சுமியின் கரங்கள் ஈரமாகவும் பதறியபடி அவனை அணைத்து கண்களைத் துடைத்தாள். அவன் கன்னங்களில் முத்தமிட்டாள்! அவனை இறுக அணைத்துக் கொண்டவனின் மனமும் அமைதியடைந்தது.

அவன் மார்பில் சாய்ந்து, "சாரி, என் மேல் தான் தவறு. உங்களைக் கவனிக்கவே இல்லை உங்கள் அன்பை நான் எப்போதோ புரிந்து கொண்டேன்... ஆனால் காதலை வெளிப்படுத்தத்தான் கூச்சமாக இருந்தது. சாரி."

"என்னிடம் உனக்கு எதற்கு வெட்கம்? போதும் போகட்டும் என்று எல்லாவற்றையும் மறந்து விடுவோம். சரியா?

"என் பிரச்சனையே அது தானே ராம்!" என்றவளை ஆசையோடு முத்தமிட்டாள்.

"நீ ராம் என்று கூப்பிட்டதும் எனக்கு எத்தனை சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா. தேங்கஸ் டியர்."

"அச்சச்சோ. வர்ஷாவை மறந்தே போனேன். காலையிலிருந்து அவளைப் பார்க்கவே இல்லையே. நான் போய்ப் பார்த்து வருகிறேன் பாவம் பசிக்கு என்னைத் தேடியிருப்பாள்."

அவசரமாக எழுந்தவளைக் கைப்பிடித்து நிறுத்தினான். "ஏய் ஓடாதே, அவள் குளித்துச்



சாப்பிட்டுவிட்டு, தூங்கி விட்டாள். உன் புருஷன் தான் காலையிலிருந்தே பட்டினி. பாவமாக இல்லையா?

சுமிக்கும் பசியில் வயிறு கூப்பாடு போட்டது. பாத்ருமுக்கு சென்று முகம் கழுவி வருவதற்குள், ராம் போன் செய்ததும், ஜமுனா டிபன் கொண்டு வந்து கொடுத்திருந்தாள். அதை டைனிங் டேபிளில் வைத்து சாப்பிடத் தயாராக அமர்ந்து இருந்தான்.

அவளையும் தன் அருகில் அமரவைத்து, தோசையை சட்னியில் தோய்த்து, முதலில் அவளுக்கு ஊட்டி விட்டான். சுமி விழி விரித்து அவனை நோக்கவும், "நம் திருமணம் ஆன நாள் முதல், நாம் சேர்ந்து சாப்பிடும் போது, முதலில் ஒருவருக்கொருவர் ஊட்டி விட்டு, பிறகு தான் சாப்பிட ஆரம்பிப்போம். அது இப்போது வரை மிஸ் ஆனதே இல்லை. ஆக்ஸிடென்டுக்குப் பிறகும் நான் முதல் விள்ளலை ஒதுக்கி வைத்து விட்டுத் தான் சாப்பிடுவேன்."

"ஓ! அது தானா! நானும் கவனித்தேன்" முகம் மலர ஆசையோடு அவளும் ஊட்டினாள். பின் கதை பேசியபடி சாப்பிட்டவனின் மனமும் வயிறும் ஒருங்கே நிறைந்தது."

"சுமி, வர்ஷாவை மேலே தூக்கி வருகிறாயா? நான் சாயங்காலம் தான் ஹாஸ்பிட்டல் போகிறேன். அதற்குள் உன்னோடு கொஞ்சம் பேச வேண்டும் அவளை தூக்கிக் கொண்டு சீக்கிரம் வா."

"ம்." கீழே வர்ஷா "ஆ.. ஊ..." என்ற எல்லோரையும் மழலையில் ஆட்டி வைத்துக் கொண்டிருந்தாள். தன் தாயை வெகு நேரம் பார்க்காததால், சுமியைப் பார்த்ததும் சிணுங்கிக் கொண்டே அவளிடம் தாவினாள்.

கங்கா சுமியின் தெளிந்த முகத்தைக் கண்டு திருப்தியுற்று, "வர்ஷா உன் ஞாபகம் வந்து தேடினாள். மாடிக்குப் போய் கொஞ்சம் ஃபீட் பண்ணு. தம்பி கிளம்பி விட்டதா?"

"இல்லை அக்கா. அவர் சாயங்காலம் போனால் போதுமாம். காலையில் ரெஸ்ட் தான்."

"சரி. நீ போய் தம்பியுடன் பேசிக் கொண்டிரு. உனக்கு ஒன்றும் வேலை இல்லை. மதியச் சாப்பாட்டை மாடிக்கே அனுப்பி வைக்கிறேன். தம்பி இது மாதிரி பகலில் வீட்டில் இருப்பதே அதிசயம் தான். நீ அவன் கூட இருந்தால் ஏதாவது பேசிக் கொண்டிருப்பான். போ."

எப்போதும் ராமைப் பார்த்ததும் தாவிக் கொண்டு வருபவள், இன்று ஏனோ போக மறுத்து, சுமியின் தோளில் முகம் புதைத்துக் கொண்டாள்.

"வர்ஷா குட்டிக்கு என்னாச்சு? ஏன் அப்பா கிட்ட வரலை?"

"வந்து, அவளுக்கு காலையிலிருந்து நான் ஃபீட் பண்ணவே இல்லை. அந்த ஞாபகத்தில் தான் யாரிடமும் போக மாட்டேன் என்கிறாள். ப்ளீஸ்! ஐந்து நிமிடம்! முகம் சிவக்கப் பேசியவளின் கன்னத்தில் தட்டி, "சரி, அதற்குள் நான் குளித்து விடுகிறேன்." டவலோடு பாத்ருமுக்குள் நுழைந்தான்.

குளித்து விட்டு, பர்முடாஸ், டீ-சர்ட்டில் வந்தவனை கண்சிமிட்டாது பார்த்தாள்.

அவளிடம் சொடக்குப் போட்டு, "ஏன் அப்படிப் பார்க்கிறாய்! இந்த சின்னப் பையனுக்கு கண் பட்டுவிடும் போல இருக்கிறது! நான் கொஞ்சம் சுமாராக இருக்கிறேனா?" கண் சிமிட்டினான்.



அதற்குள் வர்ஷா அவனிடம் தாவினாள். "என் செல்லக்குட்டி" என்று முத்தமிட்டவன், வெகுநாட்களுக்குப் பிறகு அவளை தன் மடியில் உட்கார வைத்து, விளையாட்டுக் காட்டினான். சுமி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். "இங்கே வா" அவளைத் தன் அருகில் உட்கார வைத்தான்.

"நானும் குளித்து விட்டு வருகிறேன். வந்து ஜூஸ் கொடுத்து வர்ஷாவை தூங்க வைக்க வேண்டும். அவள் குளித்து விட்டு, தலை வாரி, பொட்டு வைத்தபின் முத்தமிட்டு, சுமியைக் கையைப் பற்றி ஹாலுக்கு அழைத்துப் போனான்.

"உன்னிடம் பேச வேண்டும்!"

"ஜூஸ் கொண்டுவரட்டுமா?

ஐயோ! வயிறு புல் உனக்கு வேண்டுமானால் கொண்டு வா."

"எனக்கு இப்போது முடியாது."

"சுமி" அவள் கையை வருடிக் கொண்டே, நம் வீட்டைப் பற்றி உனக்கு ஒன்றுமே தெரியாது இல்லையா? உன்னைப் பற்றி, நம் திருமணம் பற்றி, வர்ஷா பற்றி எல்லாமே பேச வேண்டும்.

"நீங்கள் நேற்று பூராவும் ரெஸ்டே எடுக்கவில்லை ராம். கொஞ்சம் தூங்கி எழுந்தால் நன்றாக இருக்கும். நாம் இன்னொரு நாள் பேசலாமே அவசரமில்லை."

நான் ஃப்ரஷ்ஷாகத் தான் இருக்கிறேன் சுமி. இதுபோல இனி எப்போது ஃப்ரீயாக இருப்பேன் என்று தெரியாது. கொஞ்சம் கேளேன்."

அவள் கைகளில் தன் கையைக் கோர்த்துக் கொண்டு சன்னமான குரலில் பேச ஆரம்பித்தான்.

"நான் உன்னை முதன் முதலில் வேளச்சேரி அருகில் உள்ள ஒரு அனாதை ஆசிரமத்தில் தான் சந்தித்தேன். அவர்களில் ஒருத்தியாக, பட்டாம் பூச்சியாக நீ துள்ளித் திரிந்து கொண்டிருந்தாய். பார்த்ததும் எனக்கு உன் மேல் ஒரு ஆர்வம். உன்னையே கவனிக்கத் தொடங்கினேன். என் அப்பா ஜெகதீஷ்"ம், அந்த இல்ல நிர்வாகி தயானந்த் அங்கிளும் க்ளோஸ் ஃப்ரண்ட்ஸ். அப்பா மிலிட்டரியில் டாக்டர். அவர் சொல்லித் தான், மாதம் ஒரு முறை அந்தக் குழந்தைகளை செக்கப் செய்வதற்காகப் போக ஆரம்பித்தேன்.

அப்போது நான் நியூரோ முடித்து விட்டு, ஒரு ஹாஸ்பிட்டலில் வேலைக்குச் சேர்ந்திருந்தேன். இல்லம் போகும் போதெல்லாம் என் கண்கள் உன்னையே வட்டமிடும். செக்கப்பிற்கு வரும் போது குழந்தைகளை நீதான் அழைத்து வந்து, எனக்கு உதவியாகக் கூடவே இருப்பாய். நான் வேண்டுமென்றே, உன்னிடம் பேச வேண்டும் என்பதற்காகவே, எதையாவது தேவை இல்லாததையெல்லாம் கேட்பேன். வெகுளியாக நீயும் பதில் சொல்வாய்.

உன் மேல் எனக்கு ஒரு அஃபெக்ஷன். பின் கொஞ்ச நாளில் அதுவே காதலாக மாறி உன் மேல் பைத்தியமாகிப் போனேன். செக்கப் இல்லாத நாட்களில் கூட, ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி உன்னை வந்து பார்ப்பேன்.

மெல்ல தயானந்த் அங்கிளிடம், "அங்கிள் சுமித்ரா என்ன படித்திருக்கிறாள்" என்று விசாரித்தேன்.

"எம்.ஃபில் படித்துக் கொண்டிருக்கிறாள்."

"அவள் எப்படி இங்கே?"



"அவள் ஆறு மாதக் குழந்தையாக இருக்கும் போதே, நம் இல்லத்துக்கு வந்து விட்டாள். நான் திருமணத்தில் நாட்டமில்லாமலே வாழ்க்கையை ஓட்டி விட்டேன். அதனால் என் வாழ்க்கையில் ஒரு பிடிப்பு வர வேண்டும் என்பதற்காக, சுமித்ராவை முறையாகத் தத்தெடுத்துக் கொண்டேன்."

"அங்கிள், நான் சுமித்ராவை விரும்புகிறேன். அவள் என் வாழ்வில் வந்தால், என் வாழ்க்கை பிரகாசமாக இருக்கும் அப்பாவிடமும் சம்மதம் வாங்கி விடுவேன்" என்றேன். நேரடியாக அவரிடம் தான் என் காதலைச் சொன்னேன். அவர், அவள் படிப்பு முடிய இன்னும் ஒரு வருடம் இருக்கிறது அதுவரை நீ காத்திருக்க வேண்டுமென்றால், "என் காலம் முழுவதும் அவளுக்காகக் காத்திருக்க தயார் அங்கிள்" என்றேன்.

பின் உன்னை வந்து பார்ப்பதும் போவதுமாக இருந்தேன். உன் படிப்பை எண்ணி என் காதலைச் சொல்லாமல், என் மனதுக்குள்ளே வைத்துப் பூட்டியிருந்தேன். ஆனால், தயானந்த் அங்கிள் என் அப்பாவிடம் இந்த விஷயத்தைச் சொல்லி விட்டார்.

அவரும் இல்லத்தின் நிர்வாகிகளுள் ஒருவர் என்பதால், அவரிடம் அன்பாகப் பேசி உபசரித்திருக்கிறாய், உன் பேச்சில் வெகுளித்தனம், பரிவு, புத்திக் கூர்மை எல்லாம் வெளிப்பட்டதாக என் அப்பா பிறகு ஒரு நாள் கூறினார்.

உன் எதிர்காலத் திட்டம் என்ன என்று கேட்டதற்கு பி.ஹெச்.டி., முடித்து விட்டு, நல்ல வேலையில் அமர்ந்து, அந்தத் தொகையை இல்லத்துக்கு வழங்கி, அப்பாவுக்கு உதவியாக இருப்பேன் என்று கூறினாய். அவருக்கு

உன்னை மிகவும் பிடித்து விட்டது. நீ தான் என் மருமகள் என்று அங்கிளிடம் சொல்லி விட்டார். இது எனக்குத் தெரியாது. நம் திருமணத்தின் போது அங்கிள் தான் இதை விவரமாக சொன்னார். ஏனென்றால் நம் திருமணத்துக்கு ஒரு வாரம் முன்பு, என் அப்பா நம்மை விட்டுப் போய் விட்டார் என்றவனின் குரல் கலங்கித் தடுமாறியது.

ஆறுதலாக அவனை அணைத்துத் தோளில் சாய்ந்த சுமி, அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவளாலும் பேச முடியவில்லை. அவள் நெற்றியில் முத்தமிட்டு பேச்சைத் தொடர்ந்தான்.

நீ படித்து முடிக்கும் வரை உன்னிடம் நான் என் காதலைச் சொல்லவேயில்லை. அப்பா எனக்காக இந்த ஹாஸ்பிட்டலை கட்ட ஆரம்பித்து, முடிக்கும் தருவாயில் இருந்தது. உன் படிப்பும் முடிந்ததும், பி.ஹெச்.டி., ஆரம்பித்தாய். அதற்கு மேல் உன்னை விட்டு விலகி இருக்க என்னால் முடியவில்லை. அப்பாவிடம் மெதுவாக உன்னைப் பற்றிய பேச்சை ஆரம்பித்தேன்.

"அப்பா."

"ம். என்னப்பா."

"நான் தயானந்த அங்கிள் பெண் சுமித்ராவை விரும்புகிறேன்."

"அவனுக்குத் தான் கல்யாணமே ஆகவில்லையே."

"அவர் தத்தெடுத்திருக்கிறாரே, அந்த சுமித்ராவைத் தான்பா சொல்கிறேன்."

"ம். அப்புறம்."

"அவளைத் தவிர என் மனதில் யாருக்கும் இடமில்லை."



"தயானந்துக்கு என்னடா இருக்கிறது? அவன் சம்பாதித்தது எல்லாமே இல்லத்தில் கொட்டி, ஒன்றும் இல்லாதவனாக இருக்கிறான். அவன் மகளுக்கு அவன் என்ன செய்வான்?" சீண்டினார்.

"அப்பா, நீங்களா இப்படி பேசுவது? அப்பா, என் சுமித்ரா நம் வீட்டிற்கு வந்தால், அவளே நமக்குப் பெரிய சொத்துப்பா! நல்ல பண்பும் படிப்பும் இருக்கிறது. வேறு என்ன வேண்டும்? கண்டிப்பாக அவள் உங்களுக்கு நல்ல மருமகளாக இருப்பாள்."

"டேய், நீ ஜமீன்தார் வீட்டுப் பிள்ளை. ஜமீன் வம்சம்! தெரியுமில்லையா? பின்னால் ஒன்றும் இல்லாதவளைக் கல்யாணம் செய்து கொண்டேனே" என்று வருந்தக் கூடாது"

"அப்பா, அவள் அன்பு மட்டுமே போதும். அதற்கு மேல் வேறு என்னப்பா...?"

"சுமித்ரா என்ன சொல்கிறாள்?"

"இன்னும் அவளிடம் பேசவில்லை. முதலில் உங்கள் சம்மதம் கிடைத்த பின் தான், அவளிடம் பேச வேண்டும் என்று இருக்கிறேன்."

"என் சம்மதம் கிடைக்காவிட்டால்?"

"நீங்கள் அப்படிச் செய்ய மாட்டீர்கள். ஆனாலும் உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், கண்டிப்பாக நான் சுமித்ராவிடம் இது பற்றி பேசப் போவதில்லைப்பா. அவளுக்கு ஒரு நல்ல ஃப்ரண்டாக எப்போதும் இருப்பேன்.

அப்பா, ஆனால் ஒன்று, நான் உங்கள் விருப்பத்தை மதிப்பது போல, நீங்களும் என் முடிவை ஏற்றுக் கொள்ள வேண்டும். கடைசிவரை உங்கள் மகனாக மட்டும் இருக்க என்னை அனுமதிக்க வேண்டும். என் மனதளவில், சுமித்ரா

என்றோ! என் மனைவியாகிவிட்டாள். அதுவே எனக்குப் போதும். இனி, திருமணம் என்ற பேச்சுக்கே என் வாழ்வில் இடமில்லை ப்ளீஸ்பா!

அப்பா அருகில் வந்து, அவனை இறுக அணைத்துக் கொண்டார்.

"உன் ஆசையை விட, எனக்கு என்ன பெரிசு, ராம்? தயானந்திடம் பேசி, கூடிய சீக்கிரம் திருமணத்தை வைத்துக் கொள்ளலாம். நாளைக்கே என் மருமகளைப் போய்ப் பார்க்கிறேன்."

"தேங்க்ஸ்பா." கன்னத்தில் முத்தமிட்டு துள்ளிக் குதித்தான்."

சுமி, ராம் தன் மீது வைத்திருந்த காதலைப் பார்த்த கண் கலங்கினாள். அவள் முதுகை மெல்ல வருடினான்.

"அப்பாவும் அங்கிளும், மே மாதம் பதினைந்தாம் தேதி முகூர்த்தம் ஃபிக்ஸ் பண்ணியிருந்தார்கள். அதன் பின் தான் நான் என் காதலை உன்னிடம் சொன்னேன். அப்போது இல்லத்துக் குழந்தைகளுடன் புள்ளி மானாய் ஓடி விளையாடிக் கொண்டிருந்தாய். அந்தத் தருணம், "சுமித்ரா."

"வாங்க டாக்டர். அப்பா பிரார்த்தனைக் கூடத்தில் இருக்கிறார். போன வாரம் தானே செக்கப் முடிந்தது?"

"ம், நான் உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்."

"என்னிடமா? விழி விரித்தாள்.

"ம்."

"என்ன விஷயம் டாக்டர்?"

"அது... வந்து..."

"ஒரு நிமிடம், நான் அப்பாவிடம் சொல்லி விட்டு வந்து விடுகிறேன்."



திருமணம் முடிவு செய்த பின் உன்னிடம் அதைப் பேச அபத்தமாகத் தான் இருந்தது. ஆனாலும் உன் விருப்பம் பற்றி கண்டிப்பாக எனக்குத் தெரிய வேண்டும் என்று நினைத்தேன். நீ வந்தவுடன், மெல்ல தோட்டத்துக்குள் நடந்தோம். அங்கிருந்த பெஞ்சில் அமரச் சொன்னதும், என்னைப் புரியாத பார்வை பார்த்தாய். எனக்கும் படபடப்பு! எப்படி ஆரம்பிப்பது என்று தெரியவில்லை.

"எக்ஸாம் நன்றாக எழுதியிருக்கிறீர்களா சுமித்ரா? பி.ஹெச்.டி., எந்த லெவலில் இருக்கிறது?"

"இதைக் கேட்கவா இத்தனைத் தயக்கம்? கண்டிப்பாக யூனிவர்சிட்டி ரேங்க்- கூட எதிர்பாக்கிறேன் டாக்டர்."

"அதன் பிறகு?

"பி.ஹெச்.டி., முடித்து விட்டு, நிறையச் சம்பாதிக்க வேண்டும். இல்லத்தை விரிவுபடுத்தி அப்பாவுக்கு என்னால் ஆன எல்லா உதவிகளையும் செய்வேன்."

"திருமணம்?"

"தேவையில்லை டாக்டர்."

"சரி, நான் உனக்கு நல்ல வேலை வாங்கிக் கொடுக்கிறேன். அதன் பிறகு பி.ஹெச்.டி., படிங்க."

"என்ன வேலை டாக்டர்" என்றாள் ஆர்வத்தோடு

"எனக்கு மனைவி என்ற வேலை தான். எஸ் சுமி. ஐ லவ் யூ! உன்னைத் திருமணம் செய்ய ஆசைப்படுகிறேன். என் மனைவியாக, தோழியாக, எப்போதும் என்னோடு வருவாயா?" தடுமாற்றத்தில் குரல் குழைய, தலையைக் கோதி என்னை சரிப்படுத்திக் கொண்டேன்.

திகைப்புடன் அவனைப் பார்த்தாள். "டாக்டர்!"

"ஆமாம் சுமி. ஒரு வருடத்துக்கும் மேலாக உன்னைக் காதலிக்கிறேன். உன்னை என் கண்ணுக்குள் வைத்துக் காப்பாற்றுவேன். நீ இல்லாத வாழ்வை, என்னால் நினைத்துப் பார்க்கவே முடியாது. இனி தேவை உன் முடிவு தான்!"

பதில் பேச முடியாது. பேசத் தெரியாது தலை குனிந்து அமர்ந்திருந்தாய். சுமிக்கும் அவனை மிகவும் பிடிக்கும். ரெகுலர் செக்கப்பிற்கு அவன் வரும் தேதிகளில் அவன் வராவிட்டால், தவித்துப் போவாள்.

அன்று முழுவதும் வேலையே ஓடாது. அவனும் அப்படி இருந்தால் போன் செய்து விடுவான். அவன் குரலைக் கேட்டதும் தான் கொஞ்சம் நிம்மதியாக இருக்கும். பிறகு தான் வேலையில் கவனம் போகும். இது தான் காதலா என்று அவளுக்குத் தெரியவில்லை. தெரிந்தாலும் அவனிடம் எப்படிச் சொல்வது என்று மனம் குழம்பித் தவித்தது.

அவன் அவளது மௌனத்தை தவறாகப் புரிந்து கொண்டான். "சுமி! உனக்கு என்னைப் பிடிக்கவில்லை என்று தெரிகிறது. பரவாயில்லை. இதில் இருவரின் சம்மதமும் முக்கியம். என் மனதைச் சொன்ன பிறகு, இனி உன்னை வந்து பார்க்க எனக்குத் தைரியமில்லை.

செக்கப் செய்ய இனி வேறு டாக்டரை ஏற்பாடு செய்து விடுகிறேன். அப்பா மட்டும் வந்து செல்வார். நான் இனி உன்னை தொல்லை செய்ய மாட்டேன். அங்கிளிடம் நீயே சொல்லி விடு பை சுமி!" வருத்தத்துடன் எழுந்தேன்.



எங்கே நான் உன்னை விட்டுப் போய் விடுவேனோ என்ற பயத்தில், வேகவேகமாக எழுந்து என் கைகளைப் பற்றினாய். நான் எதுவும் பேசாது உன்னையே தான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

"டாக்டர்! வந்து நான்..."

அதற்குள் அப்பா வந்து விட்டார்.

"என்ன மருமகளே! என் மகன் இப்போதாவது உன்னிடம் தெளிவாகக் காதலைச் சொல்லி விட்டானா?" என்றதும் முகம் சிவக்க, என் அப்பாவின் கால்களில் பணிந்தாய்.

நான், "போங்கப்பா! கரெக்டான நேரத்தில், தப்பாக வந்து சொதப்பி விட்டீர்கள். இப்போது உங்களுக்கு இங்கே என்ன வேலை? சுமி ஏதோ சொல்லத் துவங்கும் போது, குறுக்கே புகுந்து விட்டீர்கள். நான் மட்டும் தான் ப்ரபோஸ் செய்தேன். உங்களை!! அங்கிளிடம் பேசிக் கொண்டிருக்க வேண்டியது தானே? போங்கப்பா."

அப்பா வாய் விட்டுச் சிரித்தார். "சரி! சரி! மே பதினைந்து கல்யாணம். அதற்குள் சொல்லி முடித்து விடுங்கள். என்னம்மா?" என்றார்.

நீ ஓடப் பார்த்தாய். நான் உன் கைகளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். அப்பா போன பின்பும் நீ தலை நிமிரவேயில்லை.

"சுமி!

"என்னைப் பார்!"

"ம்ஹூம்."

"சரி நான் போகிறேன். உனக்குக் கல்யாணத்தில் இஷ்டமில்லையென்று அப்பாவிடம் சொல்லி விடுகிறேன்" என்று முகத்தை கோபமாக திருப்பிக் கொண்டேன்.

"டாக்டர் ப்ளீஸ்!"

"என்ன ப்ளீஸ்!"

"என் அப்பாவுக்கு விஷயம் தெரியுமா?"

"அவருக்கு தெரியாமலா? திருமணத்துக்கு நாள் குறிப்பார்கள். அவருக்கு ஒரு வருடம் முன்பே சொல்லி, அவர் சம்மதமும் தந்து விட்டார்.

"அப்போ, நான் தான் கடைசியா?" என்று முறைத்தாய்.

"உன் சம்மதம் தான் கிடைக்கவில்லையே! உண்மை சுமி! உன் வாயால் சம்மதம் சொன்னால் தான் மேலே ப்ரொசீட் பண்ணுவேன்."

"சம்மதம்!" முகம் சிவக்கத் தலைகுனிந்தாய்.

"எதற்கு?"

"டாக்டர்." என்று சிணுங்கினாய்.

"அப்போ, நீ என்னைகாதலிக்கவில்லை எங்கள் கட்டாயத்தினால் சம்மதிக்கிறாய் அது தானே?" சீண்டினேன்.

"அதெல்லாம் இல்லை டாக்டர்" என்று பதறினாய்.

"பின்னே?"

"ஐ லவ் யூ ராம்." என் தோளில் நீ சாய்ந்த போது, என் சந்தோஷத்தை அளவிடவே முடியாது போனது. என் வாழ்நாளில் நான் பொக்கிஷமாக நினைவு கூறும் தருணமது."

"என் சுமி" என்று உன் முகத்தை நோக்கிக் குனிந்த போது, என்னைத் தள்ளி விட்டு உள்ளே ஓடியே போய் விட்டாய்."

இன்றும் அதை எண்ணி உல்லாசமாகச் சிரித்தான்.

"ச்சு. கேலி பண்ணாதீர்கள்! அப்புறம் என்ன நடந்தது?"



ஆவலாக கேட்டாள்.

"அப்புறம்... விழுப்புரம் தான்! அன்று கொடுக்காமல் போனதை, இன்று வசூல் செய்துவிட்டுத் தான் மீதி கதை தொடரும்."

அந்தி வானமாய் சிவந்தவளை, இறுக அணைத்து கொடுக்கல், வாங்கலை கறாராய் முடித்தான்.

"தினமும் உன்னை வெளியே கூட்டிப் போய் புடவை, நகை, சுடிதார் என்று ஆசைப்பட்டதையெல்லாம் வாங்கிக் குவித்தேன்.

நம் திருமணத்திற்கு முன், காதலர்களாக சுற்றித் திரிந்தது அந்தப் பத்து நாட்கள் தான். வானில் சிறகடித்துப் பறந்தோம். திருமணத்துக்குப் பத்து நாட்கள் இருக்கும் போது அப்பா, அங்கிளுடன் போய் முகூர்த்தப் புடவை, மாங்கல்யம் வாங்கினோம். அப்பா ரிசப்ஷனுக்கு ஹோட்டல் ஒன்றில் சொல்லி வைத்திருந்தார். நாளைக்கு டின்னர் மெனுவை பேசி முடிப்பது என்று முடிவு செய்திருந்தோம்.

அப்பா உடனே ஹாஸ்பிட்டல் கட்டிட வேலையைப் பார்க்கக் கிளம்பினார். நான், "அப்பா இரண்டு நாட்களாக அலைச்சல் வீட்டிற்குப் போய் இன்று ரெஸ்ட் எடுங்கள் நாளை பார்த்துக் கொள்ளலாம்" என்றேன்.

"இல்லை, இன்று லாபியில் டைல்ஸ் ஒட்டுவதால் நான் கூட இருக்க வேண்டும். நான் போய் ஒரு மணி நேரம் இருந்து இன்ஸ்ட்ரக்ஷன் மட்டும் கொடுத்து விட்டு வருகிறேன்" என்றார்.

நான் உன்னுடன் போனில் பேசினேன். இரவு அப்பா களைத்துப் போய் லேட்டாக வந்தார்.

"ஏன்பா லேட்?"

"லிப்ட் ஆட்கள் பேச வந்தார்கள் அது தான் லேட். கட்டிடம் சீக்கிரம் முடிக்க வேண்டும் ராம். உன் மேரேஜ் முடிந்ததும், திறப்பு விழா இருக்கும் படி செய்ய வேண்டும். எந்தக் காரணத்திற்காகவும், இந்த இரண்டையும் தள்ளிப் போடவே கூடாது!" எதற்காக அவர் வாயிலிருந்து இந்த வார்த்தை வந்தது என்று அப்போது புரியவில்லை சுமி!

"அப்பா, ஏனோ இன்று ரொம்ப டயர்டாக இருக்கிறீர்கள். காலையில் நான் போய்ப் பார்த்துக் கொள்கிறேன். ஈவினிங் ஹோட்டல் போய் டின்னர் ஃபிக்ஸ் பண்ணலாம்."

"நாளை உனக்குத் தான் வேலை. போய் தூங்குப்பா!"

காலையில் சீக்கிரமே எழுந்து குளித்து விட்டு ரெடியானேன். இல்லத்துக்கு வந்து, உன்னைப் பார்த்து விட்டு பிறகு ஹாஸ்பிட்டல் போக நினைத்திருந்தேன். கங்கா அக்கா அப்போதே நம் வீட்டில் தான் இருந்தார். அப்பா தான் அவரை வேலைக்குச் சேர்த்திருந்தார்.

அவரிடம் போய் டிபன் வைக்கச் சொல்லி சாப்பிட்டு விட்டு, அப்பாவிடம் சொல்லி விட்டுப் போக அவர் ரூமுக்குப் போனபோதும் தூங்கிக் கொண்டிருந்தார்.

"அப்பா நான் சுமியைப் பார்த்து விட்டு அப்படியே வேலைக்குப் போகிறேன். நீங்கள் இன்று எங்கும் அலைய வேண்டாம் வீட்டிலேயே ரெஸ்ட் எடுங்கள்" என்றதற்கு பதில் இல்லை.

"அப்பா! பக்கத்தில் போய் தொட்டு எழுப்பினேன். உடம்பு ஜில்லிட்டிருந்தது. எனக்குப் பயமாக இருந்தது. பல்ஸ் பார்த்ததும் தெரிந்து விட்டது. இனி எனக்கென்று



யாருமில்லை என்று! என் செல்ல அப்பா தெய்வமாகி விட்டார் என்றும்!"

தன் தந்தையின் நினைவில் கண் கலங்கினான். அவனால் பேச முடியவில்லை. அவன் முதுகை வருடிக் கொடுத்தவள், எழுந்து போய் ஜூஸ் கொண்டு வந்தாள்.

அவன் தோளை அணைத்து, "ம், குடியுங்கள்" என்றாள்.

அவன் மெல்ல தலையசைத்து விட்டு, வாங்கிக் குடித்ததும் அருகில் வந்து அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

"ம். அத்தை. உங்கள் அம்மா."

"அம்மா மிகவும் சாஃப்ட் அதிர்ந்து பேசக் கூட தெரியாது. மிகவும் அழகாக இருப்பார்கள் அப்பா மிலிட்டரியில் இருந்ததால் நாங்கள் சேர்ந்திருந்த நாட்கள் குறைவு.

மிலிட்டரி சர்வீஸ் என் அப்பாவின் வாழ்நாள் கனவு. ஆனால், என் தாத்தா தஞ்சாவூரில் பெரிய ஜமீன் பரம்பரை. ஆயிரக்கணக்கான ஏக்கரில் நிலபுலன்கள் உள்ள அவருக்கு என் அப்பாதான் ஒரே மகன். ஊரிலும் எதிர் பேச்சே கிடையாது.

அவரிடம் வேலை செய்த மேனேஜரின் மகள் தான் என் அம்மா விஜயா. அப்பாவை சென்னையில் மருத்துவம் படிக்க அனுப்பியிருந்தார். லீவுக்கு வரும் போது, எப்படியோ என் அம்மாவுடன் பழக்கம் ஏற்பட்டு, என் அம்மாவை திருமணம் செய்ய ஆசைப்பட்டார். ஆனால், என் தாத்தாவுக்கு அந்தஸ்து மோகம்! மறுத்து விட்டார்.

என் அப்பா படித்து முடித்து, சென்னையில் வேலைக்குச் சேர்ந்தார். அரசாங்க ஹாஸ்பிட்டலில்

வேலை. என் தாத்தா திருச்சி அருகே வேறு ஏதோ ஒரு ஜமீன்தாரின் மகளைப் பேசி முடித்தார். ஆனால் என் அப்பா அதற்குச் சம்மதிக்காமல் அவரிடம் போராடிப் பார்த்தார்.

பின்பு அம்மாவைக் கூட்டிக் கொண்டு சென்னை வந்து பதிவுத் திருமணம் செய்து கொண்டார். என் தாத்தா, கோபத்தில் என் அப்பாவை விலக்கியதில், உறவு முறிந்தது. அப்பா, என் அம்மாவோடு சந்தோஷமாக குடும்பம் நடத்தியதற்குச் சாட்சியாக நான் பிறந்தேன்.

என் அப்பா அடிக்கடி சொல்வார், 'ராம் நான் உன் அம்மாவோடு வாழ்ந்த வாழ்க்கை ஒரு கவிதைடா' என்று! அப்போதே, என் வாழ்க்கையும் அது போலத் தான் இருக்க வேண்டும் என்று பல முறை நினைத்திருக்கிறேன்.

பார்வையிலேயே ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்வார்கள். மனவேறுபாடு வந்ததே இல்லை. என் அம்மாவின் அப்பாவை என் அப்பா அழைத்து வந்து கூடவே வைத்துக் கொண்டார். பின் என் அப்பா மிலிட்டரியில் சேர்ந்ததும், என் தாத்தாவின் அன்பான பாதுகாப்பில் இருந்தோம். மெல்ல மெல்ல வசதி வாய்ப்புகள் வந்தது.

நானும் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தபோது, என் அம்மாவுக்கு ஹார்ட் பிராப்ளம். யாரிடமும் அதைச் சொல்லாமல் மறைத்து விட்டார்கள். சொன்னால் அப்பா ஆசைப்பட்டு சேர்ந்த வேலையை விட்டு வந்து விடுவார் என்று! நான் மருத்துவக் கல்லூரி இரண்டாம் ஆண்டு படிப்பை முடித்து லீவில் இருந்த போது, அம்மாவின் உடல்நிலை ரொம்ப மோசமானது ஒரு நாள் அம்மா



மயங்கி விழுந்ததும், நான் அப்பாவுக்கு போன் செய்ததும் பதறியடித்துக் கொண்டு வந்தார். ஆனால் அவரால் என் அம்மாவை காப்பாற்ற முடியவில்லை. சிறிது நேரம் கண் மூடி அமர்ந்தான்.

அப்பாவுக்கு என்னைப் பிரிய மனமில்லாது போனதில் சென்னையிலேயே வந்து செட்டிலானார். என்னைத் தாயாக, தோழனாக, நல்ல தந்தையாக அன்பைப் பொழிந்து கவனித்தார்.

உன்னிடம் நான் கொண்ட அன்பும் காதலும், அவரைப் பார்த்து என் மனதில் பதிந்து போனது தான் சுமி. தயானந்த் அங்கிளுடன் சேர்ந்து இல்லத்தை நிர்வகிக்கத் துவக்கினார்.

ஷேர்ஸ், ரியல் எஸ்டேட் என்று புகுந்தார். சின்ன கிளினிக்கும் வைத்திருந்தார் செல்வம் பெருகியதில் இந்த வீட்டைக் கட்டினார். பின் ஹாஸ்பிட்டலுக்கு இடம் வாங்கிக் கட்ட ஆரம்பித்தார் அந்த வேலையில் அவர் பிஸியாக இருந்ததால் தான், என்னைக் குழந்தைகளுக்கு செக்கப் செய்ய இல்லத்துக்கு அனுப்பியபோது உன்னைப் பார்த்தேன். திருமணம் இன்றும் ஒரு வாரத்தில் என்னும் போது அப்பாவைப் பிரிந்தேன்.

திருமணம் பற்றி யாருக்கும் ஒன்றும் புரியவில்லை. அங்கிள் சொன்னவுடன் தான் அதே நாளில் திருமணம் செய்ய முடிவெடுத்தேன். திருமண நாளன்று இல்லத்தில் மாலை மாற்றி, திருமணத்தைப் பதிவு செய்தோம். அங்கிள் பதினாறு நாட்கள் கழித்து, ஒரு நல்ல நாள் பார்த்து உன்னை வீட்டுக்கு கூட்டிப் போகச் சொன்னார். நம் திருமணம் முடிந்து நீ இல்லத்திலேயே தங்கிவிட்டாய் நான் தினம் தினம் வந்து உன்னை பார்த்துச் செல்வேன்.

ஒரு முகூர்த்த நாளில், நீ நம் வீட்டில் அடியெடுத்து வைத்தாய். அப்பா படத்தின் முன் நின்று நான் உனக்குத் திருமாங்கல்யத்தை அணிவித்தேன். மோதிரம் மாற்றிக் கொண்டோம். குங்குமத்தை உன் நெற்றியில் இட்டதும் மனதுக்கு நிறைவாக இருந்தது. அங்கிளை வணங்கி எழுந்தோம் அவ்வளவு தான்.

நீ என் அருகில் இருந்தது மிகவும் ஆறுதலாக இருந்தது. பின் சில மாதம் கழித்து திருமண வாழ்வை ஆரம்பித்தோம். சொல்லும் போதே ராமின் முகமும் சிவந்து போனது. சுமி அவன் தோளில் முகம் புதைத்தாள்.

மெல்ல நம் வாழ்விலும் வசந்தம் வீச ஆரம்பித்து, சந்தோஷமே வாழ்க்கையானது. நாம் இருவரும் ஒருவருக்கொருவர் இணைபிரியாது மகிழ்ச்சியாக இருந்தோம். அங்கிள் அடிக்கடி நம்மை வந்து பார்த்துச் செல்வார்.

பின் ஹாஸ்பிட்டல் திறப்பு விழா நடைபெற்ற பின், நான் முழுநேரம் நம் ஹாஸ்பிட்டலில் வேலை செய்தேன். பல துறை மருத்துவமனையாக மாற்றியதில், கொஞ்சம் கொஞ்சமாக ராம் மருத்துமனை பிரபலமானது. கூடவே எனக்கும் பேரும் புகழும் சேர்ந்தது.

ஹாஸ்பிட்டல் ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வாரம் நாம் காஷ்மீர் சென்றோம். அப்போது தான் அப்பாவை பிரிந்த எனக்கு உன் நேசம். மிகுந்த ஆறுதலைத் தந்து, நான் அனாதை என்ற உணர்வைப் போக்கியது. என்னை விட்டு நீ ஒரு கணமும் பிரிய மாட்டாய். நம் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை ஆனந்தத்தின் உச்சியில் இருந்தோம்.



# 12

நம் வாழ்வில் வசந்தமாய் வந்த வர்ஷாவை கருவில் இருக்கும் போதே கொண்டாடினோம் என்ற போது அவன் கண்கள் மகிழ்ச்சியில் பளபளத்தது.

"அப்பா?"

"அங்கிள் இல்லத்தில் தான் இருப்பார் நாம பெங்களூர் போகும் போது, அவரைப் போய் பார்த்து விட்டு தான் போனோம். அங்கு போய் இரண்டு முறை போன் கூட செய்தோம். அப்போது தான் அங்கிள் பதினைந்து நாள் வடஇந்திய் டூர் கிளம்புவதாகச் சொன்னவர், நேற்று வந்ததும் போன் செய்தார். நான் சண்டே வருவதாகச் சொல்லியிருக்கிறேன்.

அவரிடம் ஆக்ஸிடெண்ட் பற்றி எதுவும் சொல்லவில்லை. தேவைப்பட்டால் சொல்லலாம்."

அதற்குள் வர்ஷா நெளியத் தொடங்கினாள். அவளைத் தூக்கி தன் மடியல் படுக்க வைத்த ராம்,

"சுமி, வர்ஷிக்கு ஆறு மாதமாகிறது இனி சாதம், காய், பருப்பு, கீரை, தயிர், எலலாமே கொடுக்க ஆரம்பிக்க வேண்டும். பசி தாங்காமல் தான் சீக்கிரம் எழுந்து விடுகிறாள். வயிறு நிறைய ஊட்டி விட்டு தூங்க வைத்தால், இன்றும் அதிக நேரம் தூங்குவாள். அங்கிளிடம் கேட்டு விட்டு சண்டே கூட ஊட்டி விடலாம். ஆனால் நீ ஃபீட் பண்ணுவதை நிறுத்தி விடாதே! ஒரு வருடம் வரை தாய்ப்பால் அவசியம் சுமி"

அதற்குள் வர்ஷா தூக்கம் முழுவதுமாகக் கலைந்து தன் தந்தையை பார்த்துச் சிரித்தாள்.

"என் பட்டுக் குட்டி எப்படி சிரிக்கிறாள் பார் பெரும்பாலும் குழந்தைகள் அழுது கொண்டே தான் எழும். என் வர்ஷாவுக்கு மட்டும் தான் சிரிப்பு! குனிந்து முத்தமிட்டான்.

அதற்குள் செரிலாக் கலந்து ஊட்டிவிட்டு, குளிக்க வைத்தாள் சுமி. ஜமுனா லஞ்ச் கொண்டு வந்து மேலேயே கொடுத்து விட்டு, வர்ஷாவை தூக்கிப் போனாள்.

சுமிக்குக் குற்ற உணர்வு மேலோங்க இன்டர்காமில், "அக்கா! சொல்லியிருந்தால் நாங்களே கீழே வந்திருப்போம். ஏன் கொடுத்து விட்டீர்கள்?"

"பரவாயில்லைடா. தம்பி இன்று தான் அதிசயமாக வீட்டில் இருக்கிறான் அதனால் இன்று நான்-வெஜ் செய்தேன் ராம் விரும்பிச் சாப்பிடுவான் சீக்கிரம் சாப்பிட்டு விடுங்கள் வர்ஷாவை நான் பார்த்துக் கொள்கிறேன்."

"தேங்க்ஸ் அக்கா." இருவரும் ருசித்து உண்டனர்.

சுமி, "நான் போய் வர்ஷாவைப் பார்க்கிறேன். நீங்கள் போய் கொஞ்ச நேரம் தூங்குங்கள்."

"நோ டியர். இன்றே நம் மனதில் இருப்பதையெல்லாம் கொட்டி கிளியர் பண்ணி விடலாம். இனி உறுத்தலோ, கோபமோ, சந்தேகமோ நம் வாழ்க்கையில் இருக்கவே கூடாது."

வர்ஷாக்குட்டி நம் ஹாஸ்பிடலில் தான் பிறந்தாள். டாக்டர் நிர்மலா தான் உனக்குப் பிரசவம் பார்த்தது. அவள், இப்போது ஊருக்குப் போயிருக்கிறாள். வெரி டேலண்ட்டட். நான் அப்பாவான அந்த நாளை என்றுமே மறக்க முடியாது!



அத்தனை டென்ஷன்! வர்ஷாவையும் உன்னையும் முழுதாக பார்த்த பின் என் உணர்வுகளை சொல்லில் வடிக்க முடியாது. அதற்குப் பிறகு நாட்கள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன.

பின் இப்போது தான் பெங்களூர் பிளான் செய்தேன். நீயும் ஒரு வருடத்துக்கு மேலாக எங்கேயும் போகவில்லை என்றுதான் இந்த ஏற்பாடு. திரும்பி வரும் போது அடிபட்டு என் மடியில் மயங்கி விழுந்தாய் பார்! என் உயிரே போய் விட்டது. வழியெல்லாம் உன்னைக் கட்டிப்பிடித்து அழுது கொண்டே வந்தேன். பிறகு தான் நானே காரை ஓட்ட ஆரம்பித்தேன். டிரைவருக்கும் கையில் நல்ல அடி!

மனதுக்குள்ளே அப்பாவோடு பேசினேன், கெஞ்சினேன், என் வாழ்க்கையை... என் சுமியை எந்த வித ஆபத்தும் இல்லாமல் என்னிடம் கொடுத்து விடுங்கள் என்று அவரிடம் மானசீகமாக சண்டை போட்டேன். அவர் தானே நமக்கு தெய்வம்!

இது தான் நான் உன்னைப் பார்த்த முதல் நாளிலிருந்து ஹாஸ்பிட்டலில் நீ கண் விழிக்கும் வரை நடந்தது. அதன் பிறகு நடந்தது தான் உனக்கே தெரியுமே!

ஆனால் சுமி! நீ எப்போதும் என்னைச் சுற்றி சுற்றி வருவாய்... டிரஸ் எடுத்து வைப்பது, தலை வாரி விடுவது, டிபன் பரிமாறுவது, ஏன் என் டெய்லி புரோக்கிராம் கூட நீதான் ஞாபகப்படுத்துவாய். என் ஒவ்வொரு செயலுமே நீயில்லாமல் நான் செய்து முடித்ததே இல்லை. எதற்கெடுத்தாலும் சுமி! சுமி! சுமி டார்லிங் தான்!

மறுநாள் ஏதாவது ஆபரேஷன் இருந்தால் அன்று நைட், கேஸை ஸ்டடி பண்ணுவேன். அப்போது கூட நீ

தூங்காமல், நான் வரும்வரை எனக்காகக் காத்திருப்பாய். அப்படி இருந்து விட்டு, இந்த ஒரு வாரமாக நீ என்னைஅந்நியமாகப் பார்த்தாய் முகம் பார்த்துக் கூட பேசவில்லை. என்னிடம் பேசவே வெட்கப்பட்டாய் என்றால் எப்படி இருக்கும்? நீ வர்ஷாவை மட்டும் அதே பிரியத்தோடு பார்த்துக் கொண்டாய். அதனால் தான் உனக்கு என்னை ஏந்க மனமில்லை என்று நினைத்துக் கொண்டேன். வர்ஷா மட்டும் உனக்குப் போதும் என்ற நினைப்பு எனக்கு வந்தது.

சுமி! நான் ஓவர் பொஸஸிவ். என் உலகமே நீயும் வர்ஷாவும் தானே? நேற்றிரவு நீ வர்ஷாவோடு தனியாகப் போய் படுத்ததும் எனக்குக் கோபம், ஆத்திரம், விரக்தி எல்லாம் சேர்ந்து தான் வந்தது. ஸாரிடா என்னை மன்னித்து விடு."

'உன்னைப் புரிந்து கொண்டேன்' என்ற பாவனையில் அவனை முத்தமிட்டாள்.

"ராம்! கொஞ்சம் தூங்குங்கள். மணி மூணாகிறது. நான் ஐந்து மணிக்கு எழுப்புகிறேன். ஹாஸ்பிட்டல் போக வேண்டும் தானே! ப்ளீஸ்'

சுமிக்கு, தங்கள் இருவருக்கும் உள்ள சிறு இடைவெளியும் மறைந்து விட்டது என்று நிறைவாக இருந்தது. வர்ஷாவைத் தூக்கி வந்து கட்டிலில் படுக்க வைத்து, தானும் அவன் அருகில் படுத்து உறங்கிப் போனாள்.

**மா**லையில் ராம் கிளம்பியதும் வர்ஷாவோடு முதன் முறையாகத் தோட்டத்தில் கால் வைத்தாள். தோட்டம் பெரிதாக, மிக அழகாக இருந்தது. சின்னச் சின்ன பெஞ்ச், வண்ண விளக்குகள், நீச்சல் குளம், குட்டியாக பார்க்



என்று குழந்தைகள் விளையாட ரம்யமாக இருந்தது. எல்லா கலரிலும் ரோஜாச் செடிகள் அழகான வரிசையில் நடப்பட்டு பூத்துக் குலுங்கின. மல்லி, முல்லை, ஜாதிப் பூக்கள் மலர்ந்து மணம் வீசின.

அவள் தோட்டத்தில் நிற்பதைக் கண்டு ராமசாமி தாத்தா ஓடி வந்தார். "சுமி கண்ணு! உடம்பு சுகமா? உனக்கு விபத்து என்று பதறிப் போயிட்டேன். நம்ப முக்குத் தெரு விநாயகருக்கு பாலாபிஷேகம் பண்றதா வேண்டிக்கிட்டேன். ஐயா தான் தவிச்சுப் போயிட்டார்."

"இப்போ நல்லாயிருக்கேன் தாத்தா. நீங்கள் நேரத்துக்கு சாப்பிட்டு உடம்பை பார்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு உதவியாக யாரையாவது சேர்த்துக் கொள்ளலாம். இனி கடுமையான வேலை ஏதும் நீங்கள் செய்ய வேண்டாம். மேற்பார்வை பார்த்தால் போதும். உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருந்தாலும் கூட்டி வாருங்கள் பேசுகிறேன்."

"நல்லது கண்ணு, எனக்கு வரவர வேலை செய்யவே முடிவதில்லை. டாக்டர் ஐயா கிட்ட நானே கேட்கணும் என்று இருந்தேன். என் தம்பி மகன் நன்றாகத் தோட்ட வேலை செய்வான். வரச் சொல்லி விடுகிறேன். பொறுப்பாக நம்பிக்கையாகப் பார்த்துக் கொள்வான். மகராசி நீயே சொல்லி விட்டாய். குடும்பத்தோடு சந்தோசமாக இருக்கணும்" என்றார் நெகிழ்ச்சியாக.

கொஞ்ச நேரம் உலவி விட்டு உள்ளே வந்தாள். சமையலறைக்குச் சென்று, "அக்கா! நைட் என்ன டிபன்? அவருக்கு எதெல்லாம் பிடிக்கும். எனக்குச் சமையல் செய்ய தெரியுமா? நான் அவருக்கு ஏதாவது செய்து போட்டிருக்கிறேனா?" என்றாள் ஆர்வமாக.

சிரித்து விட்டு, "ம், அவன் சாப்பாட்டுப் பிரியன் சுமி. புலாவ், கோபி மஞ்சூரியன், மசால் தோசை, சப்பாத்தி, சிக்கன் கிரேவி, பிரியாணி - இதெல்லாம் ரொம்ப பிடிக்கும். உனக்கும் அருமையாகச் சமைக்கத் தெரியும். ஜோராக விதவிதமாகச் செய்வாய். லீவு நாட்களில் அவன் வீட்டில் இருந்தால், என்னையும் உட்கார வைத்து இருவருக்கும் செய்து போடுவாய்.

உடம்பு கொஞ்சம் தேறட்டும். நானே மறுபடி எல்லாம் சொல்லிக் கொடுக்கிறேன். இன்று இரவு மதியம் செய்த சிக்கன் குழம்பும், தோசையும் தான். மதியம் நான்-வெஜ் ஹெவியாக சாப்பிட்டதால் நைட் இரண்டு தோசை, ஒரு டம்ளர் பால் மட்டும் தான் எடுத்துக் கொள்வான். மற்றபடி பிடிக்காதது என்று எதுவும் இல்லை. நன்றாகச் சாப்பிடுவான்... அதே சமயம், வாக்கிங், ஜாகிங் என்று உடம்பை டிரிம்மாகவும் வைத்துக் கொள்வான்.

நைட் இருவரும் டிபன் முடித்து விட்டே மேலே சென்றார்கள். வர்ஷா தூங்கி விட்டாள். ராம் குளித்து விட்டு வரும் போது நைட் டிரஸ் தயாராக எடுத்து வைத்தாள். விசிலடித்துக் கொண்டே அணிந்து கொண்டு, கட்டில் மேல் உட்கார்ந்து கொண்டு, சீப்பை சுமியிடம் கொடுத்தான்.

முகம் சிவக்க அவன் முகவாயைப் பிடித்து, அழகாக தலை வாரினாள். இரவு அவன் அருகில் வந்து படுத்தவுடன், இடுப்பில் கை போட்டு, அவளை அருகில் இழுத்துக் கொண்டான். அவள் கண்களை இறுக மூடிக் கொண்டாள். முகம் ரத்தமாய் சிவந்து போனது.

ஆசையாய் அவளை அணைத்து கன்னத்தில் முத்தமிட்டு, "சுமி. இங்கே என்னைப் பாரேன்."



"ம்ஹூம்."

"சரி தூங்கு."

சுமி அவனை விழி விரித்துப் பார்த்ததும், "உன் உடல் நிலை இன்னும் நார்மலுக்கு வர வேண்டும்டா. நீ என் கூட இருந்தால், அதுவே இப்போதைக்கு எனக்குப் போதும். நீ, ப்ரீயாகத் தூங்கு" என்று சொல்லிவிட்டு அவன் கண்களை மூடினான்.

அவனையே பார்த்துக் கொண்டிருந்தவள், 'எத்தனை அருமையானவன்' என்று காதல் பொங்கி வழிய, அவன் நெற்றியில் இதழ்களை ஒற்றினாள்.

"நீயாக முதன் முதலாக கொடுக்கிறாய். இங்கேயா கொடுப்பது? போ டியர்" கண்களைத் திறக்காமலேயே அவன் பேசவும், வெட்கம் பிடுங்கித் தின்ன கண்களை இறுக மூடிக் கொண்டாள். ராம் மனம் விட்டு சிரித்தான்.

நாட்கள் இறக்கை கட்டிக்கொண்டு பறந்தன. சுமிக்கு போரடித்த போது தான், பெங்களூரில் வாங்கிய திங்க்ஸ் ஞாபகம் வந்தது. எல்லாவற்றையும் பிரித்து அடுக்கலாம் என்று ஹாலுக்கு வந்தாள் எல்லோருக்குமே டிரஸ் வாங்கிக் குவித்திருந்தார்கள்.

ஒவ்வொரு பையிலும் புடவைகள், சுடிதார், வர்ஷாவுக்கு விதவிதமான டிரஸ்கள், டாய்ஸ்... ராமிற்கு டிரஸ், என்று நிறைய வாங்கியிருந்தார்கள். எல்லாவற்றிலும் பின், பில், ஸ்டிக்கர் எல்லாம் எடுத்துவிட்டு குங்குமம் வைத்து அழகாக மடித்து வைத்தாள். கங்கா அக்காவுக்கு நான்கு புடவைகள், அவர் மகனுக்கு ஆறு செட் உடைகள் கூட இருந்தன. தியாகு புதிதாக வேலையில் சேரப் போவதால், என்று அவனுக்காக வாங்கியிருப்பான் என்று தெரிந்து கொண்டாள்.

தனியாக இருந்த பார்சலைப். பிரித்ததும் சிவந்து போனாள். ஜீன்ஸ் பேண்டும், பிங்க் நிற ஷார்ட் டாட்ஸ், மிக அழகாக கற்கள் பதித்து வேலைப்பாடு செய்த டிரஸ் அதில் இருந்தது. பின் அவரவர் கப்போர்டில் பிரித்து அடுக்கினாள். அவளுடைய கப்போர்டை திறந்து டிரஸ்ஸை வைக்க முயன்று போது, மேல் ஷெல்ஃபிலிருந்து ஒரு டைரி கீழே விழுந்ததும் அதை எடுத்துப் பிரித்தாள்.

'சுமிக்கு மட்டும்' என்று உள்ளே போட்டிருந்தது, அவளுடையதே தான். ஆவலோடு கட்டிலில் அமர்ந்து டைரியைப் பிரித்தாள்.

திருமணம் வரை நடந்ததாக ராம் சொல்லியிருந்ததைத் தான் அவளும் எழுதியிருந்தாள்.

"மாமா இல்லாமல் மிக எளிமையாக நடந்த திருமணம் என்பது தவிர வேறு எந்தக் குறையும் இல்லாமல் நடந்தது.

மாமா. திருமணப் பரிசாக எங்கள் பெயரில் ஐந்து லட்ச ரூபாயை, இல்லத்துக்கு நன்கொடையாக கொடுத்திருக்கிறார். இல்லத்தில் இருக்கும் அத்தனை பேருக்கும் புது உடைகள், அன்று முழுவதும் ஸ்டார் ஓட்டலிருந்து அருமையான உணவு என்று மிகவும் ரகசியமாக ஏற்பாடு செய்திருக்கிறார்.

திருமணத்தன்று இந்த விஷயம் ராமிற்குத் தெரிய வந்ததும் கதறி அழுது விட்டார். அவரைத் தேற்றவே என்னால் முடியவில்லை. எல்லோர் நெஞ்சமும் பாரமாகிப் போனது. அவரை அணைத்து ஆறுதல்படுத்தினேன். ராம் மாமாவின் இழப்பைத் தாங்க முடியாது தவித்துப் போய் விட்டார்.



அவர் எங்கள் வீட்டுக்குப் போய் விட்டார். ஆனால், தினமும் மாலையில் வந்ததும், சிறிது நேரம் பேசிக் கொண்டிருப்போம். நான் பதினாறு நாட்கள் கழித்துத் தான் அங்கு போக வேண்டுமாம்.

"ராம்! நீங்கள் ஏன் தனியாக அங்கு இருக்க வேண்டும்?. இல்லத்திலேயே தங்கிக் கொள்ளுங்கள்" என்றேன்.

"இல்லை சுமி! கங்கா அக்கா துணைக்கு என்னோடு இருக்கிறார்கள். அப்பாவின் ஆன்மா பதினாறு நாட்களும் நம் வீட்டில் தான் இருக்கும் என்று அக்கா சொன்னார்கள். அவரைத் தனியாக விடலாமா? எனக்காகத் தானே!!!" சொல்லும் போதே அவர் கண் கலங்கியது.

அவரை ஆறுதல்படுத்தினேன். 'என்ன அன்பு! இவரை கணவராக அடைய நிறைய அதிர்ஷடம் செய்திருக்கிறேன். இனி இவருக்கு அம்மா அப்பா, தோழி எல்லாமுமாக நான் இருப்பேன். நான் எங்கள் வீட்டுக்கு வந்து விட்டேன். என் ராம் மகிழ்ச்சியில் பூரித்தார் அப்பாவும் என்னுடன் வந்து இரண்டு நாட்கள் இருந்து விட்டுப் போனார்.

ராம் என்னைத் தன் உயிர் மூச்சாய் நினைக்கிறார். எனக்கு எந்த விதத்திலும் குறை வைக்காமல், என் மேல் அன்பைப் பொழிந்தார். காஷ்மீர் தால் ஏரியில் சுற்றி வந்த போது நினைத்துக் கொண்டேன். தால் ஏரி ரொம்ப அழகு என்கிறார்கள். ஆனால் என் ராமின் மன அழகுக்கு முன், எனக்கு இது ஒன்றும் பெரிதாகத் தோன்றவில்லை.

கங்கா அக்கா தாய் போல என்னைக் கவனித்துக் கொள்கிறார்கள். நான் அக்காவிடம் சிரித்துப் பேசினால் கூடப் பொறுக்காது, என் ராமிற்கு. அத்தனை பொஸஸிவ்!

நான் அவரையே தான் சுற்றிச் சுற்றி வருகிறேன் எங்கு கூட்டிப் போனாலும் அவர் என்னை விட்டு நகரவே மாட்டார்.

இத்தனை அன்புக்கு எனக்கு என்ன தகுதியிருக்கிறது? அவர் என்னை சுமி டார்லிங், டியர், ஹனி, சுமிக்குட்டி என்று கொஞ்சும் போதெல்லாம் கர்வமாக இருக்கிறது.

நான் கன்சீவ் ஆன போது எனக்குத் தலைசுற்றலும், வாந்தியும் அதிகமாக இருக்கிறது என்று ரொம்ப சிரமப்பட்டேன். இரவு நேரங்களில் கூட வந்து ஜூஸ் கலந்து உதவி செய்வார். ஒரு நாள் இரவு படுக்கையிலேயே வாந்தி எடுத்து விட்டேன். உதவிக்கும் யாரும் இல்லை. என்னால் எழுந்திருக்கவே முடியவில்லை. எனக்கு உடை மாற்றி, விரிப்பை மாற்றி, சூடாக ஹார்லிக்ஸ் கலந்து கொடுத்து என்னைத் தூங்க வைத்தார். என்னால் அழுகையை அடக்க முடியவில்லை.

'இதிலென்னடா! என்று என்னைச் சமாதானப் படுத்தினார். குழந்தை பிறக்கும் வரை அவருக்குத் தான் ரெஸ்டே இல்லை. பெண் குழந்தை தான் வேண்டும் என்ற. அவரது ஆசைப்படியே வர்ஷா பிறந்தாள். இருவரின் காதல் மழையின் பரிசாக அவளுக்கு 'வர்ஷா' என்று பெயர் சூட்டினோம்.

இரவில் குழந்தை அழுதால் என்னை எழவே விடமால், அவரே டிரஸ் மாற்றி எல்லாம் செய்வார். அத்தனை ஆசை மகள் மேல்! தினமும் அவர் வர்ஷாவுக்குக் கொடுக்கும் முத்தங்களுக்கு, கணக்கே இல்லை!

முதன்முதலில் வர்ஷா முகம் பார்த்துச் சிரித்த போது மகிழ்ச்சியில் என்னைத் தூக்கி தட்டாமாலை



சுற்றினார். அன்று அவர் ஹாஸ்பிட்டலுக்கே போகவில்லை! குப்புற விழுந்த போதும் இதே கதைதான்! "என் மகளைப் பார் என்று குதிப்பார். எனக்கு வர்ஷாவை விட இவரைப் பார்ப்பது தான் வேடிக்கையாக இருக்கும்.

என் ராம் சந்தோஷமாக இருக்கிறார். எனக்கு அதுவே போதும். இவர் அடுத்த வாரம் கான்.'.ப்ரன்ஸ்க்காக பெங்களூர் போக வேண்டும் என்பதால் என்னையும் வரச் சொல்கிறார். அவர் கண்களில் தெரியும் ஆசையையும் காதலையும் பார்த்த என்னால் மறுக்க முடியவில்லை.

பாப்பாவுக்கு அந்த கிளைமேட் சேருமோ என்று தான் கவலை! அவரும் பாவம் தான்! அவருடன் நான் எங்கேயும் வெளியே போகவே இல்லை. சரி, கங்கா அக்காவையும் கூட்டிக் கொண்டு போனால் சமாளித்து விடலாம் என்று தோன்றுகிறது. அப்பா கூட டூர் போகிறார். அதனால் நேற்று இரவு இவரிடம் ஓ.கே. சொல்லி விட்டேன். அதற்கு எனக்குக் கிடைத்த வெகுமதிகளை நான் வெளியே சொல்ல முடியாது அத்தனை பர்சனல்!!!

அத்தோடு டைரி நின்று போயிருந்தது. கண்களில் நீர் மின்ன அதைப் படித்துவிட்டு, 'இதில் ஒரு சதவீத அன்பையாவது நான் திருப்பிக் கொடுக்க வேண்டாமா? இனிமேலாவது அது பற்றி யோசிக்க வேண்டும்' என்று முடிவு செய்தாள்.

டைரியை வைக்கும் போது தான் இருவருடைய திருமண உடையும் பிரிக்கப்படாமல், விலைச் சீட்டு கூட கிழிக்காமல் அடுக்கி வைத்திருந்ததைப் பார்த்தாள். அதைக் கைகளால் வருடியவள் யோசித்து ஒரு தீர்மானத்திற்கு வந்தாள்.

கங்கா, தியாகு இருவரின் உடைகளையும் எடுத்துக் கொண்டு கீழே வந்தவள், "அக்கா! உங்களுக்கும், தியாகுவுக்கும் தான் அவர் உடைகள் வாங்கியிருக்கிறார். கொடுக்க இத்தனை நாள் ஆகி விட்டது. இன்றுதான் பார்த்தேன். தியாகு எப்போது போய் ஜாயின் செய்ய வேண்டும்?

"சுமி, எங்களுக்கு எதற்கு இத்தனை டிரஸ்? தியாகு, அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை போக வேண்டும். ஒரு வாரமாக அவன் கோயமுத்தூர் போயிருக்கிறான். அவன் ஃபிரண்ட் விஷ்வம், இவன் அங்கு தங்குவதற்கு இடம் பார்த்திருக்கிறானாம். போய் பார்த்து ஃபிக்ஸ் பண்ணி விட்டு வருவான். ராம் கூட தியாகுவிடம் அட்வான்ஸ் பணம் கொடுத்து விட்டிருக்கிறார். நீ ஹாஸ்பிட்டலில் இருந்ததால் உனக்குத் தெரியாது.

இரவு தங்கள் அறையில் ராம், "சுமி, நாளை ஞாயிற்றுக்கிழமை முகூர்த்த நாள். வர்ஷாவுக்கு ஏதாவது ஒரு கோயிலுக்குப் போய் சாதம் ஊட்டி விடலாம் என்று மாமாவிடம் சொல்லி விட்டேன். முதலில் இல்லத்திற்குப் போய் அவரைக் கூட்டிக் கொண்டு கோயில்!

பின் குழந்தைகளோடு இல்லத்தில் லஞ்ச்! ஸ்பெஷல் லஞ்ச் வெளியே ஆர்டர் பண்ணி விட்டேன். மாலை வரை அங்கேயே ரெஸ்ட். மீதி புரோகிராம் உன்னுடையது ஸ்பெஷலாக இருக்க வேண்டும் என்று மூக்கைப் பிடித்து ஆட்டினான்.

அவள் மனம் மகிழ்ச்சியில் நிறைய, "ஓ. அப்படியா? சரி நானும் உங்களுக்கு நிறைய சர்ப்ரைஸ் கொடுக்கிறேன். ஆனால்' இப்போ இது மட்டும் தான்"



என்று முத்திரை பதித்து விட்டு அவன் இடுப்பைச் சுற்றி கைகளைப் படர விட்டு உறங்கினாள்.

காலையில் அவன் எழுவதற்குள் குளித்து விட்டாள். முன்தினம் இரவு இருவரும் சிரித்துப் பேசியதை நினைத்துக் கொண்டாள். அவன் மனதில் எதையோ நினைத்து ஏங்குகிறான் என்று புரிந்தது. அவள் மனம் மாறுவதற்காக பொறுமையுடன் கண்ணியம் காத்து விலகி நின்றாலும், அவளுக்காக நிறையவே ஏங்கினான் என்பதை அவனது கனிந்த குரலே காட்டிக் கொடுத்து விட்டது. தலைவாரி, பொட்டு வைத்துக் கொண்டு, ராமின் நெற்றியில் முத்தமிட்டு, "ராம் சீக்கிரம் ரெடியாக வேண்டும்.... ப்ளீஸ் எழுந்திருங்களேன்." மென்குரலில் வந்த அவளது அழைப்பு, அவனைத் திகைப்படையச் செய்தது.

அவளை அருகில் இழுத்து அணைத்தவனுக்கு, அவளிடம் கூடுதலாகத் தெரிந்த மலர்ச்சி வியக்க வைத்தது. ராம் என்ற அவளின் அழைப்பில் மயங்கினாலும், வேறு ஏதோ ஒன்றை எதிர்பார்த்தான்.

அவள் அதை வாய் விட்டே கேட்ட போது, "ஸ்பெஷலான, அந்தரங்கமான நேரங்களில் நீ என்னைச் செல்லமாக, பர்ஸனலாக ஒரு வார்த்தை சொல்லி கூப்பிடுவாய்." அது தான்!

"என்ன ராம்?. சொல்லுங்களேன்!"

"நான் சொல்லி, அதன் பிறகு நீ கூப்பிடுவதில் எனக்குத் திருப்தியில்லை! கண்டிப்பாக நீயாகக் கூப்பிடும் நாள் வரும்-டா! நான் போய் குளிக்கிறேன்."

கட்டில் மேல் அவர்கள் திருமணத்திற்காக எடுத்த பட்டு வேட்டி, சட்டையை எடுத்து வைத்திருந்தாள். அவன் ஆச்சரியத்துடன் ஏதோ கேட்க வாய் திறந்த போது,

"ப்ளீஸ். ராம். இன்று என்னை எந்தக் கேள்வியும் கேட்காமல், என் ஆசைப்படி தான் நடக்க வேண்டும். ப்ளீஸ்டா. எனக்காக! இத்தனை உரிமையாக அவள் பேசியதைக் கேட்டு ராம் பேச்சிழந்தான்.

வர்ஷாவுக்கு பட்டு கவுன். பின் தன் உடையை எடுத்துக் கொண்டு சின்ன பெட்ரூம் போனாள். திருமணப்புடவை அணிந்து அழகுச் சிலையாக வெளியே வந்ததும், வர்ஷாவோடு விளையாடிக் கொண்டிருந்த ராம், சுய நினைவே அற்றுப் போனான் அவன் பார்வையில் முகம் சிவந்த சுமி, "போதும் ராம்! நான்... எ.னக்கு... ப்ளீஸ் ஹாலில் வெயிட் பண்ணுங்களேன்."

தலையை தளரப் பின்னி, கூந்தலில் மல்லிகைச் சரத்தை வழிய விட்டு, லேசாக ஒப்பனை செய்து கொண்டாள். ஒரு நாள் கூட இதுவரை அவள் இதுபோல் மேக்கப் செய்ததே இல்லை. அதற்கே மயங்குபவன் இன்று சுமியைப் பார்த்தும் கிறங்கிப் போய் விட்டான். தாமாக அவன் கால்கள் அவளிடம் சென்றன.

அவளை பின்புறமிருந்து மென்மையாக அணைத்தவன், குனிந்து கழுத்து வளைவில் முத்தமிட்டு. "சுமி! மை ஏஞ்சல்! என்னை இன்று ஒரு வழி பண்ணி விடுவாய் போல இருக்கிறது. ஐ லவ் யூ டா! யு லுக் டிவைன் இன் திஸ் டிரஸ். யூ மேட் மை டே டார்லிங். ஐ யாம் ஸோ ஹேப்பி!" என்று கொஞ்சிக் கொண்டே தன் கையிலிருந்த நகைப்பெட்டியை பிரித்து, அதிலிருந்த் நெக்லெஸை அணிவித்தான்.

"பிடித்திருக்கிறதாடா?" காதுகளில் கிசுகிசுத்தான். மெல்ல தலையசைத்தவள் கண்களில் ஈரத்துடன் எம்பி அவன் இதழ்களில் முத்திரை பதித்தாள்.



ஆனந்த அதிரிச்சியில் தடுமாறினான் ராம். "சுமி தேங்க்ஸ்! ஆவளை மெல்ல வருடினான். அதில் கிறங்கிப் போய் நின்றவள், திடீரென்று "ராம்! டைம் பாருங்கள், எல்லோரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இது வேலைக்கு ஆகாது. சீக்கிரம் கீழே போகலாம்." அவனை நெட்டித் தள்ளினாள்.

கீழே கங்கா, வர்ஷாவின் பொருட்களையெல்லாம் ஒரு கூடையில் தனியாக வைத்து விட்டு ரெடியாகி விட்டார். வர்ஷாவுக்கும் வெளியே கிளம்பப் போகிறோம் என்று ஒரே குஷி. ராமிடமிருந்து யாரிடமும் போக மறுத்தாள். வீட்டிலேயே டிபன் சாப்பிட்டு விட்டு இல்லத்திற்கு சென்றனர். அவர்களுக்காகக் காத்திருந்த தயானந்த் அனைவரையும் வரவேற்று வர்ஷாவை தூக்கிக் கொண்டார்.

"வர்ஷாக் குட்டி, தாத்தாவை பாரு." என ஆசையாக கொஞ்சி விளையாடினார். சுமி வைத்த கண் மாறாமல் அவரையே கண்கலங்க பார்த்துக் கொண்டிருந்தாள்.

ராம் அவள் கையை அழுத்தி,. "சுமி! ரிலாக்ஸ். மாமாவுக்கு உன் விஷயம் தெரியாது. அவருக்கு பிரஷர் இருக்கிறதால் சமாளித்துக் கொள்." என்றான்.

அவர் திரும்பி, "சுமிம்மா! இன்று ரொம்ப அழகாக இருக்கிறாய்டா. கோவிலுக்கு எத்தனை மணிக்குக் கிளம்ப வேண்டும்? "அப்பா!' ஆசையாக அழைத்தாள்.

"என்னம்மா?"

"நான் உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்பா."

"சரி வாடா."

தன் கணவனிடம் கண்களாலேயே அனுமதி பெற்று விட்டு தன் தந்தையுடன் சென்றாள். அவர்கள் வந்த

விவரம் தெரிந்து இல்லத்துக் குழந்தைகள் எல்லாம் ராம் அருகில் ஓடி வந்தனர். அவர்களுக்கு வாங்கிய ஸ்வீட், பிஸ்கட், பழமெல்லாம் டிரைவரை எடுத்து வரச் சொல்லி எல்லோருக்கும் விநியோகம் செய்தான்.

அவர்களின் கேள்விகளுக்கு பதில் சொல்ல திணறிக் கொண்டிருந்தான். யாராவது வந்து காப்பாற்ற மாட்டார்களா என்று பார்த்தான். நல்லவேளையாக தயானந்த் வந்து அவனை கூப்பிட்டு, இக்கட்டிலிருந்து காப்பாற்றினார்! பிரார்த்தனைக் கூடத்திற்கு கூட்டிச் சென்றார்.

சுமி அங்கிருந்த குத்து விளக்கை ஏற்றிக் கொண்டிருந்தாள். ராமின் அப்பாவுடைய பெரிய படத்தை ஃபிரேம் செய்து மாட்டியிருந்தார்கள். அதற்கு முன் இருவரையும் நிற்க வைத்து, திருமாங்கல்யத்தை ராமின் கைகளில் கொடுத்தார்.

"ராம், திருமாங்கல்யம் எப்படியோ கழன்று விட்டது என்று சுமி வருத்தப்பட்டாள். இது, என் நண்பன் அவன் மருமகளுக்காக ஆசையாக பார்த்துப் பார்த்து செய்தது. இன்று முகூர்த்த நாள் தான்... அவளுக்குப் போட்டு விடு."

மனம் நெகிழ சுமியைப் பார்த்து விட்டு, தயானந்த், கங்கா இருவரும் அட்சதை தூவ, சுமியின் கழுத்தில் அணிவித்து குங்குமமிட்டான். சுமியும் ராமும், இருவரையும் வணங்கினார்கள். சுமியின் கைகளைப் பற்றி தன் தந்தையிடம் ஆசிர்வாதம் பெற்றான்.

அவர்களை ஆசிர்வதிப்பது போல படத்திலிருந்து ரோஜாப்பூ கீழே விழுந்ததில் அனைவரின் மனமும் நிறைந்து விட்டது. பின் அங்கிருந்த கிருஷ்ணன்



கோயிலுக்கு சென்றனர். அங்கே அளிக்கப்பட்ட பொங்கலை சுமி வர்ஷாவுக்கு ஊட்டினாள். வர்ஷாவும் நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிட்டாள்.

மதியம் ஒரு மணிக்கு வெளியிலிருந்து ஆர்டர் செய்திருந்த உணவு, இல்லத்தில் தயாராக இருந்தது. ராம், சுமி இருவரும் தான் பரிமாறினார்கள். வர்ஷாவுக்கு சாதம் குழைய வேக வைத்து, உப்பு பருப்பு நேய் சேர்த்து ஒரு வாய் ஊட்டி விட்டனர்.

தயானந்த் "சுமி, நீயும் ராமும் உன் ரூமில் போய் ரெஸ்ட் எடுங்கள். நான் வர்ஷாவை வைத்திருக்கிறேன். தூக்கம் வந்தால் கங்கா தூங்க வைத்து விடுவாள்." என்றார்.

இருவரும் அறைக்குச் சென்றதும், கதவை அழுந்தத் தாளிட்டு விட்டு, சுமியை இறுக அணைத்தான். "என்ன. இது ராம்! புடவை கசங்கி விட்டது." சிணுங்கினாள்.

"ஹே! என் புதுப்பெண்டாட்டி! குனிந்து அவளை வாசம் பார்த்தான். "மயக்கறடி." அவன் கைகள் இடையில் தவழ்ந்தது.

"ராம்! ரொம்ப டயர்டாக இருக்கிறது. ப்ளீஸ் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கலாமா?

"சுமி! மாத்திரை சாப்பிட்டாயா. இங்கே வா!" நாடியைப் பிடித்துப் பார்த்தான்.

"ஒன்றுமில்லை ராம். காலையில் நேரமே இன்று எழுந்து விட்டேன்... அது தான். இந்தாருங்கள், உங்களுக்கு டிரஸ் மாற்றிக் கொள்ளுங்கள்.

காலையிலிருந்தே ஒரு கையால் வேட்டியை பிடித்துக் கொண்டே சுற்றுகிறீர்கள். அதான் எதற்கும் இருக்கட்டும் என்று எடுத்து வைத்தேன்."

"செல்லக்குட்டி! ரொம்ப தேங்கஸ்."

அவளும் சுடிதார் அணிந்து கொண்டாள். பின் இருவரும் சிறிது நேரம் ரெஸ்ட் எடுத்தார்கள். சாயங்காலம் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து கதை பேசிக் கொண்டு டீ குடித்தார்கள்.

வர்ஷா எழுந்ததும் சுமி ∴பீட் பண்ணி டிரஸ் மாற்றினாள். ராம் குழந்தையைத் தூக்கிக் கொண்டான். பின் இருவரும் தயானந்திடம் சொல்லிக் கொண்டு கிளம்பினார்கள்.

வீட்டிற்கு வந்ததும் மூன்று பேரையும் ஒன்றாக நிற்க வைத்து ஆரத்தி சுற்றி கங்கா உள்ளே அழைத்தாள்.

ராம் உள்ளே வந்து, அப்பாடா என்று கட்டிலில் சாய்ந்தான். "சுமி! நிஜமாகவே இன்று தான் கல்யாணம் ஆனது போல் இருக்கிறது. இல்லையா? ரொம்ப சந்தோஷமாக இருக்குடா! சரி இப்போது எங்கேயாவது வெளியே போய் வரலாம். என்ன?

"இப்போதா? மணி ஆறாகிறது ராம்!"

"ஜஸ்ட் ஒரு ஷாப்பிங்! ப்ளேஸ் உன் சாய்ஸ் சரியா." அவன் குரலில் அத்தனை ஆசை.

"இந்த நேரத்துக்கு வர்ஷாவை வெளியே தூக்கிப் போனால் அக்கா திட்டுவார்கள். காலையிலிருந்து அவளுக்கும் அலைச்சல். இன்னொரு நாள் போகலாம் ராம் இன்று இங்கேயே பேசிக் கொண்டிருக்கலாம். ப்ளீஸ்."

கோபத்தோடு அவளை முறைத்து விட்டு எதுவும் பேசாமல் கண்களை மூடி படுத்துவிட்டான். சுமி கீழே போய் கங்காவிடம் புலம்பினாள். "அக்கா! அவர் வெளியே கூப்பிட்டதற்கு நான் வேண்டாம் என்றதும் அவருக்குக் கோபம் கங்காவுக்கு சிரிப்பு! "சுமி, நீ போய் கிளம்பு



வர்ஷாவை நான் பார்த்துக் கொள்கிறேன். நைட் இட்லி ஊட்டி விடுவேன் நீங்கள் போய் வெளியே சாப்பிட்டு விடுங்கள். அது வரை வர்ஷாவை கீழேயே தூங்க வைக்கிறேன்."

அவள் மெல்ல மாடியேறி குளித்து ஒரு ஷார்ட் சுடி எடுத்து போட்டாள் ராம் நிஜமாகவே தூங்கியிருந்தான்.

"எத்தனை அலுப்பு இருக்கு... ஆனா, தூங்குவதை விட்டு விட்டு என்ன அடம் பார். ராம்! ரொம்ப கோபம் அதிகமாகிறது உன்னிடம்! செல்லமாக கடிந்தாள். மெல்ல அவனை எழுப்பி, "ராம்! நான் ரெடி. வாங்க போகலாம்." அவளை ஒரக் கண்ணால் பார்த்து விட்டு திரும்பிப் படுத்துக் கொண்டான்.

அவன் கழுத்தை கட்டிக் கொண்டு, "என்ன ராம்! நம் பாப்பாவுக்காகத் தானே வேண்டாம் என்று சொன்னேன். இதற்கெல்லாம் கோபித்தால் எப்படி? சாரி. நான் பாவமில்லையா? கெஞ்சினாள்.

அவன் சிரிப்பை அடக்கிக் கொண்டான். பிகு செய்து கொண்டு, பின் அவனும் கிளம்பினான். ஜீன்ஸ், டீசர்ட்டில் அவனும் ஹீரோ போலத் தான் இருந்தான் ஸ்மார்ட்டாக! பின் அங்கிருந்த பெரிய ஷாப்பிங் மாலுக்குள் நுழைந்தார்கள்.

வர்ஷாவை விட்டுவிட்டு முதன்முதலாக தனியாக வெளியே வந்த சுமிக்கு வருத்தமாக இருந்தது. ஆனாலும், அவனுக்காகப் பொறுத்துக் கொண்டவள், கை கோர்த்துக் கொண்டு ஜாலியாக சுற்றினாள். வர்ஷாவுக்கு டாய்ஸ் வாங்கினார்கள். பின் அங்கேயே 'பீட்ஸா ஹட்' சென்று சாப்பிட்டார்கள் நடுவில் சுமி இரண்டு முறை போன் செய்து கங்காவிடம் பேசினாள். வர்ஷா சமர்தாக சாப்பிட்டு

விட்டு தூங்கி விட்டாள் என்றதும் அமைதியானாள். ராம் இஷ்டப்படி சுமி நடந்து கொண்டதும் அவனுக்கு ரொம்ப சந்தோஷம்.

வீடு திரும்பும் போது அமைதியாக அவன் தோளில் சாய்ந்து கொண்டாள். இளையராஜாவின் மெலடி மென்மையாக ஒலிக்க, பூமாலையாக தோளில் சாய்ந்திருந்தவளின் உச்சியில் இதழ் பதித்தான். இந்தத் தனிமையும், இனிமையும் நீண்டு கொண்டே போகாதா என்ற தாபம் எழுந்தது!!!

வெகு நாட்களுக்குப் பிறகு தன்னைக் கட்டுப்படுத்தவே முடியாமல் தவித்தான். அவனுடைய ஒவ்வொரு செல்லும் 'சுமி... சுமி' என்றது. அவளைத் தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டவனின் மனம் அவளை நாடியது.

வீடு வந்து சேர்ந்தார்கள். சுமி, "அக்கா! நீங்க சாப்பிட்டாச்சா?

"ஆச்சும்மா. வர்ஷாவுக்கு கொஞ்சம் பால் கொடுத்து தூங்க வை. குழந்தை ஏங்கிப் போய் விட்டாள்."

ராம் வர்ஷாவுடன் மாடியேறினான். அவளை கட்டில் நடுவில் படுக்க வைத்து விட்டு, "இன்று வர்ஷிக்கு பெட் இங்கே தான்! காலையிலிருந்தே சுமி வேறு ஒரு மார்க்கமாகத் தான் இருக்கிறாள். வர்ஷி நடுவில் படுக்கா விட்டால்... ம்! என்பாடு அவ்வளவுதான்." என்று நினைத்தப்படி டவலுடன் பாத்ரூம் போய் வந்தவன், கட்டிலில் வர்ஷர்வைக் காணாது திகைத்தான். சுமி அவளைத் தொட்டிலில் போட்டிருந்தாள்.

அவனைப் பார்த்து, "ஐந்து நிமிடம் நானும் உடை மாற்றி வந்து விடுகிறேன்."



அவன் கட்டிலில் படுத்து கண்களை மூடிக் கொண்டான்.

நெற்றியில் ஜில்லென்ற ஸ்பரிசம்.

சுமியின் இதழ்கள் நெற்றியில் படிந்து, பின் கன்னத்தில் அழுந்தியது. வெள்ளை நிற நைட்டியில் வெகு அருகே மோகினி போல அழகோவியமாக இருந்தவளைக் கண்டு விழி விரித்தான். அவள் கைகள் அவன் கழுத்தில் மாலையாகப் படர்ந்தது.

"என் ராம்! ஐ லவ் யூ டா!"

"சுமி!" நம்ப முடியாது, காய்ச்சல் வந்து விட்டதோ என்று பதறிப் போய் தொட்டுப் பார்த்தான்.

"சுமி.. உடம்புக்கு ஒன்றுமில்லையே?"

"என்ன ராம்!" சிணுங்கினாள். அவன் மார்பில் தலை வைத்து கண்களை மூடிக் கொண்டாள்.

"ராம்!"

"சுமி!"

"நான் ஒன்று சொல்கிறேன். நான் உங்கள் காதலுக்கு ஈடாக உங்களை நேசிக்கிறேனா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் நானும் உங்களை நேசிக்கிறேன் ராம்! என் உயிராக! நீங்கள் தான் எனக்கு எல்லாம் என்று! எனக்குப் பழைய நினைவே வரவேண்டாம் ராம். இதற்கு முன் உங்களை எத்தனை நேசித்தேன் என்று தெரியாது. ஆனால், அதைவிட அதிகமாக உங்களை இப்போது விரும்புகிறேன் ராம். உங்கள் சுமியை ஏற்றுக் கொள்வீர்களா ராம்?"

அடுத்த நொடி அவன் இறுகிய அணைப்பில் இருந்தாள்.

"சுமி, மை லவ்! இந்த நாளுக்காகத் தான் காத்திருந்தேன்டா! அதுவும் இன்று என்னால் காலையிலிருந்தே உன்னை விட்டு விலகவே முடியவில்லை டார்லிங். இன்று பொறுமையானவனாக என்னால் வேஷம் போட முடியவில்லை சுமிம்மா. ஐ நீட் யூ வெரி பேட்லி!." அவன் கைகள் அவள் மேல் படர்ந்ததும், அவள் அவன் மார்போடு ஐக்கியமானாள்.

காலையில் ராம் தான் முதலில் கண் விழித்தான். தன் மேல் மாலையாகப் படர்ந்து உறங்குபவளையே கண் கொட்டாது பார்த்தான். நெடு நாள் தாபம் தீர்ந்த களைப்பில், மென்மையாக அணைத்துக் கொண்டான்.

"சுமி! மணி ஏழு எழுந்திருடா."

"ப்ளீஸ். ராம்! கொஞ்ச நேரம். நைட் பூரா தூங்கவே இல்லை ப்ளீஸ்டா."

"ஏன் சுமி! நைட்டெல்லாம் அப்படி என்னதான் வேலை செய்தாய்? காதில் மெல்ல முத்தமிட்டான். கண் விழிக்காமலேயே துழாவி, அவன் காதைப் பிடித்து செல்லமாக முறுக்கினாள்.

"படவா! சரியான திருட்டுப் பையன்டா நீ!"

பின்பு காபி கொண்டு வந்த சுமியிடம், "சுமி! எனக்கு ரொம்ப ட.ய.ர்.டாக இருக்கு இன்று லீவ் சொல்லி விடட்டுமா? நாம வீட்டிலேயே உட்கார்ந்து சு..ம்...மா... பேசிக்கொண்டிருக்கலாம் என்று நேற்று நீ ஆசைப்பட்டாய். பாவம் நீ! நான் தான் புரியாமல் கோபித்துக் கொண்டேன். இன்று அதற்கு நான்....

ஓ.கே! நீங்கள் ஒழுங்காக ஹாஸ்பிட்டல் போய்த் தான் ஆக வேண்டும். மத்தியானம் சாப்பிட வந்த பிறகு பார்க்கலாம்."



அவனை ஒரு வழியாக கிளப்பினாள். வெளியே நின்று வர்ஷாவோடு டாடா சொன்னபோது மகிழ்ந்து போனான். அவர்கள் வாழ்வில் ஆனந்தம் பெருகியது.

# 13

**வ**ர்ஷா தவழ்ந்த போது, எழுந்து நின்ற போது, எட்டு வைத்து நடந்த போது. வீட்டிலேயே சின்ன விழாவாகக் கொண்டாடுவார்கள்.

தியாகு வந்து இருவரிடமும் ஆசி பெற்று கோவையில் வேலைக்குச் சேர்ந்தான். அவனும் நல்ல களையாக, அமைதியாக கம்பீரமாக இருந்தான். சின்ன வயதிலிருந்தே ராம் தான் அவனைப் படிக்க வைத்தான். தியாகுவிடம் வேற்றுமை பாராட்ட மாட்டான்.

தியாகுவும், ராம் மீது அளவில்லாத மரியாதையும், மதிப்பும் வைத்திருந்தான். "மாமா... மாமா..." என்று உயிரையே வைத்திருந்தான். அவன் ஊருக்குக் கிளம்பியதும், கங்கா இவர்களுடன் வந்து வீட்டோடு தங்கி விட்டார். கீழேயே எல்லா வசதிகளோடும் ஒரு ரூம் ஏற்பாடு செய்து விட்டார்கள் கங்காவுக்காக!

தியாகு வந்தால் தங்குவதற்கும் தனி அறை! கங்காவை கூடப் பிறந்தவளாகவே நினைத்தான். அவளின் அனுமதி இல்லாமல் ராம் எதுவுமே செய்ய மாட்டான். அவர் மேல் அத்தனை மரியாதை வைத்திருந்தான்.

அதனால் மற்ற வேலைக்காரர்களும் கங்காவின் பேச்சை மீறியதில்லை.

சுமி மீண்டும் கங்காவிடம் சமையல் கற்றுக் கொண்டாள். ராம் கட்டாயப்படுத்தி அவளை பி.ஹெச்.டி., முடிக்கச் செய்தான். பின் ஹாஸ்பிட்டல் மேனேஜ்மெண்ட் படிக்கச் சொன்னான்.

சுமி முடியாது என்று மறுத்துப் பார்த்தாள். நான் வேலைக்குப் போக மாட்டேன் என்று அடம் பிடித்து, கங்காவை சிபாரிசுக்கு அழைத்தாள்.

"அக்கா! சுமியிடம் செல்லுங்கள். நம் ஹாஸ்பிட்டல் வளர்ந்து கொண்டே இருக்கிறது. இன்னும் மூன்று இடத்திலும் ஆரம்பித்து விட்டோம். சுமி உதவிக்கு வந்தால் எனக்கு ரொம்ப நிம்மதியாக இருக்கும். அடிக்கடி நிறைய கோல்-மால் நடக்கிறது.

நாம்தானே ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்? தினமும் சும்மா ஒரு ரவுண்ட்..., அரை நாள் வந்தால் போதும்.

எனக்கும் வேலைப் பளு அதிகமானதில் ரெஸ்டே இல்லை அதில் இந்த வேலை வேறு எக்ஸ்ட்ரா. .இவள் உதவிக்கு வந்தால் நான் வீட்டில் இன்னும் கொஞ்சம் அதிக நேரம் இருப்பேன் இல்லையா?

அவளுடைய வீக் பாயிண்டைத் தெரிந்து கொண்டு பேசவும், சுமியால் பதில் சொல்ல முடியவில்லை. அவனை முறைத்துக் கொண்டே சம்மதம் சொன்னாள்.

நிஜமாகவே ராம் ஊரில் மிகச் சிறந்த நரம்பியல் மருத்துவர் என்ற புகழை எட்டியிருந்தான். சிட்டியில் நரம்பியல் துறையில் புகழ்பெற்ற ஒரு சிலரில் ராம் முக்கியமானவன். அதனால் அவனிடம் அப்பாயிண்ட்மெண்ட் வாங்கக் காத்திருக்க வேண்டியிருந்தது.



அவன் கை வைத்தால் கடவுள் கைவிட்ட கேஸ் கூட பிழைத்து விடும் என்ற நம்பிக்கை மக்களிடம் பலமாக வேருன்றி இருந்தது. அதனால், அவனைப் பார்க்க கூட்டம் எப்போதும் காத்துக் கொண்டிருக்கும். வேலைப் பளு அதிகமாக ஆக அவனால் வீட்டிற்கு நேரம் ஒதுக்க முடியவில்லை.

கங்கா, "தம்பி உனக்கு உதவிக்கு இன்னும் இரண்டு டாக்டரைப் போட்டுக் கொள். வர்ஷா இப்போது தான் விவரம் தெரிந்து 'அப்பா அப்பா' என்று தேடுகிறாள். ஞாயிற்றுக்கிழமைகளில் கூட அவள் எழுந்திருப்பதற்குள் ஓடி விடுகிறாய். சுமி வெளியே சொல்லாவிட்டாலும் உள்ளுக்குள்ளேயே வேதனைப்படுகிறாள். உன் வேலையைக் கொஞ்சம் குறைத்துக் கொள் தம்பி. சுமி பாவம்."

"எல்லாமே எனக்குத் தெரிகிறதுக்கா! ஆனால், பார்த்துக் கொள்ளத் தகுதியான திறமையான டாக்டர் கிடைக்க வேண்டுமே! நானும் கேட்டுக் கொண்டு தான் இருக்கிறேன். அடுத்த வாரம் கூட நான் நான்கு நாட்கள் ஒரு செமினாருக்காக கோவைக்குப் போக வேண்டும். அங்கும் சொல்லி வைக்கிறேன்."

செமினார் கிளம்பும் முதல் நாளிலிருந்தே சுமி முகம் வாடிப் போய் விட்டாள். அவனைப் பிரிந்து நான்கு நாட்கள் இருப்பது இதுவே முதல் முறை.

டிரஸ் அடுக்கி வைத்துக் கொண்டே, "ஏன்! ராம் உங்களுக்குப் பதிலாக வேறு யாரையாவது அனுப்ப முடியாதா?"

"எப்படிடா! நான் தானே பேசப் போகிறேன். நானே எப்படி போகாமல் இருக்க முடியும்? நீயே சொல்லு."

என்றதும் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். "வர்ஷாக்குட்டி அப்பா கூட டூ விட்டு விடு. நம்மை விட்டுட்டு ஊருக்கு போறாராம்."

ஒன்றரை வயது வர்ஷா, "அப்பா உன் கூட டூ" சுமி திருத்தினாள் "உங்க கூடன்னு சொல்லு."

வர்ஷா மாட்டேன் என்று தலையசைத்து விட்டு அவன் கால்களை கட்டிக் கொண்டாள். முகம் மலர அவளை வாரித் தூக்கி கொஞ்சியவன், "அம்முக் குட்டி, அப்பா கூட டூ வா."

"இல்லையே!" என்று அழகாக தலையசைத்தாள்.

அவனைச் செல்லமாக முறைத்தவள், ரெண்டு பேரும் சரியான பிராடு. நீ உன் அப்பாவுக்கு சரியான ஜால்ராடி."

"ஆமாண்டி. அதுக்கென்ன இப்போ?"

கண்கள் மின்ன மிரட்டினாலும், கைகள் அவளைச் சுற்றி வளைத்தன.

"ச்சு. விடுங்க ராம். வர்ஷா முன்னால் என்ன இது?." அவனை தள்ளினாள்.

வர்ஷாவை இறக்கி விட்டு, "அப்போ இன்னைக்கு நைட் ஓ.கே. தானே!' செல்லம் கொஞ்சினான். முகம் சிவக்க வர்ஷாவை தூக்கிக் கொண்டு ஒடி விட்டாள். அவனது மென்னகை அவளைப் பின் தொடர்ந்தது.

சில பல கொடுக்கல், வாங்கல்களுக்குப் பிறகு சுமி ஒரு வழியாக அனுமதித்தாள். அதற்கு ஆயிரம் கண்டிஷன் வேறு. போனவுடன் போன் செய்ய வேண்டும். அங்கு ஈச்சனாரி கோவிலுக்குக் கண்டிப்பாகப் போக வேண்டும்.

பார்ட்டியில் ட்ரிங்க்ஸ் தொடக் கூடாது. ஃப்ரண்ட்ஸ் உடன் ஜாலியாக ஊர் சுற்றக் கூடாது. தினமும் பத்து



தடவையாவது போன் செய்ய வேண்டும். இன்னும்.... இன்னும்...என்று பட்டியல் நீண்டு கொண்டே போனது.

சிரிப்பை அடக்கியவன், "அதற்கு நான் இங்கேயே இருக்கலாம்" என்றான். அவளின் முறைப்பைப் பார்த்து, "இல்லைடா, அங்கு போனால் தான் எனக்கே எல்லாம் தெரியும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் கண்டிப்பாக போன் செய்கிறேன்.

கங்காவிடம், "அக்கா! சுமியைப் பார்த்துக் கொள்ளுங்கள். தினமும் சாயுங்காலம் ஏதாவது கோவிலுக்குக் கூட்டிப் போங்கள். நான் இல்லாவிட்டால் சரியாகச் சாப்பிட மாட்டாள். உங்களை நம்பிதான்..."

"கடவுளே! இங்கே இருக்கிற கோயமுத்தூருக்குப் போய்வர இத்தனை ஆர்ப்பாட்டமா? நான் பார்த்துக் கொள்கிறேன். நீ பத்திராமாகப் போய்வா தம்பி."

"அக்கா! நான் ஒரு நாள் தியாகுவைப் பார்க்கப் போவதாக போனில் சொல்லி விட்டேன். எதாவது அவனுக்குக் கொடுக்க வேண்டுமா?"

"வேண்டாம். இப்போது தானே இங்கு வந்தான். சும்மா நீ போய் பார் அது போதும்."

ஒரு வழியாகக் கிளம்பினான். சுமிக்கு 'ஹாஸ்பிட்டல் மேனேஜ்மெண்ட்' கோர்ஸ் கிளாஸ் அட்டெண்ட் பண்ண வேண்டியிருந்ததால் தான் அவளால் கூடப் போக முடிய வில்லை.

கோவையில் ஏர்போர்ட் அருகிலேயே 'ஜென்னிஸ் ரெசிடென்சி' என்ற ஹோட்டலில் ரும் போட்டிருந்தார்கள். ஊர் போய்ச் சேர்ந்ததும், சுமிக்கு போன் செய்தான். "சுமி டார்லிங். வந்து சேர்ந்தாச்சு."

"சாப்பிட்டீர்களா. ராம்?"

"இனிதான். நாளைக்குக் காலையில் பத்து மணிக்கு இதே ஹோட்டலில் தான் செமினார்."

"நான் இப்ப தான் நம்ம ரூமுக்கு வந்தேன். எனக்கு உள்ளே வரவே பிடிக்கவில்லை. வர்ஷா தூங்கி விட்டாள். இன்று பூராவும் தோட்டத்தில் ஒரே ஓட்டம் தான். நாளை நானும் கிளாஸ் போக வேண்டும் ராம்."

"ஜாக்கிரதை! கணேஷ் காலையில் சீக்கிரம் வந்து விடுவான். பத்திரமாகப் போய் வந்ததும் உடனே போன் செய். நான் எடுக்கா விட்டால் கூட, ஒரு மெசேஜ் செய்து விடு. குட்நைட் டார்லிங். டேக் கேர்."

மறுநாள் நியூரோ சர்ஜன்ஸ் எல்லோரும் வந்திருந்தார்கள். செமினார் முடிந்ததும் அங்கே பேசிக் கொண்டிருந்த இருவரில் ஒருவரின் முகம் மட்டும் ரொம்ப பரிச்சயமாக தோன்றியது.

"ஓ! சிவா..." அடையாளம் கண்டு கொண்டதும் அருகே போய், "சிவா. நீங்க சிவா தானே?"

"ஆமாம்."

"டேய், நான் தான் ராம்... ராம்குமார். உன் காலேஜ் மேட், ரூம்-மேட். எம். எஸ். நாம் ஒன்றாகத் தான் படித்தோம். ஞாபகம் இருக்காடா?"

"ராம், உன்னை மறக்க முடியுமா?" ஆர்வத்தோடு கட்டிப் பிடித்துக் கொண்டான்.

இருவரும் மகிழ்ச்சி பொங்க ஒருவரை ஒருவர் விசாரித்துக் கொண்டனார். வெகு நாட்களுக்குப் பிறகு சந்தித்த மகிழ்ச்சி இருவருக்குமே!

"சிவா, நீ இப்போ எங்கே இருக்கிறாய்?"

இங்கே தான் வேலை செய்கிறேன். நீ என்ன செய்கிறாய்... உன் பேமலி? அப்பா எப்படி இருக்கிறார்?



"அப்பா இப்பொழுது இல்லைடா. சென்னையில் இருக்கும் 'ராம் மருத்துவமனை' எங்களுடையது தான். மனைவி சுமித்ரா ஒன்றரை வயது மகள் வர்ஷா. இது தான் என் குடும்பம். நீ...?"

"நானும் அப்பாவும் தான். நான் இன்றும் மேரேஜ் செய்யவில்லை. அப்பாவுக்கு பெராலிட்டிக் அட்டாக் வந்து வீட்டோடு இருக்கிறார் நான் தான் அவரை பார்த்துக் கொள்கிறேன்.

நான் டாக்டர் என்று பார்த்து பெண் கொடுக்க வந்தாலும் அப்பாவின் நிலையைப் பார்த்து யோசிக்கிறார்கள். ஒரு நோயாளியை வீட்டோடு வைத்து சமாளிக்க முடியாது என்கிறார்கள்.

ஒரு போஸ்ட்மாஸ்டராக இருந்து, அப்பா என்னை எத்தனை கஷ்டப்பட்டு படிக்க வைத்தார் என்று உனக்கே தெரியும். அவரை ஒதுக்கி வைத்து விட்டு நான் எப்படிடா! அதனால் தான் திருமணமே வேண்டாம் என்று முடிவு பண்ணி விட்டேன். அப்பாவுக்கு அதுவே கவலை!

ஒரு நர்ஸ் தினமும் வந்து நான் வேலைக்குப் போகும் நேரமெல்லாம் அவரைக் கவனித்துக் கொள்கிறார். பிறகு, நான் பார்த்துக் கொள்வேன் சரி அதை விடு. உன்னைப் பற்றி சொல்லு!

அவன் நிலைமை கண்டு கண்கள் கசிய, "எனக்கென்னடா! ஒரு குறையும் இல்லை. என்னுடையது லவ் மேரேஜ். அழகான குழந்தை. வாழ்க்கை அதன் போக்கில் போகிறது. சரி வா, என் ரூமிற்குப் போய் பேசலாம்.

சிவாவும் ராமும் இணை பிரியாத தோழர்கள். கல்லூரியில் எப்போதும் சேர்ந்தே திரிவார்கள். 'ட்வின்ஸ்'

என்ற பெயர் கூட அவர்களுக்கு உண்டு. அப்போது சிவாவின் அப்பா சென்னையில் தான் போஸ்ட் மாஸ்டராக இருந்தார். மனைவி இல்லை என்பதால் மகனின் மேல் கொள்ளைப் பிரியம். அவனை டாக்டராக்கிப் பார்க்க வேண்டும் என்று வெறி.

அதற்கேற்றாற் போல் சிவாவும் படிப்பில் கெட்டி. இருவருமே போட்டி போட்டுக்கொண்டு படிப்பார்கள். படிப்பு முடிந்ததும் இரண்டு வருடம், இருவரும் தொடர்பில் தான் இருந்தார்கள் பிறகு தான் எப்படியோ தொடர்பு விட்டுப் போயிற்று.

ராம், சிவாவைப் பார்த்ததுமே ஒரு முடிவுக்கு வந்து விட்டான்.

"டேய் சிவா, உன் மூட்டை முடிச்சைக் கட்டு. நம் ஹாஸ்பிடலுக்கு சரியான டாக்டர் இல்லாமல் நான் அலைந்து கொண்டிருக்கிறேன். ஆனால், நீ இங்கே ஹாய்யாக இருக்கிறாய்.

முறையாக உன் வேலையை ரிசைன் பண்ணி விட்டு, என்னோடு வரும் வழியைப் பார். நான் நாளை வந்து அப்பாவைப் பார்க்கிறேன். இருவரும் டிபன் வரவழைத்து ரூமிலேயே சாப்பிட்டார்கள். சிவா நேரமாகி விட்டது என்று உடனே கிளம்பி விட்டான்.

சிவா கிளம்பியதும் சுமியிடம் சிவாவைப் பற்றிய விவரம் சொன்னதும், சுமி நெகிழ்ந்து போனாள்.

"ராம், சிவா அண்ணா சென்னை வரட்டும். நம் ஹாஸ்பிட்டல் பக்கத்தில் இருக்கும் பங்களா சும்மா தானே இருக்கிறது. அவருக்கு ரெடி பண்ணி விடலாம். அவர் அப்பாவுக்கு இங்கே வந்தால் ஸ்பெஷல் ட்ரீட்மெண்ட் கொடுக்கலாம்."



"சுமி! நான் உன்னிடம் பேச நினைத்ததையெல்லாம் நீயே என்னிடம் பேசி விட்டாய். இதேதான் நானும் சொல்ல நினைத்தேன். அவன் எத்தனை டேலண்டட் தெரியுமா? அவனை வரவழைத்து, அவனுக்கு ஒரு வாழ்க்கையையும் அமைத்துக் கொடுக்க வேண்டும். என் பெஸ்ட் ஃபிரண்ட் சுமி அவன்"

"நீங்கள் கவலைப்படாதீர்கள். நாம் பார்த்துக் கொள்ளலாம். படுத்தாச்சா?"

"ஆச்சுடா, ஆனால் நீயும் வர்ஷாவும் என்னைத் தூங்கவே விடவில்லை தெரியுமா?"

"வசனம் போதும்! சீக்கிரம் வந்து சேரும் வழியைப் பாருங்கள். சரி கோயிலுக்குப் போனீர்களா?"

"நாளைக்குத் தாண்டா. சிவா அப்பாவைப் பார்த்து விட்டு, அவனையும் கூட்டிப் போகிறேன். தியாகுவையும் அப்படியே பார்த்து விடுகிறேன்."

"தியாகுவின் டிரஸ் எல்லாம் பழசாகி இருக்கும். பார்த்து புதிதாக வாங்கிக் கொடுத்து விடுங்கள். அவன் வாய் திறந்து கேட்க மாட்டான்."

"சரிடா... குட்நைட்..."

காலையில் எழுந்ததும் தியாகுவைப் பார்த்து பேசி, அவனுக்கு உடைகள் வாங்கிக் கொடுத்து, ஹோட்டலுக்குக் கூட்டிப் போனான்.

மறுநாள் சிவாவின் வீட்டுக்குச் சென்றான். சின்ன அழகான வீடு. சுத்தமாக இருந்தது அப்பாவுக்கு ராமை, ஏற்கனவே பார்த்து பழக்கம். சிவா வேறு சொல்லியிருந்ததால் ராமைப் பார்த்ததும் புரிந்து கொண்டார்.

அவரிடம் பேசிவிட்டு தன் எண்ணத்தைச் சொன்னதும், கண் கலங்க சம்மதித்தார்.

"அப்பா! எதற்குக் கண் கலங்குகிறீர்கள்? நானும் உங்கள் மகன் தான். உங்களைப் பார்த்துக் கொள்ள எனக்கும் உரிமை இருக்கிறது."

"டேய்! உன் தங்கை சுமி உன் வரவை எதிர்பார்த்து ஆவலோடு காத்திருக்கிறாள்."

சிவா, அவன் அப்பாவோடு சென்னைக்கு வந்ததும் நேராக தன் வீட்டிற்கே கூட்டிச் சென்றான். சுமியின் அன்பான உபசரிப்பில் நெகிழ்ந்து போனவர்கள், பிறகு அவர்களுக்காக ரெடியாக இருந்த வீட்டிக்குச் சென்றார்கள். சமையலுக்கும் வீட்டு வேலைக்கும் ஆள் சேர்த்து விட்டாள். சிவாவின் அப்பாவுக்கு எல்லா டெஸ்டும் செய்து, முறையாக சிகிச்சையைத் துவங்கினார்கள்.

சிவா, ராம் மருத்துவமனையைப் பார்த்து மலைத்துப் போனான். ஒரு பெரிய மருத்துவ சாம்ராஜ்யத்தையே நிறுவி அதை திறமையாகக் கட்டிக் காப்பவன், அதே எளிமையோடு, நட்பை மறவாது அரவணைத்துக் கொண்டதை எண்ணி மனம் பூரித்தான். அந்த மருத்துவமனையில் முழு சுதந்திரத்தோடு, உரிய மரியாதையோடு பணி புரிய ஆரம்பித்ததும் உற்சாகமானான்.

அவன் தந்தையும் படிப்படியாக உடல் நலம் தேறி, மெல்ல ஸ்டிக் வைத்து நடக்கும் அளவுக்கு உடல் வலிமை பெற்றார். ஹாஸ்பிட்டல் பொறுப்பை சிவா மனமுவந்து ஏற்றுக் கொண்டான். சிவா அப்பா ராகவனுக்கு கொஞ்சம் ஹார்ட் ப்ராப்ளம் இருந்தது. அதற்கு ரெகுலர் செக்கப் செய்ய, டாக்டர் மைதிலி சிவாவின்



வீட்டுக்கு வந்து போனாள். பல வருடங்களாகத் தனிமையில் கழிந்த சிவாவின் பார்வை, மைதிலியின் மேல் சற்றே அதிகமாகப் படிந்தது. அதைக் கவனித்த ராம், சுமியிடம் பேசினான். இப்பொழுது சுமியும் ஹாஸ்பிட்டல் மேனேஜ்மெண்ட் முடித்து விட்டு, வாரம் இரண்டு முறை அங்கு விசிட் செய்வாள்.

டாக்டர் நிர்மலா, மைதிலி இருவருமே சுமிக்கு ஃப்ரண்ட்ஸ் ஆகிப் போனார்கள். எதையும் ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசி, ஒருமையில் அழைத்து பேசும் அளவு நெருங்கிய தோழிகள் ஆனார்கள். சுமி மைதிலியைப் பற்றி நிர்மலாவிடம் சொன்னாள். மைதிலிக்கு அம்மா மட்டும் தான். திருமணமாகி அமெரிக்காவில் வேலையில் இருந்த அவள் அண்ணன், அம்மாவைத் தன் கூட வந்து இருக்கச் சொல்லி வற்புறுத்திக் கொண்டே இருந்தான், அவருக்கும் ஆசை தான். ஆனால் மைதிலியின் திருமணம் முடிந்த பின், அங்கு வருவதாகக் கூறியிருந்தார். மைதிலி தான் பார்த்த வரனையெல்லாம் மறுத்து வந்தாள்.

நிர்மலாவும் சுமியும் மைதிலியிடம் போனார்கள். "மைத்தி, டியூட்டி முடிந்து விட்டதா?"

"ஆச்சு சுமி, சிவா சார் வீட்டுக்கு போக வேண்டும் அவர் அப்பாவுக்கு இன்று ஒரு செக்கப் இருக்கிறது."

"நீயேண்டி அலைகிறாய்?" பிரஷர், ஷுகர் பார்க்கவெல்லாம் நீ போக வேண்டுமா? யாராவது ஒரு நர்ஸை அனுப்பினால் போதாதா?"

"இல்லை நிம்மி! அவர் பாவம். பேச்சுத் துணைக்குக் கூட யாரும் இல்லை. நான் கொஞ்ச நேரம் போய் பேசிக் கொண்டிருந்தால் தான் அவருக்கு ரொம்ப சந்தோஷம்."

"வேண்டாம் மைத்தி. நீ அடிக்கடி தேவையில்லாமல் அங்கு போகிறாய் என்று ஹாஸ்பிட்டலில் கேலியாகப் பேசுகிறார்கள்." அதுவுமில்லாமல் நீ கிளம்பிய உடனே, சிவா அண்ணாவும் கிளம்பிவிடுவார் பார் என்று சொல்லி சிரிக்கிறார்கள். உனக்கெதுக்கு ரிஸ்க்? உன் பேர் கெடுவதை நான் விரும்பவில்லை" என்றவள் நிர்மலாவைப் பார்த்துக் கண் சிமிட்டினாள்.

"பேசட்டும் சுமி! என்ன வேண்டுமானாலும் பேசட்டும். சிவா சார் ரொம்ப நல்லவர். அவரைப் போல கண்ணியமாக இந்தக் காலத்தில் யார் இருக்கிறார்கள்? எத்தனை பொறுமை. அவர் அப்பா மேல் எத்தனை பிரியம்?" பேச்சு குழைந்தது. நிர்மலாவும் சுமியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"சுமி, அது தான் நானும் சொல்கிறேன். உனக்குப் பொருத்தமாக சிவா அண்ணா தான் இருக்கிறார். ஒருவர் மேல் ஒருவர் இத்தனைப் பிரியத்தை வைத்துக் கொண்டு ஏண்டி வேஷம் போடுகிறீர்கள்? நீ சம்மதம் சொன்னால் நான் ராகவன் மாமாவிடம் பேசுகிறேன். உன் அம்மா எப்போதோ சம்மதம் என்று சொல்லியாச்சு. நீ என்ன சொல்கிறாய்?"

வெட்கத்தில் முகம் சிவக்க, "போடி! அவர்... சிவா சார் என்னைசொல்வாரோ? முதலில் அவர் சம்மதம் வேண்டாமா?" என்று மறைமுகமாகவே தன் சம்மதத்தைத் தெரியப்படுத்தினாள்.

நிர்மலா, "அவரை என்னடி கேட்பது? ஆறுமாதமாக அவர் உன்னை ஓட்டுவதை ரசிப்பது தான், ஹாஸ்பிட்டலில் எல்லோருக்கும் வேலையே! நீ எங்கே இருந்தாலும், அங்கே அவருக்கும் உடனடியாக வேலை வந்து விடும்!



எல்லோரும் அதைப் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறோம்!"

"ஆமாம் மைத்தி, சிவா அண்ணன் சரியான கல்லுளி மங்கன். வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொன்னாரா பார்? மாமா கூட அவரைக் கவனித்திருக்கிறார். இன்று ராமின் ரூமில் அவருக்கு இருக்கிறது ஆப்பு!"

"என்னப்பா சுமி சொல்கிறாய்? அவர் என்ன செய்தார்? பாவம் அவரை என்ன பண்ணப் போகிறீர்கள்?"

"போதும், சும்மா சீன் போடாதே. என்னோட ராம், இப்போது உன் சிவாவைக் கலங்கடித்துக் கொண்டிருப்பார்!"

அங்கே ராமின் அறை. "வா சிவா, உட்கார்."

"எதுக்குடா என்னைவரச் சொன்னாய்? ரிசப்ஷனில் சொன்னார்கள் அது தான் வந்தேன்."

"ஆமாம். சிவா உனக்கும் முப்பத்திரண்டு வயதாகிறதுன்னு அப்பா ரொம்ப கவலைப்படுகிறார். உனக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்று தினமும் புலம்புகிறார். நீ என்ன சொல்கிறாய்?"

சிவாவின் மனதில் மைதிலி வந்து போனாள். தன் மனதை மறைத்து, "இனி எனக்கென்னடா கல்யாணம்? போதும். நான் இப்படியே இருந்து விடுகிறேன். ஹாஸ்பிட்டல் வாழ்க்கையே எனக்குப் பிடித்திருக்கிறது.

"ராம் கோபத்தில் பற்களைக் கடித்தான். பாவி, இன்றும் மனதில் இருப்பதை சொல்கிறானா பார். இருடா! உன்னை ஒரு வழி பண்ணுகிறேன்."

"ஏன் சிவா. இப்படிச் சொல்கிறாய்?"

இதே போல் தான் மைதிலியும்..." என்றதும் சிவா சட்டென்று நிமிர்ந்து பார்த்தான்.

"திருமணமே வேண்டாம் என்று ஒரே பிடிவாதமாக இருந்த மைதிலியை, நிர்மலாவும், சுமியும் தான் ஒரு வாரமாக வேப்பிலை அடித்து மலை இறக்கியிருக்கிறார்கள்."

சிவா திடுக்கிட்டு, "என்னடா சொல்கிறாய்?"

"ஆமாம் சிவா, இரண்டு பேரும் மைத்தியிடம் மாறி மாறிப் பேசி அவளைச் சம்மதிக்க வைத்து விட்டார்கள். மாப்பிள்ளையும் கூட முடிவாகிவிட்டது. மாப்பிள்ளையும் டாக்டர் தான், நிர்மலாவுக்கு நன்றாகத் தெரிந்தவர். அவர் ரொம்ப பிஸியானதால், அவர் குளோஸ் ஃபிரண்ட் போய் பேசி முடித்து விட்டார். அவளது அண்ணனோடும் அந்த ஃப்ரண்டே வெப் கேமில் அமெரிக்காவுக்குப் பேசிவிட்டார். எல்லோருக்கும் திருப்தி. அனேகமாக அடுத்த வாரம் நிச்சயதார்த்தம் இருக்கும் என்று நினைக்கிறேன்."

சிவா விரக்தியுடன், "ரொம்ப சந்தோஷம் ராம். அவர்களாவது சந்தோஷமாக இருக்கட்டும் எனக்குத் தலை வலிக்கிறது. நான் வீட்டுக்குப் போகிறேன்."

அன்று இரவு சுமியிடம், "சுமி! இந்த சிவாவுக்கு ரொம்ப அழுத்தம். மைதிலிக்கு கல்யாணம் என்கிறேன். பயல் அசைய வேண்டுமே. வாயே திறக்கவில்லை பார். ரொம்ப அழுத்தம், இவனையெல்லாம்." பல்லைக் கடித்தான்.

"ராம், நாளை மைதிலியின் அண்ணன் வருகிறார். நீங்கள் சிவா அண்ணனை ஐந்து மணிக்கு மைதிலி வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்து விடுங்கள். பிறகு நான் பார்த்துக் கொள்கிறேன். உறுதி பண்ணி விடலாம்!"

"என் தங்கம்! எப்படி ப்ளான் போட்டு அசத்துகிறாய். இதற்கு நான் உனக்கு ஏதாவது தர வேண்டுமே..."



எதையோ தேடுவது போல சுற்றிப் பார்த்து விட்டு, "இப்போ கைவசம் இருக்கிறதைத் தருகிறேன். நாளைக்குப் பெரிய கி.ஃப்ட் ஓ.கே. வா?" அவன் அவளைத் தூக்கித் தன் மேல் போட்டுக் கொண்டான்.

நீ இப்போ கொஞ்சம் வெயிட் போட்டது மாதிரி தெரிகிறது. கரெக்டா?"

"டேய் ஃப்ராட், உன் வால்தனத்துக்கு அளவே இல்லையா" மொத்தினாள். அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை!

மறுநாள் மாலை ஐந்து மணி. "சிவா, முக்கியமான ஒருத்தரைப் பார்க்கப் போகிறோம். அதனால் கொஞ்சம் நீட்டா, பளிச்சுனு டிரஸ் பண்ணிட்டு வாயேன்."

"யாருடா அது அத்தனை முக்கியமாக?"

"ஆமாடா. அவங்களும் டாக்டர் தான்."

"என்னடா விசயம்?"

"அங்கே போய் சொல்கிறேன். ஒரு சின்ன ஃபங்க்ஷன் அவங்க வீட்டில் முக்கியமாக உன்னை அவர்களுக்கு அறிமுகப் படுத்த வேண்டும். கிளம்பு சீக்கிரம்."

"என்னை ஏண்டா?"

"உன் எதிர்காலத்துக்கு ரொம்ப முக்கியம் டா. அதான் நீயும் வருகிறாய் கிளம்புடாண்ணா...?

ஏதோ ஹாஸ்பிட்டல் விஷயமாக என்று முடிவு கட்டி விட்டு. நீட்டாக டிரஸ் செய்து கொண்டான் சிவா.

"சூப்பர்டா! இப்போது தான் ஜம்மென்று கரெக்டாக மாப்பிள்ளை மாதிரி இருக்கிறாய். போகலாமா?

"ஏண்டா கேலி பண்ணுகிறாய்? எனக்கு அது ஒன்று தான் குறைச்சல் போகலாம் வா."

கார் மைதிலியின் வீட்டு முன்பு நின்றது அது மைதிலி வீடு என்று சிவாவுக்கு தெரியாது. சுமி அழகான பிரிண்டட் சில்க்கில் தேவதையாக உள்ளிருந்து வந்தாள், ஒன்றுமே தெரியாதது போல.

"ஏய் சுமி! நீ எங்கே இங்கே? அதுவும் இத்தனை அழகாக வாட் எ சர்ப்ரைஸ்!" என்றான் ராம்.

'உங்களை வீட்டுக்கு போய் கவனிச்சுக்கறேன்' என்று சிவாவுக்குத் தெரியாமல் அவனைக் கிள்ளிவிட்டு, "வாங்கண்ணா." என்றாள்.

"நிஜம் தான் சுமி. நீ எங்கே இங்கே? இது யார் வீடு?"

"மைதிலி வீடு தான் சிவாண்ணா. இன்று அவளுக்கு நிச்சயதார்த்தம். ஏன், இவர் சொல்லவில்லையா?

அதற்குள் மைதிலியின் அண்ணன், "வாங்க ராம், வாங்க சிவா." என்றான்.

உள்ளம் பதற மைதிலியின் நிச்சயத்தை நானே பார்க்க வேறு வேண்டுமா? கடவுளே, பேசாமல் வீட்டுக்குப் போய் விடலாம் என்று திரும்பினான். கலவரமாக இருந்த அவனது முகத்தையே ராம் பார்த்துக் கொண்டிருந்தான்.

அதற்குள் மைதிலியின் அம்மா, "வாங்க டாக்டர், வாங்க மாப்பிள்ளை" என்றார். தூக்கி வாரிப் போட மாப்பிள்ளை வந்து விட்டாரா என்று திரும்பிப் பார்த்தான்.

ராம் நமுட்டுச் சிரிப்போடு, அவன் தோளில் கைபோட்டு இறுக்கிப் பிடித்து, "ஏண்டா! அப்படியே எஸ்கேப் ஆகப் பாக்குறியா? வாடா உள்ளே" ஏறக்குறைய இழுத்துக் கொண்டு போனான்.

உள்ளே பளிச்சென்று அவன் அப்பா! "அப்பா நீங்கள் எப்போது வந்தீர்கள்?" வாய் பிளந்தான்.



"சுமி தான் கூட்டிக் கொண்டு வந்தாள் நம் மைதிலிக்கு நிச்சயதார்த்தம்! நான் இல்லாமல் நடக்குமா? என்றார் சிரிப்பை அடக்கிக் கொண்டு! யாரோ "மாப்பிள்ளைக்கு தண்ணீர் கொடுங்கள்" என்றதும், நேராக ஒரு குட்டிப் பெண் அவனிடம் கொண்டு வந்து கொடுத்தும், என்ன நடக்கிறது என்று ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டு அமர்ந்திருந்தான் சிவா.

எளிமையான அலங்காரத்தில் மைதிலி வந்து அவனைப் பார்த்து மென்மையாக சிரித்தாள் அவனைப் பார்த்ததும் பொங்கியது.

"ச்சே. எத்தனை அழகு! எவ்வளவு அடக்கம்! என் அதிர்ஷ்டம் அவ்வளவுதான்" மனம் நொந்தான்.

"நிச்சயதார்தத்தை முதலில் முடிக்கலாமா? என்று கேட்டான் ராம்.

அவனைப் பார்த்ததும் சிவாவிற்கு ஆத்திரம் பொங்கியது.

"இவன் ஏன் பறக்கிறான்? யார் மாப்பிள்ளை? அதோ கீரிம் கலர் சர்ட் போட்டு ட்ரிம் ஆக இருக்கிறாரே. ஆனால் வயது கொஞ்சம் கூட இருக்கும் போல் இருக்கிறது. அவன் கண்கள் கூட்டத்தில் மாப்பிள்ளையைத் தேடியது."

ராம் தன் கையில் வைத்திருந்த நகைப் பெட்டியைத் திறந்தான் அதில் இருந்த செயினை சுமி எடுத்து மைதிலியின் கழுத்தில் போட்டாள். பின் ஒரு மோதிரத்தை எடுத்து அவள் கையில் கொடுத்து விட்டு இன்னொன்றை எடுத்துக் கொண்டு,

"சிவாண்ணா! இப்ப கூட உங்க விருப்பத்தைச் சொல்ல மனமில்லயா? சரி, போகட்டும். இதையாவது மைதிலிக்குப் போட்டு விடுங்கள்."

ஆனந்த அதிர்ச்சியில், "சுமி! என்னம்மா சொல்கிறாய்? மாப்பிள்ளை..."

ராம் வந்து அவன் முதுகில் ஓங்கி ஒன்று வைத்தான் "நீதாண்டா! ஆமாண்டா! நீ தான் மாப்பிள்ளை. நீ எப்படியாவது எங்களிடம் உன் மனதைச் சொல்வாய் என்று எல்லா விதத்திலும் டிரை பண்ணி விட்டோம்டா. எம-காதகண்டா நீ! வாயே திறக்கலை பார். என் தங்கைக்காக உன்னைச் சும்மா விடுகிறேன். வாடா!" கைபிடித்து மைதிலியிடம் அழைத்துப் போனான்.

ஆனந்தமாக மைதிலியின் விரவில் மோதிரத்தைப் போட்டான். இதுவரை இருந்த டென்ஷன் எல்லாம் வடிய, "தேங்க்ஸ்டா" என்றான்.

"அதை அப்பாவுக்கும் சொல்லு. அவர் தான் உன் நடவடிக்கையைக் கவனித்து, மைதிலியின் மேல் உனக்கு இன்ட்ரஸ்ட் இருக்கிறது என்று சுமியிடம் கூறியிருக்கிறார். அதான் இந்த தடாலடி நடவடிக்கை... புரியுதா?"

"போங்கடா! என் வயிற்றையே கலக்கிட்டீங்க. என்னைவைத்து பெரிய காமெடியே பண்ணீட்டிங்க."

மைதிலி தலை குனிந்து வெட்கமாகச் சிரித்தாள். சிவா அவளையே ஆசையாகப் பார்த்தான்.

ராம், "இந்த லாங் பிளேக்கு ஸ்டோரி, டயலாக் டைரக்ஷன் எல்லாமே சுமி தான். அவள் தான் எங்கடம் கேட்டனே! அதற்கு முழு உடந்தை நிர்மலாவும். அப்போது தான் நிர்மலா வர்ஷாவைத் தூக்கிக் கொண்டு உள்ளேயிருந்து வந்தாள்.

"நீங்களுமா?"

"என்ன நீங்களுமா? எங்க மைத்தியே வாய் திறந்து சம்மதம் சொல்லி விட்டாள். ஆனாலும் நீங்க ரொம்ப



அழுத்தம் சிவா. மைத்தி இதற்கு மட்டும் நீ இவரை தண்டிக்காமல் விடாதே!"

வர்ஷா மூன்று வயதாக, துறுதுறு வென்று பட்டுப் பாவாடையில் ஓடி வந்து சிவாவின் கால்களைக் கட்டிக் கொண்டு, "சிவா மாமா. என்னைத் தூக்குங்க."

அவளைப் பூச்செண்டாய் அள்ளி அணைத்து முத்தமிட்டான்.

"மாமா! உங்களுக்குக் கல்யாணம் வந்திருச்சா!"

"ஆமாடா!"

"அத்தை யாரு?"

"மைதிலியைச் சுட்டிக் காட்டினான்."

"அவங்க தான் எப்பவுமே மைத்தி அத்தையாச்சே. புது அத்தை யாரு?" என்றதும் அவன் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தான். ராம் வந்து, வர்ஷாவை தூக்கிக் கொண்டு, "மைத்தி அத்தை புது டிரஸ் போட்டு, அழகா இருக்காங்க இல்லையா? அதனால் இனிமேல் அவங்க தான் புது அத்தை. சிவா மாமாவோட அத்தை." இப்போது திருதிரு வென்று விழிப்பது அவள் முறையாயிற்று!

"ரொம்ப சொதப்பிட்டனா சுமி?" வழிந்தான்.

"அம்மா! சிவா மாமாவுக்கும் இனி மைத்தி அத்தை தான் அத்தையா? அதற்குள் நிர்மலா "வர்ஷா, வா என் ஹேண்ட் பேகில் உனக்குப் பிடித்த 'டெய்ரி மில்க்' வைத்திருக்கிறேன் தரவா?"

அப்பாடா என்று நிம்மதி எல்லோருக்குமே!!

வர்ஷா அத்தனை சுட்டியாக இருந்தாள்! அவள் கேட்கும் கேள்விகளுக்கு பாதிக்கு மேல் பதில் சொல்லவே முடியாது அத்தனை ஷார்ப். ராம் இதைக் கண்டு எப்பவுமே பெருமைப்பட்டான்.

நிச்சயதார்த்த விழா இனிதே நிறைவுற்றதில், ராகவனுக்கு கொள்ளை மகிழ்ச்சி. "எங்கே தன் மகன் தனியாகவே நின்று விடுவானோ" என்ற கவலை. தீர்ந்த நிம்மதியில் சந்தோவுமாக வளைய வந்து கொண்டிருந்தார். மைதியிலின் அண்ணன் தினேஷ்*க்கு சிவாவைப் பார்த்ததுமே ரொம்பப் பிடித்துப் போனது.

"சுமி, மைத்தி சிவாவுடன் ஏதாவது பேச வேண்டுமானால் பேசட்டும். அவனை மாடி ரூமிற்கு அனுப்பியிருக்கிறேன்."

மைத்தி தன் அறைக்குள் நுழைந்தாள். சிவா முகம் மலர ஜன்னலில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அவள் உள்ளே நுழைந்ததும் அவனுக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை.

மைத்தி அவனை ஏறிட்டுப் பார்த்தாள்!

"மைதிலி!"

"ம்."

"இது நிஜமா, என்று இன்னும் நம்பவே முடியவில்லை. எனக்குக் கூட இத்தனை லக் இருக்கிறதா?"

"ஏன் சிவா!"

"ஆமாம் மைத்தி. உன் அழகு என்னை மிரட்டியது. நீ என்னைவிட வசதியும் கூட. உன் அழகும், அந்தஸ்தும் என் மனதைப் பூட்டி வைத்தது. நான் உனக்குப் பொருந்தமா? என்று எனக்குள்ளே போராட்டம். உனக்குத் திருமணம் என்று ராம் சொன்னதும் வலித்தது மைதிலி. ஆனால் நீ நன்றாக இருந்தால் அதுவே போதும் என்ற முடிவுக்கு வந்து விட்டேன்."

"சிவா, இதற்காகத் தான் உங்களை விரும்பினேன்.



உங்கள் சா.ஃ.ப்ட்னெஸ், உங்கள் அப்பாவிடம் நீங்கள் வைத்திருக்கும் பாசம், இதுதான் எனக்கு உங்களிடம் ரொம்பப் பிடித்ததே."

சிவா அவளிடம், "ஒரு நிமிடம் உன் கையைப் பற்றிக் கொள்ளட்டுமா? ப்ளீஸ்."

ராம், "நீ திருந்தவே மாட்டடா! தனி ரூமில் அனுப்பினாலும் சே! சே! பச்சைக் குழந்தையாகவே தான் இருக்கடா. மைத்தி இது சரிப்படாதும்மா. நீ அவனை மாற்ற ரொம்ப போராட வேண்டியிருக்கும் போல! கஷ்டம் தான்" குரல் மட்டும் வெளியே கேட்டது. ராம் கதவுக்கு வெளியே நின்றிருந்தான்.

திகைத்து தடுமாறி நின்றவனின் அருகில் வந்த மைதிலி அவன் கரங்களைப் பற்றி ஒரு நொடியில் முத்தமிட்டு, ஐ லவ் யூ சிவா. லவ் யூ ஸோ மச்." வெளியே ஓடியே போய் விட்டாள்.

உள்ளே வந்த ராம், "என்னடா! இந்நேரம் பாதி மேட்டரே முடிந்திருக்கும் என்று நினைத்தேன். ஆனால் நீ என்ன வென்றால் கையை புடிக்கவா? காலை புடிக்கவா? என்று பர்மிஷன் கேட்டுக்கொண்டிருக்கிறாய்! சுத்தம் டா. நீ ஒரு சினிமா கூட இதுவரை பார்த்ததில்லையா."

சிவா அவன் முதுகில ஓங்கி ஒன்று வைத்து "போகலாம் வாடா" என்றான். முகம் சிவந்து கிடந்தது. அவனின் சந்தோஷம் பார்த்து ராம் முகம் கனிந்தான்.

மைதிலி, சிவா கல்யாணம் ஒரு சுபமுகூர்த்த நாளில் சுற்றம் சூடி. ராம் முழுப் பொறுப்பையும் ஏற்றிருக்க இனிதே நிறைவுற்றது. இரவு சிவாவின் பங்களாவில் சின்ன விருந்து. அது முடிந்து இருவரையும் தனியறையில் சந்திக்க விட்டார்கள்.

எளிய தேவதையாக உள்ளே வந்தவளையே அன்போடு பார்த்தான். மைதிலிக்கு இத்தனை நேரம் இருந்த தைரியமெல்லாம் கம்பீரமாக அமர்ந்திருந்த சிவாவைப் பார்த்ததும் பறந்து போனது. நடை தடுமாறியது. அவள் அருகில் சென்று தோளோடு அவளைப் பற்றி அணைத்து வந்து தன் அருகில் அமர வைத்தான்.

"மைத்தி, உனக்கு சந்தோஷமா? உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா."

அவளுக்கு சிரிப்பு வந்தது. "அன்று தானே இதைப்பற்றி மனம் விட்டு பேசினோம்." அடக்கிக் கொண்டாள். என்னை விட சிவா தான் டென்ஷனாக இருக்கிறார்! என்று உணர்ந்து கனிவாக அவனைப் பார்த்து சிரித்தாள்.

"என் சிவாவை எனக்குப் பிடிக்காமல் போகுமா' ரகசியமான அவள் குரலில் நிலைகுலைந்து போனான். 'மைத்தி' என்று மென்மையாக அவளை அணைத்துக் கொண்டான்.

# 14

**வ**ர்ஷாக் குட்டியை எல்.கே.ஜி சேர்த்து விட்டார்கள். ஸ்கூலுக்குப் போவதென்றால் வர்ஷாவுக்கு கொள்ளைப் பிரியம். அடம் பண்ணாமல் சமர்த்தாக கிளம்பி விடுவாள். கங்கா தான் அவளை ரெடி பண்ணுவார். வர்ஷாவுக்கு கங்கா அத்தை இருந்தால் போதும். சிவா, மைதிலி திருமணம் முடிந்து இன்றுதான் அவள் ஸ்கூலுக்கு கிளம்புகிறாள்.



அன்று காலையிலிருந்தே சுமிக்கு தலைவலி. உடம்பே சரியில்லை, படுக்கையை விட்டு எழவே சிரமமாக இருந்தது. இந்த ஒரு மாதமாகவே ஹாஸ்பிட்டல், வீடு, கல்யாண வேலை என்று ஒரே அலைச்சல். ரெஸ்ட் எடுக்கும் நேரமே குறைந்து விட்டது. அதனால் தான் இந்த சோர்வு ரெஸ்ட் எடுத்தால் சரியாகவிடும் என்று நினைத்தாள்.

நேற்று தான் சிவா, மைதிலி இரண்டு பேரும் தேனிலவிற்கு கிளம்பிப் போனார்கள். கொடைக்கானல் டிரிப் ஒன்றை அரேன்ஜ் செய்து வலுக்கட்டாயமாக அவர்களை ராம் அனுப்பி வைத்திருந்தான்.

சுமி, "ராம்! நான் இன்று கொஞ்சம் லேட்டாக ஹாஸ்பிட்டல் வருகிறேன். லேசாக தலைபாரமாக இருக்கிறது."

ராம் பதறிப் போனான். "சுமி, டேப்லட் எல்லாம் ஒழுங்காக எடுத்துக்கொண்டாயா? கல்யாண மும்முரத்தில் நான் உன்னைக் கவனிக்கவே இல்லை. இன்று ஹாஸ்பிட்டலில் உனக்கு எல்லா டெஸ்டும் எடுத்து விடலாம் என்ன? ஒரு வாரமாக நீ சரியாகவே சாப்பிடவில்லை என்று அக்கா சொன்னார்கள். இன்று வீட்டிலேயே ரெஸ்ட் எடு சுமி."

"இல்லை ராம். அரைநாள் மட்டும் வருகிறேன். வர்ஷாவை விட்டு விட்டு வந்ததும் உங்களோடு நானும் வந்து விடுகிறேன்."

"சரிடா, வர்ஷி அம்மாவுக்கு பை சொல்லு."

"அம்மா உங்களுக்கு பீவரா? குறும்பு பண்ணாம இருங்க. நான் ஸ்கூல் போய்ட்டு வந்து ஊசி போடறன் சரியா?

சுமி, "சரிங்க. டாக்டர்... நல்லா படிச்சிட்டு வந்து ஊசி போடுங்க..." முத்தமிட்டு பை சொல்லி அனுப்பி வைத்தாள். பின், கீழே ஹாலில் அமர்ந்து பேப்பர் படித்து விட்டு, டிரஸ் மாற்றலாம் என்று எழுந்து இரண்டு படி ஏறியதுமே தலைசுற்றல் அதிகமாகத் தடுமாறிக் கைப்பிடியில் இடித்து கீழே மயங்கிச் சரிந்தாள்.

"அக்கா..." அவளின் குரலே வித்தியாசமாக ஒலிக்க என்னமோ என்று பதறிப் போய் ஓடி வந்து பார்த்த கங்கா சுமியை வாரி தன் மடியில் போட்டுக் கொண்டாள். நெற்றியில் ரத்தம் வடிய மயங்கிக் கிடந்தவளைப் பார்த்து பதைத்துப் போனாள்.

"ஜமுனா! கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா..." என்று கத்திவிட்டு, முந்தானையால் நெற்றியில் வழிந்த ரதத்தத்தைத் துடைத்தாள்.

"என்ன ஆச்சோ...! தெரியலையே... பட்ட காலிலேயே படும் என்பது போல மறுபடி சுமிக்கு இப்படி அடிபட்டு விட்டதே. ராம் வந்தால் அவ்வளவு தான்" என்று தண்ணீரைத் துண்டில் நனைத்து முகத்தில் மெல்ல ஒற்றி எடுத்தாள்.

வர்ஷாவை விட்டு விட்டு அப்போது தான் திரும்பிய ராம், சுமியின் நிலை கண்டு துடித்துப் போனான். ஓடி வந்தவன், "அக்கா...! ஐயோ...! ரத்தம்... ! சுமிக்கு என்ன ஆச்சு?"

"தெரியலையேப்பா. இங்கு தான் பேப்பர் படித்துக் கொண்டிருந்தாள். மாடியேறும் போது மயங்கி விழுந்து விட்டாள் போல இருக்கிறது. நான் சத்தம் கேட்டு ஓடி வந்தபோது நெற்றியில் அடிபட்டு மயங்கி விழுந்து விட்டாள். உன்னைக் கூப்பிடலாம் என்று போனை எடுத்தேன். நீயே



வந்துவிட்டாய்..." அதை முழுவதுமாக கேட்கக்கூட அவன் இல்லை. சுமியை இரு கைகளாலும் அள்ளித் தூக்கிக் காரில் தன் மடியில் படுக்க வைத்து, டிரைவரை வண்டியை எடுக்கச் சொன்னான்.

"அக்கா...! நான் போய் கார் அனுப்புகிறேன்" கார் பறந்தது. சுமி மெல்ல கண் விழித்தாள். லேசான காயம் தான். கிளீன் பண்ணி டிரெஸ்ஸிங் பண்ணிவிட்டார்கள்.

"ராம்! எனக்கு என்ன ஆச்சு. மாடிப்படியில் கால்வைத்தது தான் தெரியும்...!"

"நீ மயங்கி விட்டாய்டா... நான் உள்ளே வந்து ரத்தம் வழிந்த முகத்தோடு உன்னைப் பார்த்ததும் என் உயிரே என்னிடம் இல்லை"

அதற்குள் விஷயம் கேள்விப்பட்டு நிர்மலா வந்துவிட்டாள்.

"என்ன சுமி...! என்னாச்சு...?"

"நான் பார்க்கிறேன்" அவள் கைப்பற்றி பல்ஸ் பார்த்தாள்.

"ராம், நான் கொஞ்சம் சுமியை பார்க்கட்டுமா?"

"நான் இங்கேயே இருக்கிறேன்"

"ப்ளீஸ்..."

அவன் சுமியைச் பார்த்து தலையாட்டி விட்டு மனமில்லாது வெளியேறினான்.

ஒரு கப்பில் ஹார்லிக்ஸ் கொண்டு வரச் செய்து குடிக்கச் சொன்னாள். "சுமி, இந்த மன்த் பீரியட்ஸ் எப்போ வந்தது?" "நிம்மி, இந்த மாதம் வரவே இல்லை. மூன்றாம் தேதியே வரவேண்டியது. நான் கல்யாணம் அலைச்சலில் இதை மறந்தே போனேன். இன்றோடு ஐம்பத்து ஆறு நாட்கள் ஆகிறது.

"நீ கன்சீவ் ஆகி இருக்கிறாய் என்று நினைக்கிறேன். பல்ஸ் பார்த்துமே புரிந்தது. இந்த பத்து நாட்களாகவே உன் முகத்தைப் பார்த்ததுமே சந்தேகம் தான். கல்யாணம் முடிந்து கேட்கலாம் என்று விட்டுவிட்டேன். எதற்கும் ஒரு யூரின் டெஸ்ட் பண்ணிவிடலாம். இதுவே 90% கன்பார்ம்தான். நீ சோர்ந்து தெரிகிறாய் நான் டானிக் எழுதித் தருகிறேன். வர்ஷா பிறந்த போதும் நான் தான் உனக்கு டெலிவரி பார்த்தேன். ரொம்ப சந்தோஷம் சுமி. கங்கிராட்ஸ்..."

"தேங்க்ஸ் நிம்மி..."

"உன்னவரிடம் நீயே சொல்லிக்கோ" அவனை உள்ளே வரச் சொன்னாள்.

"நிம்மி... !"

"ப்ராப்ளம் கொஞ்சம் சீரியஸ்தான் டாக்டர்! உடனே சரியாகாது. எப்படியும் எட்டு மாதமாவது ஆகும் சரியாக! டெஸ்டுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறேன். டானிக் சாப்பிடச் சொல்லியிருக்கிறேன்'' என்றவள் சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

ராம், கலவரமானான். "நிம்மி...!"

ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். இதற்கு முழு காரணமும் நீங்கதான். உங்களால் தான் எல்லாமே! அவளைப் பத்திரமாக பார்த்துக்கொள்ளுங்கள். ஒரு மணி நேரம் கழித்து லேபிலிருந்து டெஸ்டுக்கு ஆள் அனுப்புகிறேன். அவனுக்குத் தெரியாமல் சுமியைப் பார்த்துக் கண்ணடித்து விட்டு, கதவைச் சாத்திக் கொண்டு வெளியேறினாள்.

துளிகூட சந்தேகமே வராமல், ராம் பதறிப்போய், "சுமி. நிம்மி என்னென்னமோ சொல்கிறாளே! உனக்கு



என்னடா ஆச்சு... நாம் வேறு டாக்டரிடம் பார்க்கலாம்... அவன் ஏதோ உளறுகிறாள். நான் தான் காரணம் என்று என்னைவேறு குற்றம் சொல்கிறான்." அவன் பாட்டுக் பேசிக் கொண்டே போக, வெட்கம் தாளாமல் முகத்தை மூடிக்கொள்ள, அவள் அழுகிறாள் என்று நினைத்து, "வலிக்குதாடா. அழாதே..." என்று அவள் கரங்களை விலக்க, அவள் சிவந்த முகத்தைக் கண்டு திகைத்துப் போனான்.

"சுமி...! " என்றதும், அவன் விரல்களைப் பற்றி மெல்ல தன் வயிற்றில் பதித்தாள்.

"சுமி...! கண்ணம்மா!" எழுந்து அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

"சுமி...! நிஜமாடா...!''

'ஆமாம்' என்று மார்பிலேயே அவள் தலை ஆடியது. "அப்பாடா!" என்று நெஞ்சில் கைவைத்து, "கொஞ்ச நேரத்தில் நிம்மி என்னை எத்தனை பயப்படுத்தி விட்டாள்." அவள் உச்சியில் இதழ் பதித்து, "எத்தனை சந்தோஷமாக இருக்குத் தெரியுமா...?

சிறிது நேரம் அங்கேயே ரெஸ்ட் எடுக்கச் செய்தான். கங்காவிடம் போன் செய்து, "அக்கா! நீங்கள் வர வேண்டாம். நாங்களே அரைமணி நேரத்தில் வந்து விடுவோம்"

"சுமிக்கு என்னப்பா!"

லேசான வெட்கத்துடன், "நம் வர்ஷாவுடன் விளையாட தம்பிப் பாப்பா வரப்போகிறான். அது தான் சோர்வு, தலை சுற்றல் என்று படுத்தி விட்டது. வந்துவிடுவோம். அக்கா நான் சுமியை விட்டு விட்டு வர்ஷாவை ஸ்கூலிருந்து கூட்டி வர வேண்டும்"

கங்காவுக்கு ரொம்ப சந்தோஷம் உடனே ஸ்வீட் செய்ய விரைந்தார். நிர்மலாவிடம் சொல்லிவிட்டு கிளம்பினார்கள். திடீரென்று சுமிக்கு ஏதோ ஞாபகம்.

"ராம்.... ஐஸ்கிரீம் சாப்பிட்டு விட்டு போகலாமா?" அவளை ஆச்சரியமாகப் பார்த்தான். அவளே வாய் திறந்து இதுவரை எதுவுமே கேட்டதில்லை. இதே போல் வர்ஷா வயிற்றில் வந்த போது கூட ராம் அவளை பார்லர் அழைத்துப் போய் ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுத்தான். அது ஞாபகம் வரவும் புன்னகைத்துக் கொண்டான்.

"நீ என்னிடம் எதுமே கேட்பதில்லை என்று தான் வருத்தமே...! கண்டிப்பாக போகலாம்..." 'ஐபேக்கோ' அழைத்துப் போய் அவளுக்குப் பிடித்த, எப்போதும் கேட்கும் வெண்ணிலா, ஜாக் அண்ட் ஜில் ஃப்ளேவர் வாங்கிக் கொண்டு கிளம்பினார்கள்.

கங்கா சூடாக மைசூர்பாகு கொண்டு வந்து இருவருக்கும் ஊட்டி விட்டாள்.

ராம் ஐஸ்கிரீம் பேக்கை கொடுத்து, "எல்லோருக்கும் கொடுங்கள். வர்ஷிக்கு வெண்ணிலா ஃப்ளேவர் மட்டும் ஒன்று எடுத்து வைத்து விடுங்கள்.

"வர்ஷா வர இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது. மெதுவாகப் போகலாம். நீ கொஞ்சம் ரெஸ்ட் எடு சுமி. தம்பி! அவளைக் கூட்டிப் போ."

சுமி அறைக்குள் போய் நுழைந்ததும், ராம் அவளை இறுக அணைத்தான். ஒருவரின் இதயத் துடிப்பு அடுத்தவருக்குக் கேட்டது. "சுமி டியர்! நன்றாக ரெஸ்ட் எடுத்து உடம்பை கவனித்துக் கொள்ளவேண்டும். நீ இரண்டு வருஷத்துக்கு ஹாஸ்பிட்டலுக்கு வரவேண்டாம். உடம்பு இப்போது தான் கொஞ்சம் தேறியிருக்கிறது"



"ராம், நான் இன்னும் நாளைந்து மாதங்களுக்கு வருகிறேனே! காரில் வந்து போவதில் என்ன கஷ்டம்? ப்ளீஸ்! வர்ஷியும் ஸ்கூல் போகிறாள். அரை மணி நேரமாவது வருகிறேன். வீட்டில் போரடிக்கும்..."

"நான் அதை பிறகு சொல்கிறேன்" என்றான் கெத்தாக!

வர்ஷா வீட்டில் இருந்தாலே வீடே கலகல தான். இது என்ன? அது என்ன...? என்று எல்லோரையும் கேள்வி கேட்டு குடைந்து எடுத்து விடுவாள். சில கேள்விகளுக்குப் பதிலே சொல்ல முடியாது. அத்தனை அறிவு! கங்கா தான் சரியான ஆள். அவள் முந்தானையையே பிடித்து அத்தை! அத்தை! என்று சுற்றிக் கொண்டிருப்பாள். பாதி நேரம் கங்காவின் இடுப்பில் தான்!

திருமணத்திற்கு முன்பே மைதிலிக்கு, வர்ஷா மேல ரொம்ப பிரியம்! ஸ்கூல் லீவ் சமயம் சுமி, அவளை ஹாஸ்டலுக்குக் கூட்டி வந்தால், அந்த இடத்தையே கலக்கிவிடுவாள். வர்ஷா அன்று முழுவதும் நிம்மி, மைத்தி வசம் தான். அவள் ஓ.பீ.யில் பேஷண்ட் பார்ப்பதை சில சமயம் கூர்ந்து கவனிப்பாள். வீட்டுக்கு வந்ததும், அன்று முழுவதும்! அவள் அப்பாவோடு டாக்டர் விளையாட்டு தான்.

ராம் கிளம்பிதும், சுமிக்கு லேசாக தலை வலிப்பது போல இருந்தது. ஏதேதோ நினைவுகள் வந்ததில் திடீரென்று மனம் குழம்பித் தவித்தது. பின் சிறிது நேரத்தில் மறந்து போன பழைய விஷயங்கள் எல்லாமே ஒவ்வொன்றாக ஞாபகம் வந்தது.

முதன்முதலில் ராம் அவளிடம் பேசியது - திருமணம் - மாமனார் அவளுக்கு ஆசையாக நகைகள் வாங்கிக்

கொடுத்தது - ராமுடன் சேர்ந்து சென்னையை அலசியது - பிரசவம் - பெங்களூர் பயணம் - அங்கு போனபோது வலுக்கட்டாயமாக ஜீன்ஸ் லாங் ஸ்கர்ட்டும், வொயிட் கலர் டாப்சும் அணியச் சொன்னது - அங்கு கைகோர்த்துக் கொண்டு கதைபேசியபடி நடந்து போனது. ஆக்ஸிடெண்ட் ஆகும் போது ராம் என்று அலறிக் கொண்டே அவன் மடியில் மயங்கி விழுந்தது வரை எல்லாம் ஒன்றான் பின் ஒன்றாக அடுக்கடுக்காக நினைவுக்கு வந்தது. தனக்கு அம்னிஷியா குணமானதைப் புரிந்து கொண்டாள்.

உடனே பரபரப்பாக சொல்போனைக் கையில் எடுத்தவள், உடனே அதைக் கீழே வைத்துவிட்டு, 'நோ... ஸ்பெஷலாக நைட் தான் இதை தெரியப்படுத்துவேன்' என்று ரகசிய முறுவலோடு தீர்மானம் செய்து கொண்டாள்.

அன்று இரவு ராம் எட்டு மணிக்கே வீடு திரும்பி விட்டான். வர்ஷாவும் தன் தாயிடம் ஹோம் ஓர்க் செய்து விட்டு, டிபன் சாப்பிட்டு விட்டு, அவள் மடியில் படுத்து டி.வி. பார்த்துக்கொண்டே தூங்கி விட்டாள்.

சுமி, அவன் வரவுக்காக் காத்திருந்தாள். கவனமில்லாமல் கை ஏதோ ஒரு புத்தகத்தை புரட்டிக் கொண்டிருந்தது. ராம் உள்ளே வந்து அவனைப் பார்த்தது கூட தெரியவில்லை. அவளது கவனத்தைக் கலைக்காமல் குளியலறைக்குச் சென்று குளித்து உடைமாற்றியவன், தலை வாரிக் கொண்டு கையில் ஒரு ஃபைலோடு சோபாவில் அமர்ந்தான். அவளைப் பார்த்துக் கொண்டே ஃபைலைப் புரட்டியவனின் கவனத்தை அவளது குரல் கலைத்தது.

"ராம்! எப்போது வந்தீர்கள்? ஏன் என்னைக் கூப்பிடவில்லை?"



"இல்லைடா.! உனக்கு ஏதோ ஸ்வீட்டான யோசனை முகமெல்லாம் சந்தோஷத்தோடு எதைப் பற்றியோ யோசித்துக் கொண்டிருந்தாய். அந்த தவத்தைக் கலைக்க வேண்டாமே என்று தான் உன்னை டிஸ்டர்ப் பண்ணவில்லை" என்றவன் தன் கையை நீட்டினான்.

எழுந்து அவன் அருகில் வந்து சோபாவில் அவன் மடியில் படுத்துக் கொண்டாள். "நாளைக்கு ஆபரேஷனா ராம்...?"

"ஆமாம் சுமி, சின்ன ஆபரேஷன் தான். காலை ஆறு மணிக்கு! நான் ஐந்து மணிக்கே கிளம்ப வேண்டும். அதுதான் ஃபைலை நைட்டே பார்த்து விடுகிறேன். ஒரு கையால் அவள் நெற்றியை வருடிக் கொண்டே அமைதியாக டிடெய்ல்ஸ் பார்த்துக் கொண்டிருந்தான்.

சுமி கண் இமைக்காது அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனின் அன்பை எண்ணி எண்ணி மனம் பொங்கியது. அதற்கு மேல் தாள முடியாதவளாய், இடுப்பைச் சுற்றிக் கைகளைப் படரவிட்டு அவன் வயிற்றில் முகம் புதைத்துக் கொண்டாள்.

"சுமி! என்னடா...! தூக்கம் வருகிறதா?" 'இல்லை' என்று தலையை ஆட்டினாள்.

"ஐந்தே நிமிடம்... வந்து விடுகிறேன்" என்று எழுந்தவனிடம், கண் கலங்க உதடு துடிக்க, குரல் நடுங்க, "மாம்ஸ்... ஐ லவ். யூ!" என்றாள்.

அவன் கையிலிருந்த ஃபைல் நழுவி தரையில் தொப்பென்று விழுந்தது. திகைப்புடன், "சுமி...!" என்றவனால் அதற்கு மேல் பேச முடியவில்லை. 'ஆமாம்' என்று தலையசைத்தவள், அவன் மார்பில் முகம் பதித்தாள்.

"மாம்ஸ்... எனக்கு எல்லாமே ஞாபகம் வந்து விட்டது."

"எப்படா?" குரலில் பரவசம். அவள் முகத்தை இரு கைகளிலும் ஏந்தியவன், அவள் கண்களில் வழிந்த நீரைச் சுண்டினான். முகமெங்கும் முத்த மழை பொழிந்தான்.

அந்தரங்கமான சமயங்களில் அவளாகவே அவனை நாடி வரும் போதெல்லாம் குரல் குழைய, "மாம்ஸ்" என்று தான் கொஞ்சுவாள். அது அவனுக்கு மட்டுமே தெரிந்த விஷயம். ஆக்ஸிடெண்டுக்குப் பிறகு அந்த அழைப்புக்காக பலமுறை ஏங்கியிருக்கிறான். இன்று சுமியே, "மாம்ஸ்" என்று அழைக்கவும் ராம் சொர்க்கத்தில் மிதந்தான்.

"சுமி டியர் உனக்கு எப்போது பழசெல்லாம் ஞாபகம் வந்தது?" கன்னத்தை ஆசையாக வருடினான்.

"காலையில் ஹாஸ்பிட்டலில் இருந்து கிளம்பும் போது ஐஸ்கிரீம் பார்லரைப் பார்த்ததும் கொஞ்சம் ஞாபகம் அப்போது எதுவும் பெரிதாகத் தோன்றவில்லை. அதன் பிறகு வீட்டில் தான் கொஞ்சம் கொஞ்சமாக எல்லாமே நினைவுக்கு வந்தது. ஆனால், நைட் தனியாக உங்களிடம் சொல்ல வேண்டும் என்று தான் என்னை நானே அடக்கிக் கொண்டேன்" என்றாள்.

அவளை இறுக அணைத்துக் கொண்டான். "நாளை காலை என்னோடு வா. சில டெஸ்டெல்லாம் செய்ய வேண்டும். நான் அதை ஷர்மாவிடம் டிஸ்கஸ் செய்து விட்டு, பிறகு உன் மெடிசின் பற்றி கேட்க வேண்டும். இப்போது தூங்கு." என்றவன் தானும் படுத்து அவளை மென்மையாக அணைத்துக் கொண்டான்.



# 15

நள்ளிரவில் சுமிக்கு விழிப்பு வந்து, எழுந்து உட்கார்ந்தாள். தனக்கு நினைவு திரும்பிய உற்சாகத்தில், மெல்லிய கீற்றாய் புன்னகை இழையோட, நிம்மதியாக உறங்கும் ராமைப் பார்த்தாள்.

"என் ராம்! எனக்காக இன்று வரை எத்தனைக் கஷ்டங்களை அனுபவித்து விட்டார். அவளுக்குப் பெங்களூரிலிருந்து கிளம்பி வரும் போது நடந்த விபத்தை நினைத்ததுமே பயத்தில் உடல் நடுங்கியது. தான் மயங்கி விழுந்த பிறகு நடந்ததாக கங்காவும், ராமும் தன்னிடம் சொன்னதையெல்லாம், யோசித்துப் பார்த்தாள்.

குனிந்து ராமின் நெற்றியில் மென்மையாக இதழ் பதித்துவிட்டு, ஓசையில்லாமல் எழுந்து வந்து வெளியே ஹாலில் அமர்ந்தாள்.

சேண்டிலியர் வெளிச்சத்தில், அங்கே மாட்டிருந்த போட்டோவின் அருகே சென்று, ராமின் முகத்தை மெல்ல வருட, அவள் நினைவுகள் ஆக்ஸிடெண்டை நோக்கி ஓடியது.

பெங்களூரில் ராம், சுமி இருவருமே புதுக் காதலர்கள் போல உல்லாசமாகச் சுற்றித் திரிந்தனர். ஷாப்பிங் என்று அவளை அழைத்துப் போய், எல்லோருக்கும் உடைகளை அள்ளிக் குவித்தான். கங்கா, வர்ஷாவைப் பார்த்துக் கொண்டதால், தினமும் மாலை வேளைகளில் இருவரும் வெளியே செல்வார்கள்.

அன்றும் இரவு டின்னரை முடித்து விட்டு, ரூமுக்குத் திரும்பி வருவதற்குள் வர்ஷா தூங்கியிருந்தாள். ராம், சுமியிடம் சுவாரஸ்யமாக, எதைப் பற்றியோ பேசிக் கொண்டிருந்தான். அந்த இரவு வேளையில் அவனின் செல்பேசி அழைத்தது. அதை எடுத்துப் போய் பால்கனியில் நின்று பேசினான். திரும்பி வரும் போது மிகவும் பரபரப்பாக இருந்தான்.

"என்ன ராம்! யார் போன் செய்தது? ரொம்ப டென்ஷனா இருக்கீங்க.?"

"யெஸ் டியர், கங்கா அக்காவை எழுப்பு. நாம உடனே ஊருக்குக் கிளம்பணும். நம்ம ஹாஸ்பிடலில், ஒரு எமர்ஜென்ஸி கேஸ். உடனே நான் அட்டெண்ட் பண்ணியாகணும். ரவி ஒருத்தனால அங்க சமாளிக்க முடியல. நான் வந்தா நல்லா இருக்கும்னு சொல்றான். வேற யாரும் ஹெல்புக்கு அங்க இல்லை.

ரிசப்ஷனுக்கு, ரூம் வெகேட் பண்றதா போன் பண்ணி சொல்லிட்டேன். நீ திங்க்ஸ் பேக் பண்ணிடு. நாம விடியறதுக்கு முன்னே அங்க போய் சேர்ந்தா நல்லது. நியூரோ டாக்டர்ஸ் எல்லாம் மேக்ஸிமம் இங்க தான் வந்திருக்காங்க, கான்ஃப்ரன்ஸ் அட்டெண்ட் பண்ண! அதனால நாம தான் போயாகணும். வெரி அர்ஜென்ட்.

சுமி கங்காவை எழுப்பினாள். அவள் வந்து, "ராம்! மணி பன்னிரண்டு ஆகுது. கணேஷ் நல்ல தூக்கத்தில் இருப்பான். அவனை எழுப்பி ஓட்டச் சொன்னா திணறுவான். அதோட, ரொம்ப தூரம் இந்த மிட் நைட்ல காரை ஓட்டறது ரொம்ப ரிஸ்க்.

இப்ப சென்னைக்கு ஃப்ளைட் இருக்கா பார். ஒரு டிக்கட் கிடைச்சாக் கூட போதும். நீ முதல்ல கிளம்பு. நாங்க காலையில், நேரமா கூட காரில் கிளம்பி, வந்து சேர்ந்திடறோம். எனக்கு இந்த நேரத்தில், வர்ஷாக் குட்டியோட காரில் போக வேண்டாம்-னு தோணுது."

"உங்கள மட்டும் தனியா விட்டுட்டு, நான் மட்டும் கிளம்பிப் போனா எனக்கு நிம்மதியாகவே இருக்காது. சுமியும் பயந்துடுவா. வேணும்னா கணேஷ் கார் ஓட்ட வேண்டாம். நான் தான் இன்னிக்கு மதியம் நல்லா தூங்கிட்டேனே! ஃப்ரெஷ்ஷா தான் இருக்கேன். நானே ஓட்டறேன். என்னால முடியலன்னா அவன் ஓட்டட்டும். ப்ளீஸ்கா. என்னைப் புரிஞ்சுக்குங்க. சீக்கிரம் கிளம்பலாம்."

"........."

சுமி லக்கேஜ் ரெடியா...? கிளம்பலாம்." யாரையும் பேசவே விடாமல், பிடிவாதமாக தானே டிரைவிங் சீட்டில் உட்கார்ந்தான். சுமி அவன் அருகில் அமர, மீதி இருவரும் பின்னால் உட்கார்ந்ததும், சாலையில் கார் சீறிப் பாய்ந்தது. கங்கா, தூங்கும் வர்ஷாவை தன் மடியிலேயே இருத்திக் கொண்டாள்.

அவன் காரின் வேகத்தை அதிகப்படுத்திய போதெல்லாம், சுமி, "நோ ராம்! கொஞ்சம் ஸ்லோ பண்ணுங்க" என்று அவனைக் கண்ட்ரோல் பண்ணிக் கொண்டே வந்தாள். இடையே இரண்டு முறை காரை நிறுத்திய ராம், டீ குடித்தான்.

சென்னையை நெருங்க ஒரு முப்பது கிலோ மீட்டர் தூரம் தான் இருக்கிறது என்ற போது கணேஷ் எழுந்து, "டாக்டர் சார்! நீங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க. காரை நான் ஓட்டறேன். நான் நல்லா தூங்கி எழுந்திட்டேன். இனித் தூக்கம் வராது. நீங்க அங்கே போனதும், கேஸையும் அட்டெண்ட் பண்ணனும். ஒரு அரைமணி நேரமாவது தூங்கிக்குங்க" என்றான்.

ராமால் மறுத்துப் பேச முடியவில்லை. நீண்ட நேரம் தொடர்ந்து, ஓட்டியதால், கைக்கு சிறிது ஓய்வு தேவைப்பட்டது. எதுவும் பேசாமல் காரை நிறுத்தி விட்டு இறங்கினான். கங்கா, வர்ஷாவுடன் கணேஷின் அருகே அமர, ராம் சுமி இருவரும் கீழே இறங்கி பின்னால் வந்தார்கள். ராம், சுமி இருவருமே வழியில் கண் மூடவே இல்லை. அதனால் கணேஷ் காரைக் கிளப்பியதும் இருவருக்கும் கண்ணைச் சுழற்றியது. அதன் பின் 'டமால்' என்று வெடிவெடித்த ஓசை கேட்டு அலறி அடித்து ராம் கண் விழித்ததும், கார் அருகே இருந்த திட்டில் வேகமாக மோதி நிலைதடுமாறி நின்றது. கங்கா வர்ஷாவின் மேல் கவிழ்ந்து படுத்திந்தாள்.

முதலில் அவன், "என்னாச்சு கணேஷ்? மோதிட்டியா? உனக்கு அடிபட்டிருக்கா" என்றவன் கங்காவிடம், "அக்கா! வர்ஷா எங்கே? அவளுக்குக் காயம் ஏதாவது ஆயிருக்கா?" என்றான்.

அவளோ, "எங்களுக்கு ஒன்றுமில்லை. சுமி இருக்கிற பக்கம் தான் மோதியிருக்கு. முதல்ல அவளுக்கு ஏதாவது அடி பட்டிருக்கான்னு பார்..." என்றாள்.

இத்தனைப் பேச்சுக்கும் சுமியிடமிருந்து எந்த ரியாக்ஷனும் இல்லையே என்று, அவள் பக்கமாகத் திரும்பிய ராம் கண்ட காட்சி! அப்பப்பா! ஆயுளுக்கும் மறக்காது.

சுமிக்குத் தலையில் எங்கே அடிபட்டது என்றே தெரியாதபடி, அவளது முகம் முழுக்க ரத்தம் இருந்தது. உணர்வு மங்கிய நிலையில், அவளிடமிருந்து மெல்லிய முனகல் மட்டுமே கேட்டது.

அவளைப் பார்த்த ராம் பதறி, உயிர் வரை துடிக்க,



அவளை வாரித் தன் மடி மீது போட்டுக் கொண்டான்.

"சுமி! இங்க பாரும்மா! எங்கே அடிபட்டிருக்கு? பதில் சொல்லு..." மெதுவாகக் கன்னத்தில் தட்டினான்.

காரிலிருந்து டிஷ்யு பேப்பரை எடுத்து, துடைக்கத் துடைக்க ரத்தம் வழிவது நிற்கவே இல்லை. நெற்றிப் பொட்டில் காயம் கொஞ்சம் ஆழமாகவே இருப்பது போல தெரிந்தது.

"கணேஷ்!" ஏறக்குறைய கத்தினான்.

"என் மெடிக்கல் கிட் சீட்டில் இருக்கும் பார். உடனே எடுத்துக் கொடு"

அவனுடைய கை உடைந்து, கதவிடையே சிக்கியிருந்தது. கையை இழுக்கப் பார்த்தான். முடியவில்லை. வலி உயிர் போனது. கங்கா குழந்தையைத் தோளில் போட்டுக் கொண்டு, கிட்டை எடுத்துக் கொடுத்தாள். சுமியைப் பார்த்த அவளால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

ராம் தனது கண்களிலிருந்து நிற்காமல் வழிந்த கண்ணீரை புறங்கையால் துடைத்துக் கொண்டே கிட்டைத் திறந்தான். அவனால் எதையுமே தெளிவாகப் பார்க்க முடியாதபடி கண்ணீர் அவன் கண்களை மறைத்தது.

கட்டுப் போட தேவையானதை கையில் எடுத்து, "சுமி... இங்க பாருடா..?"

"ம்... ம்..."

"வலிக்குதா? நான் கட்டுப் போடறேன். சரியாயிடும்"

"ராம்...! வர்ஷா... எங்கே?"

"அவளுக்கு அடியே படலைடா... டோண்ட் வொர்ரி!"

"கை நடுங்க அவளுக்கு இறுக்கமாக கட்டுப் போட்டு விட்டான். அதையும் மீறி பிளீடிங் ஆகிக்

கொண்டேயிருந்தது. அதில் ராம், சுமி இருவரின் உடையும் நனைந்தே போனது.

"சுமி...! எழுந்திரும்மா! கொஞ்சம் தண்ணி குடிக்கறியா? என்னைக் கொஞ்சம் பாரேன் சுமி..."

"ராம்! வலிக்குது... ரொம்...ப... வலிக்...குது... என்...னால மு...டி...யல... உங்களுக்குக் கா...ய...ம்... ஏ...தா...வது...?"

அந்த நிலையிலும் தன்னுடைய நலனை யோசிப்பதைப் பார்த்து, வாய் விட்டு உரக்கக் கத்தி அழ ஆரம்பித்தான். அந்தச் சத்தத்தில் வர்ஷாவும் எழுந்து அழ ஆரம்பித்தாள். கங்கா அவசரமாகக் கீழே இறங்கி, அங்கிருந்து சிமெண்ட் திட்டில் அமர்ந்து, அவளைச் சமாதானப்படுத்திக் கொண்டே, பாலைக் கலக்க ஆரம்பித்தாள்.. அங்கேயே அமர்ந்து வர்ஷாவுக்கு பால் புகட்டியதும், அவள் மீண்டும் தூங்க ஆரம்பித்தாள்.

சுமியை சீட்டில் படுக்க வைத்து விட்டு, கணேஷைக் கவனித்தான். அவனுடைய ஒரு கையில் ஃப்ராக்ச்சர் ஆகியிருந்தது. மெதுவாகக் கதவிலிருந்து கையை எடுத்து, முதலுதவி செய்தான்.

சுமியின் தலையிலிருந்த கட்டு முழுவதுமாக நனைந்து, அதிலிருந்து அதிகமாக ரத்தம் கசிய ஆரம்பித்ததும், ராம் பயந்து போனான்.

சுமி ஆழ்ந்த மயக்கத்தில் ஆழ்ந்து விட்டாள். தலை துவண்டு சரிந்தது. ப்ளீடிங் நிற்காமல் போனதால், அவளை உடனடியாக ஹாஸ்பிடலில் சேர்க்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தான். கணேஷைப் பக்கத்து சீட்டில் உட்காரச் சொல்லி விட்டு, "அக்கா...! வாங்க... பின்னால உட்கார்ந்து சுமியைப் பார்த்துக்குங்க. உடனே



ஹாஸ்பிடல் போகணும். நான் காரை ஓட்டறேன். ஏறுங்க."

பதட்டத்தில் கை நடுங்க, அவனால் ஐந்து கிலோமீட்டர் தூரம் கூட காரை ஓட்ட முடியவில்லை. கால்களும் பலமிழந்து போனது போல இருந்தது. காரை ஓர் ஓரமாக நிறுத்தினான்.

"அக்கா! என்னால காரை ஓட்ட முடியல. கை ரொம்ப நடுங்குது. ஒரு மாதிரி பயமா இருக்கு. எப்படிப் போய்ச் சேருவேன்? அக்கா! இங்க பாருங்க. சுமி எழுந்துக்க மாட்டேங்கிறா. பல்ஸ் வேற குறையுது. ஐயோ! சுமி... சுமிக்கு ஏதாவது ஆனா..."

"ராம்! பதட்டப்படாதே. ஒண்ணும் ஆகாது. ஏதாவது வண்டி கிராஸ் ஆனா, நிறுத்தி உதவி கேளு."

காரிலிருந்து இறங்கி, வரும் வண்டிகளை நிறுத்தி லிஃப்ட் கேட்டான். ரத்தம் தோய்ந்த அவனது உடையைப் பார்த்து, அவனருகே வந்ததும் வண்டி வேகமெடுத்துப் பறந்தது. யாரும் உதவ முன் வரவில்லை. ஏதாவது போலீஸ், கேஸ் என்று அலைய வேண்டி வருமோ என்ற பயத்தில், பதில் சொல்லாமல் கூட காரைக் கிளப்பினர். நேரம் ஆக ஆக சுமியின் நிலை மோசமாகிக் கொண்டே வந்தது.

அவனது நம்பிக்கை குறைய, சுமியின் அருகே சென்று, "சுமி! உனக்கு ஒண்ணுமில்ல. நல்லாயிடும். உன்னைச் சாக விட மாட்டேன்" என்று அழுது கொண்டே புலம்பினான்.

"தம்பி! உன் ஹாஸ்பிடலுக்குப் போன் போட்டு, ஆம்புலன்ஸை அனுப்பச் சொல்லு" என்றாள் கங்கா.

இந்த யோசனை கூட தோணாத அளவுக்கு, அதிர்ச்சியில் அவன் மூளை வேலை நிறுத்தம்

செய்திருந்தது. தன் போனைத் தேடியெடுத்து, நம்பரை ஒற்றிய போது, அவனருகே ஒரு கார் வந்து பிரேக் அடித்து நின்றது. அதிலிருந்து இறங்கிய டாக்டர். செந்தில் குமாரைப் பார்த்ததும், ஓடிப் போய் அவரை அணைத்துக் கொண்டு, கதற ஆரம்பித்தான்.

"ராம்! ரிலாக்ஸ்...! என்ன ஆச்சு...?"

"டாக்டர்... சுமி... ஹெட் இஞ்சுரி. நிறைய பிளட்... லாஸ் ஆயி...டுச்சு... கண்டிஷன் ரொம்ப... பேட் தான்! பேச முடியாது திணறினான்.

டாக்டர் காரின் உள்ளே சுமியை எட்டிப் பார்த்ததும், நிலைமையைப் புரிந்து கொண்டார்.

தன் டிரைவர், அசிஸ்டெண்ட்ஸ் இரண்டு பேரையும், கீழே இறங்கச் சொன்னார்.

"விஷ்வா, ராமோட மிஸஸை அலுங்காம காரில் படுக்க வைங்க. லக்கேஜை காருக்கு க்விக்கா மாத்துங்க. அம்மா! குழந்தையோட, காரில் உட்காருங்க. டிரைவராப்பா நீ... கையில் ஃபராக்ச்சர் ஆயிருக்கா? சரி, நீயும் காரில் முன்னால் ஏறு. செல்வம் காரை சீக்கிரம் எடு!" அடுக்கடுக்காக எல்லோருக்கும் கட்டளை பிறப்பித்தார்.

"ராம்! இந்தா, முதல்ல இந்தத் தண்ணியைக் குடி. தொண்டை காய்ந்து போயிருக்கு. உன்னால பேசவே முடியல. நல்ல வேளை! எனக்கு ஒரு அர்ஜெண்ட் கேஸ் வந்ததாலே, உடனே கிளம்ப வேண்டியதாப் போச்சு. தேங்க் காட். நான் இருக்கேன். நீ எதுக்கும் கவலைப்படாதே. உன் வொய்ஃபுக்கு ஒண்ணும் ஆகாது. காப்பாத்திடலாம். நான் எல்லாத்தையும் பார்த்துக்கறேன்.

அந்த ஒரு சூழ்நிலையில் அவரது ஆறுதலான



பேச்சு, அவனை கொஞ்சம் சாந்தப்படுத்தி, உயிரையே மீட்டது போன்ற ஆறுதலைத் தந்தது. ராம் அவரைக் கையெடுத்துக் கும்பிட்டான்.

அவன் கண்களைத் துடைத்து, "சின்னப் பையன் மாதிரி பிஹேவ் பண்ணாதே ராம்! நீ முதல்ல தைரியமா இரு. எங்கே போகலாம்? என் ஹாஸ்பிடலா, இல்லை உன் ஹாஸ்பிடலுக்கே போய் விடலாமா?

"டாக்டர்..." என் ஹாஸ்பிடலே போகலாம். அதுதான் எனக்கு வசதி"

"ஓ.கே.!" டாக்டர். செந்தில்குமார் உடனே செல்போனை எடுத்து, ராம் மருத்துவமனையைத் தொடர்பு கொண்டார். அங்கு டாக்டர். ரவியை பேசச் சொல்லி அவசரமாக சில உத்தரவுகளைப் பிறப்பித்தார். ஆர்த்தோ டாக்டர்.விக்ரமைத் தொடர்பு கொண்டு, உடனடியாக ராம் ஹாஸ்பிடலுக்கு வரச் சொன்னார். நிலைமையை விளக்கி சில முன்னேற்பாடுகளைச் செய்திருந்தார்.

அரைமணியில் கார் ஹாஸ்பிடலை அடைந்தது. விஷயம் தெரிவிக்கப்பட்டதால் இவர்களை எதிர்பார்த்து, ஊழியர்கள் அனைவருமே டாக்டருடன் காத்திருந்தனர். தங்கள் டாக்டரை இந்தக் கோலத்தில் பார்த்ததும், அனைவருமே பதறிப் போனார்கள்.

சுமி உடனடியாக ஆபரேஷன் தியேட்டருக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். ராம் இறங்கியதும் கங்காவிடம், "அக்கா! இந்தக் காரிலேயே வர்ஷாவைக் கூட்டிட்டு, வீட்டுக்குப் போயிடுங்க. வர்ஷாவை சுடு தண்ணில நல்லா குளிக்க வைத்து, தூங்க வைங்க. நான் அப்புறம் போன் பண்றேன்" என்று சொல்லி விட்டு, டாக்டர். செந்தில்குமாரின் பின்னால் விரைந்தான்.

அவரோ, "ராம்! உள்ளே வா! அவங்களுக்கு நெற்றியில் சின்னதா தையல் போட வேண்டியிருக்கும். அதை நான் பார்த்துக்கறேன். நீ, கூட வந்து நின்னா போதும்."

ராம் மிகவும் பயந்திருந்தான். "ப்ளீஸ், என் சுமியை, என்னால் இந்தக் கோலத்தில் பார்க்கவே முடியல. அவலை ஒரு பேஷன்ட்டா..." அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை.

"ஓ.கே. நான் பார்த்துக்கறேன். ரவி, டாக்டர்.விக்ரம் வந்ததும் டிரைவருக்கு ட்ரீட்மெண்ட் கொடுக்கணும். ரிசப்ஷனில் போன் பண்ணிச் சொல்லிட்டு வாங்க." ஆபரேஷன் தியேட்டருக்குள் நுழைந்தார்.

ராம், கண்களில் திரண்ட நீருடன், தியேட்டரின் வெளியே இருந்த நாற்காலியில் சோர்ந்து போய்ச் சரிந்தான். சிறிது நேரத்தில் வெளியே வந்த செந்தில்குமார், அவனைத் தோளோடு அணைத்து, "டோண்ட் வொர்ரி ராம். உன் மிஸஸ் நல்லா இருக்காங்க. பல்ஸ் நார்மலா இருக்கு. இனி பயமில்லை. மயக்கம் தெளிஞ்சா ஷி வில் பி ஓ.கே. போய்ப் பாரு. உன் எமர்ஜென்ஸி பேஷண்டை, என் ஹாஸ்பிடலுக்கு ஷிப்ட் பண்ணச் சொல்லிட்டேன். எனக்கும் ஒரு அர்ஜென்ட் கேஸ் வெயிட் பண்ணிட்டிருக்கு. ஈவினிங் அஞ்சு மணிக்கு, மறுபடி வரேன்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டார்.

ராம் உள்ளே சென்று சுமியைப் பார்த்தான். ஸ்லீப்பிங் பியூட்டியாக உணர்வின்றிக் கிடந்தவளைப் பார்த்து எல்லையில்லாத சோகம் அவனை ஆட்கொள்ள, அவளருகில் சென்று அமர்ந்து, மெல்ல நெற்றியை வருடினான்.



சுமியிடமிருந்து அவனைப் பிரித்துக் கூட்டிப் போகவே, டாக்டர்கள் திணறிப் போனார்கள். கட்டாயப்படுத்திக் குளிக்க வைத்து, சூடான பாலைக் குடிக்க வைத்தனர். அவன் இருந்த கண்டிஷனுக்கு தூக்கம் அவசியம் என்பதால், பாலில் தூக்க மாத்திரையை கலந்திருந்தார்கள்.

மருந்தின் விளைவாக அவனையுமறியாமல், சுமியின் கட்டிலில் சாய்ந்து, ஆழ்ந்த உறக்கத்துக்குப் போனான். கங்கா வர்ஷாவை கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டாள். முதலில் வர்ஷா தன் தாயைத் தேடிச் சிணுங்கினாலும், சிறிது நேரத்தில் சமாதானமாகி விளையாட ஆரம்பித்தாள். ஆனாலும் தன் தாய் தந்தையைக் காணாது, முகம் வாடிப்போனாள்.

அன்று முழுவதும் ராம் நன்றாகத் தூங்கி எழுந்ததால், அவன் சோர்வெல்லாம் விலக, மூளையும் சுறுசுறுப்படைந்தது. அவன் எழுந்ததும் ரவி வந்து, "டாக்டர். செந்தில்குமார் ஈவினிங் வந்து பார்த்துவிட்டுச் சென்றார். மேடத்தின் நிலைமை கொஞ்சம் பெட்டராக இருப்பதாகச் சொன்னார். மறுபடி நாளைக்குக் காலையில் வருவார்."

ராம் யோசித்து உடனடியாக தன் குருவான டாக்டர். ஷர்மாவைத் தொடர்பு கொண்டான். ஆக்ஸிடெண்ட் பற்றியும், சுமியின் கண்டிஷன் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறினான். முடிந்தால் அவரை வரச் சொல்லி வேண்டினான். அவரும் மறுநாளே கிளம்பி வருவதாகச் சொன்னார். ராமிடம் மேலும் சில விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். ராமின் மனம் நிம்மதியானது. அவர் வந்து பார்த்தாலே, தன்

சுமி விரைவாகக் குணமடைந்து விடுவாள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அவனுக்கு. அதன் பின் தான், அவனுக்கு வர்ஷாவின் நினைவே வந்தது. ஐ.சி.யூ-வை விட்டு வெளியே வந்து, கங்காவிடம் பேசினான்.

கங்கா, "தம்பி! வர்ஷாவை நான் நல்லா பாத்துக்குவேன். அவளைப் பத்தின கவலையை உனக்கு வேண்டாம். நீ, சுமியை மட்டும் நல்லா பார்த்துக்கோ. அவளுக்கு எப்ப மயக்கம் தெளியும்? அவ எழுந்ததும், எனக்குப் போன் பண்ணு. இல்லத்துக்குப் போன் பண்ணி ஐயாவுக்குச் சொல்லியாச்சா? நைட் உனக்கு டிபன் செய்து கொடுக்கறேன்.

"எனக்கு இன்னிக்கு டிபன் வேண்டாம். நான் இங்கேயே வாங்கிச் சாப்பிடறேன். மாமா காசிக்கு டூர் போயிருக்கார். அவருக்கு இப்பச் சொல்ல வேண்டாம். ஊரிலிருந்து வந்ததும் பார்க்கலாம். நான் மறுபடி காலையில போன் பண்றேன். வர்ஷி தூங்கிட்டாளா?" எனும் போதே குரல் நெகிழ்ந்தது.

மீண்டும் சுமியின் அருகே சென்று அமர்ந்து கொண்டான் 'சுமி' என்று மென்மையாக அழைத்தான். வாடிய மலரைப் போலக் கிடந்தவளைப் பார்த்து நெஞ்சில் வேதனை மண்டியது.

ரவி வந்து அவனைச் சாப்பிட அழைத்த போது, "தேங்க்ஸ் ரவி. எனக்கு ஒரு டம்ளர் பால் மட்டும் கொடுங்க போதும். நான் இப்பச் சாப்பிடற மன நிலையில இல்லை. முதலில் என் சுமி கண் திறந்து பார்க்கட்டும். அப்புறமா சாப்பிட்டுக்கறேன். நம்ம பேஷண்ட்ஸ் எல்லாரையும் நீங்களே பார்த்துக்குங்க. மைண்ட் ரொம்ப ரெஸ்ட்லெஸ்ஸா இருக்கு. இப்ப என்னால, கேஸ் அட்டெண்ட் பண்ணவே



முடியாது."

மறுநாள் காலை டாக்டர். ஷர்மா வந்து பார்த்தார். தீவிரமாக பரிசோதனை செய்த பிறகு, இதுவரை செய்த டெஸ்ட் ரிப்போர்ட்ஸ் எல்லாவற்றையும் பார்த்தார். பின், "ராம்! பயப்படத் தேவையில்லை. லைட்டா கோமா அட்டாக் ஆகியிருக்கு. ப்ளட் நிறைய லாஸ் ஆகியிருக்கு. அதோடு, சில மாதங்களுக்கு முன்னால தான் அவங்க டெலிவரியை ஃபேஸ் பண்ணியிருக்காங்க. அதனால தான் ரொம்ப வீக்கா இருக்காங்க. ப்ளட் நெறைய லாஸ் ஆனதால தான், இந்த கோமா அட்டாக் ஆகியிருக்கு. வேற ஒண்ணும் பெரிய பிரச்சனை இல்லை ராம். கண்டிப்பா சரியாயிடும். நோ டவுட். ஐ திங்க், ஷி வில் பி ஆல்ரைட் வித்தின் ஒன் வீக்... நெக்ஸ்ட் வீக், நான் மறுபடி வந்து பார்க்கறேன்.

இப்ப மெடிசன்ஸ் கொஞ்சம் சேஞ்ச் பண்ணியிருக்கேன் பார்க்கலாம்... நீ ஏன் இத்தனை டல்லா இருக்கே ராம்! ஷி இஸ் ஓ.கே. டோண்ட் வொர்ரி! ஆல் இஸ் வெல்..." ஆறுதலாகப் பேசி விட்டுக் கிளம்பினார். எழுந்து கூடவே வந்தவனிடம், "நோ ஃபார்மாலிடீஸ் ராம். டாக்டர். ரவி கூடப் போயிடுவேன். நீ போய், உன் வொய்ப் கூட இரு. ஸீ யு...!" ரவியுடன் ஏர்போர்ட் கிளம்பினார்.

மறுநாள் கங்கா, வர்ஷாவை ஹாஸ்பிடலுக்குத் தூக்கிக் கொண்டு வந்தாள். இரண்டு நாட்கள் கழித்துத் தன் தந்தையைப் பார்த்ததில், அவனிடம் தாவிக் கொண்டு வந்தவள், வேறு யாரிடமும் போக மறுத்தாள்.

தன் தாயைத் தேடியவள், அதைச் சொல்லவும் தெரியாது, அவனிடம் அட்டை போல ஒட்டிக் கொண்டாள். ராமும் அவளைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு,

அவளின் சிரிப்பில் கொஞ்சம் வேதனை குறைந்ததில், ரிலாக்ஸ் ஆனான். ராம் தானே செரிலாக் கலந்து, தன் செல்ல மகளுக்கு ஊட்டி விட்டான்.

சுமியின் அறைக்குள் குழந்தையைச் தூக்கிச் செல்ல வேண்டாம் என்று தடுத்து, அவளைத் தன் பர்ஸனல் ரூமுக்குத் தூக்கிச் சென்றான். வர்ஷா அவனிடம் சிறிது நேரம் விளையாடி விட்டு, அவன் மடியிலேயே உறங்கி விட்டாள். அன்று காலை மறுக்காமல் இரண்டு இட்லி மட்டும் சாப்பிட்டுக் கொண்டான். வர்ஷாவிடம் விளையாடும் நேரம் தவிர, அவனுடைய நேரம் முழுவதும் சுமியின் அருகிலேயே கழிந்தது.

இரண்டு நாட்கள் எந்த மாற்றமும் இன்றிக் கழிந்தது. டாக்டர். செந்தில்குமார் தினமும் நேரில் வந்து பார்த்து விட்டு, ராமிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருப்பார். டாக்டர். ஷர்மா தினமும் இரண்டு வேளையும், சுமியின் உடல் நிலையைப் பற்றி போனில் பேசி விடுவார். டாக்டர் ரவியோ, தன் வீட்டுக்குச் செல்லும் நினைப்பே இன்றி, தன் பாஸான டாக்டர். ராம்குமாரின் கூடவே அவருக்குத் துணையாக இருந்தார். அனைவரின் அன்பையும் எண்ணியவனுக்கு கண்கள் கனத்தது.

விபத்து நடந்த பின்பு, அன்று ஆறாவது நாள். இரவு டின்னர் முடித்து விட்டு, ராம் சுமியின் அருகில் வந்து வழக்கம் போல அமர்ந்தான். அவன் படுத்துத் தூங்க வசதியாக, சுமியின் கட்டில் அருகே திவான் ஒன்றைக் கொண்டு வந்து போட்டிருந்தார்கள். அவன் அதில் உட்கார்ந்து, சுமியின் கையைப் பிடித்துக் கொண்டு அவளையே பார்த்தபடி அமர்ந்திருப்பான்.

அன்றும் அவள் அருகே அமர்ந்து, மெதுவாக அவள் காதருகே குனிந்து பேசத் துவங்கினான்.



"சுமி டார்லிங்! நான் உன் மாம்ஸ் பேசறேன்டா! கேட்குதா...? கேட்கும். கண்டிப்பா கேட்கும்! உனக்கு லேசா தான் அடிபட்டிருக்கு. நீ என்னை 'ராம்'ன்னு கூப்பிட்டு, இன்னியோட ஆறு நாள் ஆச்சு தெரியுமா? நீ எப்ப எழுந்துக்குவேன்னு, இங்க நாங்க எல்லோருமே ரொம்ப ஆவலா எதிர்பார்த்துக்கிட்டு இருக்கோம். நீ என்னை எப்போ 'மாம்ஸ்'னு கூப்பிடப் போறடா? ஐ மிஸ் யூ டார்லிங்!

நீ சீக்கிரமா எழுந்திடுவன்னு நான் சொன்னேன். உனக்கு ஒண்ணும் இல்லைடா! தேங்க் காட்! நம்ம வர்ஷிக்குச் சின்னக் கீறல் கூட இல்லை. கணேஷ் ரொம்ப அழுதிட்டான். நான் தான் அவனைச் சமாதானப் படுத்தினேன். எல்லாம் நம்ம கெட்ட நேரம்.

விபத்து நடந்த இடத்தில் உன்னைப் பார்த்ததும், என் உயிரே போன மாதிரி ஆயிடிச்சு. உன் முகமெல்லாம் இரத்தம்! உனக்கு எங்க அடிபட்டிருக்குன்னே புரியலை! இப்ப அதை நெனைச்சாக் கூட நடுங்குது. உன்னை இங்க கொண்டு வந்து அட்மிட் பண்ற வரை, என் உயிரே என் கிட்ட இல்லை சுமி!

அந்தச் சமயத்துல டாக்டர். செந்தில்குமாரைப் பார்த்ததும், கடவுளே என் முன்னால வந்து நின்ன மாதிரி இருந்தது. கிரிட்டிகலான அந்த நேரத்தில்,அவர் நமக்குச் செஞ்ச ஹெல்ப்பை, ஆயுசுக்கும் மறக்க முடியாது. இன்னிக்கு வரைக்கும் அத்தனை உதவி செஞ்சிருக்கார். தினமும் தவறாம வந்து, உன்னைப் பார்க்கறார்.

என் உலகமே நீதாண்டா. சீக்கிரமா எழுந்திடு. நீ இல்லாம என்னால முடியலை. நீ என்னைப் பார்த்துச் சிரிச்சா தான் எனக்கு நிம்மதி. தினமும் வர்ஷாக் குட்டி

இங்க வரா. என்னோட கொஞ்ச நேரம் விளையாடறா. ‘அம்மா எங்கேன்னு தேடறா. உன்னைப் பார்க்காம ரொம்ப ஏங்கிப் போயிட்டா! பாவம்டா நம்ம வர்ஷி! அவளுக்காகவும் நீ சீக்கிரம் சரியாயிடணும்.

அக்கா அவளைப் பார்த்துக்கறாங்க. என்னையும் வீட்டுக்கு நைட் வந்து படுக்கச் சொன்னாங்க. ஆனா நான் மறுத்திட்டேன். நீ இல்லாம நான் போகமாட்டேன். உனக்குச் சரியானதும் தான், ரெண்டு பேரும் சேர்ந்து வீட்டுக்குப் போகலாம்.

ஏன் சுமி நமக்கு இத்தனைச் சோதனை? உன்னை நான் கல்யாணமான மூணு மாதம் வரை கண்டுக்காம, உன்னை விட்டு விலகி இருந்தேன் இல்லையா? அதுக்குக் கடவுள் எனக்குக் குடுக்கற தண்டனையா, இதை நான் நினைக்கிறேன். என்னை ரொம்ப சோதிக்காதடா... போதும்! என்னால தாங்கமுடியல... நான் உன் கிட்ட பேசாம இருந்தப்போ, நீ எவ்வளவு துடிச்சிருப்பன்னு அனுபவத்திலேயே உணர்ந்திட்டேன். அதுக்காக, இப்ப ரொம்ப ரொம்ப ஃபீல் பண்றேன்.

உன் கூட நான் சந்தோஷமா இருந்தா தான், அப்பாவுக்கும் புடிக்கும். உன்கிட்ட பேசாம இருக்கறது தப்புன்னு, அப்ப என் அறிவுக்கு எட்டல. நான் இந்த விஷயத்தில, உன் கிட்ட தப்பாதான் நடந்திருக்கேன். உன் மனசைக் காயப்படுத்தியிருக்கேன். என்னை மன்னிச்சிடுடா!

உனக்குத் தெரியுமா? இங்க இருக்கிற என்னோட பர்ஸனல் ரூமில வர்ஷா தூங்கும் போது, அப்பா போட்டோவைக் கையில எடுத்து வச்சுகிட்டு, அவர் கிட்ட சண்டை கூட போட்டேன். என்ன சண்டை தெரியுமா?



‘அப்பா! எங்க ரெண்டு பேருக்கும் நீங்க தான் எல்லாமே! எனக்குச் சுமின்னா எவ்வளவு உயிர்ன்னு உங்களுக்குத் தெரியும் தானே? இப்ப அவ எப்படிக் கிடக்கறா பாருங்கப்பா! என் சுமி எனக்கு வேணும்பா! உங்களைப் பிரிஞ்சு இருந்த எனக்கு, அவதான் அதைத் தாங்கக் கூடிய சக்தியா இருந்தா தெரியுமா? இப்ப அவளுக்கும் எதாவது ஆச்சுன்னா...! அப்பா, உங்க பேத்தி சுமியை ரொம்பத் தேடறா. பாவம்பா அவ!

ப்ளீஸ்பா! சீக்கிரமா சுமியைக் குணப்படுத்தி, என்கிட்ட கொடுத்துடுங்க. இனிமே அவள என் கண்ணுக்குள்ள வெச்சுக் காப்பாத்துவேன்... அப்படின்னு அவர்கிட்ட கோரிக்கை வெச்சேன் டியர்? அப்பா அதைக் கண்டிப்பா, சீக்கிரமா நிறைவேத்துவார் பாரேன். ஐ லவ் யூ மை டியர் சுமி!” அவன் இரவு முழுவதும் சுமியிடம் மென்குரலில் பேசிக் கொண்டே இருந்தான்.

அவனின் புலம்பல் கடவுளின் காதுகளுக்கு எட்டியதோ, இல்லை, அவன் தந்தை அவன் மேல் கருணை வைத்தாரோ தெரியாது... ஆறு நாட்கள் அனைவரையும் தவிக்க வைத்த சுமி, மறுநாள் ஃப்ரெஷ்ஷாகத் தூக்கத்திலிருந்து எழுவது போல, மெல்லக் கண்விழித்துப் பார்த்தாள்.

இதையெல்லாம் நினைத்துப் பார்த்த சுமி, எழுந்து உள்ளே சென்று ராமின் அருகில் படுத்து, அவன் மார்பில் தலைசாய்த்தாள். ஆழ்ந்த உறக்கத்திலும், அவளின் தீண்டலை உணர்ந்த ராமின் கரங்கள், அவள் இடையைச் சுற்றி தன்னருகே வளைத்துக் கொண்டன! ‘என் ராம்’ என்று முனகியபடி, சுமி அவன் மார்பில் மேலும் ஒன்றினாள்.

# 16

கொடைக்கானல் செல்லும் பாதையில் அந்தக் காரை ஓட்டிக் கொண்டிருப்பது. நம் சிவா தான்...! தன் புத்தம் புதிய மனைவியுடன் தானே காரை ஓட்டிக் கொண்டிருந்தான். இதுவரை இருவரும் கொலீக் என்ற முறையில் பேசிப் பழகியவர்கள்.

இன்று தான் தனியாக ஒரு வரை ஒருவர் புரிந்து கொள்ள இருவருக்குமே ஆர்வம் தான்...! ஆனால் கூச்சம் இருவரையுமே பேச விடவில்லை. மேலே செல்லச் சொல்லச் செல்ல குளிர் கூடியது. மைதிலிக்கு உடல் சிலிர்த்தது. அதை உணர்ந்து கொண்டு, கண்ணாடியை ஏற்றி விட்டான்.

மெல்ல அவள் புறம் திரும்பினான். முகம் சிவக்க அருகில் அமர்ந்திருந்தவளைப் பார்த்து பெருமிதம். "இவள் என்னவள்! எனக்கே எனக்கு" என்ற கர்வம். இதுவரை அதிகமாக பெண்களோடு சகஜமாகப் பேசிப் பழகியதே இல்லை. தன் தாயார் காலமானதிலிருந்தே எல்லாமே அப்பா ராகவன் தான். அதனால் பெண் வாசமே இல்லாது வளர்ந்தான். கல்லூரியிலும் சகஜமாக யாருடனும் பேச மாட்டான். அமைதியாக இருப்பான்.

அவன் முதன்முதலாக சற்று அதிகம் கவனித்ததே மைதிலியை மட்டும் தான். அவளது பெண்மையும், மென்மையும், தன் தந்தையைப் பிரியத்தோடு கவனித்த பாங்கும். அவள் மீது கவனத்தை ஈர்த்து, இயல்பான கூச்ச சுபாவத்தில் தன் மனதை வெளிக் காட்டாது ஒளித்து



வைத்தான். அதைக் கண்டுபிடித்து பொக்கிஷமாய் அவளைத் தன்னிடம் சேர்ந்த, தன் அருமை நண்பனை எண்ணி மனம் நெகிழ்ந்தது.

சமீபத்தில் மழை பெய்திருந்ததால் மரங்களெல்லாம் விளக்கு வெளிச்சம் பட்டு, அதிலிருந்த மழைத்துளிகள் வைரங்களாய் மின்னின. ஜில்லென்ற காற்று குளிர் ஊசியாய் குத்தி, உடலெங்கும் ஊடுருவியது.

அந்த இடமும் சூழ்நிலையும் ரொமாண்டிக்கா, ரம்யமாக இருந்தது. காரை ஓரமாக நிறுத்தி விட்டான். ஏன் என்று தலையை உயர்த்திப் பார்த்தாள். சிவாவும் அவளையே தான் பார்த்துக் கொண்டிருந்தான். மைதிலியின் உள்ளம் படபடத்தது.

மிருதுவான குரலில் சிவா, "மைதிலி! என்னைப் பார்" அவள் தலையை உயர்த்தவே இல்லை.

"என்னைப் பிடிக்காமல், யாருடைய வற்புறுத்தலுக் காகவாவது இந்தத் திருமணத்துக்குச் சம்மதித்தாயா?"

அவளிடமிருந்து பதிலுமில்லை. மாறாக முகம் குப்பென்று சிவந்து போனது. அதை மறைக்க வேறு பக்கம் திரும்பினாள்.

"மைத்தி! நீ சொன்னால் தானே தெரியும். இதோ பார் என்னைப் பிடிக்காவிட்டால்..." சொல்லும் போதே ஏதாவது தவறாகச் சொல்லி விடுவானோ என்று நடுங்கும் விரல்களை அவன் இதழ்களில் வைத்தாள்.

ஜில்லென்ற விரல்களின் ஸ்பரிசம் அவனை நிலைகுலைய வைத்தது. கெட்டியாக அவள் விரல்களைப் பற்றி நெஞ்சில் பதித்துக் கொண்டான்.

ஒற்றை விரலால் அவள் முகவாயைத் தொட்டு தன் பக்கம் திருப்பினான். இருவரின் மூச்சுக் காற்றும்

சூடாக ஒருவர் மீது படும் வகையில் அத்தனை நெருக்கமாக இருந்தது. அவள் மெல்ல அவனை நிமிர்ந்து பார்த்தாள். அந்தக் கண்களில் கனிவு தெரிந்தது. பரிவு இருந்தது எல்லாவற்றிற்கும் மேலாக விழி நிறைய காதல் ததும்பி வழிந்தது. அவனின் ஸ்பரிசத்திலும், நெருக்கத்திலும் கண்களை மூடிக் கொண்டாள்.

அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல், தன் இதழ்களை அவள் அதரங்களில் பதித்தான். இருவருமே உலகையே மறந்து போனார்கள். மைதிலி தங்கள் காரைக் கடந்து போன வாகனத்தின் ஒலியில் தான் திடுக்கிட்டு சுயநினைவுக்கு வந்தாள். சிறு புன்னகையில் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்திவிட்டு காரைக் கிளப்பினான்.

இருவரிடமிருந்த தயக்கமும் விலகியது. ஒரு கையால் அவளைத் தோளில் கை போட்டு தன் அருகில் இழுத்துக் கொண்டான். அவளும் நிம்மதியாக அவன் தோள் சாய்ந்தாள்.

கார் கொடைக்கானலை தொட்டது. அங்கே ராம் தனது கெஸ்ட்ஹவுஸ் கேர் டேக்கரிடம் போன் செய்து இவர்கள் வருகையையும், கவனிக்க வேண்டிய ஏற்பாடுகளையும் பற்றி விரிவாகப் பேசியிருந்தான். சிவாவின் செல்போன் நம்பரையும் கொடுத்திருந்ததால், அவர்களிடம் பேசி வழியிலேயே நின்று, அவர்களைக் கூட்டிச் சென்றான்.

“சார். என் பெயர் குமார். ஐயாவோட இந்த கெஸ்ட் ஹவுஸை நான் தான் பார்த்துக் கொள்கிறேன். உள்ளேயே இருக்கிற அவுட் ஹவுஸில் தான் குடும்பத்தோடு



தங்கியிருக்கிறேன். நீங்க கிளம்பற வரைக்கும் உங்கள் தேவையை நான் கவனித்துக் கொள்கிறேன்.” என்றான்.

அவர்களை உள்ளே கூட்டிச் சென்று வீட்டைச் சுற்றிக் காண்பித்தான். நான்கு பெட்ரூமுடன் பெரிய ஹால், டைனிங், கிச்சன் என்று அழகாக இருந்தது. வீடு முழுவதும் குளிர் தெரியாமல் இருக்க, கார்பெட் போடப்பட்டிருந்தது. கிச்சனில் கேஸ் ஸ்டவ், டீ மட்டும் போட்டுக் கொள்ளும் வகையில் சாமான்கள் இருந்தன.

“ஐயா! டிபன், டேபிள் மேல் ஹாட் கேரியரில் வைத்திருக்கிறேன். பிளாஸ்கில் சூடாக பால் இருக்கிறது. காலையில் காபி, டீ, எது வேண்டுமானாலும் ஒரு போன் செய்யுங்கள். நான் கொண்டு வருகிறேன். பின் எத்தனை மணிக்கு டிபன் வேண்டும் என்று சொன்னால் ரெடி பண்ணி எடுத்து வந்து விடுகிறேன. எனக்கே டிரைவிங் தெரியும். அதனால் இங்குள்ள இடங்களுக்கு நானே கூட்டிப் போகிறேன்.”

சிவா தன் தேவைகளைக் கூறிய பின் குமார் சென்று விட்டான். கொதிக்க கொதிக்க ஹாட் கேரியரில் சப்பாத்தி, தோசை உரிய சைட் டிஷ்களோடு தயாராக இருந்தது. சாப்பிட்டு விட்டு பிளாஸ்கை எடுத்துக் கொண்டு இருவரும் பெட்ரூமுக்குள் நுழைந்தனர்.

மிகவும் இதமான இளநீல நிறத்தில் சுவர்கள் மின்னின. ஆங்காங்கே கொடைக்கானலுக்கே உரிய மலர்கள் பூச்சாடிகளில் அழகாக கொலுவீற்றிருந்தன. கார்பெட் கரு நீல நிறத்தில், படுக்கையில் விரிப்புகள் தூய வெண்மையில் பளிச்சிட்டன. அதன் ஓரங்களில் மட்டும் இளநீல நிறத்தில் பூக்கள் மின்னின. சின்ன லெட்,

டெக், ரூம் ஹீட்டர் என்று ரூமே சொர்க்கலோகமாய் காட்சியளித்தது.

இரவு விளக்குகளை மட்டும் எரிய விட்டு, சிவா அவளை கைப்பற்றி அழைத்து வந்து, கட்டிலில் அமரவைத்தான். அறையின் குளிர்ச்சி மனதிலும் பரவ, மைதிலி, "இந்த ரூம் வண்ணம் எல்லாம் மிகவும் நன்றாக இருக்கிறது தானே. ராம் அண்ணா நல்ல ரசிகா." என்று சிரித்தாள்.

அவளின் சிரிப்பையே கண் இமைக்காது பார்த்து ரசித்தவன், அவளைத் தன் ஆளுமைக்குக் கொண்டு வந்து அவள் காதருகில், "இது எல்லாவற்றையும் விட என் மைத்தியின் அன்பும், காதலும் தான் அழகு" என்று காதலுடன் அவளின் கன்னத்தில் இதழ் பதித்தான்.

அவர்கள் கொடைக்கானலில் இருந்த பத்து நாட்களும் வினாடியாய் விரைந்து ஓடி மறைந்தன. புது மணத்தம்பதிகளுக்கே உரிய வகையில் பொழுதைக் கழித்தனர்.

குமார் கார் ஓட்டி வர, ஊரைச் சுற்றிப் பார்த்தனர் அவர்கள் கொடைக்கானல் ஏரியை போட்டில் ஏறி வலம் வந்தனர். அங்கிருக்கும் பர்ச்சேஸிங் பாயிண்டில் சாக்லேட், தலைவலித் தைலங்கள், கைவினைப் பொருட்கள், ராகவனுக்கு ஷால், ஸ்வட்டர், வர்ஷாவுக்கு ஆடைகள் என்று வாங்கிக் குவித்தனர்.

குமார், "டாக்டர் சார். இந்த ஏரித் தண்ணீர் தான் கீழே இருக்கும் பழனிக்கு குடிநீர் ஆதாரம்" என்றான்.

பின் 'குணா கேவ்ஸ்' கமல்ஹாசன் நடித்த குணா படத்தின் ஷூட்டிங் இங்கு எடுக்கப்பட்டதால், 'குணா கேவ்ஸ்' என்றே அழைத்தார்கள். உள்ளே போக பயந்து,



அங்கேயே மிளகாய் பஜ்ஜி வாங்கி கடித்தபடி அங்கிருந்தே தங்களின் ஹேண்டிகேமில் பதிவு செய்தார்கள்.

கோக்கர்ஸ் வாக் என்ற நீளமான மலைப்பாதையில் இருவரும் கையைக் கோர்த்துக் கொண்டு காதலர்களாகச் சுற்றி வந்தனர். அங்கிருந்த டெலஸ்கோப் மூலமாக சிறு குழந்தைகள் போல கீழே இருக்கும் வைகை டேம், பெரியகுளம், தேனி போன்ற இடங்களைப் பார்த்து ரசித்தனர். மறுநாள் கவர்னர் தூணில் இருந்து பேரிஜம் ஏரிக்கு தனிப்பாதை வழியாக செல்ல வனத்துறையினரின் அனுமதிக் கடிதம் பெற்றிருந்தனர்... இங்கு தான் விலங்குகள் நடமாட்டம் இருந்தது.... காரிலிருந்து இறங்க விடாமல் ஒரு பெரிய ரைட் கூட்டிப் போனார் மோர்...

லேக் வியூ, தொப்பி தூக்கிப் பாறை, செல்லும் பாதையையே மறக்கடிக்கும் மதிகெட்டான் சோலை, அமைதிப்பள்ளத்தாக்கு எல்லாவற்றையும் பற்றி குமார் விளக்கிக் கூறினார்.

டால்பின் நோஸ், கிரீன் வேலி எல்லாவற்றையும் சுற்றிப் பார்க்கவும் ஒரு நாள் தேவைப்பட்டது. அங்குள்ள குட்டிக் கடைகளில் மிளகு, கிராம்பு, ஏலக்காய், டீத்தூள் போன்றவற்றை வாங்கினர்.

ஊருக்குக் கிளம்புவதற்கு முதல் நாள் குமார் ஸ்பெஷலாக பைன் மரக் காடுகளைத் தாண்டி, அங்குள்ள பூம்பாறை, பூண்டி, கவுஞ்சி போன்ற மலைக் கிராமங்களுக்கு அழைத்துச் சென்றார். டூரிஸ்ட் ஸ்பாட்டின் கூட்டமோ இரைச்சலோ கசகசப்போ எதுவுமே இல்லாமல் அமைதியாக அதன் அழகை அணுஅணுவாக அள்ளிப் பருகினர். அங்குள்ள காளிம்மன் கோவிலுக்குச் சென்று அம்மனை தரிசித்து விட்டு மன நிறைவுடன் வீடு திரும்பினர்.

மறுநாள் பிஸி! சிட்டிக்கு கிளம்ப வேண்டுமே? இன்னும் கொஞ்சநாட்கள் இங்கே இருந்தால் தேவலையே! என்ற ஏக்கம் இருவருக்குமே! இதில் அடிக்கடி ராம், சுமி, நிம்மியின் போன் மிரட்டல்கள் வேறு! மனமில்லாமல் தான் கிளம்பினர்.

கிளம்புமுன் குமார் வீட்டுக்குச் சென்று அவர் மனைவிக்கு வாங்கிய புடவை, இரு பெண் குழந்தைகளுக்கும் உடைகள், குமாருக்கு ஸ்வெட்டர், காய்கறிகள் என்று குமாரின் மனைவியிடம் கொடுத்தனர்.

குமார் பதறி மறுத்த போது, "குமார்...! இந்த பத்து நாட்களுமே எங்களுக்கு மறக்க முடியாத ஓவியம் போல மனதில் பதிந்து விட்டது. அத்தனை சந்தோஷமாக, மன நிறைவாக உணர்ந்தோம். உங்களுக்கு நன்றி என்ற சொலீ மட்டும் கூறுவது பொருந்தாது. உங்களுக்கு என்ன உதவி தேவைப்பட்டாலும் என் நம்பருக்கு கூப்பிடுங்கள்... நான் இருக்கிறேன்..." என்று கூறி கணிசமான ஒரு தொகையையும் அவர் குழந்தையின் கையில் கொடுத்தான்... அவர்களின் அன்பை எண்ணி நெகிழந்து போய், கண்ணீர் மல்க விடை கொடுத்தனர். மைதிலியும் சிவாவும் விடைபெற்று சென்னை திருப்பினர்.

சின்னப் பையனைப் போல உற்சாகத்தோடு வந்திறங்கிய மகனைப் பார்த்த ராகவனுக்கு மிகுந்த சந்தோஷம். 'இத்தனை சந்தோஷத்தையும், துள்ளலையும் எங்கே ஒளித்து வைத்திருந்தான்? ஒரு பெண், வீட்டில் காலெடுத்து வைத்த வேளை, வீடே தெய்வீகமாகி விட்டதென்று நினைத்தார்.

மைதிலியும் அவரை அன்போடு பரிசோதனை செய்து, "அப்பா! கொஞ்சம் பரவாயில்லை நான் தினமும் உங்களுக்கு டயட் ஃபுட் தான் கொடுப்பேன். அதை ஃபாலோ செய்தால் சீக்கிரம் பழையபடி நடக்கலாம்" என்று செல்லமாகக் கட்டளையிட்டாள்.



"அப்பா! ராம் வந்தானா? என்ன சொன்னான்?"

"தினமும் இரண்டு முறை வந்து விடுவான். நிம்மி கூட வந்து பார்த்து விட்டுப் போனாள். சுமி போனில் பேசினாள். ஒரு விஷயம் தெரியுமா? அவளுக்கு அம்னீஷியா முழுவதும் குணமாகி விட்டது. வர்ஷாவுக்கும் தம்பி வரப் போகிறான் என்று எல்லோருக்கும் சந்தோஷம். நான் முந்தா நாள் அங்கு இருந்தப்போ விருந்து பண்ணி கங்கா அசத்தி விட்டாள்".

அதைக் கேட்ட இருவருக்குமே சந்தோஷம் தாங்க முடியவில்லை.

சிவா, "இது எப்பப்பா உங்களுக்குத் தெரிந்தது? இந்த ராஸ்கல் தினமும் என்னிடம் போனில் பேசறான். ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. நேரில் பேசிக் கொள்கிறேன். தெரிந்திருந்தால் உடனே கிளம்பி வந்திருப்போம் தானே? எத்தனை சந்தோஷமான விஷயம்...!!"

"அதனால் தான் கண்டிப்பாக சொல்லக் கூடாது என்ற ஆர்டர் போட்டு விட்டான். சுமி நன்றாகத் தான் இருக்கிறாள். நீ போய் பார்த்து விட்டு வா. இன்று ஞாயிற்றுக்கிழமை தானே? நீங்கள் இரண்டு பேரும், நாளையிலிருந்து தானே ஹாஸ்பிட்டல் போகிறீர்கள்?"

"ஆமாம்பா. இன்று சாயுங்காலம் போகலாம் என்று தான் இருந்தேன். அவர்களுக்கு வாங்கியதைக் கொடுத்து விட்டு வர நினைத்தேன். இப்போதே போன் பண்ணி விட்டு டிபன் சாப்பிட்டவுடன் போய் பார்த்து வரட்டுமா?"

"உன் சௌகரியம்பா." கண்களாலேயே மைதிலியிடம் சம்மதம் பெற்று செல்போனில் ராமை அழைத்தான்.

"டேய் புது மாப்பிள்ளை. வந்து சேர்ந்தாச்சா? எப்படி இருந்தது ஹனிமூன் டிரிப்?"

"நீ பேசாதாட! எத்தனை விஷயங்களை என்னிடமிருந்து மறைத்திருக்கிறாய். நேரில் வந்து சண்டை போடுகிறேன். ஏண்டா என்னிடம் சொல்லவில்லை?"

"என்னைத் திட்டாதேடா. உன் தங்கை தான் கண்டிப்பாகச் சொல்ல வேண்டாம் என்றாள். விஷயம் தெரிந்தால் நீ உடனே கிளம்பி வந்து விடுவாய் என்று மறுத்து விட்டாள்."

முகம் கனிய, "சுமி எப்படிடா இருக்கிறாள்?"

"நன்றாக இருக்கிறாள். நீ டிபன் சாப்பிட்டதும் கிளம்பி நம் வீட்டுக்கு வந்து விடு. இன்று உங்களுக்கு இங்கே விருந்து அப்பாவையும் கூட்டிக் கொண்டு வா"

"ம். வருகிறேன்..."

ராம் சுமியோடு அவர்களை வரவேற்கத் தயாராக இருந்தான். மைதிலி சுமியை அன்போடு அணைத்துக் கொண்டாள். வர்ஷா ஓடி வந்து சிவாவின் கால்களைக் கட்டிக் கொண்டாள்.

"மாமா! நீங்க எங்க போனீங்க? நான் அப்போ ஹாஸ்பிட்டல் வந்தேன் சிவா மாமா, மைத்தி அத்தை இரண்டு பேரும் காணோம்!" என்று உதட்டைப் பிதுக்கினாள்.

சிவாவிடமிருந்து வாங்கி அவளை அள்ளி அணைத்துக் கொண்ட மைதிலி, "வர்ஷாக் குட்டிக்கு என் மேல் கோபமா? அத்தை உனக்கு டாய்ஸ், டிரஸ், சாக்லெட் எல்லாம் வாங்கத் தான் ஊருக்குப் போனோம் இங்க பாரு! எத்தனை டிரஸ் என் செல்லக் குட்டிக்கு!"



விழிகள் விரிய அதைப் பெற்றுக் கொண்டவள் அவளை முத்தமிட்டு, "தேங்க்ஸ் அத்தை" என்றவள் அதை எல்லோரிடமும் காண்பித்தாள்.

மதியம் ஏகப்பட்ட ஐட்டங்களோடு தடபுடலாக விருந்து செய்து அசத்தி விட்டனர். பேச்சும் சிரிப்புமாக கலகலவென்று அன்று முழுவதும் அங்கேயே இருந்து விட்டு, இரவு தான் வீடு திரும்பினான் சிவா.

மறுநாளிலிருந்து இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பினர். மைதிலியும் சிவாவும் டாக்டராக திரும்பவும் தங்கள் பணியைத் துவங்கினர்.

# 17

சுமியும் பகல் பொழுதில் மட்டும், ஹாஸ்பிட்டல் சென்று வருவதை வழக்கமாக்கியிருந்தாள். அடிக்கடி இல்லத்துக்குச் சென்று தன் தந்தையைப் பார்த்து வரவும் தவறவில்லை.

சுமியின் ஆலோசனைப்படி, அங்கேயே 'ரத்ததான மையம்' அமைக்கப்பட்டதில் மக்களுக்கு ரத்த தானம் செய்வதில் ஆர்வம் வந்தது. பிறந்த நாள், திருமண நாள் போன்ற சிறப்பு தினங்களில் தாமாக முன் வந்து சிலர் தன் நண்பர்களுடன் ரத்த தானம் செய்தனர்.

பிறகு, இளம் மருத்துவர்களின் உதவியுடன் உடல் தானம், கண் தானம் பற்றியும் மக்களுக்கு விழிப்புணர்வை

ஏற்படுத்தினர். சுமி, நிம்மி, மைத்தி மூன்று பேரும் சேர்ந்து ஓர் அமைப்பைத் துவங்கி அதில் இதை வலியுறுத்தினார்கள்.

மேலும், மருத்துவ வசதி இல்லாத கிராமங்களுக்கு 'இலவச மருத்துவ முகாம்' அமைத்து வைத்தியம் செய்தனர். வசதியில்லாத ஏழை நோயாளிகளை ஆராய்ந்து, தேர்ந்தெடுத்து அவர்களின் பொருளாதார தன்மையைப் பொறுத்து மாதம் ஒரு அறுவை சிகிச்சையும் இலவசமாக 'ராம் மருத்துவமனை'யில் செய்யப்பட்டது. அதனால் அவர்களின் மருத்துவமனை 'ஏழைகளின் நண்பன்' என்ற வகையில் மக்கள் மத்தியில் பிரபலமடைந்தது. ராம், சிவா இருவரின் மதிப்பும் மருத்துவ வட்டாரத்தில் உயர்ந்தது. இதற்கெல்லாம் முழுக் காரணம் சுமி தான், என்பதில் ராம் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான்.

உரிய காலத்தில் சுமிக்கு ஆண் குழந்தை பிறந்தது. சுருண்ட முடியுடன், கை, கால் விரல்கள் எல்லாம் நீள நீளமாக சுமியையே அச்சில் வார்த்ததுபோல ராமின் செல்லமகன் பூமியில் உதித்தான். வர்ஷாவுக்கோ கொள்ளை மகிழ்ச்சி. 'என் தம்பி' என்று பெருமிதமாக எல்லோரிடமும் சொல்லி மகிழ்ந்தாள். ராம் அடைந்த சந்தோஷத்துக்கோ அளவே இல்லை. சுமி ஹாஸ்பிட்டலிலேயே இருந்து நன்கு உடல் தேறியவுடன் தான் வீடு திரும்பினாள்.

ஒரு நல்ல நாள் பார்த்து குழந்தையைத் தொட்டிலில் இட்டு 'வருண்' என்று பெயர் சூட்டினான். மூன்றாம் மாதம் முகம் பார்த்துச் சிரித்த போது, "சுமி! பாரேன்... எப்படிச் சிரிக்கிறான். அப்படியே நீ சிரிப்பது போலவே இருக்கிறது!"



"ஐய! என்ன ராம்? எப்போ பார்த்தாலும் என்னைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறாய்?"

"ஏய், உனக்கென்னடி வந்தது. நான் எப்பவுமே பெண்டாட்டி தாசன் என்று ஹாஸ்பிட்டலே சொல்லுதே. அதுவும் நிம்மியும் மைத்தியும் இதைப் பரப்புவது ஒன்றே நோக்கமாகத் திரிகிறார்கள். என்னைப் பார்த்தாலே 'காதல் மன்னன்' என்ற கேலி வேறு!"

சுமிக்குச் சிரிப்பு தாங்க முடியவில்லை. நிஜமாகவே ராம் சுமி மேல் இன்னும் அதிகப் பைத்தியமாகிப் போனான்.

சுமி அவனருகில் வந்து அவன் மார்பில் சாய்ந்தவள், "என் ராம் மேல எல்லோருக்கும் பொறாமை... ஐ லவ் யூ ராம்! என்றவளால் அதற்கு மேல் பேசமுடியாமல் உணர்ச்சி வயப்பட்டிருந்தாள். அவளை இறுக அணைத்து கூந்தலில் முகம் புதைத்தவன், "மீ டூ சுமி டார்லிங்" என்றான். வர்ஷா ஸ்கூல் விட்டு வந்ததும் அவளுக்கு எல்லாமே வருண் தான்.

"அம்மா. தம்பி சிரிக்கிறான். அம்மா தம்பி பாருங்க என் கைய கெட்டியாக பிடிச்சிட்டான். அம்மா தம்பிக்கு சாக்லேட் கொடுக்கட்டுமா? அம்மா தம்பி கிஸ் பண்றான்" என்று ஒரே தம்பி புராணம் தான்.

அவளை வழிக்குக் கொண்டு வந்து ஹோம் ஒர்க் செய்ய வைப்பதற்குள், சுமி சோர்ந்து போவாள். வருணுக்கும் வர்ஷாவைப் பார்த்தால் கொண்டாட்டம் தான்! குதிப்பான்!

சிவாவும், மைத்தியும் ஞாயிற்றுக்கிழமைகளில் தவறாது ராம் வீட்டில் தான்! இரண்டு குழந்தைகளுமே அவர்களைப் பார்த்தால் அட்டையாக ஒட்டிக் கொள்வார்கள்.

கங்காவின் மகன் தியாகுவை பெங்களூருக்கு மாற்றினார்கள். அவனுக்கு இருபத்தியாறு வயது ஆனதால் ராம் அலசி ஆராய்ந்து திருமணத் தகவல் மையம் மூலமாக ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்தான். சுமியும் அவனும் போய் பெண் வீட்டில் பேசினார்கள். பெண் ரம்யா எம்.பி.ஏ. முடித்து விட்டு வேலைக்காகக் காத்திருந்தாள்.

ரம்யாவுக்கு பெங்களூரிலேயே ஒரு நல்ல வேலைக்கும் ஏற்பாடு செய்தான். பின் திருமணத்தைத் தானே பொறுப்பேற்று சிறப்பாக நடத்தியதில் கங்காவும் தியாகுவும் நெகிழ்ந்து போனார்கள்.

"அக்கா, நான் தியாகுவின் தாய் மாமா என்ற நினைப்போடு தான் நடந்து கொண்டேன். என்னைப் பிரித்துப் பார்க்காதீர்கள்" என்று முடித்து விட்டான.

திருமணச் சீராக, தியாகு குடும்பம் நடத்தத் தேவையான எல்லாப் பொருட்களையும், சுமியே பார்த்துப் பார்த்து வாங்கினாள்.

தியாகு, "அம்மா, என்னோடு வந்து கொஞ்ச நாள் இருங்கம்மா! உங்களை விட்டுப் பிரிந்து ஐந்து வருடங்கள் ஆகிறது" என்றான்.

"இல்லை கண்ணா! உனக்கு இனி ரம்யா இருக்கிறாள். சுமியும் குழந்தைகளும் ஒரு நாள் கூட என்னை விட்டுப் பிரிய மாட்டார்கள். நான் அடிக்கடி அங்கு வந்து பார்த்துக் கொள்கிறேன். நீ தினமும் போன் பண்ணு."

தியாகு பெங்களூர் கிளம்பிய போது, ஒரு பத்து நாட்களாவது அவனுடன் இருக்கச் சொல்லி கட்டாயப்படுத்தி கங்காவை அனுப்பினாள் சுமி!



ராம், "தியாகு! உனக்கு என்ன உதவி வேண்டுமானாலும் என்னிடம் கேட்கத் தயங்காதே. நான் தான் உன் தாய் மாமா என்பதையும் நினைவில் வை" என்று கூறி அனுப்பி வைத்தான். கண்கலங்க விடைபெற்றவனுக்கு பேச்சே எழவில்லை. ரம்யா அவர்களின் இந்த அன்பைக் கண்டு பிரமித்துப் போனாள்.

ராம், சிவாவின் நட்பு வேர் விட்டு வளர்ந்து இறுகியதில், சிவாவை மருத்துவமனையின் பங்குதாரராக ஆக்கி தன்னோடு இணைத்துக் கொண்டான் ராம்.

திருமணத்திற்குப் பிறகு சிவாவின் வாழ்வும் மலர்ந்தது. அப்பாவையே எதற்கும் சார்ந்திருந்தவனின் வாழ்க்கை மைதிலியே உலகம் என்று ஆனது. அவன் தன் தந்தையிடம் காட்டிய உண்மையான அக்கறையும் அன்பும், அவளைப் பரவசப்படுத்தியது. மைதிலியின் கவனிப்பில் ராகவன் முழுவதும் குணமாகி இயல்பு நிலைக்குத் திரும்பினான்.

சிவாவும் வீட்டு வேலைகளில் முடிந்தவரை மைதிலிக்கு உதவி செய்வான். காய்கறி நறுக்கிக் கொடுப்பது, காலையில் அவள் எழ நேரமானால், அவனே போய் காபி போட்டு விடுவான். அப்பாவுக்கு நிறைய முறை இதுபோல உதவிகள் செய்திருப்பதால், இயல்பாக பொறுமையாக அவளுக்கு உதவுவான். மருத்துவப் பணியில் ஓய்வு நேரம் குறைவு என்பதனால், இருவரும் சேர்ந்து வெளியே போவது என்பது அபூர்வமே...!

அதனால் 'உனக்காகத் தான்! நீ என்னவள்...! ஐ லவ் யூ' என்றெல்லாம் சொல்லாமலே ஒருவர் மீது ஒருவருக்கு உள்ள காதலை, பிரியத்தைத் தங்களின் செயல்கள் மூலம் பரிமாறிக் கொண்டனர். இதற்கு காதல்

மொழிகளோ, கிரீட்டிங் கார்ட், ரோஜாக்கள் எதுவுமே தேவையிருக்கவில்லை. பார்வையிலேயே ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு ஆதர்ச தம்பதிகளாக வாழ்ந்தனர்.

வருண் குட்டிக்கு இரண்டு வயது நிறைவுற்ற போது, மைதிலி தாய்மையடைந்தாள். ராகவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சிவா அவளைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டான். மைதிலியின் அம்மா, தன் மகள் வீட்டிற்கு பிரசவ சமயத்தில் உதவிக்கு வந்துவிடுவதாகக் கூறினார்.

தாய் அருகில் இல்லாத குறையை கங்கா நிறைவு செய்தார்.அவளுக்குப் பிடித்த உணவு வகைகளைச் செய்து சுமியிடம் கொடுத்து விடுவார். ஏழாம் மாதம் ராம் தன் வீட்டிலேயே, மைதிலிக்கு எளிமையாக வளைகாப்பை நடத்தினான்.

மைதிலியின் தாய் அடுத்த மாதம் அமெரிக்காவிலிருந்து வந்து சேர்ந்தார். மகள் சீரும் சிறப்புமாக எந்தக் குறையும் இல்லாமல் வாழ்வது கண்டு மகிழ்ந்து போனார். மகளுக்குப் பிடித்ததையெல்லாம் செய்து போட்டார். ராகவனுக்கும் தன் பேரக் குழந்தையைப் பார்க்கப் போகும் சந்தோஷம்.

மைதிலியை மூன்று மணிநேரம் தவிக்க வைத்து விட்டு சிவாவின் செல்வ மகள் இந்தப் பூவுலகிற்கு வந்தாள். மைதிலியை விட அதிகமாகத் துடித்த சிவாவின் கைகளில், பூக்குவியலாய் தன் மகளைக் கொடுத்த நிம்மியை ஏறிட்டவனின் கண்களும் பனித்திருந்தன. பிஞ்சுக் கால்களை கைநடுங்க ஆசையோடு வருடியவன் மெய்சிலிர்த்துப் போனான்.



"நிம்மி! மைத்தி எப்படி இருக்கிறாள்?" "இன்னும் ஐந்து நிமிடத்தில் மயக்கம் தெளிந்துவிடும். உள்ளே வந்து பாருங்கள் சிவா."

குழந்தையைத் தன் மாமியாரின் கரங்களில் கொடுத்துவிட்டு, "அப்பாவை அழைத்து வர ராம் போய்விட்டான். அத்தை இப்போது வந்து விடுவார். அதற்குள் மைத்தியைப் பார்த்து வருகிறேன்" என்று தியேட்டர் உள்ளே நுழைந்தவன், மைத்தி ஓய்ந்து போனவளாய் மயக்கத்தில் ஆழ்ந்திருந்ததைக் கண்டான்.

'பாவம் நிறைய கஷ்டப்பட்டுவிட்டாள்!' கேசத்தை மெல்ல வருடி நெற்றியில் இதழ் பதித்தவனின் ஸ்பரிசத்தில் மெல்ல கண் விழித்தவள், அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

"எப்படிடா இருக்கிறாய்? ரொம்ப வலித்ததா?"

'இல்லை' என்று தலையாட்டியவள். "என்ன பேபி...! நிம்மி ஸ்கேன் பண்ணிய போதெல்லாம் என்னைப் பார்க்கவே விடவில்லை."

அவள் கைகளை வருடி, "உன்னை மாதிரியே க்யூட்டா, சா..ஃப்டா பொண்ணு தான்...! வெரி க்யூட் பேபி. ரோஜா நிறத்தில். ரோஜா இதழ்களை விட மிருதுவாக...! அவளைப் பார்த்ததும், எனக்கு அழகான பூங்கொத்து போலவே இருந்தது. தேங்க்ஸ்டா!"

அசதியில் மீண்டும் மைத்திக்கு கண்கள் செருகின.

# 18

குழந்தை பிறந்த அன்று, ஸ்கூலிருந்து வந்தவுடனேயே ஐந்து வயது வர்ஷாவும், மூன்று வயது வருணும், கங்காவோடு... குழந்தையைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலுடன் ஹாஸ்பிடலுக்கு ஓடி வந்தார்கள்.

தோலில் சுருக்கத்துடன், பட்டு ரோஜா இதழ்கள் நடுங்க, தன் பிஞ்சுக் கை கால்களை அசைத்தபடி இருந்த குட்டிக் குழந்தையைப் பார்த்து அதிசயித்தனர். வர்ஷா கூட தன் தம்பி வருணை, இதே போல பார்த்திருக்கிறாள். ஆனால் வருணுக்கு குட்டிப் பாப்பாவின் செயல்கள் அனைத்தும் புதுமையாக இருந்தன. அருகே சென்று மெதுவாகத் தொட்டுப் பார்த்தான்.

வர்ஷா, "அம்மா! பாப்பா ரொம்ப க்யூட் இல்லம்மா? என்னோட பார்பி டால் மாதிரியே தானே இருக்கா?"

வருண், "அம்மா, பாப்பா ஏன் குட்டியா இருக்கு? எப்ப என்கிட்ட பேசுவா?" என்றான் மழலையில்.

சிவா அவனைத் தூக்கிக் கொண்டு, "இன்னும் கொஞ்ச நாள் கழித்து வளர்ந்திடுவா கண்ணா!"

"என்னை விட உயரமாவா?"

அவன் கன்னத்தில் முத்தமிட்டு, "நோ வே. எங்க வருண் குட்டி தான் ரொம்ப உயரம்! வர்ஷா அக்காவே உன்னை விடச் சின்னவளாத் தான் வருவா! வருண் தான் காம்ப்ளான் பாய் ஆச்சே! அதனால, நீ தான் எல்லாரையும் விட உயரம்!



சிவாவின் பதிலில் உண்மையாகவே வருணுக்குப் பெருமிதம்! உண்மையிலேயே, வருண் அவன் வயதுக்கு நல்ல வளர்த்தியானவன்! அதற்குள் சுமி, "ஓ.கே! வர்ஷி, தம்பியைக் கூட்டிக்கிட்டு, வீட்டுக்குக் கிளம்பு. போய் ஹோம் வொர்க் பண்ணனும் தானே? கங்கா அத்தையையோட வீட்டிற்குப் போங்க. அப்பாவும் உங்களோட வருவார். ஹோம் வொர்க்கை முடிக்காம, டி.வி.யை ஆன் பண்ணக்கூடாது. தம்பி கூட சண்டை போடாம, சமர்த்தா இருக்கணும். நான் நைட் வந்திடுவேன்.

வருண்! அக்கா ஹோம் ஒர்க் பண்ணும் போது, போய் டிஸ்டர்ப் பண்ணாதே! குட் பாய்... கிளம்பு!"

ஆனால் வருண் அடம் பிடித்தான். ராம், "சுமி! இந்த இரண்டு நாளா நீ அவனை கவனிக்கலை. அவனைத் தூக்கிக் கொஞ்சவும் இல்லை. அதனால் தான் ரகளை பண்றான். நீ வரும்போது அவனைக் கூட்டிக் கொண்டு வா. நான் வர்ஷயைக் கூட்டிட்டுக் கிளம்பறேன்."

கங்கா, மைதிலியின் அம்மாவிடம், "அம்மா! உங்கள் எல்லோருக்கும் நான் டிபன் கொடுத்து விடறேன். போய் இட்லி ஊற்றினால் போதும். நீங்க மைத்தியை வீட்டுக்கு கூட்டிட்டு போற வரை, தினமும் நானே கொடுத்து விடறேன். நீங்க அலைய வேண்டாம்" என்றாள்.

அடுத்த மூன்று நாட்கள், மைத்தி ஹாஸ்பிடலில் இருந்தாள். அதுவரை நிம்மியும் சுமியும் மாறி மாறி கூட இருந்து கவனித்துக் கொண்டனர். சுமி ஆசையோடு குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டாள்.

டிஸ்சார்ஜ் ஆனதும், ஐந்து மாத விடுப்போடு, மைத்தி தன் வீட்டுக்குச் சென்றாள். ராகவன் தன் பேத்தியைப் பார்த்துப் பூரித்துப் போனார். அவள் விழித்திருக்கும்

போதெல்லாம் கீழே விடவே மனமில்லாது, கையிலேயே தூக்கி வைத்துக் கொண்டிருப்பார்.

குழந்தை மைத்திலியைப் போல பளிங்குப் பொம்மையாக, அமைதியாக, சமர்த்தாக இருந்தது. யாருக்கும் தொல்லை தராமல், பசிக்கும்போது மட்டுமே சன்னமான குரலில் அழுவாள். மற்றபடி எந்நேரமும் சிரிப்பு தான்! சுமி தான் அவளுக்குப் பொருத்தமாக, "மிருதுளா" என்ற பெயரைத் தேர்ந்தெடுத்துச் சூட்டினாள். அன்று பெயர் சூட்டு விழா முடிந்ததும், வருண் தூங்கும் வரை சுமியிடம் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லியே, சோர்ந்து போயிருந்தாள்.

வர்ஷா, வருண் இருவரையுமே தூங்க வைத்து விட்டு, சூடான பாலை ஆற்றி தன் கணவனுக்குக் கொடுத்து விட்டு, அவன் தோளில் சாய்ந்தாள்.

"ராம்! சிவா அண்ணாவுக்கு எத்தனை சந்தோஷம் பார்த்தீங்களா? அப்பாகூட பாப்பாவைப் பார்த்து, பூரித்துப் போய்விட்டார். பாவம் சிவா அண்ணா. உறவுகளுக்காக ரொம்ப ஏங்கிவிட்டார்."

அவளின் இடையில் கைபோட்டு, தன்னோடு சேர்த்தணைத்தவன், "நிஜம் தான் டார்லிங்! சிவாவுக்கும் என்னைப் போல, படிக்கும் போது அப்பா தான் எல்லாமே! தன்னோட எந்த ஆசையையும், மனசு விட்டுச் சொல்லவே மாட்டான். ஆனா அவன் கண்களைப் பார்த்தே, அதை நான் புரிஞ்சுக்குவேன்! அவனை மாதிரி ஒரு ஃப்ரண்ட் கிடைக்கக், குடுத்து வெச்சிருக்கணும்" என்று நெகிழ்ந்து போனான்.

"சுமி டியர்! ஆனா, இந்த ஒரு வாரமா உனக்குத் தான் ரொம்ப அலைச்சல். ரொம்பக் களைப்பா தெரியற.



நாளைக்கு நீ சீக்கிரம் எழுந்துக்க வேண்டாம். நானே ரெண்டு பேரையும் ரெடி பண்ணி, ஸ்கூலுக்கு அனுப்பி விடறேன். நீ நல்லா ரெஸ்ட் எடுத்துக்கோ. சாயங்காலம் நான் சீக்கிரம் வந்ததுக்கு அப்புறமா, சிவா வீட்டுக்குப் போகலாம். இப்ப கொஞ்சம் தூங்குடா!"

அவன் அன்பில் கரைந்து போனவளாய், எம்பி அவன் கன்னங்களில் தன் இதழ்களை ஆழப் புதைத்தவள், கிசுகிசுப்பான குரலில், "ஐ லவ் யூ ராம்!" என்று அவன் மார்பில் ஒன்றினாள். அவளைப் பார்த்த ராமின் கண்களில் எல்லையில்லா காதல் பொங்கியது. ராம் சுமியை இறுக அணைத்துக் கொண்டு "மீ டூ டியர்" என்று பிதற்ற ஆரம்பித்தான்.

## சுபம்